# பாரதச்செல்வம்



ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாண[ம்]

J. Thamilini

# பாரதச் செல்வம்

★

[ வித்தியா பிரசுர சபையாரின்
அங்கீகாரம் பெற்றது ]

★

வை. ஏரம்பமூர்த்தி B. A.

★

பதிப்பாளர்
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்

ஆறும் பதிப்பு : 1984.

அச்சுப்பதிப்பு :-

ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,

63, B. A. தம்பி வீதி,

யாழ்ப்பாணம்.

வெளியீடு :-

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,

235, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை ]

விலை ரூபா ~~12-70~~

# முகவுரை

பாரத நாட்டின் பண்பாட்டுக்கு ஜீவாதாரமானவை பாரத இராமாயணங்கள். இவை பல மொழிகளிலும் பல அறிஞர்களாலும் எழுதப்பட்டும் பேசப்பட்டும் பல்லாண்டுகளாக மக்களுக்கு அறிவூட்டி வருகின்றன. முன்பெல்லாம் கதாப்பிரசங்கிகளும் உபந்நியாசர்களும் இவற்றின் நுண் பொருள்களையும் சிறப்புக்களையும் எடுத்துப்பேசி விளக்கி வந்தனர். எந்த நாட்டில் நல்ல கதைகள் வழங்குகின்றனவோ அந்த நாடே பண்பாட்டில் சிறந்த நாடென்பது கவிச்சக்கரவர்த்தி கம்பனுடைய கருத்துமாகும்.

வீமசேனனுடைய பால்யவிளையாட்டுக்கள், அருச்சுனனுடைய வில்வித்தை, ஏகலைவனுடைய குருபக்தி, திரௌபதி மாலைசூட்டியமை என்றிவ்வாறு பாட்டிமார் நல்ல நிலாமுற்றத்திலே இருந்து மடியில் கிடந்து கொஞ்சும் 'குஞ்சு' களுக்குக் கதைகதையாகச் சொல்லிப் பாலூட்டி வளர்த்து - உள்ளத்தில் ஊறச் செய்து - உதிரத்தில் பரவ விட்டகாலம் மறைந்து வருகின்றது. கதை சொல்வோர் அருகிவிட்டனர். ஆனால் கதை கேட்போர் இன்னும் ஆவலாகவே இருக்கின்றனர்.

பச்சை உள்ளங்களில் நல்ல நீதியும் பண்பும் புகட்ட வேண்டுமானால் அந்தப் பழைய முறைதான் மீண்டும் வரல்வேண்டும். அது என்று வருமோ?

''மலைவாயில் மஞ்சள் வெயில் பரப்பி மறையப்போகும் கதிரவனின் கண்கள் பனித்தன. 'இனி இந்த உலகத்தை இருள் விழுங்கப்போகிறதே' என்பதுதான் ஆதவனுடைய ஏக்கம். அப்பொழுது மின்னொளி பரப்பிச் சுடர்விட்டுத் துடித்த அகல் விளக்கொன்று, 'என்னால் ஆனவரைக்கும் நான் உன் வேலையைப் பார்க்கிறேன்' என்று தேறுதல் கூறிற்று''. இது கவி தாகூருடைய கற்பனை. இந்தப் பாரதச்செல்வ த்துக்கும் அந்த அகல் விளக்கினுக்குள்ள மதிப்பை அறிஞர் உலகம் தருமென்றே நம்புகின்றேன்.

குளத்தை வெட்டியது என் பணி; அதற்குக் கோடு சமைத்தவர் என் ஆப்த நண்பர் சு. ரா. அவ்வப்போது உசாத்துணையாய் நின்றும் இந்நூலிற்கு மதிப்புரை நல்கியும்

உதவி புரிந்தவர் ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னுள் தலைமையாசிரியர் பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையபிள்ளையவர்கள். இன்னும் எனக்கு ஊக்கமளித்ததோடு அணிந்துரையொன்றும் நல்கிய பெருந்தகையாளர் பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளையவர்கள். இவர்களனைவர்க்கும் நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்?

எண்ணெயும் திரியும் இருந்தால் மாத்திரம் போதுமா, விளக்குச் சுடர் ஓங்கி ஒளி செய்வதற்கு? தூண்டுகோலொன்றும் இன்றியமையாததன்ருே! அதுபோலப் பணியாற்றும் கடன் பூண்டவர் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை அதிபர். அன்னுர்க்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கும் கடப்பாடுடையேன்.

வை. ஏரம்பமூர்த்தி

✱

## பெற்ருேர்க்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு வேண்டுகோள்

நான் எழுதிய இந்நூலைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு நானே மீண்டும் படிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது. "நீதி இது. அநீதி அது. தர்மம் இது. அதர்மம் அது. என்றிங்ஙனம் கையாலே பிடித்துக் காட்டுவது போலப் பாத்திரங்கள் மூலம் தர்மாதர்மங்களையும் அநீதிகளையும் தொட்டுக்காட்டி நடக்கின்ற பாரதக் கதை" என்று, கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் தாம் வழங்கிய அணிந்துரையில் கூறியிருக்கிருர்கள்.

இந்த ஆரும் பதிப்பில் நான் கூறவந்ததும் இதையேதான். இந்நூலின் 60-ம் பக்கத்தில் 3-ம் பந்தியில் காணப்படும் நீதியை இக்காலத்து இளஞ்சிருர்க்குத் தொட்டுக்காட்டி உள்ளத்தில் பதிய வைக்குமாறு பெற்ருேரையும் ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வை. ஏரம்பமூர்த்தி

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைத்
தமிழ்ப் பேராசிரியர்
*பண்டிதமணி – கலாநிதி*
## திரு. சி. கணபதிப்பிள்ளை
அவர்கள் நல்கிய

# அணிந்துரை

"பாரதம் படித்தாற் பழவினை தீரும்" என்பது பழமொழி. "புதியவினை ஏருது" என்பதும் அதனுலேதானே கொள்ளத்தக்கது. அது புதுமொழியாகாது.

சின்னஞ்சிறு கதைகள் — பென்னம்பெரிய நாவல்கள் — புரட்சிக் கவிகள் — தொன்மையைப் பாராத எழுத்துக்கள் — என்றின்னேரன்னவை புற்றீசல்போல எழுந்து வருகின்ற இந்தக் காலத்திலேயும், மகாபாரதமாகிய கற்பகதரு புன்முறுவல் பூத்துத் தொன்மையும் அதற்கு மாறில்லாத புதுமையுமாகிய பொன் மலர்களைத் தந்து தன்மணங் குன்ருதே, அன்று போலவே இன்றும் கமழுகின்றது. அது அவ்வாறே என்றுங் கமழும்; முனிவர்களின் சிருஷ்டிக்கு மிருத்து பயம் ஏது? மகாபாரதம் அமரத்துவ சிருஷ்டி. அது வேதம்!

சீதாபிராட்டிக்கு அணி அலங்காரம் வேண்டுவதில்லை என்கின்ருர் கம்பர். அணிக்கு அணி செய்பவள் அவள். அவ்வாறே மகாபாரதக் கதைக்கு எழுத்தாளர்களின் மூளையை உலரச் செய்வதாகிய கைச்சரக்கு எதுவும் வேண்டுவதில்லை. அங்கே இங்கே கடன் என்ற கதை மகாபாரதக் கதைக்கு இல்லை. தன்னியற்கையால் விளங்கி தன்னை அணுகுவார்க்குச் சிந்தையின் நிறைவாகிய செல்வத்தை வழங்கி, அதனுலே ஒப்புயர்வு இல்லாத அழகைச் செய்வது மகாபாரதக்கதை.

"நீதி இது; அநீதி அது; தர்மம் இது; அதர்மம் அது" என்றிங்ஙனம் கையாலே பிடித்துக் காட்டுவது

போலப் பாத்திரங்கள் மூலம் தர்மாதர்மங்களையும் நீதி அநீதிகளையும் தொட்டுக்காட்டி நடக்கின்ற பாரதக் கதைக்கு ஆடை ஏன்? ஆபரணம் ஏன்? வேறு கைச்சரக் குக்கள் தாம் எதன்பொருட்டு?

பாரத பாத்திரங்கள் ஆண்மையும் பெண்மையும் கனிந்து பாரததேய உதிரத்தோடு உதிரமாய் ஊறி ஓடு கின்றன. இனி ஒரு நவீனர், 'துரியோதனன் நல்லவன்; தருமர் அதற்கு எதிரானவர்' என்று தமது கைச்சரக்கை விரித்து எப்படியும் புரட்சி செய்யலாம். ஆனுல், அது செவிடன் காதில் ஊதிய சங்காய் மேலும் பாரதப்பெரு மையை விரிப்பதாயே முடியும். பாரதத்துக்குச் செய்யும் அபகாரமும் உபகாரமாய் மாறும் பாரதப்பண்பு அது.

''ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையை
...... ஏட்டின்புறத்து எழுதார்''

என்று ஒரு புலவர் பாடுகின்ருர். ஆனுல் பாரதம் அதற்கு எதிராக, எவர் தாம் எத்தனை பிரகாரம் எழுதினுலுந் தன்னுற்றல் பிறழாது மிக்குச் சுரந்து கொண்டேயிருக் கின்றது. அது முன்னமே முடிந்ததொரு காரியமாய்ப் பாரதமக்களின் உயிர்நாடியாய் அசைக்கமுடியாததொரு நிலையை எய்திவிட்டது.

இத்துணைச் சிறந்த பாரதக்கதை முதன்முதலில் வட மொழியிலும், பின் பாரததேய மொழிகளிலும், பிறமொழி களிலும், வழங்கி வருகின்றது; தமிழ்மொழியிலே பாட்டி லும் வசனத்திலும் சுருக்கியும் பெருக்கியும் பலவேறு வடி வங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. அன்றிக் கிளை களாய்ப் பிரிந்து, நாடகங்களாய்க் காவியங்களாய்க் குட்டிக் கதைகளாய்க் கணக்கின்றிக் காட்சியளித்தும் வருகின்றது. எத்தனை வடிவங்கள் எத்தனை கிளைகள் பாரதத்தில் தோற்றி யக்காலும் அத்தனையும் பயனுடையனவேயாம்.

அதுநிற்க:

''பாரதச் செல்வம்'' என்கின்ற இந்த வசனநூல், இளைய முதிய மாணவர்கள் இடையீடு படாமல் படித்து முடிக் கத்தக்க வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. சிறிய தொரு நேரத்தில் பலவகையான தருமங்களும் நீதிகளும் இளம் மாணவர்களின் மனத் திரையிலும் எழுந்து நடக்க வழிசெய்கின்றது இந்த வசனநூல்.

இந்தக் காலம் ஒரு அவசர காலம். இக்காலத்திலே கையில் எடுத்ததொரு புத்தகத்தைக் கீழே வையாமல் வாசித்து முடிக்கக்கூடிய வகையில் எழுதுவது பெரிய காரியம். அக்காரியத்தில் 'பாரதச் செல்வம்' பெரிய வெற்றி எய்தும். அதன் நடை தெளிவும் இனிமையும் வாய்ந்தது. பாத்திரங்கள் தொடர்ச்சி அறாமல் வாசிப் பவர்களைக் கடைபோக ஈர்த்துச் செல்லுபவை.

இந்நூல் மகாபாரதத்தின் நல்லதொரு சுருக்கம். இதுமேல் வகுப்பு மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக வைத்தற்குப் பெரிதுந் தகுதி வாய்ந்தது.

திருநெல்வேலி  **சி. கணபதிப்பிள்ளை**
15-12-57

ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை
முன்னுள் தலைமையாசிரியர், பண்டிதமணி, வித்துவான்

## திரு. ந. சுப்பையபிள்ளை அவர்கள்

வழங்கிய

# மதிப்புரை

பகுத்தறியுஞ் சிந்தனுசத்திக்குப் பாத்திரராகிய மக்கள் செய்வதுந் தவிர்வது மறிந்து இம்மை மறுமை வீட்டின் பங்கை எய்துதற்குக் கருவியாகிய பிரமாண நூல்கள் வேதாகமங்களும், அவற்றின் வழிநூல்களாகிய இதிகாச புராணங்கள் போன்றனவுமாகும். வேதாகமங்கள் அரச கட்டளைபோன்ற முறையில் விதிவிலக்குகளை அறிவுறுத் துவன. இதிகாச புராணங்கள் நண்பனுடைய இதோப தேசம் போன்ற முறையில், விதிவிலக்குகளை ஏதுக்களோடும் உதாரண வரலாறுகளோடும் விளங்க எடுத்துக் கூறி மக்களை நல்வழிப்படுத்துவன; மந்த மதியினர்க்கும் விளக் கும் பான்மையன. அத்தன்மையினுல், நாம் வேதங்களோ டொப்ப ஐந்தாம் வேதமென ஒருங்கெண்ணி மதிக்கப் பட்ட பாரதம், வரலாற்று நூல்களுள் தலைசிறந்து விளங் குவதொன்ருகும். அப்பாரத சரிதத்தை இக்காலத்து இளைஞர்க்கு ஏற்பச் சுவை பயக்கத்தக்க முறையிற் சுருக்கிக் கூறும் பான்மை வாய்ந்தது பாரதச்செல்வம் என்ற இப் புத்தகம்.

தருமசாஸ்திரங்களாலும் இலகுவில் நிச்சயித்தற்கரிய தரும சூக்குமங்கள் தருமசங்கடமான நிலைமைகளிற் கைக் கொள்ளத்தக்க முறைகள் போன்றவற்றை அறிந்தொழு குதற்குச் சாதகமாக, பாரதத்துட் கூறப்படும் சான்ருேர் களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சி முறைகள் வழி காட்டி உதவுவனவாகும். இத்தகைய பாரத முதனூலைக் கற்றுணர வேண்டுமென்னும் அவாவை உதிப்பித்து ஊக்கும் வகையிலும் அறிவொழுக்கங்களைப் பெருக்கும் வகையிலும் இப்படிப்பட்ட சுருக்க நூல் மாணவர்க்குச் சாதனமாய் நின்றுதவும்.

பாரதச் செல்வம் எனப்பெயரிய இச்சுருக்கநூல், மாணவர் தாமாகப் படித்து விஷயங்களைக் கிரகிக்கத் தக்க முறையில் இயற்றப்படும் உபபாடப்புத்தக வரிசையில் முதிக்கப்படுதற்கு ஏற்புடையதாக அமைந்துள்ளது. திரிசொற்கள் பயிலாமல், இக்காலப் பேச்சு வழக்கிலுள்ள இயற்சொற்களே பயின்றமையப்பெற்ற உரைநடை வடிவினைப் பெரிதுங் கொண்டு, மாணவர் கதையைத் தொடர்ந்து கற்று முடித்தற்கண், அவருக்கு அவாவையும் ஊக்கத்தையும் உதிப்பித்தற்கேற்ற ஸ்ரீதியைப் பொருந்தியுள்ளது: ஆங்காங்கு விறுவிறுப்பான சம்பாஷணை நடைபோன்ற நெறியினையுந் தன்கட் பொதிந்துள்ளது. இவ்வாற்றால், இப்புத்தகம் உயர்தர வகுப்பு மாணவர்க்குப் பெரிதும் பயன் படத்தத்கது எனலாம்.

ந. சுப்பையபிள்ளை

நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
22-12-1957.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவ விரதன் | 1 |
| 2. | குருகுலம் | 7 |
| 3. | பாண்டவ கௌரவர்கள் | 18 |
| 4. | அரக்கு மாளிகை | 30 |
| 5. | பாஞ்சாலி சுயம்வரம் | 45 |
| 6. | சூதும்வாதும் | 56 |
| 7. | வனவாசம் | 75 |
| 8. | அஞ்ஞாதவாசம் | 99 |
| 9. | உலூகன் தூது | 117 |
| 10. | பார்த்தசாரதி | 121 |
| 11. | போரா? சமாதானமா? | 124 |
| 12. | பஞ்சவர்க்குத் தூதுசென்ற பரந்தாமன் | 134 |
| 13. | கீதோபதேசம் | 152 |
| 14. | ஆனது வெஞ்சமர் | 157 |
| 15. | வீடுமர் வீழ்ச்சி | 162 |
| 16. | துரோணரும் மாண்டார் | 170 |
| 17. | கன்னன் முடிவு | 179 |
| 18. | அறம் வென்றது | 184 |

# பாரதச் செல்வம்

## 1. தேவவிரதன்

சந்தனு என்பவன் சந்திரவம்சத்து அரசர்களுள் ஒருவன். இவன் ஒருநாள் கங்கைக்கரையில் உள்ள காட்டிலே வேட்டையாடிக் கொண்டு நதிக் கரையோரமாக வந்து சேர்ந்தான். காட்டுச் செடிகளும் கொடிகளும் பூத்துக்குலுங்க, தென்றற்காற்று மரஞ்செடிகளிலுள்ள இலைகளையும் பூக்களையும் உளர்ந்துகொண்டு வீச, சலசலவெனப் பாயும் கங்கைநதியின் தெளிந்த நீர்ப்பெருக்கு உள்ளத்தைக் கொள்ளைகொள்ள, சந்தனு இயற்கையின் பொலிவிலே தன்னைப் பறிகொடுத்து நின்றான். அப்படி நிற்கும்போது அங்கே அழகெல்லாம் ஒருருக் கொண்டாலன்ன நங்கையொருத்தி தோன்றினாள். மாயமோ மந்திரமோ என்று மன்னன் பிரமித்துப்போனான். பேசுவதற்கும் அவனுடைய நா எழவில்லை.

மன்னனுடைய இந்த நிலையைக்கண்ட அம் மங்கையும் புன்முறுவல் செய்தாள். அரசனுக்கு உள்ளத்திலே சிறிது துணிவு ஏற்பட்டது. 'பேரழகியே, நீ யாரோ? உன் அழகு என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிட்டது. என்னை ஏற்றுக்கொள்வாயாக'' என்றிரந்தான்.

அவள் மீண்டும் நகைத்தாள். வீரர்களில் சிறந்த சந்தனுவா இப்படி ஒருகணத்தில் என் அழகுக்கு அடிமையாகி விட்டான் என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு, ''வீரனே, பின்முன் யோசியாமல் நீ இப்படிக் கூறலாமா?'' என்றாள்.

"எது எப்படியானாலும் நீயே எனக்கு வேண்டிய பொருளாகிவிட்டாய்; தாமதியாதே" என்று சந்தனு மீண்டும் இரந்தான்.

"அப்படியானால் ஒன்று சொல்லுகிறேன் கேள். 'யார் நீ; எப்படி வந்தாய்'? என்று என்னை ஒருபோதும் கேட்கக்கூடாது; நான் எது செய்தாலும் நீ தடுக்கலாகாது; இந்த நிபந்தனைகளை நீ மீறினால் நான் எப்படி வந்தேனோ அப்படியே போய்விடுவேன். இது உனக்குச் சம்மதமானால் இப்பொழுதே உன்வேண்டுகோளுக்கு இணங்கியவளாவேன்" என்றாள் அந்த மாயப்பெண்.

சந்தனுவினுடைய மனத்திலுண்டான காதலின் வேகம் அவனைச் சிந்தித்துப் பார்க்க விடவில்லை. எப்படிக் கொடிய கட்டுப்பாடானாலும் அவளை அடைந்துவிட வேண்டுமென்ற அவாவினால் அவன், அந்த நிபந்தனைகளுக்கு இணங்கி அவளையும் உடனழைத்துக்கொண்டு தன் நகரமான அத்தினபுரிக்கு வந்து சேர்ந்தான்.

அந்தப் பெண்ணினுடைய அன்பினாலும் அநுசரணையினாலும் சந்தனு காலம்போவது தெரியாமல் இன்பத்தில் திளைத்து வாழ்ந்தான். தானும் அந்த மங்கையுந் தவிர உலகில் வேறெதுவும் இருப்பதாக அவன் கருதவில்லை. இவ்வாறு ஏழு ஆண்டுகள் கழிந்தன. ஒவ்வோராண்டிலும் திவ்விய ஒளியோடு கூடிய ஒவ்வொரு குழந்தையை அம்மங்கை பெற்றாள். குழந்தைகள் பிறக்கப் பிறக்க அவற்றைத் தூக்கிக்கொண்டு போய்க் கங்கைநதிப் பெருக்கிலெறிந்துவிட்டுச் சிரித்தபடியே மன்னனிடம் திரும்பி வந்துவிடும் வழக்கத்தை மேற்கொண்டாள்.

அவளுடைய அழகும் அன்பும் உபசரணைகளும் சந்தனுவின் கண்ணை மறைத்தன. எனினும் இந்தப் பாபகரமான செய்கையினால் அவனுக்கு வியப்பும் துக்கமும் மேலிட்டுப் பொங்கும். ஆயினும் தான் கொடுத்த வாக்குறுதியை நினைந்து ஒன்றுஞ் சொல்ல முடியாமல் தவித்தான். எட்டாவது குழந்தையும் பிறந்தது. முந்திய குழந்தைகளைப்பார்க்கிலும் இது அழகினாலும் ஒளியினாலும் சிறந்து விளங்கியது. இதனையும் தூக்கிக்கொண்டு கங்காநதியை நோக்கிப் புறப்பட்டாள் அப்பெண்.

''நில்! கொடிய பாவமான இச்செய்கையை நீ ஏன் செய்கிறாய். பிசாசுகள் கூட அருவருக்கும் செயலைத் திவ்விய குணநலங்கள் பெற்ற நீ செய்யலாமா? பச்சைப் பசுங் குழந்தைகளை இப்படி அரக்கி போலக் கங்கை வெள்ளத்திலெறிந்து விடுகிறாயே, யார் நீ? சொல்'' என்றான் சந்தனு.

குழந்தையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்ட அந்நங்கை அவனைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள். ''மன்னா! செய்த பிரதிஞ்ஞையை மறந்தாயா? இனி நான் உனக்குரியவளல்லேன். அரக்கியோ பிசாசோ என்றும் நீ ஐயுறாதே. உலகத்துக்கெல்லாம் தாயாகிய கங்காநதியின் அதிதேவதை நானேதான். கங்கா தேவியான நான் மனிதரிலே சிறந்தவனான உன்னைச் சேர்ந்து இந்தப் பிள்ளைகளைப் பெற்ற வரலாறு சொல்வேன் கேள்:

''தேவலோகத்திலே வசிக்கின்றவர்களான அஷ்டவசுக்கள் முன்னொரு நாள் தம் மனைவிய

ரோடும் பூவுலகில் வந்து மலைகளிலும் சோலை களிலும் உள்ள அழகெல்லாம் கண்டு களித்து விளையாடித் திரிந்தார்கள். அப்பொழுது வசிஷ்ட மகரிஷியினுடைய ஆசிரமத்தின் பக்கத்தில் அவருடைய தவத்துக்கு இன்றியமையாததாகிய 'நந்தினி' என்னும் பசு நிற்பதைக் கண்டார்கள். ஒரு வசுவினுடைய மனைவி அப்பசுவைக் கண்டு ஆசைப்பட்டு அதைப் பிடித்துக்கொண்டு போக வேண்டுமென்று தன் கணவனிடம் கூறினாள். 'பூவுலகத்துப் பொருளிலே தேவப்பிறவியான உனக்கேன் ஆசையுண்டாயிற்று?' எனப் பிரபாசன் என்ற அந்த வசு தன் மனைவியைக் கேட்டான். அவளோ ஒரே பிடிவாதமாக நின்றாள். பின்னால் என்ன நேருமென்பதை எண்ணாமல் மற்ற வசுக்களும் சேர்ந்து நந்தினியைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள்.

''வசிட்டர் நந்தினியைக் காணாமல் தமது ஞானதிருஷ்டியினால் நடந்தவற்றை அறிந்து கொண்டார். 'பூவுலகத்துப் பொருளில் ஆசை கொண்ட அந்த எண்மரும் பூமியிலேயே போய்ப் பிறக்கட்டும்' என்று அவர் அந்த வசுக்களைச் சபித்தார். சாபம் பசுவைக் கவர்ந்தவர்களான வசுக்களை எட்டியது. அவர்கள் மனங்கலங்கி விரைந்தோடி வந்து ரிஷியின் கால்களிலே விழுந்தார்கள் 'சுவாமி, பொறுத்துக்கொள்ள வேண்டும்' என்று இரந்தார்கள். முனிவருடைய கோபமும் தணிந்தது. ஆனால் சபித்தது சபித்ததுதான். எனினும் அச்சாபத்திற்கு ஒரு விமோசனம் தந்தார். 'களவுக்கு உதவிசெய்தவர்கள் எழுவரும் பூமியிற் பிறந்தவுடனே விடுதலை யடைய, கள

வுக்கு முழுப் பொறுப்பாளியான பிரபாசன் மட்டும் பூமியிலே பன்னெடுங்காலம் இல்லற இன்பமின்றி மற்றெல்லாப் புகழோடும் வாழ்ந்து ஈற்றில் தன் பழைய நிலையை எய்துவான்' என்ருர்.

''இவ்வளவாவது பெற்ரேமேயென்று வசுக்கள் என்னிடம் வந்தார்கள். 'தாயே பூமியிலே போய்த் தகுந்த கணவனையடைந்து எங்களைப் பெற்று உடனே விடுதலை தரவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர். இதற்காக மானுட உடலைப் பெற்று உத்தமனுன உன்னிடம் வந்தேன். இதோ இந்த எட்டாவது குழந்தைதான் அந்தப் பிரபாசன். இவனை நானே பன்னிரண்டு வருஷங் களுக்கு வைத்து வளர்த்துப் பின்பு உன்னிடம் சேர்த்து விடுவேன். புத்திரன் மேல் ஆசை கொண்ட அரசனே, நான் இனி இங்குத் தரிக்க மாட்டேன்'' என்று இவ்வாறு தன் வரலாற்றைச் சொல்லிவிட்டுக் கங்காதேவி குழந்தையுடன் மறைந்து போனுள்.

நடந்ததெல்லாம் கனவோ நனவோ என்று சந்தனு மனங் கலங்கினுன். ''என் மனைவி உண்மையில் மறைந்தே விட்டாள். எட்டு வருஷ இன்ப வாழ்வு இப்படித் திடீரென இடிந்து போனதே'' என்று அவன் உள்ளமுடைந்து ஒன்றிலும் பற்றில்லாதவனுனுன். எப்பொழுதும் கங்கைக் கரையில் உலாவுவதும் கடந்துபோன நிகழ்ச்சிகளை எண்ணி உள்ளம் பொருமுவதுமாகக் காலத்தைக் கடத்தி வந்தான். இவ்வாறே பன்னீராண்டுகள் கழிந்தன.

ஒரு நாள் வழக்கம் போலச் சந்தனு கங்கை நதியோரமாக உலாவும்போது இந்திரனைப்போல ஒளியுள்ள இளைஞன் ஒருவன் காணப்பட்டான். அவன் பொங்கி வரும் கங்கா நதியைப் பாணப் பிரயோகம் செய்து தடுத்து விளையாடிக்கொண்டு நின்றான். அவனுடைய வில்வித்தையைக் கண்டு அதிசயித்து மலைத்துப்போய் வைத்த கண் வாங்காமல் அந்த இளைஞனையே பார்த்துக் கொண்டு நின்றான் சந்தனு. பழைய சிரிப்பொலி மீண்டும் அக்கங்கைக் கரையிலே கேட்டது. சந்தனுவின் திகைப்பு மாறுவதன் முன் கங்காதேவியும் பிரசன்னமானாள்.

"அரசனே, உன் புத்திரனுடைய அஸ்திரப் பயிற்சியைக் கண்டாயா? அவனுக்கு நான்தான் விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தேன். இவன் கற்காத கலை உலகில் இல்லை; வேதவியாசரிடம் சகல வேத சாஸ்திரங்களையும் கற்றிருக்கிறான்; பரசுராமரிடம் அஸ்திரங்களெல்லாம் பயின்றிருக்கிறான்; இவனைப்போன்ற பராக்கிரமசாலியை எந்த உலகத்திலும் காணமுடியாது. வீரனும் சாஸ்திரங்களை அறிந்தவனுமான உன் புத்திரனை நீயே இனி அழைத்துச் செல். இவன் பெயர் தேவவிரதன்" என்று சொல்லிப் புத்திரனைச் சந்தனுவினுடைய கையில் ஒப்படைத்துவிட்டுக் கங்காதேவி மறைந்தனள்.

இந்தத் தேவவிரதனே நமது பாரதக்கதைக்கு முதல்வனாவன்.

## 2. குருகுலம்

தேவவிரதனையும் அழைத்துக் கொண்டு அத்தினபுரம் வந்த சந்தனு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான். தேவவிரதனுக்கு இளவரசுப் பட்டமுஞ் சூட்டிச் சிறப்பாக வாழ்ந்துவரும்போது ஒருநாள் சந்தனு மன்னன் காட்டில் உலாவி வருகையில் எங்கிருந்தோ ஒரு திவ்விய வாசனை உண்டாயிற்று. அவன் அந்த வாசனை வந்த திசை நோக்கிச் சென்றான். ஆற்றங்கரையில் அழகிய மங்கை யொருத்தியைக் கண்டான். அவள் பரதவர் குலத்துப் பெண் என்பதைப் பார்த்த அளவிலேயே தெரிந்துகொண்டான். ஆயினும் அந்த அபூர்வமான வாசனை அவளிடமிருந்தே பரவுவதை அறிந்ததும் அவனுக்கு உண்டான ஆச்சரியத்துக்கு ஓரளவில்லை. அவளுடைய உடலழகு சந்தனுவின் உள்ளத்தில் மறைந்து நின்ற இல்லற இன்பத்தைத் தளிர்க்கச் செய்தது. அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டு மென்று எண்ணி மிகுந்த தயக்கத்துடன் தன் கருத்தைத் தெரிவித்தான்.

"நான் சந்தனு என்னுமரசன்; பேரழகி யாகிய உன்னை என் பட்டமகிஷியாக்கிக்கொள்ள ஆசைப்படுகிறேன்" என்று சொன்னான்.

"நானோ பரதவர் குலத்திற் பிறந்தவள். என் பெயர் சத்தியவதி. நான் உமக்குத் தகுந்தவளானால் என் தகப்பனான பரதவராஜனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வீர்" என்று சொல்லி விட்டு அவள் நாணத்தோடு அவ்விடம் விட்டகன்றாள்.

அரசன் பரதவனைக் கண்டு விசாரித்தான். வலைஞர் குலத்துப் பிறந்தாலும் அவன் மிகச் சாமர்த்தியமாகப் பேசினன். "மகாராசாவே, என்மகள் சத்தியவதி எல்லா வகையாலும் உமக்கேற்றவளே. ஆனல் ஒரே ஒரு விஷயம் தான் குறுக்கே நிற்கிறது. வீராதி வீரரான தேவவிரதர் இளவரசரா யிருக்கும்போது இந்தச் சத்தியவதிக்கு என்ன பெருமை ஏற்படப்போகிறது? உமது பட்டத்துத் தேவியாக்கினல் அவள் வயிற்றிற் பிறக்கும் மகனல்லவோ அரசனைக வேண்டும். தேவவிரதர் இருக்கும் வரையும் இது நடக்கக் கூடிய காரியமா?" என்முன்.

இதனைக் கேட்ட மன்னன் அவ்விடத்தில் நிற்கவும் விருப்பமற்றவனுய்ச் சென்று விட்டான். ஆனல் சத்தியவதியின் அழகிய உருவமோ சந்தனுவினுடைய உள்ளத்தைவிட்டு அகலவில்லை. நாளுக்குநாள் அவளுடைய எண்ணத்தினல் இளைத்துக்கொண்டு வந்தான்.

தந்தையாரின் இந்த மனமாற்றத்தையும் உடல் இளைப்பையும் கண்ட தேவவிரதன் மனம் வருந்தினன்; தந்தையை அணுகிக் காரணங் கேட்டான். நடந்தவற்றைத் தகப்பன் மகனிடம் எப்படிச் சொல்லுவான்? பாவம், வேறேதோ சொல்லி ஏமாற்றப்பார்த்தான். தேவவிரதன் உண்மைக் காரணத்தை அறியத் துடித்தான்.

"மகனே, வீரர்களுக்குக் கெல்லாம் திலகமான தேவவிரதா, நீ ஒருவனே நூறு புத்திரருக்குச் சமானமானவனுயிருக்கிறுய். ஆனல் க்ஷத்திரியராகப் பிறந்த எமக்கு எந்த நிமிஷத்திலும்

மரணம் சம்பவிக்கலாம். இதனை உணர்ந்தல்லவா சாஸ்திரங்களும், 'ஒரு புதல்வன் இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றுதான்' என்று கூறுகின்றன. நீயோ வியாசருக்குத் தெரிந்த சாஸ்திரங்களனைத்தும் தெரிந்தவனுயிருக்கிருய். பரசுராமனுக்குத் தெரிந்த அஸ்திரப்பயிற்சியெல்லாம் பெற்றிருக்கிருய். உனக்கு நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. சந்ததி கெடாமல் இருக்க ஆசைப்படுகிறேன்'' என்று சந்தனு கூறினுன்.

தேவவிரதனுக்கு விஷயம் ஓரளவு விளங்கி விட்டது. ஆற்றங்கரைக்குச் சென்றுவந்த நாள் முதலாகத் தன் தந்தையாரிடத்துக் கண்ட மாற்றத்தை ஆராய்ந்தறிய வேண்டுமென்று அரசருடைய தேரோட்டியைத் தனிமையிலழைத்து நடந்தவற்றையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டான். தந்தையின் மனக்கவலையைப் போக்குவது மட்டுமல்லாமல் சாஸ்திரவிதிப்படி சந்ததியின் வளர்ச்சிக்கு உதவி செய்வதுமாகுமென்று தன் மனத்திலெண்ணிக்கொண்டு யாருமறியாமல் காட்டுக்குச் சென்ருன்.

உலகெல்லாம் புகழும் உத்தமனுன தேவவிரதன், கங்காதேவியின் தவப்புதல்வன், தன்னை நாடி வருகிருன் என்றறிந்த பரதவர்தலைவன், அவனை முறைப்படி வணங்கி வரவேற்ருன். "என் தந்தையாரும் சந்திரகுலத்து அரசர்களில் சிறந்தவருமான சந்தனு மன்னனுடைய மனத்தைக் கவர்ந்த மங்கையை மகளாகப் பெற்ற உத்தமரே, நீர் என்னை வணங்கக்கூடாது. அரசரின் மனம் மகிழுமாறு உமது மகள் சத்தியவதியை என்

தந்தையாருக்குக் கொடுக்கும்படி வேண்டுகின்றேன் '' என்று தேவவிரதன் விநயமாகக் கேட்டுக் கொண்டான். பரதவர் தலைவன் பெருமிதத்தினால் பூரித்துப்போனான். ஆனாலும் தான் முன்பு அரசனிடம் கூறியதையே தேவவிரதனிடமும் தெரிவித்தான். தன் தந்தையை மகிழ்விக்க வேண்டும் என்ற நோக்கமொன்றே உடையவனான தேவவிரதன், தன் இளவரசப் பதவியை அக்கணமே தியாகம் செய்து விட்டதாக வாக்குத் தத்தம் செய்து கொடுத்தான்.

பரதவன் மனம் கனிந்தான். ஆனால் மீண்டும் அவன் ஒரு சந்தேகத்தை எழுப்பினான். ''தேவர்களும் கொண்டாடக் கூடிய உத்தம குணங்களைக் கொண்ட வீரரே, உம்முடைய வாக்கில் அடியேன் சந்தேகப்படவில்லை. ஆனால் ஒன்று, நீரோ மகா வீரர்; உம்முடைய சந்ததியில் வருபவர்களும் இணையில்லா வீரர்களாகவே விளங்குவார்கள். அவர்களுக்கும் என் மகள் சத்தியவதியின் வயிற்றில் உதிக்கும் சந்ததியாருக்கும் பகைமை உண்டானால், நிச்சயம் உமது சந்ததியினரே வெற்றியடைவர். அப்பொழுது சத்தியவதியின் வழிவந்த சந்ததியார் அரசுரிமையை இழந்துவிடுவார்களல்லவா ? இதுவே பெண்ணைப் பெற்றவனுடைய சந்தேகம். சத்தியவதி வழிவந்த சந்ததியே சந்திரவம்சத்தை வளர்க்க வேண்டுமென்பது எனது ஆசை'' என்று அந்த வலைஞர்க்கரசன் மொழிந்தான்.

தேவவிரதன் யாரும் எதிர்பாராத வகையிலே கொடியதொரு பிரதிஞ்ஞையைச் செய்தான். ''என் உயிர் உள்ளவரையிலே கடுமையான பிரமசரிய விரதத்தையே அநுசரிப்பேன்.

என்ருல் சந்ததி உண்டாகாமல் நான் வாழ்ந்து வருவேன்'' என்று கூறினுன். யாராலும் செய்ய முடியாத இந்தச் சபதத்தைக்கேட்ட தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள் ''பீஷ்மன் பீஷ்மன்'' என்று அசரீரி மொழிந்தது. இப்படியான கொடிய சபதத்தைச் சற்றும் எதிர்பாராத பரதவன், மெய்ந்நடுங்கக் கண்ணீரரும்ப நாக்குழற பீஷ்மனைத் தொழுதான்.

''நீரே எம்தலைவன்; நீர்தேவர்; இந்தப்பெண்ணுக்கும் இனி நீரே தந்தை; இவளை அழைத்துப் போய் அரசனுக்குக் கொடும்'' என்று பரதவன் சத்தியவதியை அழைத்து வந்து பீஷ்மனுடைய முன்னிலையில் விட்டான். தன்னைத் தொழுத சத்தியவதியைத் ''தாயே வருக'' என அழைத்துப்போய், சந்தனு மன்னனிடம் கொடுத்து மணம் செய்வித்தான் பீஷ்மன்.

பாரதக் கதையிலே பீஷ்மன்தான் நடு அச்சாக விளங்குகிருன். தேவவிரதன் என்ற பெயர் மறைந்து அன்றுமுதல் அவன் 'பீஷ்மன்' ஆனுன். 'பீஷ்மன்' என்ருல் 'செயற்கரிய செயலைச் செய்தவன்' என்று பொருள் இந்த வடமொழிப் பெயரை 'வீட்டுமன்' என்றும், 'வீடுமன்' என்றும் தமிழிலே வழங்குவர்.

முற்காலத்திலே தன் தந்தைக்குத் தன் இளமையைக் கொடுத்துத் தகப்பனுருடைய முதுமையைத் தான் பெற்றுத் தந்தைக்கு இன்பம் நல்கியவன் 'பூரு' என்ற ஒரு மன்னன். அவனையுமே இந்த வீடுமன் வென்றுவிட்டான் என்று சந்தனு எண்ணி, அவனை மார்புற அணைத்துத் தழுவி

''பீஷ்மனே, உனக்கு ஒப்பானவர் யாரும் இப்பூமியில் வாழ்ந்ததுமில்லை; இனி வாழப்போவதுமில்லை. தந்தை செய்ய வேண்டிய கடன்களில் உனக்கு நான் யாதும் செய்யவில்லை. ஆனால் நீயோ எனக்கு யாரும் செய்யமுடியாத பேருபகாரத்தைச் செய்தாய் உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? உன்னுயிர் உன்னுடலை விட்டுப் பிரிய வேண்டுமென்று நீ நினைத்தாலொழிய மற்றெவ்வகையாலும் பிரியாத வலிமையை உனக்குத் தந்தேன்'' என்று சொன்னான்.

இவ்வாறு சத்தியவதியை மணந்து சந்தனு இன்பமாகத் தன் வாழ்நாளைக் கழித்து வந்தான். சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்ற இரண்டு அரசகுமாரர் பிறந்தனர். மூத்தவனான சித்திராங்கதன் முறைப்படி இளவரசுப்பட்டம் பெற்று, சந்தனு இறந்த பின் அரசனானான். வீடுமருடைய தலைமையில் சித்திராங்கதன் அரசு செய்து வரும்போது அவனுடைய பெயரைப் பெற்ற கந்தருவன் ஒருவன் அவன்மேல் பொறாமை கொண்டான். மானுடன் ஒருவன் தனது பெயரைப் பூண்டு அரசாள்வதா? என்ற மனக் கொதிப்பினால், யாருமறியாமல் அந்தக் கந்தருவன் அவனை அடித்துக் கொன்றுவிடவே, அவன் தம்பியாகிய விசித்திரவீரியன் அரசுக் கட்டிலேறினான்.

இந்தச் சந்தர்ப்பத்திலே காசி மன்னனுடைய கன்னியர் மூவரின் சுயம்வரம் ஏற்பாடாகியிருந்தது. அம்பை, அம்பிகை,' அம்பாலிகை என்னும் அம்மங்கையரின் அழகு, குணம் முதலிய

வற்றைக் கேள்விப்பட்டுப் பல தேசத்தரசரும் சுயம்வரத்துக்குச் சென்றனர். வீடுமரும் தன்தம்பி யாகிய விசித்திரவீரியனை அழைத்துக்கொண்டு தேரேறிக் காசிநகரம் போய்ச் சேர்ந்தார் அவருடைய வருகையால் பல அரசர்கள் பயங்கொண்டனர். ''செய்த சபதத்தை மறந்துவிட்டு பீஷ்மருமா சுயம்வரத்துக்கு வந்துவிட்டார்'' என்று சிலர் பரிகசித்தனர்.

வீடுமரோ ஒன்றையும் கவனியாது பெண்கள் மூவரையும் கவர்ந்து கொண்டு தன் தம்பியாரோடு தேரேறி அத்தினபுரி நோக்கிப் புறப்பட்டார். தோல்வியும் வெட்கமுமடைந்த அரசர்கள் பலர் ஒன்று கூடி வீடுமரை எதிர்த்தனர். கடும் யுத்தம் மூண்டது. அத்தனை அரசர்களையும் தனி ஒருவராகவே நின்று வீடுமர் எதிர்த்தார். அவருடைய வில்லாண்மைக் காற்ருது அரசர்களெல்லாம் தோற்ருேடிப்போயினர். சால்வன் என்னும் ஓரரசன் மாத்திரம் அவரை விடாது பின் தொடர்ந்து தாக்கினன். ஆயினும் வீடுமருடைய பாணங்களை விலக்கமுடியாமல் அவனும் ஈற்றில் புறங்காட்ட வேண்டியதாயிற்று.

அரசர் கூட்டம் பின்வாங்கியமை கண்டு வீடுமர் அவர்களை விட்டு விட்டு அத்தினபுரம் போய்க் கன்னியர் மூவரையும் தம்பியாகிய விசித்திரவீரியனுக்கே மணமுடித்து வைக்க ஒழுங்குகள் செய்யத் தொடங்கினர்.

அக்காலத்தில் வீரத்தால் கவர்ந்து மணம் செய்யும் முறையும் ஒன்று அரசர்களுக்கிடையே நிலவி வந்தது.

விவாக ஏற்பாடுகள் நடைபெறும்போது அம்பை என்பவள் வீடுமரைத் தொழுது, தான் இந்த விவாகத்துக்கு உடன்பட முடியாதென்று சொன்னுள். ஏற்கனவே தான் சாலுவ தேச மன்னனைக் காதலித்திருப்பதாகவும் அவனையன்றி வேறு யாரையும் மணக்க முடியாதென்றும் மறுத்துவிட்டாள். உள்ளம் விரும்பாத அந்த விவாகத்துக்குத் தாமும் உடன்பாடில்லை என்று சொல்லி, உடனே சகல மரியாதைகளுடனும் அவளைத் தேரிலேற்றிச் சாலுவ மன்னனிடம் வீடுமர் அனுப்பினுர். அம்பை சாலுவ மன்னனிடம் போனுள்.

மற்றும் அம்பிகை, அம்பாலிகை என்ற இரு கன்னியரையும் வீடுமர் வேதவிதிப்படி விசித்திர வீரியனுக்குத் திருமணம் செய்துவைத்தார்.

சாலுவ மன்னனிடம் சென்ற அம்பை சகல விவரங்களையும் எடுத்துச் சொல்லியும் அவன் அவளை ஏற்க மறுத்துவிட்டான். அம்பை மீண்டும் வீடுமரிடமே வந்தாள். தன் வாழ்வைக் குலைத்தமைக்குப் பிராயச்சித்தமாகத் தன்னையும் விசித்திரவீரியனுக்கே மணமுடித்து வைக்கும்படி வேண்டினுள். மனத்திலே வேறொருவனை வரித்திருந்த அவளை விசித்திரவீரியன் ஏற்க மறுத்துவிட்டான். எனவே, வீடுமரே தன்னை மணக்க வேண்டுமென்று அம்பை வேண்டினுள். தனது சபதத்துக்கு மாருகத் தாம் ஒன்றுஞ் செய்யமுடியாதென்று அவர் மறுத்துவிடவே, அம்பை ஆருத் துயரம்கொண்டு தன் தந்தையிடமே போய் வீடுமரைப் பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்று பிடித்துக்கொண்டாள்.

காசிமன்னனே வீராதிவீரனுன வீடுமரின் பகை யைச் சம்பாதித்துக் கொள்ளப் பயந்து மறுத்து விட்டான். இப்படிப் பலராலும் கைவிடப்பட்ட அம்பை அடக்க முடியாத துயரத்தோடு வீடும ருடைய ஆசிரியரும் க்ஷத்திரியகுல சத்துருவுமான பரசுராமரிடம் போய் முறையிட்டாள். சிஷ்யன் தன் சொல்லைக் கடக்க மாட்டான் என்ற தைரியத்தினுல் பரசுராமர் அம்பையைக் கூட்டிக் கொண்டு வீடுமரிடம் வந்து அவளை மணந்து கொள்ளும்படி கேட்டார். ஆனுல் வீடுமரோ தமது சபதத்தைச் சொல்லித் தன் குருவினிடம் தன்னை மன்னிக்கும்படி வேண்டினுர். தம் சொல்லை மாணவன் மறுத்துவிட்டானே என்று பரசுராம ருக்கு அடங்காக் கோபம் உண்டாயிற்று. உடனே தேரேறி வீடுமரோடு யுத்தத்துக்கு ஆயத்தமானுர்.

சபதத்தைக் கடப்பதிலும் பார்க்க, குருவுடன் யுத்தம் செய்து இறந்துபடுதல் நல்லதென்று வீடுமரும் யுத்தத்துக்கு ஆயத்தமானுர். தேவர் களும் கண்டு வியக்கும்படியாகக் கொடியபோர் மூண்டது. குருவும் சிஷ்யனும் களைக்காமல் சளைக்காமல் பத்து நாட்கள் போர் செய்தனர். வீடுமருடைய பாணங்களின் வேகம் வரவர அதி கரித்துக்கொண்டே வந்தது. பரசுராமருடைய கைகள் கணையைத் தொடு முன்பே வீடுமருடைய பாணங்கள் ஒன்று பத்து நூருகப் பெருகிப் பரசு ராமரைத் துன்புறுத்த ஆரம்பித்துவிட்டன. பரசு ராமர் முடிவிலே தம் தோல்வியை ஒப்புக்கொண்டு போரை நிறுத்தவேண்டியதாயிற்று.

ஒரு வழியும் கைகூடாமையால் அம்பை வெறுப்புக் கொண்டு வீடுமர் மீது முன்பிலும் அதிக கோபம் கொண்டவளாய்க் கார்த்திகேய னைக் குறித்துக் கடுந்தவம் செய்தாள். அந்தத் தவப்பயனால் அவள் யாகசேனன் என்னுமரசனுக் குப் புத்திரியாகப் பிறந்து பின் சிகண்டி என்ற ஆணுருப்பெற்று வீடுமரைக் கொல்லவென்றே காலத்தைக் காத்திருந்தாள்.

இஃதிவ்வாறாக வியாசபகவானருளால் விசித் திர வீரியனுடைய மனைவியர் இருவருள் அம்பிகை யினிடம் திருதராஷ்டிரனும், அம்பாலிகையினிடம் பாண்டுவும், அம்பிகையின் தோழியிடத்து விதுர னும் உண்டானார்கள். திருதராஷ்டிரன் கண் ணில்லாதவனாகவே பிறந்துவிட்டான். இக்குழந் தைகள் மூவருக்கும் பெரியதகப்பனாரான வீடுமரே வேண்டிய வித்தைகளைச் சொல்லிக் கொடுத்து அவர்களை ஆளாக்கினார். விசித்திரவீரியனுக்குப் பிறகு திருதராஷ்டிரனை அரசனாகவும் பாண்டு வைப் படைத் தலைவனாகவும் விதுரனை அமைச்சனா கவும் வீடுமர் ஏற்படுத்தினார். அவருடைய மேற் பார்வையில் அரசியல் ஒழுங்காக நடந்து வந்தது.

சந்திர வம்சத்து அரசர்களிலே சந்தனுவுக்கு முற்பட்டவனான 'குரு' என்னும் ஒருவன் இருந் தான். அவன் மிகப் பராக்கிரமசாலியாயிருந்த படியால் இவர்களுடைய குலம் குருகுலம் என வழங்கப்பட்டு வந்தது இனிமேல் பாண்டுவின் மக்கள் மிகப் பராக்கிரமசாலிகளாகிப் பாண்ட வர்கள் எனப்பெயர் பெறப்போகிறார்கள். எனவே திருதராஷ்டிரன் வழிவந்தோர் குருகுலத்தில் வந்த

கௌரவர்கள், என்றும் பாண்டுவின் வழிவந்தோர் பாண்டவர்கள் என்றும் பிரிந்துபோகும் வரலாறு தான் நமக்குப் பாரதக் கதையாக வரப்போகிறது.

சந்தனு

கங்கை — சத்தியவதி

பீஷ்மர் — சித்திராங்கதன் — விசித்திரவீரியன்

அம்பிகை — அம்பாலிகை — தோழி

திருதராஷ்டிரன் — பாண்டு — விதுரன்

## 3. பாண்டவ கௌரவர்கள்

திருதராஷ்டிரனுக்குக் காந்தார நாட்டு மன்னன் மகளான காந்தாரியை வேதவிதிப்படி மணமுடித்து வைத்தார்கள். தன் கணவன் கண்ணில்லாதவனென்றறிந்த காந்தாரி, தானும் தன் கண்களைத் துணியினுற் கட்டிக்கொண்டே தன் வாழ்நாளைக் கழிக்க உறுதி பூண்டாள்.

குந்திபோஜர்களிலே சிறந்தவனான சூரனென்பவனின் மகள் பிரதையைப் பாண்டு சுயம்வரத்தால் மணந்தான். குந்திபோஜ அரசவம்சத்துப் பெண்ணானதால் அவளுக்குக் குந்தியென்ற பெயரே வழங்குவதாயிற்று. பாண்டு பின்பு மத்திரராசன் மகளான மாத்திரியையும் மணமுடித்தான்.

மனைவியரிருவரோடும் இன்பமாக வாழ்ந்து வரும்போது ஒருநாள் பாண்டு வேட்டையாடச் சென்றான். காட்டிலே ஆணும் பெண்ணுமாக விளையாடிக்கொண்டு நின்ற மான்களில் ஒன்றை அம்பெய்து கொன்றான். மானுருவம் கொண்டிருந்தவரோ ஒரு முனிவராவர், அவர் பாண்டுவைப் பார்த்து, ''நீயும் இந்த மானைப்போலவே உன் மனைவியரைத் தீண்டினையானல் உடனே இறந்து படுவாய்'' என்று சபித்திறந்தார். இச் சாபத்தினுல் மனம் நொந்துபோன பாண்டு நாட்டிலே வசிக்க மனமில்லாமல் தன் மனைவியரையும் அழைத்துக்கொண்டு காட்டுக்குப்போய்த் தவஞ் செய்யலானன். உலகத்து இன்பங்களையெல்லாம் துறந்து அவன் காட்டிலே தவவாழ்க்கையை மேற்கொண்டிருந்தாலும் தன்குலம் விளங்க ஒரு

மைந்தனுவது இல்லையே; இனி மக்கட் பேற்றுக் கும் வழியில்லையே என்று நாடோறும் எண்ணி எண்ணி வருந்தினன். மனைவாழ்விலே நன்கல மாவது நன்மக்கட் பேறல்லவா? குழந்தையில்லா வாழ்வும் ஒரு வாழ்வாகுமா?

"கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வில் இனிமை என்னும்"

என்றிப்படியெல்லாம் எண்ணியெண்ணி மன முடைந்தான். 'குலம் விளங்க ஒரு மைந்தனுவது இல்லையே' என்று தன் கணவன் படும் மனவேதனையைக் குந்திதேவி அறிந்தாள். "நான் சிறு பெண்ணுயிருந்தபோது துருவாச மகரிஷி ஒரு சமயம் எங்களரண்மனைக்கு வந்திருந்தார். ஒரு கணமேனும் அவருக்குக் கோபமுண்டாகாமல் பணிபுரிதல் யார்க்கும் அரிதாகும். அப்படியிருந்தும் சிறுமியாயிருந்த நான் அவருக்கு ஒரு குறையும் உண்டாகாது ஓராண்டுக்காலம் பணி செய்தேன். அதனுல் மனங்கனிந்த முனிவர் எனக்குத் தேவர்களை அழைக்கும் மந்திரத்தைச் சொல்லித் தந்து ஆசீர்வதித்தேகினர். பின்னுல் நேரப் போகும் விளைவுகளை அறிந்து முனிசிரேஷ்டர்கள் தகுந்த வரங்களை முன்னமே நல்கிவிடுகிறுர்கள் போலும். தங்கள் கருத்துமிதுவானுல் நான் தேவர்களை அழைத்து அவர்களருளால் சிறந்த மக்களைப் பெறலாம்" என்று அவள் நாணத்துடன் மொழிந்தாள்.

இச்செய்தியைக் கேட்ட பாண்டு மன்னன் அகமகிழ்ந்தான். அவ்வாறே தேவர்களருளால் மக்களைப் பெறும்படி அவன் குந்தியைத் தூண்டி நின்றான். அவனுடைய உடன்பாட்டினைப் பெற்று குந்தி தருமதேவனை அழைத்து அவனருளால் உதிட்டிரன் என்றும் தருமன் என்றும் உலகம் போற்றும் உத்தமனைப் பயந்தாள்.

காட்டிலிருந்த குந்திதேவி குழந்தையைப் பெற்றெடுத்தாளென்பதை அத்தினபுரியிலிருந்த காந்தாரி அறிந்தாள். ஏற்கனவே வியாசபகவானருளால் நூறு புதல்வரைப் பெறக்கூடிய ஒரே கருவைத் தன்னுதரத்தில் வைத்திருந்தும், தான் முதலில் மகப்பேறு அடையவில்லையே என்ற பொறாமையினால் அவள் ஒரு கல்லையெடுத்துத் தன் வயிற்றிலே மோதிக்கொண்டாள். அதனால் சிதைவுற்ற கருவை மீண்டும் வியாசரே தமது தவவலிமையால் நூறு புதல்வர்களாகும்படி செய்தார். இவர்களில் மூத்தவனான துரியோதனன் மகாபராக்கிரமமுடையவனாகவும் மிகுந்த மூர்க்கனாகவும் வளர்ந்துவரலானான்.

குந்திதேவி மீண்டும் வாயுதேவனருளால் ஆஞ்சனேயனுக் கொப்பான வீமனையும், இந்திரனருளால் சகல லக்ஷணங்களும் ஒருங்கமைந்தவனும் வில்வீரனுமான அருச்சுனனையும் பெற்றாள். பின்பு பாண்டுவின் இரண்டாவது மனைவியான மாத்திரிக்கும் அந்த மந்திரத்தை உபதேசித்து இரட்டைத் தேவர்களான அசுவினி தேவர்களினருளால் அவளும் நகுலன், சகதேவன் என்னும் இரு குழந்தைகளைப் பெற்றெடுக்கச்

ந்தனள். இப்படியாகத் திருதராட்டிரனுக்கு
று மக்களும், காட்டிலே தவ வாழ்வை மேற்
ாண்டிருந்த பாண்டுவுக்கு ஐந்து புதல்வர்
ம் பிறந்தனர். நூற்றுவர் கௌரவரென்றும்
ண்டு புத்திரர் பாண்டவரென்றும் பெயர்
ற்றுவாராயினர்.

பாண்டவர் சிங்கக் குட்டிகளைப் போலக் காட்
ல வாழ்ந்து வருகையில் ஒருநாள் பாண்டு
ற்கையின் பொலிவிலீடுபட்டுத் தன்வயமிழந்து
ாயாளான மாத்திரியுடன் மகிழ்ந்திருந்தான்.
ிவரிட்ட சாபத்தின் விளைவால் மாத்திரி
த் தீண்டிய அக்கணத்திலேயே அவனுயிர்
கிற்று. கணவனின் பிரிவைப் பொருத மாத்
யும் அவனுடைய ஈமத் தழலிலே வீழ்ந்திறந்
ள். பாண்டுவுக்கு நேர்ந்த கதியைக் கேள்வி
ற வீடுமர், குந்தியையும் பாண்டவர்களையும்
ந்திஞபுரிக்கு அழைத்துச் சென்று நூற்றுவ
டன் ஒன்ருகவே வளர்த்துவந்தார். பாண்டவர்
நடைய தோற்றப் பொலிவினைக்கண்ட துரியோ
ஞதியர் அவர்கள்மீது பொருமையும் வெறுப்
கொள்வாராயினர். ஆனல் வீடுமரோ
றையவர்களோ எல்லோரையும் ஒன்ருகவே
த்துவந்தனர். வீடுமர், பாண்டவர்களுக்கும்
ளரவர்களுக்கும் கிருபாச்சாரியாரைக் கொண்டு
சர்க்குரிய பல வித்தைகளையும் கற்பித்துவந்
ர். எல்லோரும் ஆடல் பாடல்களிலும் அஸ்
ப் பயிற்சியிலும் ஒன்ருகவே தேர்ச்சி பெற்று
ந்தனர். வீமன் மற்றையோரிலும் மிகுந்த
வாளுக விளங்கினன். அருச்சுனனே வில்வித்
தயில் தனக்கு நிகர் தானேயாக வளர்ந்து

வந்தான். இதனைக்கண்ட துரியோதனனுக்கும் அவன் தம்பியர்க்கும் தாங்கொணாப் பொறாமையே வளர்ந்தது. வீமனுடைய விளையாட்டும் வேடிக்கையும் நூற்றுவரின் குரோதத்தை மேலும் அதிகரிக்கச் செய்தன. துரியோதனனுடைய தம்பிமார் மரங்களிலேறிப் பழம் பறித்துக்கொண்டிருக்கும் போது வீமன் கீழேயிருந்து அடிமரத்தைக் காலால் உதைப்பான். மரத்திலிருந்தவர்கள் பழங்களைப் போலப் பொத்துப் பொத்தென்று விழுந்து காயப் பட்டுக்கொள்வார்கள். இன்னும் அவர்களிலே சிலரைப் பிடித்துக்கொண்டு போய்த் தண்ணீரிலே நெடுநேரம் மூழ்கியிருந்து அவர்களை மூச்சுத் திணறும்படி செய்துவிட்டு மேலேகொண்டு வருவான். இப்படியே வீமனுடைய பால்ய விளையாட்டுக்களால் அவர்கள் துன்புறாத நாளே இல்லாதிருந்தது.

இவ்வாறு இருபக்கத்தார்க்குமிடையே பகைமை நாளுக்கு நாள் வளர்ந்து முற்றிவந்தது. துரியோதனாதியர் வீமனை எப்படியாவது தொலைத்துவிட வேண்டுமென்று சூழ்ச்சி செய்தனர். ஒருநாள் துரியோதனனும் அவன் தம்பியரும் புனல்விளையாட்டுக்கு ஆயத்தம் செய்தனர். ஆழமான அழகியதொரு மடுவிலே எல்லோருமாக நீந்தித் திளைத்து விளையாடிவிட்டு உணவருந்தினார்கள். வீமனுக்கு முன்னேற்பாட்டின்படி நஞ்சு கலந்த உணவு பரிமாறப்பட்டது. வஞ்சனையறியாத வீமன் அதனை உண்டதனால் ஒரு புறத்திலே மயக்கமுற்றுக் கிடந்தான். விளையாட்டயர்ந்த இளைப்பினால் தருமன் முதலியோர் தனித் தனியே அரண்மனைக்குத் திரும்பினர். மயங்கிக்கிடந்த வீமனைக் காட்டுக்

கொடிகளாற் கட்டி மடுவிலே தள்ளிவிட்டு நூற்றுவரும் வீடு திரும்பினர். தண்ணீருக்கு அடியிலே கூரான சூலங்களை அவர்கள் நாட்டிவைத்தும் வீமன் விழுந்த இடம் அதிர்ஷ்டவசமாக அபாயமற்றதாகவே இருந்தது.

நீரிலே தள்ளப்பட்ட வீமனை அங்கு வாழும் விஷப்பாம்புகள் கடித்தன. உணவோடு உட்கொண்ட நஞ்சும் பாம்புகளின் நஞ்சும் ஒன்றுக்கொன்று பரிகாரமாகி அவனுடைய மயக்கம் தெளிவடைந்தது. விஷத்தை நீக்க வேறு விஷங்களைக் கொடுத்தல் வைத்திய சாஸ்திரத்தில் காணப்படும் உண்மை. அதுவுமன்றி வேகந்தணிந்த விஷம் உடலுக்கு மேலும் உறுதியைக் கொடுக்கும். இதனால் வீமன் முன்னிலும் அதிக பலங்கொண்டவனாகி நீருக்கு வெளியே வந்தான். தனக்கிழைக்கப்பட்ட தீங்குகளை யெல்லாமெண்ணித் தனிமையிலிருந்து மனம் வெதும்பினான்.

வீமனைக் காணவில்லையே யென்று அரண்மனையிலே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. துரியோதனனாதியோரும் கவலையுற்றார் போல நடித்துக் கொண்டனர். தருமனும் அவன் சகோதரர்களும் குந்திதேவியும் நூற்றுவர்மீதே சந்தேகப்பட்டார்கள்; தாங்கொணாத் துயரெய்தி அவனைப் பலவிடத்தும் தேடுவாராயினர். தனக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை வீமன் எண்ண எண்ண அவனுடைய கோபம் கிளர்ந்தெழுந்தது. அந்தக் கோபத்தோடு தான் அரண்மனைக்குப் போனால் ஏதாவது அநர்த்தங்கள் செய்துவிடக்கூடுமென்று தன்னைத் தானே அடக்கிக் கொண்டு கோபமாறிய பின் போவதே நல்லதென்று காட்டி

லேயே சிலபகல் அலைந்து திரிந்துவிட்டு அ
மனையை வந்தடைந்தான்.

'ஒழிந்தான் வீமன்' என்றெண்ணி மனத்
மகிழ்ந்திருந்த துரியோதனனும் அவன் தம்பிய
வீமனை மீண்டும் அரண்மனையினிலே கண்ட
பயம் ஒருபுறம் ஆச்சரியம் ஒருபுறமுமாக எ
செய்வதென்று தெரியாது திகைத்து நின்ற
குந்தியும் தருமனும் தம்பிமாரும் அவ
தழுவிக் கண்ணீர் சொரிந்தனர். இனி
தாங்கள் விழிப்புடனிருக்க வேண்டுமென்
துரியோதனனாதியோர் தம்மைத் தொலை
செய்யும் சூழ்ச்சிகளில் அகப்பட்டுக் கொள்
திருக்கவேண்டுமென்றும் ஐவரும் உறுதி பூ
டனர்.

இஃதிவ்வாறாகப் பாண்டவ கௌரவர்க
குப் படைக்கலங்களில் விசேஷ பயிற்சி அள
வேண்டுமென்றெண்ணி அதற்குத் தகு
ஆசானைத் தேடும் முயற்சியில் வீடுமர் ஈடு
டார். கிருபாச்சாரியாரின் மைத்துனரும் ச
சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவரும் பரசுரா
டம் அஸ்திரப் பயிற்சி பெற்ற மகானுமா
துரோணரை அழைத்து வில்வித்தை கற்பி
அவர் ஏற்பாடு செய்தார். அரசிளங்கு
ரனைவரும் துரோணரிடம் அருங்கலை பயி
தொடங்கினர். அருச்சுனனே மற்றெல்லோரி
அற்புத ஆற்றல் படைத்தவனாகத் திகழ்ந்தா
'ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் மூத்தோ
வருக என்னாது அறிவுடையோனாறு அரசு
செல்லும்' என்றாற்போல, ஆசிரியருக்கும் அரு
னனிடத்திலேயே மிகுந்த அன்புண்டாயிற்

அவனும் குருவுக்குச் செய்யவேண்டிய பணிகளை யெல்லாம் குறைவறச் செய்து வித்தைகளை நன்கு பயின்றுவந்தான். இவர்களுடைய அஸ்திரப் பயிற்சி நிறைவெய்தியதும் ஒருநாள் அரங்கேற்று விழா நடந்தது. அரசகுமாரர் அனைவரும் தத்தம் திறமைகளைச் சபையோருக்குக் காட்டி மகிழ்வித்தனர். அருச்சுனனுடைய திறமையைக் கண்ட சபை மிகுந்த ஆரவாரஞ் செய்தது. நூற்றுவர்க்கு இது சொல்லொணாத மனவேதனையை உண்டாக்கிற்று. துரியோதனன் பொறாமையினால் வெதும்பினான். அப்பொழுது தேர்ப்பாகர்களுக்குத் தலைவனான சூதநாயகன் மகன் கன்னன் எழுந்தான். இவன் பரசுராமரிடம் வில்வித்தை பயின்றவன். அருச்சுனனுடைய திறமையைக் கண்டு, கொதித்தெழுந்து தன் ஆற்றலைக் காட்ட முன்வந்தான். அவன் எழுந்தவுடனே சபையில் ஒரு பரபரப்பு எழுந்து அடங்கிற்று. ''உன்னுடைய வில்லாண்மையை என்னிடம் காட்டு பார்க்கலாம். ஒரே பாணத்தால் உன் சிரத்தைத் துணித்து விடுகிறேன் பார்'' என்று கர்ச்சித்தான். அருச்சுனன் கலக்கமடையவில்லை. அவனைப் பார்த்துச் சிரித்து, ''ஓ! கன்னனே! அரசகுலத்தவர் தம்மிலும் கீழ்ப்பட்டவர்களுடன் சம யுத்தம் புரியாரென்பது உனக்குத் தெரியாதா? நீ எப்படி அறிவாய்; நீ தேரோட்டியின் மகன்தானே!'' என்று கூறிப் பரிகசித்தான். கிருபாச்சாரியாரும் அவ்வாறே அவனை இகழ்ந்து ஒதுக்கினார். இதனைக்கண்ட துரியோ

4

தனன் கடுஞ் சீற்றங்கொண்டு, "நான் இப்பொழுதே கன்னனை அங்கதேசத்து அரசனாக அபிஷேகம் செய்கிறேன். அவனும் எங்களைப் போலவே ஓரரசனாகிவிட்டான்" என்று கூறித் தனது சிம்மாசனம்போன்ற ஒரு சிம்மாசனத்தை அவனுக்களித்து நட்புப் பூண்டான்; பாண்டவர்களை எதிர்க்கத் தனக்கு ஒரு பலம் கிடைத்ததாகவும் எண்ணி இறுமாந்தான். அரங்கேற்றத்துக்கு வந்திருந்த சபையும் இருகட்சிகளாகப் பிரிந்து கலைந்தது.

இந்த ஆரவாரமெல்லாம் அடங்கியபின் துரோணர் ஒருநாள் தம்மாணவர்களை அழைத்துப் பழைய சம்பவமொன்றைச் சொல்லுவாராயினர்:

"பாஞ்சால தேசத்து அரசனான யாகசேனனும் நானும் சிறுவயதிலே ஒன்றாக வித்தை பயின்று வந்தோம். ஒருநாள் யாகசேனன் என்மீது கொண்ட நட்பின் மேம்பாட்டினால், தான் நாட்டுக்கு அரசனானதும் ஆட்சியில் பாதியை எனக்குத் தருவதாகக் கூறினான். 'அழலோம்புமெனக்கு அரசுரிமையெதற்கு? உனது சினேகம் இருந்தாலே போதும்' என்று அப்பொழுது சொல்லிவிட்டேன். கல்விப் பயிற்சி முடிந்ததும் நாமிருவேமும் பிரிந்துவிட்டோம். நான் கிருபரின் தங்கையை மணந்து இல்லறத்தை மேற்கொண்டு அசுவத்தாமனைப் பெற்றேன். யாகசேனனோ பாஞ்சால நாட்டுக் கதிபதியானான். எனது வாழ்க்கையிலே வறுமை குடிகொண்டது. அதனைப் போக்க எண்ணிப் பாஞ்சாலனிடம் போனேன். 'உன் பால்ய சிநேகன் நான்; வறுமையினால் வாடுகிறேன்; எனக்கு

உதவிசெய்' என்று என் நிலையை உணர்த்தினேன்' அரச போகத்திலே மதிமயங்கியிருந்த யாகசேனன் என்னை அவமதித்தான். 'அரசனுக்கும் ஆண்டிக்கும் என்ன சிநேகம்? இளமையில் விளையாட்டாகச் சொன்னதை ஒரு பொருளாக மதித்து வந்தனையே. உனக்கென்ன மதியீனம். போ போ,' என்று தகாதன பேசி என்னை இகழ்ந்தான்' நானும் உடனே திரும்பிவிட்டேன். ஆனால் என்னை அவன் அவமானப்படுத்தியது போல அவனையும் ஒருமுறை அவமானப் படுத்தவேண்டுமென என்னுள்ளத்திலே உறுதி செய்துகொண்டேன். இந்த எண்ணத்தை நீங்கள் நிறைவேற்றி வைக்கவேண்டும். அதனையே நான் சிறந்த குரு தக்ஷிணையாக உங்களிடம் வேண்டுகிறேன்'' என்று துரோணர் கூறினார்.

குருவுக்கு நேர்ந்த இந்த அவமானத்தைக் கேட்டதும், துரியோதனன் படைகளைத் திரட்டிக் கொண்டு யாகசேனனை எதிர்க்கப் பாஞ்சால தேசம் நோக்கிப் புறப்பட்டான். அருச்சுனனும் போர்க்கோலம் பூண்டு எல்லோருக்கும் பின்னே சென்றான். குருகுலப்படைகள் போருக்கு வருதலை யறிந்த யாகசேனன் சிறிது கலக்கமுற்றான். ஆயினும் தன் கலக்கத்தை வெளிக்காட்டாமல் தன்னைத் தேடிவந்த படைகளைப் போர்க்களத்திலே எதிர்த்தான். அதி வீரனான அவனுடைய எதிர்ப்பைத் தாங்கலாற்றாது முன்னணியிற் சென்ற துரியோதனனும் அவன் படைகளும் புறங்கொடுத்தோட ஆரம்பித்தனர். படையழிந்தமை கண்ட அருச்சுனன் துரியோதனனை அவன்

போக்கிலே போகவிட்டுப் படைகளுக்குத் தைரிய மூட்டித் திருப்பிக்கொண்டு போய் யாகசேனனை எதிர்த்தான். புயற்காற்றினு லலைக்கப்பட்ட சருகு கள் போலப் பாஞ்சாலப் படைகள் சிதறியோட லாயின. யாகசேனன் யுத்தகளத்திலே எல்லா வற்றையுமிழந்து தனித்து நின்றான். அருச்சுனன் அவனைப் பிடித்துத் தன் தேரிலே கட்டிக்கொண்டு போய்த் துரோணர் முன் விட்டுப் பணிவுடன் வணங்கி நின்றான்.

எதனைச் சிறந்த குருதக்ஷிணையாகக் கருதிக் கேட்டாரோ அதனைச் செய்துமுடித்த அருச்சு னனைத் துரோணர் கட்டித் தழுவி ஆசீர்வதித் தார். யாகசேனனைப் பார்த்து அவனுடைய தவறை உணர்த்தினர். ''அரசனே, அப்போது நாவடக்கிப் பேசும் வகையறியாதிருந்த நீ, இப் போது எல்லாம் அடங்கி யொடுங்கி நாணித் தலை குனிகின்றாய்! முன்பு என்னை அவமதித்துப் 'போ போ' என்றிகழ்ந்தாய். நான் இன்னும் உனது நட்பினையே வேண்டுகிறேன். ஆனால் இப் பொழுது உன் அரசுரிமை முழுதும் என்னுடைய தாகி விட்டதல்லவா? என்னோடு நண்பு பூண்டிருக்க உனக்கும் அரசுரிமை வேண்டும். ஆகையினால் நானே உனக்கு இராச்சியம் முழுவ தையும் உன் உயிரையும் தருகிறேன். பெற்றுக் கொள்'' என்று கூறி அவனை மேலும் அவமானப் படுத்தாமல் அவன் கட்டுக்களை அவிழ்த்து மன்னர்க்குரிய மரியாதைகள் செய்து அனுப்பினர்.

தன் நாடு திரும்பிய பாஞ்சாலமன்னன் கவலைக் கடலில் மூழ்கினன். தன்னை வென்ற

வில்வீரனின் உருவமும், தன்னை அவமதித்த துரோணரின் உருவமும் அவன் மனத்திலே மாறி மாறித் தோன்றின. விஜயனின் வில்லாண்மையை நினைக்குந்தோறும் அவனைத் தன் உறவினனாக்க வேண்டுமென்ற ஆசை வளரலாயிற்று. அதனால் அருச்சுனனுக்கு மாலை சூட்டக் கூடிய மங்கையொருத்தியையும் துரோணரைக் கொல்லக்கூடிய புதல்வன் ஒருவனையும் பெறவேண்டுமென்று ஆவலுற்றான். அதற்காகப் பல பண்டிதர்களையும் வேதியரையும் அழைத்துச் சிறந்ததோர் யாகஞ்செய்தான். அவன் விரும்பியவாறே அந்த யாகாக்கினியிலிருந்து திருஷ்டத்துய்ம்மனையும் திரௌபதியையும் பெற்றான். பெண்ணழகும் குணநலமும் ஒன்றாகச் சேர்ந்து திசையனைத்தும் இசை பெருகத் திரௌபதி வளர்ந்து வந்தாள்.

## 4. அரக்குமாளிகை

அத்தினுபுரியிலே பாண்டவர் பராக்கிரமசாலிகளாயும் ஒழுக்கத்திற் சிறந்தவர்களாயும் வளரலாயினர். குடிகளும் அவர்களிடத்தில் நன்மதிப்புக் கொண்டிருந்தனர். மைந்தர் பலத்தாலும் நலத்தாலும் சிறந்து ஆளுந்தகைமை பெற்றுவிட்டால் ஆட்சியை அவர்களிட மொப்புவித்தல் தொன்மை மரபு. அதற்கிணங்கத் திருதராஷ்டிரன், வீடுமர், விதுரர் முதலியோருடன் ஆலோசித்துக் கல்விகேள்விகளில் சிறந்த தருமனுக்கே முடிசூட எண்ணினுன். அவனுடைய சபையிலிருந்தோரனைவரும் அதுவே தக்கதென்றனர். நூற்றுவரும் சம்மதித்தார்கள். நன்னுளொன்றில் தருமன் இளவரசனுக முடிசூட்டப்பெற்ருன். அவனும் முந்தையோர் முறையின் வழுவாது அரசியலை அணிபெற நடாத்திவந்தான். 'தந்தையினும் தகவுடையோன் தருமன்' என்று உலகோரும் புகழ்ந்தனர்.

தருமனுடைய பெருமை நாளுக்குநாள் ஓங்கி வளர்தலையும் அவன் தம்பியர் புகழ் மேன்மேலும் பெருகுதலையும் கண்ட துரியோதனனுக்கு மனம் பொறுக்கவில்லை. பிள்ளைப் பருவத்திலே உண்டான பொருமை இப்பொழுது இன்னும் அதிகமாயிற்று. அவன் தன் தந்தையை அணுகித் தன்மனக்குறையைப் பலவாறு எடுத்தியம்பினுன். "தந்தையே, உனது பதவியையும் பெருமையையும் தருமனுக்கே கொடுத்தாய். அதனுல் அவனும் அவன் தம்பியரும் இறுமாந்து திரிகின்றனர். உனக்குப் பிள்ளைகளாகப் பிறந்த நானும் என்

உடன்பிறந்தவரும் ஏதிலார்போலப் பதவியிழந்து வாழ்தல் உனக்கு வெட்கமாயில்லையா? இதனைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருக்கமுடியாது. தருமனுக்கு முடிசூட்டச் சபையோரறியச் சம்மதித்தேனாயினும் இப்பொழுது ஆழ்ந்து சிந்திக்க அது நீதியன்றெனவே தோன்றுகிறது. எமக்குரிய பாகத்தை நாங்கள் பெற முயல வேண்டும். உன் மனக்கருத்தைச் சொல்'' என்று பிரலாபித்தான்.

''குழந்தாய் சுயோதனா, இந்த அரசும் நாடும் என் தம்பி பாண்டுவுக்கே உரியன. ஏதோ மூத்தவன் என்ற காரணத்தினால் எனக்கு முடிசூட்டினார்களேயன்றி நாட்டைப் பாண்டு மன்னனல்லவா ஆண்டு வந்தான். கண்ணில்லாதவனுக்கு அரசுரிமை எங்கேனுமுண்டா? அரசியல் முறையும் அதுவன்றோ? அதனால் பாண்டுவின் அரசுரிமையைப் பாண்டவரே பெற்றனர். அன்றியும் தருமனே உங்களெல்லோரிலும் மூத்தவன்; குருகுலத்து இளவரசர்களுள் அழகும் ஆற்றலும் அன்பும் அறிவும் பொறுமையும் நிறைந்தவன். வீணாக ஏன் பொறாமைப்படுகிறாய்? நீயும் உன் தம்பியரும் ஐவருடன் ஒத்து வாழ்ந்து உனக்குரிய அதிகாரத்தையும் இழந்துவிடாமல் இரு'' என்று திருதராஷ்டிரன் தன் மைந்தனுக்குப் போதித்தான்.

தந்தையின் வாயிலிருந்து இந்த வார்த்தைகளைக்கேட்ட சுயோதனன் வெகுண்டெழுந்தான். ''தந்தையே எனக்குக் கன்னன், சகுனி, மற்றும் துச்சாதனன் முதலிய என்னுடன் பிறந்தோர் யாவருமிருக்க நான் மனம் பொருந்தாத இந்தப்

பாண்டவர்களோடு ஒருபோதும் ஒத்துவாழ உடன்படேன். நாங்கள் பிரிந்தே வாழ வேண்டும்; அதற்குரிய வழிவகையைத் தேடுங்கள். பகையை வளரச்செய்து வேடிக்கை பார்க்க வேண்டா'' என்று கூறித் துரியோதனன் அவ்விடம் விட்டுக் கடிதிலகன்றான்.

தன் மைந்தன் இப்படி மனம் வருந்துவதைக் காணத் திருதராஷ்டிரனுக்குப் பெருங்கவலையாக இருந்தது. வீடுமர், விதுரர் முதலியவர்களைக் கலந்தாலோசித்து அவன் ஒரு முடிவுக்கு வந்தான். ''சிறுவயதிலிருந்தே இவர்கள் பகைமை கொண்டு வளர்ந்துவிட்டனர். ஆதலால் இவர்கள் பிரிந்துபோய்த் தூரத்திலே வாழ்ந்தால் பகைமை நீங்கிச் சகோதர பாசம் வளரவும் கூடும்'' என்று திருதராஷ்டிரன் விதுரர் முதலியவர்களுக்குக் கூறிப் பாண்டவர்கள் வாரணாவதம் என்னும் ஊரிலே போய் வசித்தற்குரிய ஏற்பாடுகளைச் செய்தான். பாண்டவர்களை வாரணாவதத்தில் வைத்துத் தொலைத்துவிடத் தந்தையும் மகனும் சேர்ந்து திட்டமிடுகிறார்கள் என்பதை மகா ஞானியான விதுரர் ஊகித்தறிந்தார். ஆனால் அவர் தம்முடைய ஊகத்தை யாருக்கும் வெளியிடவில்லை.

பாண்டவர்களுக்கு அமைச்சனாகப் புரோசனன் என்பவனைத் திருதராஷ்டிரன் நியமித்தான். அவன் எல்லோருக்கும் முன்னமே அங்குச் சென்று பாண்டவர் வசிப்பதற்காக அழகிய மாளிகையொன்றைக் கட்டுவித்தான். துன்மார்க்கனும் பழிபாவங்களுக்குச் சிறிதும் அஞ்சாதவனுமான அந்தப் புரோசனனுடைய மேற்பார்வையிலே மாளிகை

கட்டப்பட்டது. இவர்களின் சூழ்ச்சியை அறிந்த விதுரர் சில ஒற்றர்களை வாரணாவதத்திற்கு அனுப்பினார். அவர்கள் வேலையாட்களோடு வேலையாட்களாகச் சேர்ந்து அம்மாளிகையின் அமைப்பினை நன்கு அவதானித்துக்கொண்டு போய் விதுரரிடம் இரகசியமாகச் சொன்னார்கள்.

அரக்கு, மெழுகு, குங்கிலியம் முதலிய பொருள்களைக் கலந்து அந்த மாளிகை கட்டப்பட்டது. விரைவிலே தீப்பிடிக்கக்கூடிய பொருள்களும் மற்றவர்களுக்குச் சந்தேகம் தோன்றாதவாறு சேகரித்து வைக்கப்பட்டன. முற்றிலும் எரிந்து சாம்பலாகி அமங்கலமாக முடிவதற்கென்று கட்டிய அந்த மாளிகைக்கு மங்களம் என்று பொருள்படும் 'சிவம்' என்ற பெயரைச் சூட்டி அதிலே பஞ்ச பாண்டவரையும் குந்திதேவியையும் வசிக்குமாறு அனுப்பினர். இவர்கள் புறப்படும்போது விதுரர் தருமனை அழைத்துத் துரியோதனாதியரின் சூழ்ச்சியைக் குறிப்பாலுணர்த்தி எச்சரிக்கை செய்தனுப்பினார். புரோசனனும் அவர்களுக்கு ஒருவித சந்தேகமும் தோன்றாதவாறு அவர்களுடனேயே வசிக்கச் சென்றான்.

பாண்டவர்கள் தம்நகருக்கு வருகிறார்கள் என்றறிந்த வாரணாவதத்து மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்றனர். குந்திதேவியும் பாண்டவர்களும் சுபதினமொன்றிலே புதியமாளிகையிற் பிரவேசித்தனர். புரோசனனும் அவர்களுடன் கூடவேயிருந்து வேண்டியன செய்துவந்தான். அத்தினாபுரியிலிருந்து புறப்படும்போது

விதுரன் செய்த எச்சரிக்கையினுல் பாண்டு மைந்தர் அந்த மாளிகையின் பல பாகங்களையும் சுற்றிப் பார்வையிட்டனர். எரிந்து சாம்பலாவதற்கென்றே அது கட்டப்பட்டிருத்தலைக் கூரிய மதிபடைத்த ஐவரும் விரைவிலறிந்தனர். ''மெழுகினுல் நமக்கு ஆலயம் வகுத்ததும் விரகே. புரோசனனுடைய ஒழுகலாறும் வஞ்சனையாகவேயிருக்கின்றது. படைகளும் வேலையாட்களும் அவன் சொற்படியே நடக்கின்றனர். தொழுத கையினுள்ளும் கூரிய படைக்கலம் இருக்கலாமன்ருே? சூழ்ச்சி மிகப்பெரிதாகவே தோன்றுகிறது'' எனப் பாண்டவர் கவன்றனர். அத்தினுபுரியிலே கௌரவர்களோடிருந்து இடர்ப்படாமல் நிம்மதியாக வாழலாமென்று வாரணுவதம் சென்ற குந்தியும் மைந்தரும் என்ன ஆபத்து எப்பொழுது வருமோ என்று ஏங்கியபடியே காலம் கழிக்கலாயினர். ஆயினும் சூழ்ச்சியைத் தாமறிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ளாமல் நடந்துவந்தார்கள். வேட்டையாடப் போவதுபோலப் போய்ச் சுற்றிலுமுள்ள காடுகளையும் காட்டு வழிகளையும் நன்ருகப் பழகிக்கொண்டனர்.

இப்படியிருக்குநாளிலே விதுரரிடமிருந்து வந்த சிற்பியொருவன் வீமசேனனைத் தனிமையிற் சந்தித்தான். ''திருதராஷ்டிரன் கம்மியரை அனுப்பி மாளிகை கட்டச் சொன்னபொழுது அறமே வடிவான விதுரர் புரோசனனுடைய நடத்தையில் சந்தேகங்கொண்டு என்னையும் வேலையாட்களிலொருவனுக இங்கே அனுப்பினுர். மற்றவர்கள் அறியாவண்ணம் நான் இந்த மாளிகையிலிருந்து வெளியே செல்லக்கூடிய ஒரு சுரங்கம் அமைத்

திருக்கிறேன்; அதன் வாயிலே மூடி ஒரு கற்றூணை யும் நாட்டியுள்ளேன். பலவானுன நீர் அத்தூணை இலகுவில், பெயர்த்துவிடுவீர். அந்தச் சுரங்க வழியாக நீங்கள் ஆபத்துக் காலத்திலே தப்பிச் சென்றுவிடுங்கள்'' என்று அந்தக் கைவினையிற் சிறந்த கம்மியன் மொழிந்தான். இவ்வாறு உய்யும் நெறி கூறிய சிற்பியைத் தன்னுயிரினும் மேலாக மதித்து வீமன் அவனுக்கு வேண்டிய சன்மானங்களைச் செய்து அனுப்பினுன்.

காலத்தைக் காத்திருந்த புரோசனன் ஒரு நாள் பதறுவதைக்கண்டு, ''பாவி நம்மையெல் லாம் மாளிகையோடு தீக்கிரையாக்கிவிட்டுத் தற்செயலாக நடந்ததுபோல உலகத்துக்கு நடிக்கப் பார்க்கிருன். இவனுடைய பரபரப்பைப் பார்த் தால் மிகவிரைவிலே தன் கருமத்தை முடித்து விடுவான்போலத் தோன்றுகிறது'' என்று பாண் டவர்கள் எண்ணினுர்கள். ஒரு நாள், அவனை அழைத்து இரவில் நெடுநேரம் வரையில் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து விட்டுச் சந்தேகந் தோன்றுதவாறு அவனையும் தம்முடனே படுத்துத் துயில்கொள்ளும்படி சொல்லிப் பஞ்சணையும் கொடுத்துப் பரிவுகாட்டி னர். அரசியல் விஷயங்களையே தன்னேடு பேசிக் கொண்டிருந்தனர் என்பதனுல் அவர்கள் மனக் கருத்தையறியாத புரோசனன், அவர்கள் வேண்டு கோளுக்கிசைந்து அங்கே படுத்துறங்கினுன். புரோ சனனும் அவனுடைய ஆட்களும் அயர்ந்து தூங்கும் சமயமாகப் பார்த்து வீமன் அந்த மாளிகையின் பலபாகங்களிலும் தீ மூட்டினுன்.

பாவிகளனைவரும் மாளிகையோடு வெந்து சாகட்டும் என்று எண்ணித் தன் சகோதரர்களையும் தாயாரையும் கூட்டிக்கொண்டு சுரங்கவழியே சென்று நள்ளிரவில் அடர்ந்த காட்டின் மத்தியை அடைந்தான்.

மாளிகை தீப்பற்றி யெரிந்துபோன செய்தி ஊரெங்கும் பரவிற்று. நாட்டு மக்கள் பலவாறுகப் புலம்பினுர்கள். "கொடியவஞன துரியோதனன் இப்படிக் குரூரமாகப் பாண்டவரை வதைத்தானே" என்று அலறினுர்கள். துரியோதனனுதியோரும் வருத்தப்படுபவர்கள் போலவே காட்டிக்கொண்டனர். கோடைகாலத்திலே ஆழமான மடுவின் நீர்மேலே வெப்பமாகவும் அடியில் குளிர்ந்தும் இருப்பதுபோலத் திருதராஷ்டிரனுடைய அப்போதைய மனநிலையுமிருந்தது. உண்மையறிந்தவரான விதுரர் மட்டும் மனக்கவலையின்றி, "எது எந்தக் காலத்தில் நடக்கவேண்டுமோ அது அந்தக்காலத்தில் நடந்தே தீரும். நாம் கவலைப்படுவதில் பயனில்லை" என்று வீடுமர் முதலியோரைத் தேற்றினுர்.

இஃதிவ்வாருகக் காட்டிலே நள்ளிரவில் வந்தடைந்த குந்தியும் மைந்தரும் இனிச் செய்வதென்ன என்று ஆலோசித்தனர். சுரங்கத்திலும் காட்டுவழியிலும் நடந்த இளைப்பினுல் ஒவ்வொருவராக அந்தக் காட்டுத் தரையில் படுத்துத் தூங்கிவிட்டனர். பலவானுன வீமன் மட்டும் உறங்காமல் மற்றவர்களுக்குக் காவலாக விழித்திருந்தான். தமக்கேற்பட்ட கஷ்டங்களையும் மறந்து தூங்கும் உடன்பிறந்தோரையும் தாயையும் பார்த்து நெட்டுயிர்த்தான். காட்டுக்கொடி

களும் செடிகளுமே ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து ஒன்றுக்கொன்று ஆதாரமாக வாழும் போது பாவியான இந்தத் துரியோதனன் மட்டும் நம்மை ஏன் பகைத்துக் கொள்கிறுன் என்று எண்ணி எண்ணி மனம் நைந்தான்.

காட்டிலே திடீரென்று மனிதவாடை வீசு வதையறிந்த இடிம்பி என்னுமோரரக்கி நரமா மிசம் தின்னும் ஆசையோடு அங்கு வந்து சேர்ந் தாள். வீமனைக் கண்டதும் தான் வந்த எண் ணத்தை மறந்து அவனுடைய தோற்றப்பொலி விலும், கவர்ச்சியிலும் ஈடுபட்டு அவன்மேல் அடங்காக் காதல்கொண்டு தன்னை ஏற்றுக்கொள் ளும்படி மன்றுடினுள்.

நரமாமிசத்தைத் தேடிப்போனவள் நெடுநேர மாகியும் திரும்பவில்லையே யென்று அவளுடைய சகோதரனை இடிம்பன் காட்டுமரங்களை முறித் துத் துகள் செய்துகொண்டு மதயானைபோல அங்கு வந்து சேர்ந்தான். தன் தங்கையின் நிலை கண்ட அரக்கனின் கண்களிலே தீப்பொறி பறந் தது. 'அற்பனை ஒரு மானிடன்மேல் இச்சை கொண்டாளே' என்று சினந்தான். இதற்கெல் லாம் காரணமான இந்த வீமனை நசுக்கிவிட வேண்டுமென்று அவன்மேல் பாய்ந்தான். வீமனும் சிறிதும் பயமின்றி இடிம்பனைத் தாக்கினுன். மலை யும் மலையும் மோதுவதுபோலக் கட்டிப்புரண்டு மல்யுத்தம் புரிந்தனர். வீமசேனனுடைய குத்துக் களைத் தாங்கமாட்டாமல் அரக்கன் அலறிக் கொண்டு வீழ்ந்து உயிர்நீத்தான்.

இந்த ஆரவாரத்தினால் துயிலெழுந்த குந்தியும் மைந்தரும் அங்கு நடந்த மல்யுத்தத்தைக் கண்டு பிரமித்துப் போயினர். கொடிய அரக்கனிடமிருந்து தம்மைக் காத்த வீமனை எல்லோரும் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். சகோதரன் இறந்தமை கண்டும் அவ்விடம் விட்டு நீங்காமல் நின்ற இடிம்பியின் குறிப்பறிந்த குந்தி அவளை ஏற்றுக் கொள்ளும்படி வீமனைப் பணித்தாள்.

மற்றவர்களுடைய உடன்பாட்டோடு இடிம்பியையும் அழைத்துக்கொண்டு அவர்கள் காட்டு மார்க்கமாகச் சென்றார்கள். அங்கே வியாச பகவான் வந்து தோற்றினார். எல்லோரும் அவரைப் பணிந்து போற்றி அவருடைய ஆசியைப் பெற்றனர். அவருடைய ஆலோசனைப்படி சாலிகோத்திர முனிவருடைய காட்டிலே சிலகாலம் யாருக்கும் தெரியாமல் தங்கியிருந்து விட்டுப் பிறகு பிராமணர்கள் போல் உருமாறி வேத்திரகீயம் என்னும் ஊருக்குப் போகத் திட்டமிட்டுக் கொண்டு சென்றனர்.

சாலிகோத்திர முனிவருடைய காட்டில் தங்கியிருக்கும்போது இடிம்பியின் வயிற்றில் கடோற்கசன் என்பவன் பிறந்தான். தன்னுடைய இடிம்ப வனத்தில் காவலுக்கு யாரும் இல்லாதிருப்பதனால் தான் அங்குச் செல்ல வேண்டுமென இடிம்பி எண்ணித் தன் கருத்தைப் பாண்டவர்களிடம் தெரிவித்தாள். இதுவும் நன்மைக்கே என எண்ணி அவர்களும் விடை கொடுத்தனர். வேண்டும்பொழுது வந்து அவர்களிட்ட ஏவலைச்

செய்வதாகச் சொல்லிக் கடோற்கசனையும் அழைத்துக்கொண்டு இடிம்பி பிரிந்து சென்றாள்.

பாண்டவர்களும் பிராமண வேஷம் பூண்டு வேத்திரகீயமென்னும் ஊரையடைந்து அங்கே ஒரு வேதியர் வீட்டில் தங்கினார்கள். அக்காலத்தில் பிராமணப் பிரமச்சாரிகள் கையில் பிக்ஷாபாத்திரத்தை ஏந்தி வீடுகளில் கிடைக்கும் உபதானத்தை ஏற்று உண்டு காலம்கழிப்பது வழக்கம். பாண்டவர்களும் அந்த முறையை அநுசரித்துத் தமது காலத்தைக் கழித்தனர். ஐவரும் தமக்குக் கிடைக்கும் அன்னத்தைத் தாயாரிடம் கொடுப்பர். அதனை அவள் இரு சமபங்காக்கி ஒன்றை வீமனிடம் கொடுத்துவிட்டு மற்றப்பங்கை நான்கு சகோதரர்களுக்குங் கொடுத்துத் தானும் உண்பாள். வீமன் எப்பொழுதும் அதிகமாகச் சாப்பிடும் வழக்கமுடையவன். அவனுக்குப் பலமுமதிகம்; பசியும் அதிகம். வேத்திரகீயத்தில் கிடைத்த அன்னம் அவனுக்கு எவ்விதத்திலாயினும் திருப்தியாயில்லை. வரவர நிறம் மாறி இளைத்துக்கொண்டு வந்தான். இதனைக் கண்ட சகோதரர்களுக்கும் குந்திக்கும் பெரும் பரிதாபமாக இருந்தது. இப்படி இருக்கும்போது ஒரு நாள் இவர்கள் தங்கியிருந்த வீட்டுப் பிராமணரும் மனைவியும் கண்ணீர் விட்டுக் கலங்குவதைக் குந்தி கண்டாள். தம்மை அன்புடன் ஆதரித்து வந்த அம்மறையவர் துன்புறுவதைக் காணக் குந்திக்குப் பொறுக்கவில்லை. கண்ணீர் விடக் காரணமென்னவென்று அவர்களிடம் விசாரித்தாள்.

பகாசுரன் என்னும் ஓர் அசுரன் அந்த ஊர் எல்லையிலுள்ள காட்டில் வசித்து வந்தான். அவன் அங்குள்ளவர்களைக் கண்டபடி பிடித்துத் தின்னுவது வழக்கமாயிருந்தது. அவ்வூரரசனும் அவனுக்குப் பயந்து எங்கேயோ மறைந்திருந்தான். எனவே ஊராரெல்லாம் சேர்ந்து அவனிடம்சென்று ஒரு நிபந்தனையை ஏற்படுத்தினார்கள். "நினைத்தபடி கொல்லாதே. நாங்கள் உனக்கு வேண்டிய அன்னமும் கறிவகைகளும் மதுவும் மாமிசமுமாகக் கறுப்புக் காளைகள் இரண்டு பூட்டிய வண்டியில் ஏற்றி, வீட்டுக்கு ஒரு மனிதனைக வாரம் ஒருமுறை அனுப்புகிறோம். நீ அன்னம், கறி முதலியனவற்றையும் காளைகளையும் அந்த மனிதனையும் தின்றுவிட்டு மற்றவர்களை வதைக்காமல் இருக்க வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். பகனும் இந்த நிபந்தனைக்கு உடன்பட்டான். அன்று முதல் அந்த வழக்கம் நடந்து வந்தது. நல்ல அரசனைப் பெறாத மக்கள் இப்படித்தான் துன்பப்பட வேண்டும். அன்று பாண்டவர்கள் தங்கியிருந்த வீட்டாருடைய முறையாயிருந்தது.

இந்தச் செய்தியை அறிந்த குந்திதேவி வீமனோடு கலந்துபேசிவிட்டுத் திரும்பி வந்து வேதியரிடம் கூறினாள். "எனக்கு ஐந்து புதல்வர் உளர். அவர்களில் ஒருவனை அந்த அரக்கனுக்கு நான் கொடுக்கிறேன். மற்றும் வேண்டியவற்றை நீங்கள் ஒழுங்கு செய்யுங்கள்" என்றாள். இதனைக் கேட்ட அந்த வேதியர் பயந்து நடுங்கினார். "ஐயோ! அதிதியாக வந்த உங்களையா நான் பலிகொடுப்பேன்? ஒருபோதும் இசையேன்."

என்று மறுத்துவிட்டார். ''வேதியரே, என் மகன் மந்திரசக்தி படைத்தவன். அந்தப் பகனை யினுமென்ன அவனிலும் பன்மடங்கு பலமுள்ள வேறெவனையினுமென்ன, ஒரு நொடிப் பொழுதில் கொன்றொழித்து விடுவான். இந்த விஷயத்தை வேறு யாருக்கும் நீர் சொன்னீரானல் அவனு டைய சக்தி பலிக்காமற் போய்விடும். அதனல் தான் உமக்கும் நான் முதலில் அதனைச் சொல்ல வில்லை. இப்பொழுது ஒன்றுக்கும் அஞ்சாமல் நான் சொல்வது போலச் செய்யும். வேண்டிய அன்னம், கறிவகை முதலிய எல்லாவற்றையும் தாமதமில்லாமல் ஏற்பாடு செய்யும்'' என்று குந்திதேவி கூறினள். அவரும் ஒப்புக் கொண் டார்.

அன்னமும் கறிவகைகளும் சமைக்கப்படுவ தைக் கண்டதும் வீமனுக்கு ஒரே குதூகலம் ஏற் பட்டது. அவனுக்குண்டான ஆனந்தத்துக்கு ஓரளவில்லை. ஊர் சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்த தருமன் வீமனுடைய மகிழ்ச்சியைக் கண்டு தாயா ரிடம் விசாரித்தான் ''வீமன் ஒரே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருக்கிறனே; ஏதாவது சாகசம் செய்ய எண்ணியிருக்கிறனே?'' என்று கேட்டான். குந்திதேவி நடந்ததைச் சொன்னதும் தருமன் ஏக்கமடைந்தான். ''என்னம்மா! கஷ்டங்களை அனுபவித்ததனல் உன் அறிவும் மழுங்கிவிட் டதா? வீமனுடைய பலத்தை ஆதாரமாகக் கொண்டல்லவா நாம் பயமில்லாமல் இருக்கி றேம். இழந்துபோன அரசுரிமையையும் அவனில் லாமல் நாங்கள் மீண்டும் பெற முடியுமா?'' என்று கேட்டான்.

''தருமனே! நீ பயப்படாதே. வீமனுடைய பலத்தை நானறிவேன். அவன் அக்கொடிய அசுரனைக்கொன்று வெற்றியோடு மாலையில் மீள்வான். அதுவுமன்றி நமக்கு அன்னமிட்டு அதிதியாக வீட்டில் தங்கச்செய்து இத்துணைக் காலமாக உபசரித்தவர்களுக்கு நாம் இந்தக் கைமாறு செய்யவே வேண்டும்'' என்று தன்மைந்தனின் வீரத்தையும் கடமையையும் எடுத்துப் பேசினாள் குந்திதேவி.

கறுப்புக் காளைகள் பூட்டிய வண்டியில் அசுரனுக்காக ஆக்கிய உணவை ஏற்றிக் கொண்டு வீமன் காட்டை நோக்கிச் சென்றான். அவனுடன் சென்றவர்கள் கிராமத்தின் எல்லையில் நின்றுவிட்டார்கள். அப்பாலுள்ளது பகாசுரனுடைய காடு. எங்கும் எலும்பும் நிணமும் இரத்த நாற்றமும் சகிக்க முடியாமல் இருந்தன. பிணம் தின்னும் பறவைகள் அங்குமிங்கும் வட்டமிட்டன. சிறிது தூரம் சென்றதும் வீமன் ஓரிடத்தில் வண்டியை நிறுத்திக் காளைகளை அவிழ்த்துக் கட்டினான்.

''அசுரன் வந்துவிட்டால் அவனுடன் யுத்தம் செய்து கொன்றுவிடலாம். ஆனால் அவன் இறந்த பின்பு பிணத்தைத் தீண்டிய தீட்டு உண்டாகிவிடும். அதன் பின் இந்த அருமையான உணவை உண்ண முடியாது. அன்றியும் அவனோடு யுத்தம் செய்யும்போது இந்த உணவுகள் சிந்திச் சிதைந்து வீணாகிப்போகும். ஆகையினால் அவன் வருமுன் இவற்றை உண்ணுதலே உசிதம்'' என்று நினைத்து வீமன் அவற்றை அவசர அவசரமாக உண்ண ஆரம்பித்தான். இடையிலே அந்த அசுரன் வந்துவிட்டான்! செக்கர்வானம் போலச் சிவந்த மேனி

யும் ஆகாயமளாவிய தோற்றமும் இளம்பிறை போன்றிலங்கும் கோரப்பற்களுமுடைய பகன் பயங்கரஇரைச்சலோடு காட்சியளித்தான். தனக்கு வந்தஉணவைத் தானுண்ணவிருக்கும் மனிதப்பதர் உண்கிறதே என்று அடங்காக் கோபங்கொண்டு பெரிய மரமொன்றை வேரோடு பிடுங்கி வீமன மேல் விட்டெறிந்தான். அதனை அவன் இடக் கையினால் தட்டிவிட்டு வண்டியிலுள்ள பதார்த் தங்களை ஒன்றும் விடாமல் உண்டு முடித்தான். அவனுடைய அலட்சியம் பகாசுரனுக்கு ஆத் திரத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. உடனே அவன் ஓடிவந்து வீமனுடைய முதுகில் ஓங்கிக் குத்தினான். அவசரமாக அருந்திய உணவு நெஞ்சி னுள் தங்கி விக்கலெடுத்து இடர்ப்படுத்தாமல் அந்தக் குத்தினால் தங்கு தடையின்றி ஒழுங்காக அவனுடைய வயிற்றினுள் போய்ச் சேர்ந்தது. உணவருந்தி முடித்து எழுந்த வீமனை மீண்டும் தாக்கப் பகன் ஓடிவந்தான். வீமன் அவனைக் காலால் எட்டி உதைக்கவே அசுரன் தடா ரென்று நிலத்தில் வீழ்ந்தான். ''அசுரனே! கொஞ் சம் களைப்பாறு'' என்று சொல்லி வீமன் குடங் களோடு தயிரையும் குடித்து விட்டு வாயைத் துடைத்துக்கொண்டு கைகளைத் தொடையிலே தட்டி ஆர்ப்பரித்தான். ''அசுரனே எழுந்துவா'' என்று அவனை இழுத்துவந்து சிறிது நேரம் அவனுடன் மல்யுத்தம் செய்தான். வீமனுடைய ஒவ்வொரு குத்தினாலும் இடியினாலும் பகாசுர னுடைய உயிர் ஊசலாட ஆரம்பித்தது. முடிவில் வீமன் அவனைக் கீழே தள்ளி முதுகிலே முழந் தாளை ஊன்றிக்கொண்டு அவனுடைய முது

கெலும்பை முறித்தான். அந்தக் காடெல்லாம் அதிரும்படியான கோரசப்தமிட்டவனுய் வாயி னுல் இரத்தம் பெருகப் பகாசுரன் மாண்டான்.

பிணத்தை வண்டியில் ஏற்றிக் கொண்டுவந்து ஊர் எல்லேயிற் போட்டுவிட்டு வீமன் தாயா ரிடம் போய் நடந்தவற்றைச் சொல்லி அவளே மகிழ்வித்தான். பின்பு நீராடிச் சந்தனம் பூசி நிம்மதியாகப் படுத்துறங்கினுன். பகாசுரனு டைய மலே போன்ற உடல் உருக்குலேந்து ஊரெல்லேயிற் கிடக்கக் கண்ட ஊராரெல்லாம் மகிழ்ச்சிப் பரவசமாயினர். அவர்கள் வீமனே இன் னுரென்றறியாமல் பலவாருகப் போற்றிப் புகழ்ந்தனர்.

## 5. பாஞ்சாலி சுயம்வரம்

வேத்திரகீயத்திலே பாண்டவர் பிராமண வடிவத்துடன் பிராமண வாழ்க்கை முறையை அநுசரித்துக்கொண்டு வாழ்ந்துவரும் நாளிலே பாஞ்சால தேசத்து அரசன் யாகசேனனுடைய மகள் திரௌபதிக்குச் சுயம்வரம் ஏற்பாடாகி யிருப்பதைக் கேள்விப்பட்டனர். அந்த வைப வத்தைக் காணவும் அங்கு நடக்கவிருக்கும் வேடிக் கைகளைப் பார்க்கவும் தானங்களைப் பெறவும் விரும்பி வேத்திரகீயத்திலிருந்தும் அநேக பிரா மணர் புறப்பட்டனர். பாண்டவர் பிராமண ரைப்போல வாழ்ந்தாலும் அவர்களுடைய தோள்கள் வீரத்தால் தினவெடுத்துத் துடித்துக் கொண்டிருந்தன. அரசர் குலத்துப் பிறந்தவர்க் கிடையில் இப்படியான சுயம்வரமுறையும் அதற் காக வீரம் நிறைந்த போட்டிகளும் நடைபெறு வது அக்கால வழக்கம். இந்தச் சுயம்வரச் செய்தி கேட்டுப் பாஞ்சாலம் போகத் தன் மைந் தர்களும் ஆவலுறக்கூடும் என்று குந்திதேவி எண்ணினாள்.

''நாங்கள் நெடுநாளாக இந்தக் கிராமத்தில் தங்கிவிட்டோம். பல ஊர்களுக்கும் சென்று அங்குள்ள சிறப்புக்களைப் பார்ப்பது நல்லது. ஒரே இடத்தில் பல நாளிருந்தால் கிடைக்கும் உபசாரங்களும் குறைந்துவிடும்; பாஞ்சாலனு டைய நாடு பல வளங்களாலும் சிறந்த அழகிய நாடெனக் கேள்விப்படுகிறேன். நாமும் அங்கே செல்வோம்'' என்று குந்தி தன் புதல்வருக்குக் கூறினாள். இவ்வாறு குந்திதேவி குறிப்பினாற்

சொன்னதைக் கேட்ட பாண்டவர் மகிழ்ச்சியோடு புறப்பட்டுப் போய்ப் பாஞ்சால நாட்டின் தலைநகரை அடைந்தனர்.

பற்பல தேசத்து அரசர்களும் அவரவர் தேர், கொடி, படைகளுடன் அந்நகரத்து வீதிகளிலே பவனி வந்தது கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. எங்கும் மகரதோரணங்கள் அழகு செய்ய, பொன்னும் நவரத்தினங்களும் மின்ன, மங்கலமான பல்வகை வாத்தியங்கள் முழங்கப் பாஞ்சால நகரம் தேவலோகம் போலப் பொலிவுற்று விளங்கியது.

சுயம்வர மண்டபமோ தேவேந்திரனுடைய அத்தாணி மண்டபம் போலப் பார்ப்போர் கண்களைப்பறித்தது. பொதுமக்கள் ஒருபுறம், பிராமணர் மற்றொருபுறம், அரசகுமாரர் இன்னொருபுறமாகச் சபையில் நிறைந்திருந்தனர். வீரத்தாலொப்புயர்வுற்ற பாண்டு மைந்தர் மாத்திரம் பிராமண பிரமசாரிகளைப்போலக் கூட்டத்தோடு கூட்டமாக ஒருபுறத்தில் ஒதுங்கியிருக்க நேர்ந்தது விதியின் கொடுமையன்றோ.

பாஞ்சாலி மஞ்சன நீராடி அழகிய ஆபரணங்கள் பூண்டு தமையனை திருஷ்டத்துய்மனன் வழிசெய்து முன்செல்ல, அன்னங்கள் போன்ற சேடியர் சூழ்ந்துவர, அரசவன்னம் எனும்படி நடந்து சபாமத்தியில் வந்துசேர்ந்தாள். திரௌபதியின் அழகைச் சொல்லளவில் கேள்விப்பட்டிருந்தும் அவளை நேரிற் கண்ட மன்னர்கள் தமது கண்ணையும் மனதையும் பறிகொடுத்துப் பதுமைகள் போலிருந்தனர்.

அங்கு வீற்றிருந்த அரசர்களின் பெருமையை யும் மகிமையையும் சேடியர் அவளுக்கு எடுத் துரைத்தனர். அந்தணர் ஆசி கூறினர். மணமாலை யைக் கையிலேந்திய தன் சகோதரியைச் சபை நடுவில் நிறுத்தி எல்லோரும் கேட்கும்படி திருஷ் டத்துய்ம்னன் சொன்னான். ''இதோவில்; இவை அம்புகள்; மேலே சுழலும் எந்திரத்திலுள்ள தூவாரத்தின் வழியாக ஐந்து சரங்களை எய்து அதில் கட்டித் தொங்கும் பொன்மயமான இலக் கினை அடித்து வீழ்த்தும் அரசகுமாரன் எவனோ அவனுக்கே என் தங்கை உரியவளாவள்.''

'சிலையிது சிலீமுகங்க ளிவைகடுந் திரிகைவேகத்(து)
இலைமுகத் துழலுகின்ற எந்திரத் திகிரிநாப்பண்
நிலையிலா இலக்கு மஃதே நெஞ்சுற யாவனெய்தான்
கலைவலீர் அவற்கேயிந்தக் கன்னியும் உரியள்
என்றான்''

அதனைக் கேட்டதும் ஆரவாரம் அடங்கிய கடல்போலச் சபையில் அமைதி நிலவியது. அரச குமாரர் ஒவ்வொருவராக எழுந்து சபைமுன்வந்து வில்லை அசைக்கவும் முடியாது மீண்டனர். எத் தனையோ அரசர்கள் அந்த வில்லைப் பார்த்த மாத்திரத்திலேயே நெடுமூச்செறிந்து திரும்பி னார்கள். சல்லியன் என்னும் பெரிய வீரன் அந்த வில்லை இருகைகளாலும் எடுத்து நிறுத்தினான். ஆனால் நாணேற்ற முடியாமல் வில்லோடு கீழே வீழ்ந்து காயமடைந்து மீண்டான். பகதத்தன். சராசந்தன், துரியோதனன் என்ற வீரர்களும் நாணேற்ற முடியாமற் போயினர். கன்னன் எழுந்தான். ''இவன் வெற்றிபெறவுங் கூடும் என்று சபையில் ஆரவாரம் எழுந்தது. அவனும்

ஆண்மையுடன் வில்லை நிறுத்தினான். ஒரு மயிரிழைதான் இன்னும் இருந்தது என்று சொல்லும்படி நாணையும் இழுத்தான். ஆனால் வில்லானது மறுகணம் படீரென்று நிமிர்ந்து அவனுடைய முடியைத் தாக்கி வீழ்த்தியது. மகா வீரனான கன்னனும் தோற்றான் என்றதும் அரசர்களுக்கிடையே மௌனம் நிலவியது. எல்லோரும் ஏமாற்றத்தோடு வீற்றிருக்கும்போது அந்தணர் கூட்டத்திலிருந்து அழகிய ஒரு வாலிபன் எழுந்து சபைக்கு முன் வந்தான்.

அவன் எழுந்ததும் பிராமணர்களுக்கிடையே மாறுபட்ட அபிப்பிராயங்கள் ஏற்பட்டன. ''பாவம், அற்ப ஆசை தூண்ட இந்த இளைஞன் எழுந்து வருகிறானே'' என்று முதிய பிராமணர்கள் பேசிக் கொண்டார்கள் ''ஏன் இவனும் முயன்று பார்த்தாலென்ன?'' என்று மற்றொரு கட்சி பேசியது. மார்பில் பூணூல் விளங்க ஆண் சிங்கம்போல நடந்துவந்த அந்த வாலிபன் ''இந்த வில்லைப் பிராமணர்களும் வளைத்து நாணேற்றலாமா?'' என்று கேட்டான்.

''பிராமணர்கள் சுயம்வரத்தில் பங்கு பற்றினால் ஒரு தாழ்வுமில்லையே'' என்று திருஷ்டத்துய்ம்னன் மொழிந்தான். அரசர்களால் முடியாத வீரச்செயலை ஓர் அந்தணனாயினும் செய்து வெற்றி பெறட்டும் என்று அவன் எண்ணினான் போலும்!

''அரசர்களைப் போல உடல்வலி இல்லாவிட்டாலும் அந்தணர்களுக்கு உறுதியான தவவலியுண்டு. இந்த இளைஞன் யாரும் செய்யமுடியாத வீரச் செயலைச் செய்தாலும் செய்து விடுவான்

போலத் தோன்றுகிறது'' என்று சில அந்தணர் பேசிக்கொண்டனர். முடிவில் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவனுக்கு ஆசிகூறினர். வந்த இளைஞன் நாராயணனை மனதிலே தியானித்துக்கொண்டு வில்லையெடுத்தான். பெரிய வீரர்கள் முயன்றும் அசைக்க முடியாத வில்லைத் தன் இடக்கையினால் அநாயாசமாகத் தூக்கியதைக் கண்டதும் சபையில் ஓர் அமைதி நிலவியது கண்ணிமைக்கும் நேரத்தில் ஐந்து சரங்களைச் சுழலும் எந்திரத்தின் வழியாகச் செலுத்தி இலக்கினை அடித்து வீழ்த்தினான். அது கண்ட அரசரெல்லாம் வெட்கித் தலைகுனிந்தனர். ஆனால் அந்தணர்களோ எல்லையற்ற மகிழ்வெய்தினர். அனைவரும் தாங்களே திரௌபதியைப் பெற்றுவிட்டது போலக் குதூகலித்தனர். தங்கள் உத்தரியங்களை மேலே வீசி அவர்கள் செய்த ஆரவாரம் வானுலகை எட்டியது.

வில்வளைத்த வீரனைப் பாஞ்சாலி தன் செங்கமலக் கண்களால் பார்த்தாள். 'இவன் அவனேதான்; அந்தணனல்லன். அருச்சுனனே' என்று துணிந்து அவன் கழுத்திலே மணமாலையைச் சூட்டினாள். சந்திரனும் உரோகிணியும் போல அவர்கள் நின்ற திருக்கோலம் கண்டு சபை மகிழ்ந்தது.

அரசர்கள் மனத்திலே பொறாமைத் தீ மூண்டது. ''பார்ப்பனன் ஒருவன் இந்தப் பெரிய அரசவையை அவமதித்துவிட்டுப் பெண்ணைக் கொண்டுபோக நீங்களெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறீர்களே. போர் செய்து

வெற்றிகொள்வோம் வாருங்கள்'' என்று துரியோதனன் தூண்டிநின்ருன். தங்களுள் ஒருவன் சுயம்வரத்திலே வெற்றிகண்டான் என்ற தருக்கிஞல் தலைகால் தெரியாமல் நின்ற அந்தணர்கள் அரசர் கூட்டத்தை எதிர்க்கப் புறப்பட்டார்கள். தங்கள் உடைகளை வரிந்து கட்டிக்கொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்ட அவர்களைக் கண்டு அருச்சுனன் நகைத்தான். ''நீங்கள் பயப்பட வேண்டாம். யமன் வந்தாலும் நான் போர் செய்து வெற்றி காண்பேன். நீங்கள் சும்மா பார்த்துக் கொண்டிருங்கள்'' என்று அவர்களைக் கையமர்த்திஞன் க்ஷத்திரியர் கூட்டத்திலிருந்து தம்பிக்கு ஏதாவது எதிர்ப்பு வரக்கூடும் என்று எண்ணி வீமன் எழுந்து வெளியே போய் ஒரு பெரிய மரத்தை வேரோடு பிடுங்கி இலைகளை உதறிவிட்டு அதனை ஒரு சாதாரண தடிபோலத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு அருச்சுனனுக்குப் பக்கத்தில் வந்து நின்ருன். மற்றப் பாண்டவர்களும் வந்து கூடினர். சண்டை பெரிதாக மூண்டது. எதிர்த்து வந்த அரசர்களெல்லாம் அவர்கள் பாண்டவரென்றறிந்து ஒவ்வொருவராக விலகிச் செல்லத் துரியோதனனும் அவன் கூட்டத்தாரும் கன்னனும் பெருந் தோல்வியடைந்து அவமானத்தைச் சுமந்து கொண்டு அத்திஞபுரம் போய்ச் சேர வேண்டியதாயிற்று.

மறையவருருவில் மறைந்து வந்த பாண்டவர்கள் திரௌபதியையும் அழைத்துக் கொண்டு தங்கள் தாயார் தங்கியிருந்த இடம் சென்றனர். வேத்திரகீயத்திலே பிராமண வழக்கப்படி பிக்ஷை எடுத்துவந்து தாயாரிடம் கொடுத்து எல்லோரும்

சேர்ந்து உண்டு வந்தனர். அப்படியே அன்றும் ''அம்மா ஒரு பிக்ஷை ஏற்று வந்தோம்'' என்று கூறினர். குந்திதேவியும் உள்ளிருந்தபடியே வழக்கம் போல, ''மக்காள், நீவிர் ஐவீரும் சேர்ந்து உண்ணுங்கள்'' என்று சொல்லிக்கொண்டு வெளியில்வந்தவள், திரௌபதியும் நிற்கக் கண்டு பதறிப்போனாள். ''ஆ! என்ன நினைந்து என்ன சொன்னேன்.'' என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள். ''அம்மா, நின் சொல் வேத வாக்காகும். நாங்களும் அப்படித்தான் செய்வதாக எண்ணியிருக்கிறோம்'' என்று தன்னிகரில்லாத் தருமனே கூறினான்.

அங்கு நடந்தவற்றையெல்லாம் ஒற்றர் மூலம் அறிந்த துருபதன், தன் மகளைக் கைப்பிடித்தவன் ஒப்பற்ற வில் வீரனான விஜயனே என்பதை அறிந்து அடங்கா மகிழ்ச்சி கொண்டான். பாண்டவர்களையும் தாயான குந்தியையும் பாஞ்சாலன் தன்னுடைய அரண்மனையிலே விருந்தினராக வந்திருக்கும்படி வேண்டிக் கொண்டான். அவர்களும் அந்த வேண்டுகோளுக்கிசைந்து பாஞ்சாலனுடைய அரண்மனையைச் சென்றடைந்தனர். அங்கே விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்றன.

தாங்கள் ஐவருமே பாஞ்சாலியை முறைப்படி மணக்கப் போவதாகத் தருமன் சொன்னதைக் கேட்டுத் துருபதன் அருவருப்புக் கொண்டான். இழிந்தவர்களும் வாயிலால் சொல்லக் கூசும் இச்சொற்களை மக்களுட் சிறந்த தருமனே கூறக் கேட்ட துருபதனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"மகா ஆபத்துக்களையும் கொடிய சூழ்ச்சிகளையும் நாங்கள் கடக்க வேண்டியவர்களாயிருந்தபடியால் இப்படியான ஒரு விரதத்தை மேற்கொண்டுள்ளோம். எது கிடைத்தாலும் அதனை நாங்கள் ஒன்றாகவே அநுபவிப்பதாக வாக்கும் பண்ணிக் கொண்டோம். எங்கள் தாயாருடைய விருப்பமும் இதுவே" என்று தருமன் சொன்னான். பின்பு பெரியோர்களையும் கலந்தாலோசித்து, பாஞ்சாலியின் பழம் பிறப்பினையும், வியாசபகவான் மூலமறிந்து துருபதனும் அப்படியே செய்ய உடன்பட்டான். பாஞ்சாலனனுப்பிய தூதுவர் மூலம் நிகழ்ந்தவற்றை அறிந்த வீடுமர், விதுரர் முதலியவர்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஐவரும் விதிப்படி பாஞ்சாலியை மணந்து இன்பமுற்றிருந்தனர்.

சுயம்வரத்தில் தோல்வியடைந்தது மட்டுமல்லாமல் அதன் பயனாக உண்டான போரிலும் புறங்கொடுத்தோடினான் துரியோதனன் என்பதைத் திருதராஷ்டிரன் அறிந்தான். 'வாரணாவதத்து மாளிகையோடு பஞ்சவரைத் தீக்கிரையாக்கிக் கொல்லச் சதிசெய்தான் என்ற அவப்பெயர் இதனோடு அழிந்து போகட்டும் என்று எண்ணித் திருதராஷ்டிரன், பாண்டவர்களையும் திரௌபதியையும் அத்தினபுரிக்கு அழைத்துச் சிறப்புச் செய்தான் 'பாண்டவருடைய பக்கத்தில் நியாயமிருக்கிறது; பலமும் வீரமும் பொருந்தியவர்கள்; நெறிதவறாதவர்கள்; அவர்களையே உலகமும் போற்றுகிறது' என்று எண்ணிப் பாண்டுவின் பங்கைப்பாண்டவர்களுக்கே கொடுத்து விடத் திருதராஷ்டிரன் விரும்பி அத்தினபுரியிலிருந்த

பெரியவர்களையும் கலந்து ஆலோசித்து நல்ல நாளொன்றிலே தருமனுக்கு முடிசூட்டினான். தருமனை பேரரசன் என்று எல்லா அரசர்களும் அவனைப்பணிந்தனர். அவனுடைய பெருமை நாளுக்கு நாள் ஓங்கி வளரலாயிற்று. ஆனால் துரியோதனதியரின் இயல்பு முன்பு போலவே இப்பொழுதும் இருப்பதைக் கண்ட பாண்டவர்கள், தாங்கள் இனி அத்தினாபுரியில் தங்கி இருத்தல் உசிதமன்றெனத் தீர்மானித்தார்கள். இந்திரப்பிரஸ்தம் என்ற பழைய நகரத்தைப் புதுப்பித்து அங்கே போய்த் தமது அரசாட்சியை நடாத்துவதற்கெண்ணினார்கள். பஞ்ச பாண்டவரின் மைத்துனரும் யாதவகுலத்தில் திருமாலின் அவதாரமாக வளர்ந்தவருமான கண்ணபிரானும் அதுவே தக்கதென்றார்.

இந்திரப்பிரஸ்தம் பலவகைச் சிறப்புக்களுமுடையதாகப் புதுப்பிக்கப்பட்டது. பாண்டவர்கள் அங்கே தமது தலைநகரை அமைத்துக் கொண்டு அரசாட்சியைத் திறம்பட நடத்தி வந்தார்கள். துருபதராஜனுடைய பலமும் கண்ணபிரானுடைய பலமும் இன்னும்பல அரசர்களின் பலமும் பாண்டவர்களுக்குப் பெருந் துணையாய் இருந்தன. எல்லா அரசர்களிலும் தருமன் மேம்பட்டவனாக விளங்க வேண்டுமென்று சகோதரர்களும் அவனைச் சார்ந்தவர்களும் எண்ணி அதற்காக "இராஜசூயம்" என்னும் யாகம் செய்ய விரும்பினார்கள் 'அரசர்க்கரசன்' என்ற பெயர் பெற்று விளங்க வேண்டுமானால், அக்காலத்தில் 'இராஜசூயம்' செய்வது வழக்கம். பகை அரசர்களை வென்று அவர்களிடம் பெறும் திறைப் பொருள் கொண்டு செய்வதே இந்த யாகம்.

பாண்டவரை எதிர்க்கக் கூடியவனாக அக்காலத்தில் ஜராசந்தன் என்னும் பேரரசன் ஒருவன்தான் இருந்தான். அவன் மிகக்கொடியவன். மனித வேள்வியொன்றைச் செய்வதற்காகப் பல அரசர்களைச் சிறைப்பிடித்து வைத்திருந்தான். ஆகையால் அவனை வதம் செய்த பின்பே இராஜசூயத்துக்கு ஆயத்தம் செய்யவேண்டு மென்று கண்ணனும் அருச்சுனனும் வீமனுமாகப் புறப்பட்டார்கள். வீமன் ஜராசந்தனோடு மற்போர் செய்து அவனை விண்ணுலகேற்றினான். பின்பு இராஜசூயத்துக்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெற்றன.

பல சிற்றரசர்கள் பொன்னும் மணியும் நவரத்தினங்களுமாக இந்திரப்பிரஸ்தத்தில் கொண்டு வந்து குவித்தனர். யாகசாலை அழகாக ஒழுங்கு செய்யப்பட்டது. திருதராஷ்டிரன், துரியோதனன், கன்னன் முதலியவர்களும் அங்கே வந்து கூடியிருந்தார்கள். தருமனுடைய தம்பிமார் வந்திருந்தவர்களை யெல்லாம் உபசரித்தனர். வியாச பகவானுடைய கட்டளைப்படி தருமனும் திரௌபதியுமாக யாக காரியங்களைச் செய்தனர். யாகத்தில் அவி சொரிந்து ஆகுதி செய்த பிறகு யாகம் செய்தவர்கள் அங்கு வந்திருக்கும் பெரியோர்களை வழிபட்டு ஆசி பெறுவது வழக்கம். அதிலே முதல் வழிபாடு யாருக்குச் செய்வது என்று தருமன் வீடுமருடைய ஆலோசனையைக் கேட்டான். ''முதல் வழிபாடு கண்ணபிரானுக்கே உரியது'' என்றார் வீடுமர்.

அதன்படியே தருமன் கண்ணபிரானுக்கு வழிபாடியற்ற முற்பட்டான். அப்பொழுது சிசு

பாலன் என்னும் பேரரசன் ஒருவன் எழுந்து கண்ணபிரானைப் பலவாறு நிந்தித்தான். இவன் கண்ணபிரானுடைய பிறவிப் பகைவன். இவன் பேசிய இழிச்சொற்கள் கணக்கிலடங்கா. கண்ண பிரானைமட்டுமன்றி அவனுக்கு வழிபாடாற்றும் படி சொன்ன வீடுமரையு இழித்துரைத்தான். அதனைப் பொறுக்க முடியாமல் கண்ணன் அவ னோடு போர்புரிய வேண்டியதாயிற்று. பழிபல சொல்லித் தூற்றிய சிசுபாலன் ஈற்றில் கண்ண னுடைய சக்கராயுதத்துக்குப் பலியானான். கண் ணனை எல்லோரும் போற்றிப் புகழ்ந்தனர். யாக மும் இனிது நிறைவெய்தியது. தருமன் அரசர்க் கரசன் என்னும் பட்டமும் பெற்றுப் பெருமைப் படுத்தப்பட்டான் அவன் செய்த யாகத்தை எல்லோரும் புகழ்ந்து தத்தம் இருப்பிடம் எய் தினர்.

## 6. சூதும்வாதும்

இராஜசூயம் என்னும் வேள்விக்குப் போய்த் திரும்பிய துரியோதனன், அத்தினபுரியிலே தன் சபையைக் கூட்டினான். கன்னன், துச்சாதனன், சகுனி முதலிய தீயவர்கள் அவனுக்கு அண்மையில் இருந்தனர். பெரியவர்களான வீடுமர், விதுரர், துரோணர் என்பவர்களும் வீற்றிருந்தனர். தருமன் இந்திரப்பிரஸ்தத்திலடைந்த பெருமைகளையும் அவனுக்குப் பக்க பலமாக நிற்கும் பேரரசர்களின் வலிமைகளையும், சிற்றரசர் கொண்டுவந்து குவித்த நிதிக் குவியல்களையும் கண்டதனால் உண்டான பொறாமை பொங்க அரவக் கொடியோன் விஷமாகக் கக்கினான்.

"இந்திரன் முதலிய தேவர்கள் புகழ, நிலவுலகத்தரசர் பணிசெய்ய, வேதங்களை ஓதியுணர்ந்த முனிவர்கள் முறைப்படி வேள்வி செய்யத் தருமன் எல்லோரிலும் மேம்பாடுற்றான். இன்னும் சில காலம் சென்றால் எங்கள் செல்வத்தையும் வாழ்வையுமே அவர்கள் கவர்ந்து விடுவார்கள். பாண்டவர்களை அவர்கள் போக்கிலே விட்டுவிட்டால் நமக்குப் பேராபத்தாய் முடியும். கூரிய முள்ளுள்ள மரத்தை அது சிறு செடியாயிருக்கும் போதே கிள்ளி எறிந்து விடவேண்டும். வைரமேறி முதிர்ந்த பின்பு அது கோடரியையும் மழுங்கச் செய்யும். ஆகையால் மிகுவிரைவில் அவர்களோடு பொருது அவர்களுடைய செல்வமனைத்தையும் கவர்ந்து விடவேண்டும்" என்று துரியோதனன் தன் சபையிலுள்ளோர் கேட்கும் படியாகக் கூறினான் துச்சாதனனும் கன்னனும் அதுவே செய்யத்தக்க தென்றனர்.

அப்பொழுது சகுனி எழுந்தான். இவன் காந்தாரியின் சகோதரன். வஞ்சனை சூழ்ச்சிகளிலே தனக்கு நிகர் தானேயானவன். மற்றவர்கள் தன்னைக் குறித்துக் கூறும் வசை மொழிகளைத் தனக்கு இசைமொழியாகக் கொள்பவன். துரியோதனனுதியோரின் வலிமையையும் பாண்டவரின் வீரத்தையும் சகுனி சீர்தூக்கிப் பேசிய பேச்சு அங்கு நடந்த ஆலோசனையை வேறு பக்கமாகத் திருப்பியது.

''தருமன் வீமன் முதலியவர்களை நீங்கள் போரில் புறங்காண எண்ணுவது புத்தியாகாது. உலகத்தில் புகழ் பெற்ற வீரரான இடிம்பன், பகன், சராசந்தன் என்பவர்களையெல்லாம் வென்ற மகாவீரனை வீமனை வெல்லலாமென்று நீங்கள் எப்படி எண்ணலாம்? திரௌபதியின் சுயம்வர மண்டபத்திலே பெரிய அரசர்களெல்லாம் கலங்கி நிற்க, பிராமண வேடம் பூண்டு வந்து விஜயன் வில்லிறுத்தபோதும், இப்பொழுது இங்கிருக்கும் வீரர்களனைவரும் அங்கும் இருந்தனரல்லவா? துரியோதனா! இந்தப் பிறப்பில் மட்டுமன்று இன்னும் ஏழேழு பிறப்பெடுத்தாலும் பொய்யில் வாழ்க்கைத் தருமனையும் அவன் தம்பியரையும் நாம் போரில் புறங்காண முடியாது. ஆதலினால் போரில் வெல்லும் எண்ணத்தை இப்போதே மறந்துவிடு. அவர்களுடைய செல்வனைத்தையும் வஞ்சனையினாலேயே கவரவேண்டும். அதுதான் நமக்கு ஏற்ற வழி'' என்று சகுனி கூறினான்.

இவற்றைக் கேட்ட துரியோதனன் அகமகிழ்ந்து சகுனியைத் தன்பக்கத்திலுள்ள பொற்றவிசின் கண்ணே இருத்தி இன்சொற் சொல்லி வஞ்சனையால் கவருதற்குரிய வழிவகைகளை ஆராயத் தொடங்கினன்.

''தேவருலகிலும் இல்லையெனும்படி அழகிய மணிமண்டப மொன்றைக் கட்டி, அதனைக் காணவும் விருந்துண்டு செல்லவும் வருமாறு பாண்டவரை அழைக்கலாம் அழைப்புக்கிணங்கி அவர்கள் இங்கு வந்து இளைப்பாறியிருக்கும் நேரத்தில். 'சூதாடலாம் வருக' என்று தருமனைக் கேட்டால் அவன் மறுக்கமாட்டான். அவன் சூதில் மதி மயங்கி ஆடும்போது அவனுடைய சகல செல்வங்களையும் பணயமாக வைத்து ஆடும்படி கேட்டுக் கவர்ந்து கொள்ளலாம்'' என்று சகுனி தன் சூழ்ச்சியை விரித்துரைத்தான்.

இந்த ஆலோசனையைக் கேட்ட விதுரர் மிக அருவருப்புக் கொண்டார். எப்படியாயினும் துரியோதனனை நல்வழிப்படுத்த வேண்டுமென்று அவர் புத்திமதி கூறத் தொடங்கினர்.

''இந்தப் பூமி முழுவதும் உனக்கேயாக வேண்டும். அவர்களுடைய செல்வமெல்லாம் நீயே அநுபவிக்கவேண்டும் என்பது உன் எண்ணமானல், உன் தந்தையாகிய திருதராஷ்டிரனைக் கொண்டு இப்பொழுதே ஓலையனுப்பிவிடு. தந்தையினுடைய வேண்டுகோளுக்கிசைந்து இந்தப் பூமியை உங்கள் கையில் ஒப்படைத்துவிட்டு அவர்கள் கானகம் சென்றுவிடுவார்கள் அதனை விடுத்து இழிவான சூதாட்டத்தினுற் கவரக்கருது

வது வீரமாகுமோ? பாவமும் பழியுமே வந்து சேரும். உலகுள்ளளவும் இந்த வசை தீராதே!'' என்றூர். விதுரர் கூறிய இந்த வார்த்தைகள் துரியோதனனுக்குப் பிடிக்கவில்லை. ''உனக்கும் உன் சுற்றத்தார்க்கும் உண்டியும் உறையுளும் இங்கே. ஆனல் உன் பாசமெல்லாம் பாண்டவர்களிடத்திலே ஆகையினலன்ருே நீ எப்பொழுதும் அவர்களுடைய புகழையே பேசுகிருய்'' என்று துரியோதனன் நிந்தனை மொழிகளைக் கூறினன். விதுரன் வெகுண்டு அவ்விடம் விட்டகன்ருன். சகுனியின் ஆலோசனையே அங்கீகரிக்கப்பட்டது.

பின்பு துரியோதனன் அழகிய மணிமண்டபமொன்று கட்டுவித்தான். அந்த மண்டபத்தைக் காண வருமாறு பாண்டவர்க்குத் தூதனுப்பும்படி தன் தந்தையைக் கேட்டான். ''தகுதியான உபாயத்தினலே பாண்டவர்களை வெல்லக் கருதினீர்கள். நீங்கள் போர்செய்து கவரமுடியாத தரணியைப் பெறுவதற்குச் சகுனி நல்ல உபாயம் செய்தான்.'' என்று திருதராஷ்டிரனும் புகழ்ந்தான்.

மைந்தன்மேலுள்ள பாசத்தினல் அகக்கண்ணும் குருடாயினன் திருதராஷ்டிரன்; விதுரனையே யழைத்துத் தூதுபோகும்படி கட்டளையிட்டான். அரசரின் கட்டளையைச் சிரமேற்கொண்டு விதுரனும் இந்திரப்பிரஸ்தம் சென்ருன். பாண்டவர்களும் குந்திதேவியும் விதுரனை நல்வரவு கூறி உபசரித்தனர். எல்லோருடைய சுக நலங்களும் விசாரிக்கப்பட்டு முடிந்ததும் விதுரன் தான் வந்த காரியத்தை எடுத்துச் சொல்லி அங்கு நடந்த

வற்றையெல்லாம் விபரமாகக் கூறினன். "திருத ராஷ்டிரன் தானே நேரில் அழைத்தான்" என்பதைக் குந்தியும் பாண்டவர்களும் கேட்டு வியப்பு ஒருபுறம் துக்கம் மற்றொரு புறமாகக் கலங்கினர்.

"அழைப்புக்கிணங்கி அங்கே சென்ருல் சகுனியின் சூழ்ச்சிக்குட்பட்டுத் துன்பப்படவேண்டும், போகாவிட்டாலோ பெரியதந்தையாரை அவமதிப்பதாகும்; இதற்கென்ன செய்வது" என்று தருமன் இருதலைக் கொள்ளியாய்த் தவித்தான். "இது இன்னும் ஏதோ வஞ்சனைக்குத்தான் கால்கோள்" என்று குந்தியும் சந்தேகப்பட்டாள். "விதுரனே! என் மக்கள் பாவம் அறியாதவர்கள். அரசனுடைய அழைப்பை அலக்ஷியம் பண்ணுவதும் கூடாது. நீ எல்லாமறிந்தவன். என்ன செய்யலாம் சொல்" என்று அவள் கேட்டாள்.

"உன் மக்கள் அழிவில்லாதவர்கள். அதர்மம் எவ்வளவுதான் மேலோங்கி நிற்பது போலத் தோன்றினலும் முடிவில் தருமமே வெற்றியடையும். மேலும் நாம் எப்படி முயன்ருலும் விதியை வெல்ல முடியாது ஆகையால் நீ ஒன்றுக்கும் ஆலோசியாமல் உன்மக்களுக்கு விடை கொடுத்தனுப்பு. அரசனுடைய அழைப்பை அலக்ஷியம் பண்ணக் கூடாதுதான்" என்று விதுரன் கூறினன்.

சூதாட இணங்குவதில்லை என்ற தீர்மானத்துடன் பாண்டவர்களும் பாஞ்சாலியும் அத்தினபுரம் வந்து சேர்ந்தார்கள். உண்மை அறியாத நகர மக்கள் பாண்டவர்களை அன்புடன் வரவேற்றனர். பெரிய தந்தையாராகிய திருதராஷ்டிர

ளையும் குல முதல்வராகிய வீடுமரையும் துரோணர் முதலிய ஆசாரியர்களையும் காந்தாரியையும் தனித்தனியே கண்டு அவர்களை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு விதுரனுடைய மாளிகையில் எல்லோரும் தங்கி இளைப்பாறினர். அடுத்த நாட்காலையில் துரியோதனன் தன் தேரோட்டியாகிய பிராதிகாமியை விதுரனுடைய மாளிகைக்கனுப்பிப் பாண்டவர்களைத் தான் புதிதாகக் கட்டிய சபாமண்டபத்தைக் காணவரும்படி அழைத்தான். தருமன் பாஞ்சாலியைக் காந்தாரியிடம் அனுப்பிவிட்டுத் தன் தம்பியரோடு துரியோதனனுடைய மண்டபத்துக்குச் சென்றான்.

தேவருலகத்தில் உள்ள 'சுதன்மை' யென்ற அந்தச் சிறந்த மண்டபத்திலும் இப்படியான அழகைக் காணமுடியாதென்று சொல்லத்தக்க அழகுடன் அமைந்த அந்தச் சபாமண்டபத்தைப் பார்த்து வியந்த தருமன், அதன் சிறப்புக்களையும் அது கட்டுவித்த துரியோதனனுடைய பெருமையையும் பலவாறு புகழ்ந்தான். இப்படியே மண்டபத்தைச் சுற்றிப்பார்த்து இருக்கும்போது துரியோதனன் தன் நயவஞ்சகச்செயலுக்கு அடிகோலினான்.

''தந்தையார் இல்லத்தில் அமிழ்தினும் மிக்க சுவையுள்ள உணவு ஆக்கப்படுகின்றது. நாமெல்லாம் சேர்ந்து விருந்துண்ண வேண்டும். சமையல் முடியும் வரையும் இந்த மண்டபத்திலிருந்து எங்கள் மாமன் சகுனியும் நீயும் சிறிது சூதாடினால் நல்ல பொழுதுபோக்காக இருக்கும்'' என்று துரியோதனன் கூறினான்.

''சூதாட்டம் வஞ்சனை நிறைந்தது; பாவங்களுக்கெல்லாம் விளைநிலமானது. இது தீதென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. எத்தனையோ நல்லவர்கள் இதனால் கெட்டொழிந்து போனார்கள். வஞ்சனை மிகுந்த இச்சூது நமக்கு ஆகாது. உனக்கு எது வேண்டுமானாலும் கேள்: தந்து விடுகிறேன். சூதினால் பொருள் பெறுதல் நம் குலத்துக்கே அவமானமாகும்'' என்று தருமன் மறுத்துரைத்தான்.

அதன்மேல் சகுனி பேசத் தொடங்கினான்; ''சூதாட விரும்பாவிடில் விட்டுவிடு. சூதிலே வஞ்சனையுண்டு, பாவமுண்டு, பழியுண்டு என்றெல்லாம் வீண் சமாதானங்கள் கூறுவது முறையன்று. தாயக் கட்டைகள் எறியும் போது அக்கட்டைகள் ஒரு தலைச்சார்பாய் உருண்டு விழுவதுண்டா? காய்களை அடைக்கும் போது தான் நம்முடைய சாதுரியம் வெல்லுகிறது. இதில் வஞ்சனைக்கிடம் எங்கே? வஞ்சனையால் உன் பொருளைக் கவர எண்ணியவர் யார்? பந்தயம் வைக்கப் பொருளில்லாத உலோபியைப் போல நீ சூதாட்டத்தை இழிவாகப் பேசுதல் தவறு. இன்னும் கேள்; நான் தோற்கும் போதெல்லாம் நீ வைக்கும் பந்தயப் பொருளைப் போல் இருமடங்கு தந்துவிடுகிறேன். நீ தோற்கும்போது வைத்த பொருளை மட்டுமே இழந்து விடு. இதில் ஏதாவது வஞ்சனை உண்டா? சிந்தித்துப் பார்.''

சகுனி அளவறிந்து சிறிது சிறிதாகத் தருமனுடைய மனதிலே ஆத்திர மேறும்படி பேசிய பேச்சுக்கள் அவனை நிலைகுலைய வைத்தன.

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலக் கன்னனும் தருமனைப் பழித்தான். 'சும்மா பொழுது போக்காகச் சூதாடலாம் என்று கேட்டால் அதற்கு அஞ்சி நடுங்குகிறாயே! நீயா உயிரையும் பொருளாக மதியாமற் புரிகிற போரில், உன் க்ஷத்திரிய வீரத்தைக் காட்டப் போகிறாய்? உனக்கேற்ற உன் தம்பிமாரையும் கூட்டிக்கொண்டு விரைந்து செல்'' என்று கன்னன் கூறினான். இந்த வார்த்தைகள் அருச்சுனனுக்குக் கோபமூட்டின. ''எங்களை ஏமாற்றும் நோக்கத்தோடுதான் நீங்கள் இந்த ஏற்பாடெல்லாம் செய்திருக்கிறீர்கள். வஞ்சனை நிறைந்த சூதாட்டம் குலத்துக்கே ஈனம் தரும் என்பதற்காக மறுத்தான் அண்ணன். க்ஷத்திரிய தர்மத்துக்குத் தகாத பேச்சுக்களைப் பேசி அண்ணனுடைய வீரத்துக்கு இழுக்குக் கூறிய உன் நாவைத் துண்டித்துவிடுகிறேன்'' என்று சொல்லி அருச்சுனன் தன் கையில் வில்லையெடுத்தான். ஆனால் தருமனே அவனைச் சாந்தப்படுத்தி அமர்த்திவிட்டுச் சகுனியை விளித்து, ''உன் மாயச் சூதையும் ஆடலாம் வருக'' என்று சூதாட இசைந்தான்.

''துரியோதனனாதியர் ஏதாவது கேட்டால் மறுப்பதில்லை; மறுப்பதனால் மனவேற்றுமையும் பகையும் வளரும். 'எவ்விதத்திலும் அவர்கள் மனம் கோணாமல் நடக்க வேண்டும்'' என்ற தீர்மானத்துடனேயே தருமன் இந்திரப் பிரஸ்தத்திலிருந்து வந்தான். அந்தத் தீர்மானமே இப்பொழுது அவனைச் சதிசெய்துவிட்டது.

ஆட்டம் ஆரம்பித்ததும் சபையிலுள்ள வர்கள் பலர் கூடாதெனத் தடுத்தும் கேட்காமல் இருபக்ஷத்தாரும் சூதாட்டத்தில் மூழ்கிப்போயி னர். சகுனி வெற்றிமேல் வெற்றியீட்டினுன். தருமன் தன் செல்வம், நாடு, நகரம் எல்லாம் ஒன்றுென்றுய் இழந்தான். தீயவழியில் இறங் கினுல் அது கண்ணை மறைத்து ஒரே படுகுழியில் தள்ளி விடுகிறது.

தான் செய்வதின்னதென்று தெரியாமல் தரு மன் சகல செல்வங்களையுமிழந்து ஆட்டவெறி யில் மயங்கி இருக்கும்போது துரியோதனன் ''தங்களையும் பந்தயப் பொருளாக வைத்து ஆடு மாறு கேள்'' என்று சகுனியிடம் கூறினுன். அப் படிக் கேட்பது ஆட்ட விதிக்கே மாறுனது என்று சபையிலுள்ளவர்கள் சொல்லியும் யாரும் அத னைக் கவனிக்கவில்லை. வீரத்தால் ஒப்பில்லாத தம்பிமாரையும் தருமன் பணயமாக வைத்து ஆடிஇழந்து நின்றுன்.

அப்பொழுது சகுனி ஏளனமாகத் தருமனைப் பார்த்து, ''எல்லாவற்றையும் தோற்றுவிட்டாய். முறையாகவே நாங்கள் உங்கள் செல்வத்தை யெல்லாம் கவர்ந்துவிட்டோம்; இனி நீங்கள் எங்களுக்கு அடிமை'' என்றுன். வீமனும் அருச்சு னனும் துடித்தார்கள். க்ஷத்திரியர்களுக்கு உரிய போரில் வெற்றிபெற்றுல் வீமன் சந்தோஷப் பட்டிருப்பான். இந்த இழிவான சூதாட்டத்தில் தருமன் தங்களைத் தோற்றுனையென்று கொதித் தான்.

"அண்ணு, காரியம் மிஞ்சிவிட்டது. இப்பொழுது நாம் நம்முள் வேற்றுமை காட்டினுல் பகைவர்களுக்கு இடமாகிவிடும். எங்களிடையே உள்ள ஒற்றுமையைக் கெடுக்கவே துரியோதனன் இந்த ஏற்பாட்டைச் செய்தான். நாம் கெட்டொழிந்து போனுலும் அந்த எண்ணத்துக்கு இடம் கொடுக்கக்கூடாது. சாந்தமாக இரு; நடப்பதைப் பார்ப்போம்'' என்று அருச்சுனன் வீமசேனனை அடக்கினுன்.

பதறிக்கொண்டு நின்ற வீமனும் அடங்கினுன். சகுனி மேலும் தருமனைத் தூண்டினுன்; "உன்னுல் தோற்கப்படாத ஒரு பொருள் இருக்கிறது. அந்தப் பாஞ்சாலன் பயந்த கன்னி, உங்கள் ஐவரின் காதல் மனைவி. அவளைப் பந்தயமாக வைக்கலாமே'' என்று கேட்டான்.

"மூடனே, பந்தயப் பொருளைக் கேட்டு வைக்கச் சொல்லுதல் எந்த முறையில் சேர்ந்தது'' என்று விதுரன் ஆத்திரப்பட்டான். திருதராஷ்டிரனைப் பார்த்து. "உனது அறிவீனத்தினுல் இத்தகைய தீச்செயல்கள் எல்லாம் நடைபெறுகின்றன குருகுலத்துக்கே அழியாத இழிவைத் தேடிவைத்துவிட்டாய். நீயும் உன் புதல்வரும் மீளா நரகத்திற்கு வழிகோலிவிட்டீர்கள்'' என்று இகழ்ந்தான்.

சூதாட்ட ஆவேசத்திலிருந்த தருமன் பாஞ்சாலியையும் பந்தயமாக வைத்து ஆடினுன். அந்தோ! அப்பொழுதும் சகுனியின் கட்டைகளே வென்றன.

துரியோதனனுடைய குதூகலம் எல்லைகடந்து விட்டது; "எல்லாப் பொருளும் நம்முடையனவே; பாண்டவரும் பாஞ்சாலியும் நமக்கு அடிமைகள். எல்லாவற்றையும் கவர்ந்து வாருங்கள்" என்று விதுரரைப் பார்த்துக் கூறினன். விதுரர் சபையில் எழுந்தார். அவர் சொல்லப்போவதைக் கேட்க எல்லோரும் மௌனமாயிருந்தனர்.

"துரியோதனு! வஞ்சகச் செயல்களை ஒன்றும் விடாமல் செய்துவிட்டாய். கற்புடையவளான பாஞ்சாலியை இகழாதே. உன் அழிவுக்கே வழி தேடுகிருய். முற்காலத்தில் அரக்கராய்ப் பிறந்து திருமாலினல் அழிக்கப்பட்டவர்கள், பிறகு மானிடராகப் பிறந்து தீவினைகள் செய்து பூமிக்குப் பாரமேற்றிக்கொண்டு வருகிறுர்கள். இதனைச் சகிக்க முடியாத பூமிதேவி திருமாலிடம் முறையிட்டாள். பூமிதேவியின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்குத் திருமாலே தீயவர்களை அழித்தொழிக்கப் பிறந்திருப்பதாக அறிகிறேன். மனுஷத் தன்மை இழந்த அரசர் கூட்டம் முழுவதும் உன்னுடைய இந்தத் தீய செயல்களால் அழிவது நிச்சயம்" என்ருர்.

துரியோதனன் விதுரர் பேச்சை அலட்சியம் செய்துவிட்டுத் தேரோட்டியான பிரதிகாமியைப் பார்த்து, "இப்பொழுதே போய் ஐவருக்கும் பொதுவான அந்தப் பாஞ்சாலியைப் பிடித்திழுத்து வா. இந்த வீரர்கள் என்ன செய்கிருர்கள் பார்ப்போம்" என்ருன்.

பிரதிகாமி போய்த் திரும்பிவந்து, "முதலில் தருமர் தன்னைத் தோற்ருரா? அல்லது பாஞ்சாலியைத் தோற்ருரா? தருமரே முதலில் தம்மைத்

தோற்றுவிட்டாரானல் பிறகு பாஞ்சாலியை எப்படிப் பந்தயம் வைக்க உரிமை உண்டு!'' என்று பாஞ்சாலி கேட்டதாகக் கூறினன். ''இந்தத் தேரோட்டி பெரும் மூடன். வீமனைக் கண்டு பயப்படுகிறுன். நீ போய் அவளைப் பிடித்து இழுத்து வா'' என்று தன் தம்பி துச்சாதனனுக்குக் கட்டளையிட்டான். துச்சாதனனும் துள்ளிக் குதித்துக்கொண்டு அந்தப்புரம் போனுன். அங்கே தாயான காந்தாரியுடன் இருந்த பாஞ்சாலியின் கையைப்பற்றி இழுக்கப் போனுன். பாஞ்சாலி பயந்து காந்தாரியிடம் அடைக்கலம் புகுந்தாள். ''நியாயமாக வெல்லப்பட்டாய், உன் சந்தேகத்தை நீயே வந்து சபையில் கேட்டுக்கொள். அழகியே, பொதுமகளே, தாமதம் செய்யாதே, வா'' என்று கொடுமொழி பேசினன் துச்சாதனன்.

அரக்ககுணம் படைத்த நூறு பேரைப் பெற்றவளும் அச்சமயம் பாஞ்சாலிக்கு ஆதரவு சொல்லாமல் அரக்கியாகவே விளங்கினுள். தன் மைந்தன் செய்யும் கொடுவினையைக் கண்டிக்காமல் அவள் தன் மருமகளான பாஞ்சாலியைப் பார்த்து, ''உன் அயலாரல்லரே. எல்லோரும் உன் மைத்துனர்கள். இன்னும் பெரியவர்களும் அங்கே இருக்கிறுர்கள். உன் பதிகளும் சபையில் இருக்கிறுர்கள்; போய் நியாயத்தைக் கேள்'' என்று சொல்லி அகற்றினுள். கொடியவனுன துச்சாதனனும் அவளுடைய கூந்தலைப்பற்றி இழுத்துக்கொண்டு போய்ச் சபை முன் நிறுத்தினுன்.

''எவரும் செய்யக் கூசும் பாபகரமான செயல்களிலே துரியோதனனுதியோர் அரக்கர் போலப் பழிக்கு அஞ்சாமல் இறங்கிவிட்டார்கள்.

இனி எல்லாம் அநர்த்தமாகவே நடக்கப்போகிறது'' என்று சபையிலிருந்த பெரியோர் அஞ்சினர்.

துரியோதனன் முதலிய நூற்றுவருள் விகர்ணன் ஒருவன். அவர்களுடன் பிறந்தாலும் அவன் நல்லியல்புகள் நிரம்பியவன்; நீதிநெறி உணர்ந்தவன். அவன் துரியோதனனுடைய செய்கைகளைக் கண்டித்ததோடு நில்லாமல், சகுனி ஆட்டமுறைக்கு விரோதமாக எதிரியிடம் இன்ன பொருளைப் பணயமாக வை எனக் கேட்டதும் பெரிய தவறு என்று வாதாடினன். தருமன் தன்னை முதலிற் தோற்ற பின்பே பாஞ்சாலியைப் பணயமாக வைத்தான். பாஞ்சாலி நியாயமாகத் தோற்கப்பட்டவளல்லள் என்று எடுத்துரைத்தான்.

சபையிலிருந்தோர் விகர்ணன் பேசிய நியாயயான சொற்களைக் கேட்டுச் சந்தோஷப்பட்டனர். ''இவன் தக்கோன்'' என்று புகழ்ந்தனர்.

ஆனல் அங்கிருந்த கன்னன் எழுந்து, அவனை நிந்தித்தான். எல்லோருக்கும் இளையவனான விகர்ணன் ஆலோசியாமல் அப்படிப் பேசியிருக்கக் கூடாதென்று வாதித்தான். தனது இல்லத்தையே தோற்ற தருமன், வீட்டிலுள்ளவளாகிய பாஞ்சாலியையும் ஏற்கனவே தோற்றுவிட்டானென்று அதர்மம் பேசினன். கன்னனுடைய வாயிலிருந்தே அதர்மம் வெளிப்பட்டதென்றல் சுற்றமும் சூழலும் ஒருவனை எவ்வளவு மாற்றி விடுமென்பதை நாம் அறியக் கூடியதாயிருக்கின்றதன்றோ!

கன்னனுடைய மொழிகேட்ட துரியோதனன் அடங்கா மகிழ்ச்சி கொண்டு பாண்டவர்களுடைய

ஆடைகளைக் கவரும்படி துச்சாதனனைப் பணித்தான் அவன் தம்மைத் தொட்டிழுத்து மானபங்கம் செய்யுமுன் பாண்டவர் தாமாகவே உத்தரியங்களைக் கழற்றி வீசினர். பாவியான துச்சாதனன் பாஞ்சாலியின் ஆடையையும் பிடித்திழுக்கப் போனான். அதனைக்கண்ட வீமனும் அருச்சுனனும் பெருஞ்சினம் கொண்டனர். வீரம் நிறைந்த அவர்கள் எப்படி இந்த மானக்கேட்டைப் பொறுப்பார்கள்? ஆயினும் தருமன் அப்பொழுதும் பொறுமையே நல்லதென்று தம்பிமாரை வேண்டிக்கொண்டான். தருமத்தின் சோதனையை இறுதி வரையில் பார்க்க எண்ணிவிட்டான் போலும்.

துச்சாதனன் தன்னை நெருங்கி வருவதைக் கண்ட பாஞ்சாலி திடுக்குற்றாள். "அந்தோ! வீரர்களான நாயகர்கள் இருந்தும் என் விதி இப்படியாயிற்றே. வீடுமர், விதுரர், துரோணர் முதலிய பெரியோர்கள் சபையிலிருந்தும் ஊமையராகி விட்டனரே" என்று ஆறாகக் கண்ணீர் சோர, கூந்தல் சோர, துச்சாதனனால் இழுக்கப்பட்ட துகில் சோர, கை சோர, மெய் சோர, ஒன்றும் சொல்லமாட்டாதவளாய்க் "கோவிந்தா கோவிந்தா" என்று பகவானுடைய நாமத்தைக் கூறியபடியே தன்னை மறந்தாள்.

"ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம் புனல்சோர [அளகம்சோர
வேறான துயில்தகைந்த கைசோர மெய்சோர [வேறோர்சொல்லும்
கூறாமற் கோவிந்தா கோவிந்தா என்றரற்றிக் [குளிர்ந்துநாவில்
ஊறாத அமிழ்தூற உடல்புளகித் துள்ளமெல்லாம் [உருகினாளே"

அறிவுகெட்ட துச்சாதனன் பாஞ்சாலியின் ஆடையை உரிய உரிய இறைவன் அருளால் புதுப்புதுப் புடைவைகளாகத் தோன்றின; பலபல வண்ணப் பட்டுக்களாக வளர்ந்தன; எண்ணி லடங்காத ஆடைகளாகச் சபாமண்டபம் முழுதும் குவிந்து போயிற்று. பாவி துச்சாதனனுடைய கையும் மெய்யும் சோர்ந்தன. உள்ளம் தடுமாறி அறிவிழந்து தரையில் வீழ்ந்தான்.

வீடுமனே எழுந்து பாஞ்சாலியைப் போற்றி ஞன். கற்பின் தெய்வமாக அங்கிருந்த பெரி யோர்களனைவரும் அவளைக் கொண்டாடினர். தேவர்களும் பூமழை பொழிந்து வாழ்த்தினர்.

''அண்ணு! இனிப் பொறுக்க முடியாது'' என்று வீமன் தண்டாயுதத்தைத் தூக்கினுன். ''பொறுமை பொறுமை'' என்று தருமன் அடக்கிய தனல் அடங்கி நின்றேம். பேடிகளே! நீங்கள் நூற்றுவரும் ஒன்ருகத் திரண்டு வாருங்கள். ஆண்மையிருந்தால் ஆயுதம் எடுங்கள் பார்க்க லாம்'' என்று பொங்கியெழுந்தான்.

சூதாட்டத்தில் வென்ற கர்வத்திஞல் மதி யற்றுப்போன துரியோதனன், ''இந்தத் திரௌ பதியின் கற்பையும், அவிழ்க்க அவிழ்க்கக் குறை யாத துகிலின் உண்மையையும், மானமில்லாமல் பேசுகின்ற வீமனுடைய ஆண்மையையும் பார்ப் போம். கொண்டு வாருங்கள் அவளை. என் தொடைமீது இருத்துங்கள்'' என்று பேசத்தகாத வார்த்தைகளைப் பேசினுன்.

இதனைக் கேட்ட பாஞ்சாலி இடியேறுண்ட நாகம்போல நடுங்கினுள். ''பாவி! எந்தத்தொடை

யிலே என்னைக்கொணர்ந்து இருத்தும்படி சொன்னையோ அந்தத் தொடை பிளந்து காக்கையும் கழுகும் கொத்த நீ படுகளத்தில் கிடந்து அழிந்து போவாய். அஞ்சாமல் என் கூந்தலைப் பற்றியிழுத்துத் துகிலுரிந்த உங்கள் தலைகளைப் போரிலே துணித்து வெற்றி முரசறையும் போதல்லாமல் விரித்த குழல் இனி எடுத்து முடியேன்'' என்று கேட்டவர்கள் அஞ்சும்படியான கொடிய சபதம் செய்தாள். அப்பொழுது பூமியே அதிர்ந்தது. மேகங்களில்லாத நிர்மலமான வானத்தில் இடியொலி கேட்டது. கொடிய உற்பாதங்கள் பலவும் தோன்றின.

''இந்தச் சபையில் எங்கள் பாஞ்சாலிக்குத் தீங்கிழைத்த துரியோதனனையும் அவன் தம்பியரையும் நானொருவனாகவே அடித்துக் கொல்வேன். திரௌபதியைத் தொட்டிழுத்த துச்சாதனனுடைய கைகளைப் பிய்த்து எறிந்து அவனுடைய உதிரத்தை வாரி அள்ளி உண்டு என் ஆகம் குளிர்ந்தல்லாமல் கையினாலே தண்ணீரள்ளிப் பருகேன்'' என்று வீமனும் பயங்கரமான சபதம் செய்தான்.

இப்படியே அருச்சுனன் கன்னனையும், நகுலன் சகுனி புத்திரனான உலூகனையும், சகதேவன் சகுனியையும் போரில் கொல்வதாகச் சபதங்கள் செய்தனர்.

இவற்றையும் அங்கு நிகழ்ந்த கொடிய உற்பாதங்களையும் விதுரனும் காந்தாரியும் கூறக் கேட்ட திருதராட்டிரன் நடுங்கினான். வீரர்களான பாண்டவர் சினங்கொண்டு போர் செய்

வரேல் தன்மக்கள் அழிவது திண்ணம் என்பதை அவன் நன்கறிந்தவனுதலால், திரௌபதியை அழைத்து அவளுக்கு ஆறுதல் மொழிபல கூறி அவர்கள் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டினன். காலம் கடந்து போனபின் புத்தி வந்து ஏதுபயன்? இனிமேல் பகை வளர்வதல்லாமல் சமாதானத்துக்கு வழியேது?

திரௌபதியிடம் மட்டுமன்றித் திருதராஷ்டிரன் தன் தம்பியின் மைந்தரான பாண்டவரையும் தனித்தனியழைத்துத் தன் மக்கள் செய்த பிழைகளைப் பொறுக்குமாறும் சூதிலே தோற்ற செல்வமனைத்தையும் மீண்டும் தன் அநுமதியோடு பெற்றேகுமாறும் பல சொல்லி மன்ருடினன். ஆனல் திருதராஷ்டிரன் இவ்வாறு அநுமதியளிப்பதைக் கண்ட சகுனி துரியோதனனைத் தூண்டினன். பாண்டவர்கள் தமக்கு நேர்ந்த அவமானத்தை ஒரு நாளும் மறக்கமாட்டார்கள். உன்னுடைய தந்தையார் அவர்களுக்கு மீண்டும் எல்லா உரிமைகளையும் கொடுத்து விடுவதாயிருந்தால் அது உங்கள் உயிருக்கே ஆபத்தாக முடியும்'' என்ருன். உடனே துரியோதனன் துச்சாதனனிடம் கூறி அவர்களைப் போகவிடாது தடுத்தான்.

''பலரும் காணச்சபையில் தோற்ற பொருளையெல்லாம் மீண்டும் பெற்றுப் போதல் என்ன நீதி? நீ சத்தியசந்தனுல் எமக்கு முறைப்படி அடிமை செய்தல்வேண்டும். அல்லாவிடில் நாடு நகரங்களை எங்களிடம் விட்டுக் காட்டுக்குச் செல்லுங்கள்'' என்று துச்சாதனன் தருமனைப் பார்த்துக் கூறினன்.

தன் மகன் கூறிய மாற்றத்தைக் கேட்ட திருதராஷ்டிரன் தடுமாறினன். துரோணரைப் பார்த்துச் செய்வதென்ன என்று கேட்டான்.

"குருநாட்டின் தலைவனே! இனிமேல் எப்படியான விளைவுகள் நேரும் என்பதை உணராமல் உன் புதல்வர்கள் செயலாற்றி வருகிறார்கள். நாம் என்ன சொன்னாலும் அவர்கள் கேட்கப் போவதில்லை ஆகையால் உன் குலத்துக்கும் பெருமைக்கும் ஏற்ப, எது தக்கதென்றெண்ணுகிறாயோ அதனை நீயே சொல்" எனக் குலகுருவான துரோணாச்சாரியார் கூறினார்.

துரோணரிவ்வாறு கூறுதலும் திருதராஷ்டிரன் தருமனைப் பார்த்து, "நீயோ உண்மையறிவு மிகுந்தவன். என் மக்கள் துன்மார்க்கர்; நான் மனம் பொருந்திக் கொடுத்தாலும் அவர்கள் சம்மதிக்கின்றிலர். ஆகையால் நீ பெரியோர் மொழிப்படி நடந்துகொள்வாயாக" என்று மறைபொருளாகப் பேசினன். திருதராஷ்டிரன் பேசியதைத் துரோணர் தருமனுக்கு எடுத்து விளக்கமாகக் கூறினார்; அயோத்தியாபுரியில் முகுந்தனின் அவதாரமாகத் தோன்றிய ஸ்ரீ ராமனைப் போல் நீங்களும் பன்னிரண்டு வருஷம் காட்டிலே சஞ்சரித்துப் பின் ஒரு வருஷம் யாராலும் அறியப்படாமல் அஞ்ஞாதவாசமும் செய்து ஈற்றில்வந்து உங்கள் அரசாட்சியைப் பெறுங்கள். இதுவே உங்கள் பெரிய தந்தையாருடைய எண்ணமாகும்" என்று துரோணர் கூறினார்.

"திருதராஷ்டிரன் சொற்படி அரசாட்சியைக் கொடுக்கமனமிசையாத துரியோதனனாதியர், நாம்

அடிமைத் தன்மையினின்றும் நீங்க எப்படி ஒருப் படுவர்? ஆதலால் கானகம் புகுமுன் நாம் சுதந் திரர் ஆகவேண்டும். அதற்காக மீண்டும் ஒரு முறை சூதாடுதலே தக்கது'' என்று பாஞ்சாலி கூறினள். சூதாட்டமென்றதும் துரியோதனன் மகிழ்ந்தான். பந்தயம் என்னவென்று கேட்டுக் கொண்டே அரங்கை நியமித்தான். ''இவ்வாட் டத்தில் நான் தோற்ருல் நான் செய்த புண்ணிய மனைத்தையும் துரியோதனன் பெறுக. வென்றே ணுகில்நம்அடிமைத்தளை நீங்குக'' என்ருன் தருமன். சகுனி ஆடப்புகுந்தான். மறைக்கும் மறையாய் நின்று மக்களைக் காக்கும் மாயன் திருப்பாதங்களை மனதிலெண்ணிக்கொண்டு தருமன் காய்களை உருட்டினன். அவன் உருட்டிய கவறு அவனுக்கே சாதகமாயுருண்டது. துரியோதனனுதியோருடைய அகமகிழ்ச்சியெல்லாம் பகலவனைக் கண்ட பனிப் படலம்போலக் கரைந்தொழிந்தன. பாண்டவர் தம் அடிமைத்தன்மை நீங்கிச் சுதந்திரராகித் திருதராஷ்டிரன் முதலியவர்களிடம் விடைபெற் றுக்கொண்டு வனஞ் செல்லப் புறப்பட்டனர்.

## 7. வனவாசம்

பஞ்சபாண்டவர்க்கு நேர்ந்த கதியை எண்ணி நகரமாந்தர் பலவாறு புலம்பிக்கொண்டு பின் சென்றனர். அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டுப் பாண்டவர் காம்யகவனம் என்ற காட்டுக்குச் சென்றார்கள். அங்கே அவர்களைப் பார்ப்பதற்கென்று உறவினரும் அரசர்களும் வந்து சேர்ந்தனர். துரியோதனனாதியோர் செய்த தீமைகளைக் கேட்டுச் சினம் கொண்டனர். போர் புரிந்து அக்கொடியவர்களை இப்பொழுதே அழிக்கிறோம் என்று சிலர் பொங்கினர். சிலர் இவை யெல்லாவற்றுக்குங் காரணமான சகுனியைத் தொலைக்கிறோம் என்றெழுந்தனர். துரியோதனனுக்கு உறுதுணையாயுள்ள கன்னனைச் சாய்க்கிறோமென்று இன்னும் சிலர் ஆர்ப்பரித்தனர். இப்படிச் சினங்கொண்டெழுந்த முடிமன்னர்களைக் கண்ணபிரான் பார்த்து, "நீங்கள் இப்பொழுது கொண்ட கோபத்தைத் தணியுங்கள்; இந்த வன வாசம் இனிது முடிவுறும். அதன்பின் பெரிய போர் நிகழும். அப்பொழுது பாண்டவர்க்குத் துணையாக நின்று அந்த அறப்போரிலே கொடியவர்களான கௌரவர்களைக் குலத்தோடழியுங்கள். வஞ்சனை புரிந்த அவர்கள் மாண்டொழிவது திண்ணம்" என்று அவர்களைச் சாந்தப்படுத்தினான்.

பின்பு கண்ணபிரானுடைய ஆலோசனைப்படி தங்கள் தாயான குந்திதேவியைக் காந்தாரியின் அந்தப்புரத்துக்கும், புதல்வர்களை யாகசேனனிடமும் அனுப்பிவிட்டுப் பாண்டவர்கள் வனத்தினுட் புகுந்தனர். வந்த அரசர்களும் அரிதிற்பிரிந்து தத்தம் இருப்பிடமேகினர்.

பன்னிரண்டு வருஷ வனவாசத்தில் பல அற்புதச் செய்திகள் அடங்கியுள்ளன. துன்பமாகத் தொடங்கிய வனவாசம் போகப் போக ஆனந்தமாக இருந்தது. வனங்களிலிருந்து தவம் செய்யும் மகாமுனிவர்களைச் சந்தித்து அவர்களுடைய ஆசியைப் பாண்டவர்கள் பெற்றார்கள். தரும சீலர்களான இவர்களுடைய வருகையால் ஆசிரம வாசிகளான தபோதனரும் ரிஷிகளும் உளம் மகிழ்ந்தனர். அவர்கள் இவர்களைக் கண்டு உபசரித்து மகிழ்ச்சி கொள்ள, இவர்கள் அவர்களைத் தரிசித்து ஆசியும் உபதேசமும் பெற்றுக் கடைத்தேற இந்த வனவாசம் நல்ல வாய்ப்பளித்தது.

குரோத மனப்பான்மையுள்ளவர்களுக்கு மற்றவர்களைத் துன்பப்படுத்துவதோடு மட்டும் மனம் திருப்தியடையாது. அந்தத் துன்பத்தை அவர்கள் அநுபவிப்பதைப் பார்த்துச் சந்தோஷிக்க வேண்டுமென்ற இழிவான ஆசையும் உண்டாதல் இயற்கை. துரியோதனன் இந்த விதிக்கு விலக்கானவனல்லன். பாண்டவரைச் சூழ்ச்சி செய்து, வஞ்சகச் சூதாடி அவர்களுடைய பொருளெல்லாம் கவர்ந்தும் அவனுடைய மனம் திருப்தியடையவில்லை. அவர்கள் காட்டில் துன்பமடைந்து திரிவதைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டான். இதற்காக அவன் கன்னன் முதலான தன் சகாக்களையும் கூட்டிக்கொண்டு வனத்திலுள்ள தங்கள் ஆநிரைகளைப் பார்த்துக் கணக்கிட்டு வரப்போவதாகக் கூறிப் புறப்பட்டான். துரியோதனனுடைய எண்ணத்தைத் திருதராஷ்டிரன் அறிந்துகொண்டான். காட்டிலே போய்ப் பாண்டவர்களை ஏதாவது இகழ்ந்தால் அவர்கள்

இப்பொழுது இருக்கும் மனநிலையில் நல்லபாடம் கற்பித்து அனுப்பிவிடுவார்களென்று பயந்தான். அதனால் அவன் சம்மதிக்கவில்லை. ஆயினும் துரியோதனன் போகவேண்டுமென்று பிடிவாதமாய் நின்றமையால் திருதராஷ்டிரன் பயந்துபயந்து சம்மதம் கொடுக்க வேண்டியதாயிற்று.

''பாண்டவர்கள் வனத்தில் எவ்வளவோ கஷ்டப்படுவார்கள். அவர்களை எல்லாம் நாம் போய்ப் பார்த்து ஏளனம் செய்ய வேண்டும்'' என்று பல விதமான மனக் கோட்டைகள் கட்டிக்கொண்டு சென்ற துரியோதனன், ஏதோ வேட்டையாடுவது போலவும் ஆநிரைகளைக் கணக்கெடுப்பது போலவும் காட்டிவிட்டுப் பாண்டவர் வசித்து வந்த ஆசிரமத்தின் பக்கத்தில் பாடிவீடமைத்துக் கொண்டு தங்கினான். அவன் தங்கிய இடம் அழகான ஓர் ஏரிக்கரையாகும். அந்த ஏரியும் அதனைச் சூழ்ந்த இடமும் கந்தருவனொருவன் தன் பரிவாரங்களோடு வந்து தங்கிப் போகும் இடமாயிருந்தது. அவனுடைய ஏவலர் துரியோதனனுடைய கூட்டத்தாரைத் தடுத்தும் பொருட்படுத்தாமல் அவர்கள் தங்கள் பாடிவீடுகளைக் கட்டிக் கொண்டார்கள்.

ஏவலர் மூலம் செய்தியறிந்த கந்தருவன் தன் படையுடன் வந்து துரியோதனனாதியோரை எதிர்த்தான். கடும் போர் மூண்டது. துணைக்கு வந்த கன்னன் முதலியோர் புறங்காட்டி ஓடினர். கந்தருவன் துரியோதனனைப் பிடித்துத் தேர்க்காலோடு கட்டிக்கொண்டு போனான். அப்பொழுது அவன் அலறிய சப்தம் பர்ணசாலையில்

இருந்த தருமனுடைய காதில் விழுந்தது. உடனே அவன் வீமனையும் அருச்சுனனையும் பார்த்து, ''ஓடிப்போய்த் துரியோதனனை விடுவியுங்கள்'' என்றான்.

''வேண்டும்; நல்லாகப் படவேண்டும். எங்களுக்கு இத்தனை தீங்கிழைத்தது போதாதென்று நாம் கஷ்டப்படுவதைப் பார்த்துச் சிரிக்க வந்த பாவி நன்றாக உதைபடட்டும்; நமக்கென்ன?'' என்று வீமன் மறுத்துவிட்டான்.

''எப்படியானாலும் அவன் நம்மவன். அவனைக் கந்தருவன் ஒருவன் கட்டிக்கொண்டுபோக நாம் பார்த்திருக்கக் கூடாது. பகைமை பாராட்ட இது சமயமன்று. துரியோதனன் எங்கள் சகோதரன். அவனை அந்நியன் ஒருவன் துன்புறுத்தும்போது நாம் சும்மா இருப்பது அழகன்று'' என்றான் தருமன்.

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாக வாழ்ந்த தருமனின் சான்றாண்மை இங்கு நினைவு கூரற்பாலது.

பல வழியாலும் ஆத்திரம் கொண்டிருந்த வீமனுக்கு இந்தத் தருமோபதேசம் பிடிக்கவில்லை. அவன் போக மறுத்தான். தருமர் உடனே தாமே போய் அந்தக் கந்தருவனோடு போர் செய்து துரியோதனனை மீட்கப் புறப்பட்டார். அவரைப் போகவிடாமல் தடுத்துவிட்டுத் தம்பிமார் இருவரும் ஆயுதமேந்தித் துரியோதன

னுடைய அவலக்குரல் வந்த திசையை நோக்கி ஓடினார்கள்.

வீமார்ச்சுனர்களைக் கண்ட கந்தருவன் தேரினின்றும் இறங்கி, ''இந்தப் பாவி உங்கள் துன்பத்தைத் தன் கண்ணாரக்கண்டு களிக்க வந்தான். அதற்குத் தகுந்த பாடத்தை நான் கற்பித்து விட்டேன். உங்கள் விருப்பம் என்ன?'' என்று கேட்டான்.

துரியோதனன் சிரிக்க வேண்டிய சிரிப்பை வீமனும் அருச்சுனனும் சிரிக்க வேண்டியதாயிற்று. ''பாவம், அவனை விட்டுவிடு. அவன் நம்மைச் சேர்ந்தவன்; பிழைத்துப் போகட்டும்'' என்று அவனுடைய கட்டை அவிழ்த்து விடுவித்தார்கள். இவ்வாறு அவமானப் படுத்தப்பட்ட துரியோதனன் வடுப்பட்ட நாகம்போலப் பொருமிக் கொண்டு அத்தினாபுரம் போய்ச் சேர்ந்தான்.

பஞ்சபாண்டவர்கள் காம்யகவனத்தில் வசித்து வரும்போது ஒருநாள் வியாசபகவான் அங்குச் சென்றார். பாண்டவர்கள் அவருக்கு மரியாதைகள் செய்து வழிபட்டார்கள். துரியோதனன் செய்த கொடுமைகளையெல்லாம் தருமன் அவருக்கு விரிவாக எடுத்துரைத்தான். வேண்டிய ஆறுதல் மொழிகளை வியாசர் கூறினார். ''சூதினால் நாடுநகரிழந்து அல்லற்படுபவர் இவ்வுலகில் பலர் உளர். உன்போல முன்னே நிடதநாட்டதிபனான நளமகாராஜனும் சூதினால் புஷ்கரனுக்குத் தோற்று நாடுநகரிழந்து சிலகாலம் வருந்தினான். போரிலே புறங்காண முடியாத கயவர்கள் இப்படிக் கீழ்த்தரமான முறைகளையே கையாளு

வர். நீ இதனை எண்ணிக் கவலை கொள்ளாதே. உங்கள் வனவாசந் தீர்ந்தபின், கொடிய போர் நிகழப்போகிறது. பூமிதேவியின் வேண்டுகோளுக் கிணங்கிக் கெட்டவர்களை அழிக்கவும் நல்லவர் களைக் காக்கவுமென்று திருமால் கண்ணனாய் அவதரித்துள்ளான். துஷ்ட நிக்கிர சிஷ்ட பரி பாலனத்துக்காக அவதரித்த கண்ணன், உங்களுக்கு உறுதுணையாய் அமைந்துவிட்டான். நீங்கள் அஞ்ச வேண்டியதொன்றுமில்லை. தர்மம் உங்கள் பக்கத் திலேயே இருக்கிறது. முடிவில் நீங்கள் ஜயம் பெறுவீர்கள்'' என்று வியாசர் பாண்டவர்களைத் தேற்றி ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார்.

வியாசர் சொன்னதைக் கேட்டுத் தருமனும் தம்பிமாரும் தேறுதலடைந்தனர். முடிவில் துரி யோதனனுடன் யுத்தம் நிகழும் என்று யாவரும் கூறுகின்றமையால் அதற்கு வேண்டிய பலத்தை இந்த வனவாச காலத்திலேயே பெற்றுவிட வேண் டும் என்று, அருச்சுனன் சிவபிரானைக் குறித்துத் தவஞ் செய்து பாசுபதாஸ்திரம் பெறுதற்காகத் திருக்கைலாயத்துக்குப் போகப் புறப்பட்டான். தருமன் வீமன் முதலானோர் அவனுக்கு ஆசிகூறி வழியனுப்பினர்.

தவஞ் செய்யப் புறப்பட்டுச் சென்ற அருச் சுனன் காட்டில் ஆங்காங்கு தவத்திலீடுபட்டி ருந்த முனிவர்களைக் கண்டு போற்றி அவர்களு டைய ஆசிபெற்று வடதிசை நோக்கிச் சென்று திருக்கைலாய கிரியின் புறத்தை அடைந்து யோக நிஷ்டையில் அமர்ந்தான்.

உடல் முழுவதும் திருநீறுபூசி ஒருகாலில் நின்று கைகளைச் சிரசின்மேற் குவித்து மனத்தை ஒரு

வழிப்படுத்தி நின்ற திருக்கோலம் சிவனுடைய திருக்கோலத்தையே ஒத்திருந்தது.

தன்னை மறந்த நிலையில் ஆடாமல் அசையாமல் புறஉணர்வு தோன்றாமல் சிவத்தியானமாகவே அன்னாகாரமின்றி நெடுங்காலம் அவன் செய்த தவத்தைக் கண்டு தேவர்களும் நடுங்கினர். காட்டு யானைகள் அசைவற நின்ற அருச்சுனனைக் கல்லென எண்ணித் தம் தினவு தீரத் தேய்த்துக் கொண்டன. கறையான் புற்றென எண்ணிப் பாம்புகள் ஊர்ந்தன. பூங்கொடிகள் தாம் படர்வதற்கேற்ற மரமென்று அவனைச் சுற்றிக்கொண்டன.

கருத்துறுகல் எனக் கருதிப் பிடியுங் கன்றும்
களிற்றினமும் உடனுரிஞ்சக் கறையானேறிப்
பொருந்துமுழைப் புற்றதெனப் புயங்கமூரப்
பூங்கொடிகள் மரனென்று பாங்கே சுற்றப்
பரிந்துவெயில் நாள்மழைநாள் பனிநாளென்று
பாராமல் நெடுங்காலம் பயின்றான் மண்ணில்
அருந்தவமுன் புரிந்தோரில் இவனைப்போன்மற் (று)
ஆர்புரிந்தார் சிவசிவஎன் றரியவாறே.

அருச்சுனன் சிவபிரானைக் குறித்துத் தவம் செய்யப் போயிருக்கிறான் என்பதைத் துரியோதனன் அறிந்து அவனைக் கொல்லும்படி மூகன் என்னும் ஓர் அசுரனை ஏவிவிட்டான். மூகன் பன்றியுருக்கொண்டு அருச்சுனன் தவம் புரியும் காட்டை நோக்கி விரைந்து சென்றான்.

பக்தனுக்கு ஏற்படப்போகும் ஆபத்தையறிந்த பரமகருணாநிதியான கைலயங்கிரிநாதன் அவனைக்

காக்கத் திருவுளங்கொண்டார். உலகமாதாவுடன் தானும் வேடுவத் திருக்கோலங்கொண்டு அருச்சுனன் தவம்புரியும் காட்டை அடைந்தார். எந்த இறைவனை நோக்கி அருச்சுனன் தவஞ் செய்தானே அக்கடவுளே தன் முன்னிலையில் வருவதை உள்ளுணர்வு காட்டக்கண்டு அருச்சுனும் கண்விழித்தான். ஆனல் எதிரே காட்டுப் பன்றி தன்னைக் கொல்ல வருவதையே அவன் முதலிற் கண்டான். பன்றியைத் துரத்திவந்த சிவவேடனும் கணை தொடுத்தான். அருச்சுனனும் தன்னைக் கொல்லவந்த பன்றியை நோக்கிச் சரந் தொடுத்தான். ஆண்டவன் விட்ட சரம் பன்றியைப் பின்புறமாகத் துளைத்தது. அன்பன் விட்ட கணை அதனை முன்புறமாகத் துளைத்தது. மூகாசுரப்பன்றி அண்டம் கிடுகிடுக்க அலறிக்கொண்டு நிலத்திலே வீழ்ந்திறந்தது.

வேடனுக வந்த இறைவன் அருச்சுனனேடு திருவிளையாடல் புரியத் திருவுளங் கொண்டார் ''நான் முதலில் எய்த பன்றியைச் செத்தபாம்பை அடிப்பது போல நீ ஏன் அம்பினுலடித்தாய். பார்த்தால் தவம் செய்பவன்போலக் காணப்படுகிருய். ஆனல் பன்றியைக் கொல்கிருயே! பசுத்தோல் போர்த்த புலிபோலல்லவோ இருக்கிருய்; யார் நீ'' என்று எள்ளிநகையாடினன் சிவவேடன்.

''நான்தான் பன்றியை முன்புறமாக எய்து கொன்றேன். என்னைக் கொல்லவந்த பன்றியை நான் கொன்றேன். உனக்கு இறைச்சிதானே வேண்டும்; தூக்கிக்கொண்டுபோ'' என்று சாதாரணமான ஒரு வேடனுக்குச் சொல்வது போல அருச்சுனன் சொன்னன்.

''அடேயப்பா, பெரிய வீரனே நீ? என் கணைக்கு இலக்காகி இறந்து வீழ்ந்த பன்றியைத் தான் நீயும் எய்தாய். வீண்பேச்சுக்களை விட்டு உண்மை வீரனுனால் வா போருக்கு! அப்போது தெரியும் உன் வீரம்'' என்றான் வேடன்.

அருச்சுனனுக்குக் கோபம் பொங்கியது. சாதாரணமான வேடன் ஒருவன் தனது மாசு படாத வீரத்துக்கு இழிவு கற்பிக்கிறானே என்ற ஆத்திரத்தில் தன் வில்லை வளைத்தான். ஒரு முகூர்த்தநேரம் வானம் பூமி தெரியாமல் ஒரே சரமாரியாக இருந்தது. கடைசியில் அருச்சுன னுடைய வில் நாண் அறுந்தது. வேடன் இதனைக் கண்டு ஏளனமாக நகைத்தான். அருச்சுனன் சினம் மிகக்கொண்டு அறுந்த வில்லால் ஓங்கிச் சிவ வேடனுடைய திருமுடியில் அடித்தான். உடனே இருவருக்குமிடையே மல்யுத்தம் தொடங் கியது. இறைவனுடைய உடலோடு அருச்சுன னுடைய உடல் மோதிப் படிந்ததினால் சிவஒளி கலந்த பேரழகோடு விளங்கினான். மல்யுத்தத்தில் வேடன் அருச்சுனனைத் தூக்கி வானத்தில் எறிந் தான். ஆகாயத்தின் எல்லைக்குப்போய் வந்து பூமியில் விழுந்த அருச்சுனன் தனக்கு எத்தகைய ஊறும் ஏற்படாமல் இருந்ததைக் கண்டு வியந்து சுற்றிலும் பார்த்தான். வேடனைக் காணவில்லை. பார்வதி சமேதராகப் பரமேஸ்வரன் காட்சி கொடுத்தான்.

''ஆ கெட்டேனே! இறைவனையா இகழ்ந்தேன்! ஏசினேன்! பழித்தேன்! வில்லாலடித்தேனே! காலால் உதைத்தேனே!'' என்று அடியற்றமரம்

போல விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். ''அன்பனே, நீ செய்தனவெல்லாம் எனக்கு ஆயிர மாயிரம் புஷ்பங்களாலர்ச்சனை செய்ததுபோலி ருந்தன'' என்று சொல்லி இறைவன் அருச்சுன னைத்தழுவி ''உனக்கு என்ன வேண்டும் கேள்?'' என்றார்.

''கொடியவனான துரியோதனன் செய்த கொடுமையால் நானும் என் சகோதரர்களும் வன வாசம் செய்கின்றோம். முடிவில் அவனுடன் போர் செய்யவேண்டும் என்று பலரும் சொல்கிறார்கள். கருணாநிதியே, எனக்குப்பாசுபதாஸ்திரம் கொடுத் தருளல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண் டான் அருச்சுனன்.

அவன் வேண்டியபடியே இறைவன் பாசுபதக் கணையைக் கொடுத்து மறைந்தருளினார்.

அருச்சுனனுடைய நிலை இவ்வாறாகக் காம்யக வனத்திலே இருந்த மற்றப் பாண்டவர்களும் அருச்சுனன் பிரிவினாற் கவலை கொண்டனர். எப்படித் துன்பப்படுகிறானோ. எக்கதிக்குள்ளாகி றானோ என்றெல்லாம் எண்ணியெண்ணி மனம் கலங்கினர். ஒருநாள் வடதிசையில் இருந்து வீசிய காற்றோடு சேர்ந்து ஓர் அழகிய மலர் பாஞ்சாலி யின் முன்பு வந்து விழுந்தது. அதனுடைய அழகும் மணமும் அவளை ஆட்கொண்டு விட்டன. அவள் அதனை வீமனுக்குக் காட்டினாள். அதனைப் போன்ற புஷ்பங்கள் வேண்டுமென்று கேட்டாள். பாஞ்சாலியின் வேண்டுகோளை நிறைவேற்றக் கருதி வீமன் வடதிசையாகப் புறப்பட்டான். அவன் வாயுவின் மைந்தன் என்பதை நாம் இங்கு

நினைவிற் கொள்ளல்வேண்டும் முசுரும் சக்தியும் வேகமான செலவும் காற்றின் குணங்கள். அந்தக் குணங்கள் வீமனிடத்திலும் இருந்தன. காடு, மலை, மரங்கள், எதிரேவரும் மிருகங்கள் ஒன்றை யும் லக்ஷியம் செய்யாமல் வீமன் அதிவேகமாக வடக்கே அந்த மலரின் திவ்யவாசனையை முகர்ந்து கொண்டு சென்றான். ஈற்றில் உலகின் முடிவுக்கே வந்தவன் போல எதிரே ஒரு மலையைக் கண்டு மலைத்து நின்றான்.

ஆகா! அது மலையன்று; மலைக்குப் பக்கத்தே! மலைபோலப் படுத்திருந்தது ஒரு கிழக்குரங்கு குரங்குக்கு இந்தப் பெரிய உருவம் இருக்கு மென்று வீமன் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை. என்றாலும் வாயுபுத்திரனை, வீமனையா இந்தக் குரங்கு வழிமறிப்பது? பெருத்த சிம்மநாதம் செய்தான் வீமன். இவனுடைய இந்தச் சப்தத் தைக் கேட்டு அஞ்சி நடுங்காத உயிர்ப் பிராணி எதுவுமே இவ்வுலகில் இல்லை. ஆனால் என்ன ஆச்சரியம்! அந்தக் குரங்கு இலேசாகக் கண்ணைத் திறந்து பார்த்து, ''யாரப்பா நீ, ஏன் என் தூக்கத்தைக் கலைத்தாய்? எங்கே வந்தாய்? இது தேவலோகம் செல்லும் வழி; மானிடர் இதற்கு மேற் செல்ல முடியாதே'' என்று சொல்லிற்று, வீமன் கடகடவெனச் சிரித்தான், ''ஏ குரங்கே, என்னைத் தடுக்க நீ யார்? என் கோபத்துக்காளா காமல் வழியை விடு. என் அண்ணன் ஆஞ்சநேயன் அந்தக்காலத்தில் கடலைத் தாண்டியதுபோல உன்னை யும் தாண்டிச் சென்றுவிடுவேன். ஆயினும் பிராணி களைத் தாண்டக் கூடாதே என்று பார்க்கிறேன்'' என்றான் வீமன்.

''ஓ! அப்படியா, சரி இதோ என் வாலை யாவது தூக்கி நகர்த்திவிட்டுப் போ. முதுமை யால் அசையக்கூட முடியாமல் இருக்கிறேன்'' என்றது வானரம்.

வீமனுக்குக் கடுங்கோபம் மூண்டுவிட்டது. இந்தக் குரங்கைப் பிடித்திழுத்துக் கரகரவென்று சுழற்றி வானத்தில் வீசவேண்டுமென்றெண்ணிக் கொண்டு வீமன் அதன் வாலைப்பற்றி இழுத்தான். என்ன ஆச்சரியம்! ஆயிரம் யானை பலம் கொண்ட வீமனால் அந்த வாலையே அசைக்க முடியவில்லை! அவனுடைய விழிகள் பிதுங்கி மேல்மூச்சு வாங்க ஆரம்பித்துவிட்டது. தன்னை மிஞ்சிய பலவானைக் கண்டதும் வீமனுக்குப் பக்தி உண்டாகிவிட்டது.

''வாயுதேவனருளால் குந்திதேவியின் வயிற் றிற் பிறந்த வீமன் கேட்கின்றேன்: தாங்கள் யார்? அடியேனை வழிமறித்த காரணம் என்ன?'' என்று வீமன் பணிந்தான். பெரியவர்கள் முன்னிலையிலே தான் இன்னார் என்று முதலில் அறிமுகம் செய்து கொள்வது பழைய மரபு.

''சற்று முன்பு எந்த ஆஞ்சநேயனைப்பற்றிக் கூறினாயோ அதே ராமபக்தனான ஆஞ்சநேயன் நானேதான்; தம்பி வீமா! வாயுதேவனின் புத்தி ரனாக நான் முந்தின யுகத்தில் அவதரித்தேன். நீ இந்த யுகத்தில் தோன்றினாய். உன்னைக் காண வேண்டும் என்று நானே ஆவல் கொண்டிருந் தேன்'' என்று ஆஞ்சநேயன் வீமனைத் தழுவினான்.

மாருதியால் ஆலிங்கனம் செய்யப்பட்ட வீமனுடைய உடல் முன்னிலும் அதிக பலமும் தேஜசும் அடைந்து விளங்கிற்று. வீமனுக்கு

அடக்கமுடியாத ஆனந்தம் உண்டாயிற்று. ''அண்ணு! தங்களுடைய விஸ்வரூபத்தைப் பார்க்க ஆசைப்படுகிறேன்'' என்று வீமன் கேட்டதும் ஆஞ்சநேயன் தனது ஆகாயமளாவிய தோற்றத்தைக் கொண்டான். கோடி சூரியப்பிரகாசத்தோடு இரண்டாவது மலையென வளர்ந்து காட்சியளித்த அநுமனைக்கண்டு வீமனுடைய கண்கள் கூசின. கண்களை மூடிக்கொண்டே அஞ்சலி செய்தான்.

''தம்பி வீமா! பகைவர்முன்னே என்னுடைய தோற்றம் இன்னும் பெரிதாக வளரும். இப்போது உனக்குக் காட்ட அது சாத்தியமில்லை. உனக்கு வேண்டும் வரம் எதுவோ கேள். தருகிறேன்'' என்று சொல்லி அநுமன் தனது சிறிய வடிவத்தைக் கொண்டான்.

''சிரஞ்சீவியான ஆஞ்சநேயனே, அண்ணு, உன்னைக் கண்டதே எனக்குப் போதும். பாரதப் போரில் என் தம்பி அருச்சுனனுடைய கொடியிலே நீ நின்று நர்த்தனம் புரியவேண்டும்'' என்று வீமன் கேட்டுக்கொண்டான்.

''அப்படியே ஆகட்டும் அதோடு பகைவர் மத்தியில் நீ சிம்மநாதம் செய்யும்போது எனது கர்ஜனையும் சேர்ந்து அவர்களை நடுங்கச் செய்யும். உனக்குச் சர்வமங்களங்களும் உண்டாகட்டும். அதோ அந்த ஓடையில் நீ தேடிவந்த செளகந்திச் செடியும் இருக்கிறது. வேண்டிய மலர்களைப் பறித்துக்கொண்டுபோ'' என்று அநுமன் விடை கொடுத்தனுப்பினுன்.

வனவாச காலத்திலேயே எப்படியாவது பாண்டவர்களைக் கொன்றொழித்துவிட வேண்டும்

என்று துரியோதனன் விரும்பினான். இதற்காக அவன் செய்த சூழ்ச்சிகள் பல. தவஞ்செய்யப் போன அருச்சுனனைக் கொல்லும்படி மூகாசுரனை ஏவியது போலத் துருவாசர் என்ற ஒரு மகா கோபங்கொண்ட முனிவரையும் துரியோதனன் பஞ்சபாண்டவர்களிடம் அனுப்பினான். தன்னுடைய மாளிகையில் ஒரு நாள் துருவாசரும் அவருடைய சீடர்களும் வந்தபொழுது வேண்டிய உபசாரங்களெல்லாம் செய்து அவருடைய மனம் களிக்கச்செய்தான். அவனுடைய உபசாரங்களை ஏற்றுக்கொண்டு ஏதாவது வரம் வேண்டில் பெற்றுக்கொள்ளும்படி முனிவரும் கூறினார்.

தமக்கு நன்மை வேண்டுவதிலும் பார்க்கத் தமது எதிரிகளுக்குத் தீமை வேண்டுவதே தீயவர்களுடைய இயல்பு. துரியோதனனும் தான் ஏதாவது நல்வரங்களைப் பெற்றுய்ய எண்ணாமல் பாண்டவர்களுக்குத் தீங்கிழைக்கவே எண்ணினான்.

"சுவாமி, அடியேனிடத்துக்கு வந்து அதிதியாயிருந்ததுபோலவே காட்டில் எனது சகோதரர்களான பாண்டவரிடமும்போய் அதிதி உபசாரங்களைப் பெறவேண்டும். அதுவும் பாஞ்சாலி உணவருந்திவிட்டிருக்கும்போது தாங்கள் அங்குச் செல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். மக்களைப் பரீக்ஷை செய்வதில் ஆசைகொண்ட அம்முனியும் அதற்கு உடன்பட்டுக் காட்டிலே பஞ்சபாண்டவருடைய பர்ணசாலைக்குச் சென்றார்.

வனவாசகால ஆரம்பத்திலே சூரியபகவான் பாஞ்சாலிக்குப் பிரத்தியக்ஷமாகி ஒரு அக்ஷய பாத்திரத்தைக் கொடுத்தான். எவ்வளவு

பேருக்கு அன்னம் வேண்டுமானாலும் நினைத்த மாத்திரத்தில் அவ்வக்ஷய பாத்திரம் கொடுக்கும் அந்த அன்னத்தைக்கொண்டு எத்தனையாயிரம் பேரானாலும் வந்த அதிதிகளுக்கெல்லாம் உணவளித்துவிட்டுப் பாண்டவர்களுக்கும் உணவு கொடுத்தபின் கடைசியாகத்தான் அவள் உண்பாள். அவளுடைய உணவு முடிந்ததும் அக்ஷய பாத்திரத்தின் மகிமை தீர்ந்துபோகும். மீண்டும் அடுத்தநாளைக்குத் தான் அது பயன்படும்.

பாஞ்சாலியும் உண்டு இளைப்பாறியிருக்கும் போது துருவாச முனிவரை அங்குச் செல்லும் படி வேண்டிக் கொண்டதன் சூழ்ச்சி இதுதான். துருவாசருக்கும் சீடருக்கும் உணவு கொடுக்க முடியாமல் பாண்டவர் கஷ்டப்பட, முனிவர் கோபங்கொண்டு சபித்துவிட்டுப் போய்விடுவார். பாண்டவர்கள் அத்தோடு தொலைந்து போகட்டும் என்பதே அந்தப் பாவியின் எண்ணம்.

துருவாசரும் சீடர்களும் பாண்டவர்களிடம் வந்தார்கள். தருமரும் தம்பிமாரும் அவரை வரவேற்று உபசரித்தனர்.

''பசித்து வந்திருக்கிறோம். சீக்கிரமாக அன்னம் தயாராகட்டும். நீராடிவிட்டு வருகிறோம்'' என்று சொல்லிக்கொண்டு நீராடப் போனார்கள்.

பாண்டவர்கள் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். ''இப்படியும் ஒரு சூழ்ச்சியா?'' என்று அவர்கள் கலங்கிவிட்டார்கள். பாஞ்சாலி அன்றைய சக்தி ஓய்ந்து போயிருந்த அக்ஷய பாத்திரத்தை முன்னால் வைத்துக்கொண்டு கண்ணீர் பெருக்கினாள். 'மாயவனே, கண்ணா, என்மானம் காத்த மணிவண்ணா' என்று அழுதாள்.

எங்கிருந்தோ மாயவன் தோன்றினான். வெளியிலே கவலையில் மூழ்கியிருந்த பாண்டவர்களை ஏறெடுத்தும் பாராமல் நேரே சமையற்கட்டிலே கலங்கி வழியும் பாஞ்சாலியின் முன்பு போய்க் குந்திக்கொண்டான்.

'பசி தாங்கமுடியவில்லை. என்ன இருந்தாலும் கொண்டுவா சீக்கிரம்' என்றான் ஒன்று மறியாதவன் போல.

''இஃதென்ன விளையாட்டு, கண்ணா! துருவாச ரிஷியின் சாபத்துக்கு ஆளாகாமல் காப்பாற்ற உன்னை அழைத்தால் நீ வேறு சோதனை பண்ணுகிறாயே? நானும் சாப்பிட்டு அக்ஷய பாத்திரத்தின் சக்தி இன்றைக்கு ஒய்ந்து விட்டதே; நான் என்ன செய்வேன்'' என்றாள் பாஞ்சாலி.

''எங்கே பாத்திரத்தை இப்படிக்கொடு பார்க்கலாம்'' என்றான் கண்ணன். கலங்கிச்சோர்ந்து போயிருந்த பாஞ்சாலி மனச்சலிப்போடு அதனை அவனுக்கு முன்னால் நகர்த்தினாள்.

பாத்திரத்தின் விளிம்பிலே ஒட்டிக்கொண்டிருந்த ஒரு சோற்றுப் பருக்கையையும் கீரையையும் தன் விரலால் எடுத்து மாயன் தன்வாயில் போட்டுக் கொண்டு, ''அப்பா! பசி தீர்ந்தது. விஸ்வருபனாகிய ஹரிக்கும் பிரீதியுண்டாயிற்று'' என்று சொல்லிக்கொண்டு வெளியே வந்தான். பாத்திரத்தைச் சரியாகக் கழுவிச்சுத்தப்படுத்தாத தன் தவறை நினைத்துப் பாஞ்சாலி வெட்கப்பட்டாள். ஆனால் அதனைக் கண்ணன் கவனியாதவன்

போலப் பாண்டவர் இருந்தபக்கம் வந்து வீமசேனு, போ! ஓடிப்போய்க் குளத்தில் குளித்துக்கொண்டிருக்கும் முனிவரையும் சீடர்களையும் சாப்பிட அழைத்துவா'' என்று கட்டளையிட்டான்.

குளத்தில் நீராடிக்கொண்டிருந்த முனிவருக்கும் சீடர்களுக்கும் அறுசுவையுண்டியை ஆர அமர உண்ட திருப்தியுண்டாகியிருந்தது. ''இஃதெப்படியாகும்'' என்று முனிவர் ஞானதிருஷ்டியினுல் பார்த்தார். ''கண்ணபிரானுடைய லீலை இது. அவனே மாதவன்; அவனே சர்வ உலகங்களும்; அவனே நாம்'' என்ற உண்மையை உணர்ந்து வெட்கினுர். அங்கிருந்தே கண்ணனையும் வணங்கிக்கொண்டு வீமனிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்.

துஷ்டர்கள் தாங்கள் செய்யும் காரியம் எல்லாம் எப்பொழுதும் வெற்றியாகும் என்று எண்ணி ஏமாந்து போவது வழக்கம். மனிதனுடைய சக்திக்கு மேலாக ஒரு மகாசக்தி வேலை செய்துகொண்டே இருப்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறிவிடுகிருர்கள்.

''வனவாசகால எல்லை முடியப்போகிறது. இன்னும் சிலபகல் கழிந்தால் பாண்டவர் கரந்துறையும் அஞ்ஞாத வாசத்துக்காக மறைந்துவி[illegible]வார்கள். பிறகு தேடிப்பிடிப்பது கஷ்டம். ஆகையால் கடைசி முயற்சியையும் செய்துவிடவேண்டும்'' என்று துரியோதனன் எண்ணிக் காளமாமுனியென்னும் கொடிய முனிவனை அழைத்தான். அதர்வவேதத்தில் சொல்லியபடி பயங்கரமான ஒரு வேள்விசெய்து அதிலே கொடியதொரு

பூதத்தைத் தோற்றுவித்துப் பாண்டவர்கள் மேல் ஏவிவிடவேண்டுமென்று அம்முனிவனோடு ஆலோசித்தான்.

பாண்டவர்களைக் கொல்வதற்கு ஒரு பெரிய வேள்வி செய்யவேண்டுமென்று முனிவரைத் துரியோதனன், சகுனி, துச்சாதனன் ஆகியவர்களோடு கன்னனும் வேண்டினான். "கொடுத்து மாநிலத்து இன்னிசை வளர்க்கும் அக்கொடிய பாவியும்" என்று கன்னனைக் கவி கூறுதலை நாம் கவனிக்கவேண்டும். கன்னன் கொடையிற் சிறந்தவனாயினும் உள்ளத்தில் பொறாமை, வஞ்சனை முதலிய மாசுகள் நிறைந்தவன். அதனால்தான் கொடையிற் சிறந்தவனென்ற பெயரிருந்தும் பாவியானான் கன்னனும் இப்படிச் சொன்னதைக் கேட்ட முனிவர் பயந்து நடுங்கினார். ஆனாலும் கடைசியில் துரியோதனனுடைய வேண்டுகோளுக்கு இணங்கினார். "நான் செய்யும் வேள்வியில் தோன்றும் பூதம் பாண்டவர்களைக் கொன்றுவிடக்கூடும். ஆனால் அவர்கள் மாயவனுடைய அருள் பெற்றவர்கள்; தருமசீலர்கள். ஆகையால் பூதத்தின் வேலை அங்கே செல்லாவிட்டால் அது என்னையே கொல்லும். உன் வேண்டுகோளுக்காக நான் இந்த வேலையில் ஈடுபடுகிறேன்" என்று சொல்லிவிட்டு முறைப்படி வேள்வி செய்ய ஆரம்பித்தார்.

பாண்டவர்களுக்கு எதிராக நடக்கும் இந்தக் கொடிய சூழ்ச்சியைத் தருமதேவதை அறிந்தது. பாண்டவர்களுக்கு எப்படியாவது துணைசெய்ய வேண்டுமென்று முடிவுசெய்துகொண்டு ஒரு மாய மானாக வடிவுகொண்டு பாண்டவர்கள் சஞ்சரிக்

கின்ற காட்டில் உள்ள அருந்தவ முனிவரொரு வருடைய மான்தோலைத் தன் கொம்பில் மாட்டிக் கொண்டு ஓடிற்று

தனக்குத் தினந்தோறும் தேவைப்படும் மான் தோலை இந்த மான் கொண்டோடுவதைக் கண்ட அத் தவமறையவன் பாண்டவரிடம் முறையிட் டான். பாண்டவர்கள் அம் மானை எப்படியாவது பிடித்துத் தோலைப் பெற்றுக் கொடுப்பதாக வாக் களித்துவிட்டு ஆயுதபாணிகளாக மானைத் துரத் திச் சென்றனர்.

அந்தமான் அங்குமிங்குமாக அவர்களை அலைக் கழித்துக்கொண்டே திக்குத்திசை தெரியாத அடர்ந்த காட்டின் மத்தியில் கொண்டுபோய்ச் சேர்த்தது. ''இதோ அகப்பட்டுவிட்டது'' என்று எண்ணி அவர்கள் குறிவைக்குமுன் அது மறைந்து விடும்; பின்பு தோன்றும். இவ்வாறு வீரர்களான இவர்களையே அந்த மான் ஏமாற்றிக்கொண்டு சென்றது ஆகையினால் அது ஏதோ மாயச்செய்கை போலுமென எண்ணி மானைத் தொடர்தலில் வெறுப்புற்றனர்; நெடுந்தூரம் சென்றதனால் தாகம் மேலிட்டுத் தவித்தனர்; மானைத் தொடரும் எண்ணத்தைக் கைவிட்டுத் தம் தாகத்தைத் தீர்க்க நீர் தேடலாயினர். எப்படியாவது தண் ணீர் கொண்டு வருவதாகச் சொல்லிச் சகதேவன் மிகஉயர்ந்த ஒரு குன்றில் ஏறி நின்று நாற்புறமும் பார்த்தான். தூரத்தில் நீர் நிறைந்த சுனை யொன்று தோன்றியது; வேகமாகச் சென்று அச் சுனையின் நீரைப் பருகினான் தன் தாகத்தைத் தீர்த் துக்கொண்டு பிறகு தமையன்மாருக்குக் கொண்டு போகலாமென்று எண்ணிப் பருகினவன், பூமியிலே பிணமாக வீழ்ந்தான்.

நெடுநேரமாகியும் சகதேவனைக் காணுமையாய் நகுலன் அவனைத் தேடிச் சென்றான். அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்ற அவனும் நச்சு நீரைப் பருகி மயங்கி வீழ்ந்தான். அவர்களைத் தேடி அருச்சுனனும் சென்றான். தம்பியர் மாய்ந்து கிடக்கும் கொடுமையைக் கண்டு உள்ளம் வெதும்பினான். அவர்களைப்போலவே தானும் தண்ணீரை வாரி அருந்தி மயங்கி வீழ்ந்தான். எஞ்சி நின்ற தருமனும் வீமனும் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தார்கள். ''எவராலும் வெற்றி கொள்ளமுடியாத தம்பியரை நெடுநேரமாகியும் காணவில்லையே; இது என்ன சூதோ!'' என்று சொல்லி வீமன் தன் கதாயுதத்தைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு புறப்பட்டான்.

தெளிந்த நீர்ச்சுனையின் பக்கத்தே மாண்டு கிடந்த தம்பியரைக் கண்டதும் வீமனுக்குத் தாங்கொணுத் துயரம் மேலிட்டது. ''திசையனைத்தும் இசை பெருக்கிய அருச்சுனனுமா மாண்டான்? கொடிய சூழ்ச்சிகளுக்கெல்லாம் தப்பி, கௌரவர்களை வஞ்சந்தீர்க்க ஆசைகொண்டிருந்த எங்களுக்கா இந்தக் கதி? இந்தப் பொய்கை நச்சுப் பொய்கை! இதன் நீரை அருந்தியல்லவோ என் தம்பியர் மாண்டனர். இனித் தருமனும் இங்கு வந்து மாண்டுபோவான். நான் மட்டும் தனித்திருந்து யாது செய்வேன்? யாரோடு பேசுவேன்?'' என்று எதற்கும் கலங்காத வீமனே கலங்கிப் போனான். ''இது நச்சுநீர், இதனைப் பருகாதே'' என்று மணலில் எழுதி வைத்துவிட்டுத் தானும் தம்பியர் செய்ததுபோல நீரை அருந்தி மாண்டான்.

தருமன் தன் தம்பியர் நால்வரையும் நெடு நேரமாகியும் காணுத கலக்கம் ஒருபுறமும், தாகம் ஒரு புறமுமாக வாட்ட மயங்கிச் சோர்ந்து பிணம் போலத் தான் நின்ற இடத்திலேயே மெய் சோர்ந்து வீழ்ந்தான்.

பாண்டவ வீரர் ஐவரும் இங்ஙனம் வீழ்ந்து கிடக்கும்போது காளமாமுனிவனுடைய ஓமத் தீயினின்றும் எழுந்த பூதம் கார்மேகங்கள் ஒருங்கு திரண்டெழுந்த தோற்றம்போல வான் முழுவதும் இருள்செய்துகொண்டு மின்னல் போன்ற கூரிய பற்கள் இலங்க, எங்கும் சூறைக்காற்று சுழன் றடிப்பதுபோல மரங்களையெல்லாம் முறித்து வீசிக்கொண்டு பாண்டவர்கள் வசித்த காட்டை வந்தடைந்தது. பாண்டவர்களனைவரும் ஏற்கனவே இறந்துவிட்டார்கள் என்று எண்ணிய பூதம் அண்டம் பிளவுறும்படி சிரித்துக் கொண்டு மீண் டும் காளமாமுனிவனிடமே சென்றது.

''காளமாமுனியே! கண்ணில்லாதவன் மகன் சொன்னுனென்று நீயுமா உன் அறிவுக் கண்ணை இழந்தாய்? நச்சுப்பொய்கை யொன்றில் நீரருந்தி அந்தப் பாண்டவர் ஆவி நீங்கினர். ஒருகால் மாண்டவர் பின்னும் மாள்வ தெங்ஙனம்? இதோ என் சூலத்துக்கு நீயே இலக்காவாய்'' என்று கண்களில் கோபாக்கினி சிந்த அது தன் சூலப் படையால் முனிவனுடைய தலையைத் துணித்து விட்டு ஓமகுண்டத்தில் புகுந்து மறைந்தது.

இஃதிவ்வாருக மயங்கி வீழ்ந்த தருமன் அங்கு வீசிய குளிர்ந்ததென்றற் காற்ருல் சிறிது உணர்வு பெற்று எழுந்தான். தாகமும் தம்பியரைப்

பிரிந்த துயரமும் அவனுடைய மனத்தை அலைப்பத் தடுமாறித் தள்ளாடி அந்த நச்சுப்பொய்கை யண்டை சென்ருன்.

திருவிழா முடிந்தபின் தள்ளி வீழ்த்தப்பட்ட அழகிய தம்பங்களைப்போல மண்மீது கிடக்கும் தம்பியரைப் பார்த்துப் பதைத்துப் போனுன். எப்படி மாண்டார்கள் என்று அவன் சிந்திக்கு முன்னமே வீமன் எழுதிய வாசகம் கண்ணிற் பட்டது. "கடைசியில் துரியோதனனுடைய சூழ்ச்சி பலித்ததே. ஆ! இனி நான்மட்டும் எதற்கு உயிர் வாழவேண்டும்? நானும் என் தம்பியர் பின்னே போய்விடுகிறேன்" என்று மனதில் எண்ணிக்கொண்டு ஓடிப்போய்த் தண்ணீரைத் தன் இரு கைகளாலும் அள்ளினுன்.

"தொடாதே! உன் தம்பியரும் என் சொல்லைக் கேளாமல் மாண்டனர். நான் கேட்கும் வினுக்களுக்கு விடை சொல். பிறகு வேண்டுமானுல் நீரைப் பருகு" என்று ஒரு குரல் வானத்தில் எழுந்தது. ஏதோ தெய்வத்தின் சோதனை என்று எண்ணிக்கொண்டு, "யார் நீ! எங்கே உன் கேள்விகளைக் கேள்" என்று கூறிக் கையில் அள்ளிய நீரைக் கொட்டிவிட்டு நிமிர்ந்தான் தருமன்.

அசரீரி: உலகத்தில் சிறந்த நூல் எது?
தருமன்: பிறநூல்களில் கிடைப்பதற்கு அரிதான மெய்ப்பொருளைக் கூறும் வேதம்.
அச: இல்லறத்துக்கு இன்றியமையாதது எது?
தரு: குணநலம் நிறைந்த இல்லாள்.
அச: பெரிய தவம் எது?

தரு: குல ஒழுக்கம் தவருத வாழ்வே பெரிய தவமாகும்.

அச: பெரிய தனவந்தர்களுடைய செல்வத்துக்குக் காவலாயுள்ளது எது?

தரு: தக்கோர்க்கு அவர்கள் செய்யும் தானம்.

அச: செவிக்கு இன்பந்தருவது எது?

தரு: குழந்தையின் மழலே.

அச: உலகில் அழியாத பொருள் எது?

தரு: புகழ்.

அச: மனிதனுக்கு என்றும் துணேயாயுள்ளது எது?

தரு: மன உறுதி

அச: எந்த சாஸ்திரத்தைப் படித்து மனிதன் புத்திமான் ஆகிருன்?

தரு: சாஸ்திரங்களேப் படிப்பதனுல் மட்டும் புத்திமான் ஆகிவிடமுடியாது. பெரியோர்களே அடுத்தே மனிதன் புத்திமான் ஆகிருன்.

அச: தேசாந்தரம் போகிறவனுக்கு யார் தோழன்?

தரு: அவன் கற்ற கல்வி.

அச: எல்லோராலும் விரும்பப்படுபவன் எவன்?

தரு: உள்ளத்தால் பொய்யாதொழுகும் உத்தமன்.

இவ்வாறு கேள்விகளுக்கெல்லாம் தருமன் தக்க விடைகளேக் கூறியதும் அங்கே பொன்னெளி வீசும் தோற்றத்துடன் தருமதேவன் தன் மகனுன உதிட்டிரன் முன்பு தோன்றி அவனே அன்புடன் தழுவி ஆசீர்வதித்தான். தன் மகனுடைய தரும வாழ்வை முற்றுகக் காண விரும்பிய தருமதேவன் மீண்டும் ஒருசோதனேயை நிகழ்த்தினுன். "இதோ இறந்து கிடக்கும் உன் தம்பியரில் உனக்கு மிகவும் பிரியமானவன் எவனே அவன் பெயரைச்

சொல்லியழைத்தாயானல் அவன் உயிர்பெற்று எழுவான் யார்மீது நீ மிகுந்த அன்பு வைத்திருக்கிருய்?'' என்று தருமதேவன் கேட்டான்.

உடனே தருமன் ஏனைய தம்பிமாரைவிட்டுச் சகதேவனையே வேண்டினன். தருமதேவன் ஆச்சரியப்பட்டு, ''நிகரில்லா வீரனுன அருச்சுனனன்ருே உனக்குப் பிரியமானவன்! மலையைப் போன்ற தோள்வலிமைகொண்ட வீமனல்லவா உன் அருமைத் தம்பி. இவர்களைவிட்டு நீ சகதேவன் உயிர் பெற எண்ணிய காரணம் யாது?'' என்ருன்.

''நாங்கள் மூவரும் குந்தியின் புதல்வர். எங்களில் நான் ஒருவன் மிஞ்சியுள்ளேன். மாத்ரியின் புதல்வரிலும் ஒருவன் வாழவேண்டும் என்று அவனை விரும்பினேன்'' என்ருன் தருமன்.

''பட்சபாதமறியாத என் மகனே! நீ சகல பாக்கியங்களையும் பெறுவாயாக. இதோ உன் நான்கு சகோதரரையுமே பெற்றுக்கொள்'' எனக் கூறித் தருமதேவன் மறைந்தான். நால்வரும் உயிர்பெற்றெழுந்தனர்.

மகாபாரதத்தில் இந்த நச்சுப் பொய்கைக் கதை நமக்குப் பெரும் உபதேசமாக அமைகிறது. தருமன் கூறிய அருமையான விடைகளையும், ஆவி கலங்கி நிற்கும் சமயத்திலும் அறத்தையும் நீதியையும் கைவிடாத அவனுடைய மன உறுதியையும் படிப்பவர்களின் உள்ளம் புனிதமடையும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாருக வனத்திலே பன்னீராண்டுகளைக் கழித்துப் பலவிதமான தவங்களுடனும் ஆசிகளுடனும், பதின்மூன்ருவது ஆண்டில் மறைந்து வாழ்வதற்காக விராடதேசம் நோக்கிப் புறப்பட்டனர் பஞ்சபாண்டவர்.

# 8. அஞ்ஞாதவாசம்

நீர்வள் நில வளங்களாற் சிறந்து விளங்கிய நாடு மச்சநாடு. அந்நாட்டில் அக்காலத்தில் விராடன் என்பவன் செங்கோல் செலுத்தி வந்தான். ஒருநாள் அவனுடைய அரசமண்டபத்துக்கு நீண்ட சடைமுடியும் மார்பில் விளங்கும் முப்புரி நூலுமாக தவவேதியரொருவர் சென்ருர். கவர்ச்சியான தோற்றத்தையுடைய அந்தத் துறவியைக்கண்டு விராடன் எதிர்சென்று வணங்கி உபசரித்து, ''தாங்கள் யார்? வந்த காரணம் என்ன?'' என்று அன்போடு கேட்டான். ''என் பெயர் கங்கன். இவ்வளவு காலமும் தருமபுத்திரருடன் காடுகளில் சஞ்சரித்தேன். அவர்களுடைய விதிதான் உலகறிந்ததாயிற்றே. அவர்கள் சபதப்படி அஞ்ஞாதவாசம் செய்யப் போய்விட்டார்கள். அவர்கள் எங்குச் சென்றனரோ அறியேன். அவர்கள் வெளிப்படும்வரை உன் ஆதரவை நாடி வந்தேன்'' என்று அந்தச் சந்நியாசி கூறினர்.

தருமபுத்திரனின் அன்புக்குரிய துறவியென்றறிந்ததும் விராடமன்னன் முன்னிலும் மகிழ்ந்து அவரைத் தன்னுடனேயே இருக்கும்படி வேண்டினன் சிலநாட் செல்ல மிகுந்த பலவானுன ஒருவன் வந்தான். அவன் அரசனை அணுகித் தனக்கு அரண்மனையில் ஏதாவது வேலை தரும்படி கேட்டான். ''யார் நீ! பார்த்தால் பெரிய மல்யுத்தவீரன் போலக் காணப்படுகிருய். நீ என்ன வேலைகளைச் செய்வாய்?'' என்று விராடன் கேட்டான்.

"அரசனே! என் பெயர் பலாயனன். நான் மல்யுத்தத்திலும் வல்லவன். எனக்கு நிகரான வீரன் யாருமில்லை. அதுமட்டுமன்று, நான் சமையற்றொழிலிலும் சமர்த்தன். நான் சமைக்கும் உணவைப் போலச் சுவைமிக்க உணவைத் தேவ உலகிலும் காணமுடியாது" என்றான். விராடன் பலாயனனைத் தன் பாகசாலையில் தலைவனாயிருக்கும்படி செய்தான்.

இப்படியிருக்கும்போது ஒருநாள் பிருகந்நளை என்னும் பெயரையுடைய பேடியொருத்தி வந்தாள். தான் பஞ்சபாண்டவருள் சிறந்தவனான அருச்சுனனிடத்தில் குற்றேவல் செய்துகொண்டிருந்ததாகவும், அவர்கள் காட்டேகப் பலவிடத்தும் அலைந்து அல்லற்பட்டுத் தன்னை ஆதரிப்பாரின்மையால் அங்கு வந்ததாகவும் கூறினாள். தன்னுடைய அரசசபையில் அவள் என்ன செய்ய முடியும் என்று விராடமன்னன் வினவினான். ஆடல் பாடலில் தான் மிகுந்த தேர்ச்சி பெற்றிருப்பதாகப் பிருகந்நளை கூறவே அரசன் மகிழ்ந்து அவளைத் தன் மகள் உத்தரைக்குப் பாங்கியாயிருந்து இசைப்பயிற்சி செய்து வைக்கும்படி பணித்தான்.

சிலநாள் கழித்துத் தாமக்கிரந்தி, தந்திரீபாலன் என்ற இரண்டு பேர் வந்தனர். ஒருவன் தான் குதிரைகளைப் பழக்குவதிலும் அவற்றின் குணகுணங்களை அறிவதிலும் வல்லவனென்றான். மற்றவன் பசுலக்ஷணங்களையறிந்து நல்ல பசுக்கூட்டங்களை அமைத்து வளர்ப்பதில் வல்லவனென்றான். நகுலசகதேவர்களிடம் தாங்கள் இந்தச் சாத்திரங்களைக் கற்றுப் பலபல தேசங்களுக்கும்

சென்று கடைசியில் மச்சநாட்டின் சீர்மையையும் வளத்தையும் பலரும் புகழக்கேட்டு விராட மன்னனை நாடி வந்ததாகக் கூறினர்.

பாண்டவர்களைச் சேர்ந்தவர்கள் இப்படியே தன்னிடம் வந்து சேர்ந்ததால் விராடன் அள வற்ற மகிழ்ச்சியெய்தி அவ்விருவர்களையும் தன் அரண்மனையில் சேர்த்துக்கொண்டான்.

விராட மன்னனுடைய பட்டத்தரசி சுதேஷ் டிணையென்பவள் ஒருநாள் தன் அந்தப்புரத்தி லிருக்கும்போது விரதசாரிணியென்னும் பெயர் கொண்ட வண்ண மகள் ஒருத்தி அங்கு வந்தாள்.

''பஞ்சபாண்டவரின் தேவிமார்களுடைய பக்கத்தில் அவர்களுக்கு வேண்டியன செய்து கொண்டு வாழ்ந்துவந்தேன். அவர்கள் விதியின் கொடுமையால் காடேகினர் நானும் ஆதரிப் பாரின்றி உன்னிடம் வந்தேன். மங்கையர்களை அழகுறக் கோலம் புனைவதில் என்னுடைய கைத் திறமையைக் காண்பாய்'' என்று விரதசாரிணி கூறினாள். சுதேஷ்டிணை அவளைத் தன் அந்தப் புரத்தில் வண்ணமகளாய் இருக்கும்படி பணித் தாள்.

இந்தப் புதியவர்கள் விராடமன்னனுடைய அவைக்கு வந்து சேர்ந்தபின் அவனுடைய நாடு முன்னிலும் பன்மடங்கு சிறப்புற்றோங்கி விளங் கியது. மக்களும் மிக்க மகிழ்ச்சியோடு வாழ்ந் தனர்.

இஃதிவ்வாறாக விரதசாரிணியென்னும் அவ் வண்ணமகளைக் கீசகன் என்பவன் ஒருநாள் நந்த வனத்தில் கண்டான். சுதேஷ்டிணைக்கு உடன்

பிறந்தோர் நூற்றுநால்வர் இருந்தனர். அவர்களுள் மூத்தவனே கீசகன். அழகிலும் ஆண்மையிலும் சிறந்தவனுன கீசகன், விராடனுடைய படைக்குத் தலைவனுக இருந்து பல பகையரசர்களை வென்ருன். விராடனுடைய பெருமைகளுக்கெல்லாம் இந்தக் கீசகனே காரணமாயிருந்தான். அக்காலத்தில் துரியோதனன், கீசகன், வீமன் என்னும் மூவரும் சம பலமுடையவர்களாக மதிக்கப்பட்டு வந்தனர். அதனுல் கீசகன் அகம்பாவம் கொண்டிருந்தான். இப்படியான கீசகன் விரத சாரிணியைக் கண்டதும் அவள் அழகில் ஈடுபட்டான். அவளை எப்படியாவது அடைய வேண்டுமென எண்ணி, அவளை அணுகித் தன் மனக் கருத்தைப் பலவாறு எடுத்தியம்பினுன்.

''இந்திர சபையிலே நடனமாடும் சுந்தர மகளோ, தாமரையில் வீற்றிருக்கும் திருமகளோ, மலைமகளோ, நீரரமகளோ, மோகினித் தெய்வமோ யார் நீ? என்னுயிரைக் கொள்ளை கொள்ளும் பேரழகியே! என் காதலை ஏற்றுக்கொள்'' என்று இரந்தான்.

''நீ எத்துணைப் பெரிய வீரனுயினுமென்ன? எனக்குக் கிட்ட வராதே. எனக்குக் காவலாயிருக்கும் கந்தருவர்கள் நின் செய்கையை அறிந்தால் உன்னைக் கொன்று விடுவார்கள். வெறும் வண்ணமகள் தானே, என்ன வேண்டுமானுலும் செய்யலாம்'' என்று எண்ணினுயானுல் உனக்கு ஆபத்தாகவே முடியும்'' என்று தகாத நோக்கத்தோடு தன்னை நெருங்கி வந்த கீசகனை விரத சாரிணி எச்சரித்தாள்.

அதிகார பலத்திஞல் இறுமாந்திருந்த கீசகன் இந்த மறுப்பைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தன்வீரத்தையும் பலத்தையும் கண்டு அரசனே அஞ்சும்போது, இந்த அடிமை வண்ணமகள் எதிர்த்துப் பேசுகிருளே என்று ஆச்சரியமும் கோபமும் கொண்டு அவளைப் பற்றி இழுக்கப் போஞன். விரதசாரிணி பயந்து, ''அபயம் அபயம்'' என்று கூக்குரலிட்டுக் கொண்டே சுதேஷ்டிணையின் அந்தப்புரத்துக்குள் ஓடிஞள். அவளைப் பின் தொடர்ந்து சென்ற கீசகனையும் வண்ணமகளின் நிலையையும் கண்ட சுதேஷ்டிணை நடந்தவற்றை அறிந்து கடுங்கோபங் கொண்டு, தன் சகோதரனைப் பலவாறு கடிந்து, தன் மாளிகைக்கு இனி அவன் வரக்கூடாதென்று சொல்லி அனுப்பி விட்டாள். கீசகன் தன்னெண்ணம் நிறைவேருமையால் மனம் நொந்து தன் மாளிகைக்குத் திரும்பிஞன்.

வண்ணமகளிடத்துக் கொண்ட காமநோய் மிகுந்து வருத்த, அவன் செயலிழந்து தன் சயனத்தில் கிடந்து வெதும்பலாயினன். இதனைக் கண்ட பணிப் பெண்கள் சுதேஷ்டிணையிடம் சென்று கீசகசேஞபதியின் நிலையை விளக்கிஞர்கள். வண்ணமகள்மேற் கொண்ட காதலால் கீசகன் வாடிப் போயினன் என்பதைக் கேட்டதும் சுதேஷ்டிணை கலங்கிஞள். தங்கள் நாட்டையும் அரசாட்சியையும் பாதுகாக்கும் சகோதரஞன கீசகன் ஒருபுறம், அருந்ததியிலும் மிக்காளான விரதசாரிணி மறுபுறம், யாருக்காகப் பேசுவதென்று தெரியாமல் சுதேஷ்டிணை நிலைதளர்ந்தாள். பிறகு ஒருவாறு மனந்தேறி வண்ண

மகளை நோக்கி, அவளுக்குப் பல அன்புமொழி கூறி அவனுயிரைக் காப்பதற்காகவேனும் சிற்றுண்டிகள் சிலவற்றை எடுத்துக்கொண்டு ஒரு முறை கீசகனுடைய மாளிகைக்குச் சென்று வரும்படி கூறினாள். விரதசாரிணி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் சுதேஷ்டிணை தன் சகோதரன் மேல் கொண்ட பாசத்தினால் அவளை வற்புறுத்தினாள். ''இதனால் பலவித அநர்த்தங்கள் நேரப்போகின்றன. நான் உனக்குப் பணிப்பெண்ணாய் இருப்பதனால் நீ சொல்வதைத் தட்டாமல் செய்ய வேண்டியவளாயிருக்கிறேன். அதனால் போகிறேன்'' என்று சொல்லிச் சிற்றுண்டிகளையும் கொண்டு, நடுக்கத்தோடு கீசகனுடைய மாளிகையை அணுகினாள்.

காமத்தினால் கருத்தழிந்துபோயிருந்த கீசகன் வண்ணமகளைக் கண்டதும் வருத்தமெல்லாம் நீங்கித் துள்ளியெழுந்தான் விரதசாரிணி மனம் மாறித் தன் ஆவலைத் தீர்க்கவே வந்தாளென்று தன் இருகரங்களையும் விரித்து அவளை அணைக்கப் போனான். உடனே அவள் நடுநடுங்கி ''ஐயோ!'' என்று அலறியபடியே அண்ணாந்து பார்த்தாள். உலகில் நடப்பன யாவற்றுக்கும் சாட்சியான சூரியன் ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தான். ''கதிரோனே! இக் கொடுமையைக் காணாயோ!'' என்று அரற்றிக்கொண்டு விராடனுடைய சபைக்கு ஓடிப்போய் அவன் முன்னிலையில் விழுந்து முறையிட்டாள். கீசகனுடைய அதிகாரத்துக்குப் பயந்த விராடன், அவளுடைய முறையீட்டைக் கேட்டும் கேளாதவன் போலிருந்தான். அதிகார வெறி மிஞ்சிய கீசகன் அவளை

அந்தச் சபையிலேயே தொட்டிழுக்க முனைந்தான். ஆனால் சூரியதேவனின் அருளால் விரதசாரிணியை அவன் தீண்ட முடியாதவாறு கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தி அவனைத் தூக்கி எறிந்துவிட்டது. அவ்வளவில் அவன் அவ்விடம் விட்டகன்றான். சபையில் இருந்த கங்கன், பலாயனன் முதலியவர்களும் மிகுந்த கோபங் கொண்டனர். பலாயனன் அருகில் நின்ற மராமரமொன்றை வேரோடு பிடுங்கச் சென்றான். அதனைக் கண்ட கங்கன். ''பலாயனா! பச்சைமரம் எரியாதே, சமையல்செய்ய அது பயன்படுமா?'' என்று குறிப்பாகத் தடுத்தான். விராடமன்னனே வாளாவிருக்கும்போது இவர்கள் என்ன செய்வார்கள்? அநியாயத்தைக் கண்டு மனங் கொதித்து வெய்துயிர்த்தனர். விரதசாரிணி துயரக் கடலில் மூழ்கியவளாய்த் தனக்கு அபயமளிக்க யாருமில்லாமற் போயினரேயென்று பொருமியழுதாள். சுதேஷ்டிணை என்ன சொல்லியும் அவளைச் சிறிதும் ஆற்றமுடியவில்லை.

அன்றிரவு பலாயனன் தன் வேலைகளை முடித்து விட்டுத் துயில் கொள்ளச் சென்றான். மன்னனுடைய சபையில் அன்று நடந்தவை மனத்திரையில் தோன்றித் தோன்றி உள்ளத்தை வாட்ட அவன் தூக்கமின்றிப் படுக்கையிற் புரண்டுகொண்டிருந்தான். அப்பொழுது இருளில் ஓசைபடாமல் தன் போர்வையை விலக்கிக் கொண்டு விரதசாரிணி தோன்றினாள். தனக்கு நேர்ந்த அவமானத்தைச் சொல்லிச் சொல்லி அவள் கண்ணீருகுத்தாள். பலாயனன் அப்

பொழுதே புறப்பட்டுப்போய்க் கீசகனை வதைத்து விட்டாலோ என்று பொங்கியெழுந்தான். ஆனால் விரதசாரிணி அவனுடைய கைகளைப் பிடித்து அமர்த்திவிட்டு வேறேதோ ஏற்பாடு செய்து கொண்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

அடுத்தநாட் காலையில் கீசகன் தன் சகோதரியை அடைந்து எப்படியாவது தான் விரதசாரிணியை அடைந்தே தீரவேண்டுமென்று கூறினான். சுதேஷ்டிணை கூறிய புத்திமதிகள் அவன் செவியில் ஏறவில்லை.

அவன் போனபின் சுதேஷ்டிணை விரதசாரிணியை அழைத்து, "எங்களுடைய அரசாங்கத்துக்கு அவன் அல்லவோ பாதுகாவலாக இருக்கிறான். அவனுடைய விரோதத்தை நான் சம்பாதிக்கக் கூடாது. நீதான் என்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டினாள்.

விரதசாரிணியும் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கீசகனுடைய எண்ணத்துக்கு இணங்கியவள் போல நடித்தாள். பின்பு விரதசாரிணி மலர் கொய்து வர நந்தவனத்துக்குச் சென்றாள். விதியின் பயனோ எனும்படி கீசகனும் அங்கு வந்தான். அவளைக் கண்டதும் ஆவல் மீதூர அருகிற் சென்றான். விரதசாரிணி நாணத்துடன் ஒதுங்கி நின்றாள்.

"உனக்குக் கந்தருவர்கள் காவலாயிருக்கிறார்கள், என்று பொய்தானே சொன்னாய்?" என்று அந்தக் காமுகன் அவளை அணையவந்தான்.

"ஐயோ! நான் பழிக்குப் பயந்தவள். இந்த மாதிரி நடந்து கொண்டாயானால் என் உயிரையே விட்டு விடுவேன். நான் சொல்வதைப் பொறுமையோடு கேட்க வேண்டும்" என்று விநயமாக மொழிந்தாள்.

கீசகனுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. "என்ன வேண்டுமோ சொல்லு ஒன்றுக்கும் அஞ்சாதே. இந்த நாட்டையே வேண்டுமானாலும் உன் காலடியில் வைக்கிறேன்" என்றான்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான் பகிரங்கமாக நடக்கப் பயந்தவள்; எங்களுறவை நீ யாருக்கும் வெளியிடக்கூடாது. இன்றிரவு பூஞ்சோலையிலுள்ள கொடி மண்டபத்துக்கு வா. இரவில் அங்கே யாரும் இருக்க மாட்டார்கள். ஒரு சாமத்துக்குமேல் உனக்காக அங்கே போவேன்" என்றாள். விரதசாரிணியினுடைய இந்தவார்த்தை தேன்மாரிபோல் இருந்தது கீசகனுக்கு. இன்ப வெறியிலே தன்னைமறந்து குதித்தான். விரதசாரிணியும் மலர்ச் செடிகளுள் சென்று மறைந்தாள்.

அன்றிரவு கீசகன் ஆடை ஆபரணங்களாலே தன்னை அலங்கரித்துக் கொண்டு, வாசனைச்சாந்து பூசியவனாய்ப் பூஞ்சோலையை அடைந்து, கொடி மண்டபத்தில் தன்வரவை எதிர்பார்த்திருந்த விரதசாரிணியின் பக்கத்தே போய், நாணத்தினால் ஒடுங்கிய அவளை வாரியணைத்தான். ஆ! என்ன ஆச்சரியம்! அணைத்தது விரதசாரிணியா? பலாயனனுடைய இரும்புக் கரங்களல்லவா மச்ச நாட்டுத் தளபதியை அணைத்துக் கொண்டன. புகழ்பெற்ற வீரனான கீசகதளபதி பலாயனனுடைய இரும்புப்

பிடியைத் திமிறிப் பார்த்தான். பிடி மேலும் இறுகியதேயன்றி இளகவில்லை. வாயெடுத்துக் கூவவும் முடியவில்லை. கீசகனுக்கு மூச்சுத்திணறி விழி பிதுங்கி அறிவு சோர்ந்தது. அவனை அப்படியே கசக்கி உருட்டி ஒரு மாமிச உருண்டையாக்கி உருத்தெரியாமற் செய்து விட்டுப் பாலயனன் அவ்விடம் விட்டு அகன்று போய் நீராடிச் சந்தனம் பூசிக்கொண்டு படுத்துறங்கச் சென்றான்.

அடுத்த நாள் ஊரெங்கும் பரபரப்பாக இருந்தது. "உண்மையிலே விரதசாரிணிக்குக் காவலாகக் கந்தருவர்கள் இருக்கிறார்கள்; அவர்களே கீசகனை இப்படிக் கொன்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் யாராலும் வெல்லமுடியாத கீசகனுக்கு இப்படி முடிவு ஏற்படுமா?" என்று பலவாறு பேசிக்கொண்டார்கள்.

இந்தச் செய்தி கேட்ட விராடனும் அவன் மனைவியும் நிலைகலங்கினர். தமது படைவலிமைக்கும் பாதுகாப்புக்கும் இன்றியமையாத கீசகன் கொலையுண்டதனால் மிகவும் துயருற்று விரதசாரிணி யாரோ ஒரு சூரரமகளென்றே முடிவு செய்தனர். அல்லாவிட்டால் யாராலும் வெல்லுதற்கரிய மகாவீரனான கீசகன் இவ்வாறு உருத்தெரியாமற் கொலை செய்யப்படுவானா? எப்படியாவது அந்த விரதசாரிணியை அரண்மனையை விட்டு அப்புறப்படுத்தி விடவேண்டுமென்று முடிவு செய்தார்கள்.

"தாயே! நீ யாரானாலும் என்ன, எங்களை இம்சிக்காமல் விலகிவிடு. எமக்கு மிகுந்த பாதுகாப்பாக இருந்த கீசகன் உன் காரணமாகக்

கொல்லப்பட்டான். இன்னும் என்னென்ன அநர்த்தங்கள் நேருமோ அறியோம்'' என்று சுதேஷ்டிணே பயந்து பயந்து வேண்டிக்கொண்டாள்.

''நான் முன்னமே சொன்னேனே. எனக்குக் காவலாயுள்ள கந்தருவர்கள் சாமானியமானவர்களல்லர். எனக்கு அற்பதீங்கு ஏற்பட்டாலும் அவர்கள் சும்மா விடமாட்டார்கள். இப்பொழுது அவர்கள் சில சித்திகளைப் பெறுவதற்காகப் பூலோகத்தில் தவம் செய்து கொண்டு என்னையும் கண்காணித்து வருகின்றார்கள். இன்னும் சிறிது காலம் பொறுத்தீர்களானால் அவர்களால் உங்களுக்கும் பல நன்மைகளுண்டாகும். ஆதலால் என்னை வெளியேற்றி விடாதீர்கள்'' என்று விரதசாரிணி சொன்னாள். விராடனும் மனைவியும் அவளை அகற்றவும் முடியாமல் வைத்திருக்கவும் முடியாமல் இடர்ப்பட்டுக் கொண்டிருந்தனர்.

கீசகனுடைய வதம் நாடெங்கும் ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டாக்கி விட்டது. அத்தினாபுரிக்கும் இந்தச் செய்தி எட்டியது. 'கீசகனைக் கொல்லக்கூடிய வீரன் யார்? ஒரு வேளை வீமனாகவே இருக்கலாம்' என்று துரியோதனனாதியோர் ஆலோசித்தனர். ''ஒற்றர்கள் மூலம் வந்த செய்திகளும் பஞ்சபாண்டவர் விராட தேசத்தில் மறைந்திருக்கக் கூடும் என்பதை வலியுறுத்துகின்றன. ஆதலால் நாம் போய் விராடதேசத்தை முற்றுகையிட்டு அங்குள்ள பசுக் கூட்டங்களைக் கவருவோம். உண்மையில் பாண்டவர்கள் அங்கே மறைந்திருந்தால் விராடனுக்காகப் போர் செய்ய

அவர்கள் வருவார்கள். அஞ்ஞாத வாசத்துக்கெனக் குறிக்கப்பட்ட காலவெல்லை முடிவதற்குள் அவர்கள் வெளிப்பட்டால் மீண்டும் பன்னீராண்டுகள் வனவாசம் புகவேண்டும். அங்கே இல்லாவிட்டால் கீசகனுடைய உதவியின்றித் தவிக்கும் விராடனை நாம் வென்று அவனுடைய நாட்டையும் அடிமைப்படுத்தலாம்'' என்றெண்ணிப் போருக்குப் புறப்பட்டார்கள். விதுரன் வீடுமர் முதலியோர் பலவிதமாகக் கூறிய புத்திமதிகளைக்கூட அவர்கள் கேட்கவில்லை.

முதலில் விராடதேசத்தின் தென்புறத்துள்ள ஆநிரைகளைக் கவரும்படி திரிகர்த்தன் என்பவனை அனுப்பினார்கள். அவன் பெரும்படையுடன் மச்சநாட்டின் தென்பக்கத்துக்குச் சென்று ஆநிரைகளைக் கவர்ந்தான். இடையர்கள் அச்செய்தியை அரசனிடம் முறையிட்டார்கள். அரசன் இச்சமயத்தில் கீசகனில்லையே என்று வருந்தினான். இதனை அறிந்த கங்கர் அவனைத் தேற்றி, அந்த மடைப்பள்ளித்தலைவனான பலாயனனையும் தந்திரீபாலன், தாமக்கிரந்தியென்பவர்களையும் அழைத்துக்கொண்டு தாமும் கூட யுத்தக்களம் வருவதாகப் புறப்பட்டார். ''இத்தனை நாள் உமது ஆதரவில் இருந்தவர்கள் உமக்காக எதுவும் செய்யலாமல்லவா?'' என்று கங்கர் விராடனைத் தைரியப்படுத்தி அழைத்துக்கொண்டு போர்க்களம் போனார்.

துரியோதனனுடைய படைகளையும் அதற்குத் தலைவனாக வந்த திரிகர்த்தனையும் அந்தப் பலாயனன் ஒருவனே கலக்கியடித்துச் சிதறியோடச்

செய்ததை விராடமன்னன் கண்டு அதிசயித்துப் போனான். அவன் திரிகர்த்தனையே பிடித்துக் கட்டிக்கொண்டு வந்து விராடன் முன்னிலையில் விட்டபோது விராடனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. பிறகு கங்கரின் வேண்டுகோளின் படி திரிகர்த்தனை விடுதலை செய்துவிட்டு வாகை சூடி நகரத்துக்குத் திரும்பினார்கள்.

இங்கே இப்படியிருக்க, வடபகுதியிலே துரியோதனன் பெரும் படையுடன் வந்து அங்குள்ள ஆநிரைகளைக் கவர்ந்தான். அங்குள்ள இடையர் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவந்து இளவரசனாகிய உத்தரனிடம் முறையிட்டார்கள். "எல்லாப் படைகளையும் திரட்டிக்கொண்டு தந்தையார் தெற்கே திரிகர்த்தனோடு எதிர்க்கப் போய்விட்டாரே. எனக்கு ஒரு தேரோட்டி மட்டுமிருந்தால் எந்தப் பெரிய படையாயிருந்தாலும் நானொருவனாகவே அவர்களைப் புறங்கண்டு வருவேன்" என்று வீரம் பேசினான்.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த விரதசாரிணி விரைந்து சென்று பிருகந்நளை என்ற பேடியை அழைத்துவந்து, "இந்தப்பேடி அருச்சுனனுக்குச் சாரத்தியம் செய்ததை நான் கண்டிருக்கிறேன். இளவரசன் இவளை அழைத்துக்கொண்டு துரியோதனனுடைய படைகளை எதிர்க்கப் போகட்டும். இவள் ஓட்டிய தேர் ஒருபோதும் தோல்வியடையாது" என்று மொழிந்தாள்.

ஒன்றும் அறியாதவள்போல அந்தப்பேடி நடித்ததும், பிறகு கவசத்தை எடுத்துத் தலைகீழாக அணியப்போனதும் கண்டு அங்குள்ள

பெண்களெல்லாம் சிரித்தனர். ஆனால் அவள் கைவளையல்களைக் கழற்றியெறிந்துவிட்டு உறைகளை மாட்டிக்கொண்டு குதிரைகளைப் பூட்டியதைப் பார்த்ததும் எல்லோரும் வியந்தனர். தேர்ந்த ஒரு போர்வீரனிடத்திலே கூடக்காண முடியாத உற்சாகத்தோடு அவள் கடிவாளத்தைப் பிடித்து இழுத்துக் குதிரைகளை நடத்திக்கொண்டு சென்றாள்.

துரியோதனன், கன்னன், வீமர், துரோணர் முதலிய மகாவீரர்களுடைய தேர்க் கொடிகளைத் தூரத்தே கண்ட இளவரசனான உத்தரனுக்கு நடுக்கமெடுத்தது. "ஐயோ, பேடியே! தேரைத் திருப்பு; இந்த மகாரதர்களையெல்லாம் நான் எப்படி வெல்லுவேன். ஆநிரைகள் போனால் போகட்டும். நாம் ஊர் திரும்புவோம். படைகளும் இல்லை; வந்திருக்கும் எதிரிகளோ மகா வீரர்கள். நமக்கு ஏன் இந்த வேண்டாத பகை; திருப்பு தேரை!" என்று உத்தரன் பதறினான்.

இளவரசனே! முன் வைத்த காலைப் பின் வைத்தலாகாது. இது ஓர் அரசகுமாரனுக்கு அடுக்காது. நான் இருக்கிறேன்; தைரியமாகப் போர் செய்" என்று கூறித் தேரை வேகமாகச் செலுத்தினள் பிருகந்நளை. உத்தரன் பயத்தினால் தேரைவிட்டுக் குதித்து நகரத்தைநோக்கி ஓடத் தலைப்பட்டான். தொங்கும் தலைப்பின்னலாட, கட்டியிருந்த புடைவை காற்றிலே பறக்கப் பிருகந்நளை உத்தரனைத்துரத்திப்பிடித்துக்கொண்டு வந்து தேரிலேற்றிக் குதிரைகளை ஒரு காளி கோயிலுக்குப் பக்கமாக நிறுத்திவிட்டு இறங்கிப் போய் மறைத்து வைக்கப்பட்ட பாண்டவர்களுடைய ஆயுதங்களை எடுத்து வந்தாள்.

அந்த ஆயுதங்களின் ஒளியைக் கண்ட உத்தரனுக்குக் கண்கள் கூசின. ''இந்த ஆயுதமெல்லாம் யாருடையவை'' என்று அவன் வினவினான்.

''இவையெல்லாம் அருச்சுனனுடையவை. நீ பயப்படாமல் தேரைச் செலுத்து. நானே போர் செய்து உனக்கு வெற்றியீட்டித் தருகிறேன்'' என்றாள் அந்தப்பேடி!

அருச்சுனனுடைய பெயரும் அந்தத் திவ்விய ஆயுதங்களின் காட்சியும் உத்தரனுக்குச் சிறிது தைரியம் ஊட்டின. ''அந்த மகாவீரன் இப்போது எங்கே இருக்கிறான்?'' என்று உத்தரன் கேட்கவும் பிருகந்நளை, ''இன்னும் நான்கு நாழிகையிலே நீ அவனைக்காண்பாய்'' என்று சொல்லிவிட்டுக் கிழக்கு முகமாகத் திரும்பி அஸ்திரங்களுக்கு அஞ்சலி செய்துவிட்டு யுத்தத்துக்கு ஆயத்தமாக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டு கையிலே அருச்சுனனுடைய காண்டீபத்தையும் ஏந்தித் தேரிலேறினாள். உத்தரனும் தைரியமாகவே தேரைச் செலுத்தினான். பேடியுருவில் இருப்பது அருச்சுனனேதான் என்பதை விராடகுமாரன் அறிந்து மனத்தைரியத்தோடு முன்சென்றான்.

''அஞ்சியோடியவன் எதிர்த்து வருகிறானே'' என்று கண்டவர்கள் வியக்குமுன்பே சேனைகள் சிதறியடிக்கப்பட்டன. ஆநிரைகளை ஓட்டிக்கொண்டு போன துரியோதனனே எதிர்ப்பதற்கு ஆற்றாமல் செயலற்று நிற்க அவன் கண்ணெதிரே ஆநி

ரைகள் மீட்கப்பட்டன. இடையர்கள் சந்தோஷ மிகுதியினால் ஆரவாரம் செய்துகொண்டு தம் நகரம் மீண்டனர்.

இப்பொழுது அருச்சுனன் யாவருமறியத் தன் காண்டீபத்தை வளைத்து நாணேற்றி டங்கார நாதம்செய்தான். ''அருச்சுனன் வந்துவிட்டான்'' என்று துரியோதனனுடைய படைகள் நடுங்கின.

குறிக்கப்பட்ட கால எல்லை கழிவதன் முன் பார்த்தன் வெளிப்பட்டுவிட்டான்; இனி நமக்குக் கவலையில்லை'' என்று துரியோதனன் கூறினான். ''காலவெல்லை கடந்துபோய்விட்டது. கணக்கைத் தவறாக வைத்துக் கொண்டு வீண் எண்ணம் எண்ணாதே. இதோ அருச்சுனனுடைய காண்டீபம் வெறும் தாயக் கட்டைகளை உருட்டாது; கொடிய பாணங்களைக் கக்கும். உனக்கு எது வேண்டும்? சண்டையா சமாதானமா? முடிவாகச் சொல்'' என்றார் வீடுமர்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த துரியோதன னுக்குக் கோபம் பொங்கிவழிந்தது. ''சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை; இந்தப் பார்த்தனை இப்பொழுதே கொன்று தொலைத்து விடவேண் டும்'' என்று கத்தினான். உதவிக்குக் கன்னனும் சேர்ந்துகொண்டு வீடுமரைப் பழித்தான். பிறகு எல்லோரும் ஒருங்கு சேர்ந்து பல்குனனை எதிர்த் தார்கள்.

ஆச்சாரியர், பிதாமகர் முதலிய பெரியோர் களுக்குப் பாணங்களாலே வணக்கம் தெரிவித்து விட்டு அருச்சுனன் மற்றவர்களையெதிர்த்தான். துரியோதனனுடைய தேர், கொடி, படைக்கலங்க

ளெல்லாம் தவிடு பொடியாயின. வெறுந்தரையிலே பாதசாரியாக நின்ற துரியோதனனைக் கண்டு அருச்சுனன் பெயர் சொல்லி நகைத்தான். அவன் வேறொரு தேர் மீதேறி ஓடப் பார்த்தான். மற்ற வீரர்கள் பலரும் அவனைச் சூழ்ந்துகொண்டு அருச்சுனனை எதிர்த்தனர். அருச்சுனனுடைய பாணப்பிரயோகம் அளவு கடந்த வேகம் கொண்டது. எதிரிகளெல்லாம் சிதறியோடினர்; பலர் மூர்ச்சித்தனர்; துரியோதனனும் மூர்ச்சித்தான். வெற்றிக்கு அறிகுறியாக அங்கு வீழ்ந்தவர்களுடைய மேலாடைகளை உத்தரன் எடுத்துக் கொண்டான்.

துரியோதனன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். அருச்சுனன் அவனைப் பார்த்து, ''மூடனே! மாயச்சூதிலே எங்கள் ஆடைகளைக் கவர்ந்தாயல்லவா? இதோ ஒரு கணை வருகிறது—முடியை வீழ்த்த! வீரனானால் தடுத்துக்கொள் பார்க்கலாம்'' என்றான். அடுத்தகணம் துரியோதனனுடைய முடி மண்ணிலே புரண்டது. ''பாவம் தலையையாவது பத்திரமாகக் கொண்டு போ'' என்று எள்ளி நகையாடினான் அருச்சுனன். இவ்வளவில் எல்லோரும் மீண்டனர்.

நகரத்துக்கு வந்ததும் உத்தரன் நடந்தவற்றைத் தன் தந்தையாருக்குச் சொல்லி, பஞ்ச பாண்டவர்கள் நம்மோடுதான் இருந்தார்கள். இதோ கங்கர், பலாயனன், பிருகந்நளை, தந்திரீபாலன், தாமக்கிரந்தி, விரதசாரிணியெல்லாம் அவர்களேயாவர். தருமர், வீமன், அருச்சுனன் நகுலன், சகதேவன், புகழ்பெற்ற பாஞ்சாலி என்பவர்களே நமக்கு இந்த வெற்றியைத் தேடித்

தந்தவர்கள்'' என்று மறைந்திருந்தவர்களை வெளிப்படுத்தினான்.

விராடனும் மனைவியும் அளவுகடந்த நன்றியறிதலோடு அவர்களை மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். இன்னாரென அறியாது அவர்களைச் சாதாரண மக்கள் போல நடத்தியமைக்கு வருந்தினார்கள். 'தவச்செல்வியான பாஞ்சாலியா எனக்குப் பணிப்பெண்ணாக இருந்தாள்' என்று சுதேஷ்டிணை அவளை மனமுருகித் தழுவிக்கொண்டாள் எல்லாரும் ஒருவரோடொருவர் அளவளாவி மகிழ்ந்தார்கள்.

இந்த வெற்றியெல்லாவற்றிற்கும் காரணமான அருச்சுனனுக்குத் தன் மகள் உத்தரையை விவாகம் செய்துகொடுக்க விராடன் விரும்பினான். ஆனால் அருச்சுனனோ அதனை மறுத்து, தன்னால் நடனம், சங்கீதம் பயிற்றப்பட்டவள் தன் புதல்விக்குச் சமானமாகுமாதலால் அவளைத் தன்மகன் அபிமன்யுவுக்கு விவாகம் செய்துவைக்க இசைந்தான்.

இவ்வாறாகப் பஞ்சபாண்டவர் வனவாசத்தையும் அஞ்ஞாத வாசத்தையும் நிபந்தனைப்படி முறையாக முடித்துக்கொண்டு தாங்கள் வெளிப்பட்டிருத்தலை எங்கும் தெரிவித்தனர். மன்னர்களெல்லாம் பாண்டவர்களைக் காண விராடதேசம் வந்தனர்.

## 9. உலூகன் தூது

பாண்டவர்கள் நெறி தவறாதவர்கள். யாரும் அநுபவிக்காத கொடிய துன்பங்களைத் தருமத்தின் பெயரால் அநுபவித்துவிட்டு வந்திருக்கின்றனர். இந்த வீரர்களுடைய நாட்டை இனித் துரியோதனன் ஒருகணமேனும் வைத்திருக்கக்கூடாது. இதுவே நீதியும் தருமமுமாகும்'' என்று பாண்டவரைப் பார்க்க வந்த அரசர் பலரும் பேசினார்கள். வனவாசத்தில் பாண்டவர் அடைந்த இன்பத் துன்பங்களைப்பற்றி நெடுநேரம் பேசிவிட்டுக் கடைசியில் துரியோதனன் நாட்டினைக் கொடாவிடில் தங்களுக்குத் தெரியப்படுத்துமாறு கூறி விடைபெற்றுக்கொண்டு அவர்கள் தத்தம் நாடு சென்றனர்.

பஞ்சபாண்டவர்களையும் பாஞ்சாலியையும் பார்க்கப் பாரரசர் பலர் சென்றமையையும் அங்கு நிகழ்ந்த பேச்சுக்களையும் செவியுற்ற அரவக்கொடியோன் சீற்றம் கொண்டான். கானகத்திலேயே அவர்களைத் தொலைத்துவிடத் தான் செய்த சூழ்ச்சிகள் யாவும் பயனற்றுப் போயினவே என்று ஆறாத் துயரடைந்தான் இவ்வாறு சுயோதனன் மனங் கவன்றிருக்கையில் தருமனால் அனுப்பப்பட்ட தூதுவனாகிய உலூகன் என்னும் அந்தணன் அரச சபையை வந்தெய்தினன். துரியோதனன் உலூக முனிவனைத் தொழுது வணங்கி, அவன் வந்த செய்தியை வினவினான்.

''பாண்டவர்கள் உங்கள் நிபந்தனைப்படி வனவாசமும் அஞ்ஞாத வாசமும் குறைவற முடித்து மீண்டு வந்துள்ளனர். இனி நீ அவர்

களுடைய நாட்டைக் கொடுப்பதுவே தக்கது. அதற்குச் சூதுபோரோ அன்றி மோதுபோரோ எதுவேண்டுமென நீ கூறினால் அதனையும் அவர்கள் செய்யச் சித்தமாயிருக்கின்றனர். யுத்தக்களத்திலே படைகள் மோதிச் செய்யும் போர்தான் வேண்டுமென்று நீ விரும்பினால் அவர்களை வெல்லல் உன்னால் முடியாது. வீமனும் அருச்சுனனும் சினங்கொண்டு போர்க்களம் புகுவரேல் நீங்களனைவரும் மாண்டொழிவது திண்ணம். முனிவர்களின் சாபங்களும் உங்கள் முடிவுக்கு ஏதுவாயிருக்கின்றன. நீ நன்மையை விரும்பினால் அறத்தோடு கூடிய முடிவை நன்றாக ஆலோசித்துச் சொல்'' என்று உலூகமுனிவன் எடுத்தியம்பினான்.

உலூகன் பேசப் பேசத் துரியோதனனுக்குக் கோபம் அதிகரித்தது; கண்கள் சிவந்தன; கைகளை நெரித்தான். ''யாருடைய நாட்டை யார் கொடுப்பது? என் தந்தைக்குக் கண்ணொளி இல்லாமையால் அவருக்குரிய நாட்டை என் சிற்றப்பனான பாண்டு அரசாட்சி செய்தான். நாடு எங்களுடையது. ஏதோ வகையால் மீண்டும் எம்மிடமே வந்துவிட்டது. இதில் பாண்டவர்க்கு என்ன உரிமை? அதுவுமன்றிக் குறித்த தவணை கழியுமுன்னமே வெளிப்பட்டு விட்டான் அந்த அருச்சுனன்! ஆகையினால் அவர்களுக்கு இனி நாடு கிடையாது! காடுதான் அவர்களுக்கு இடம்'' என்று துரியோதனன் ஆவேசமாகப் பேசினான்.

விதுரர், துரோணர், கிருபர் முதலியோர் நீதியை எடுத்தியம்பினர். ''உறுதிமொழியைத் தவறிப் படைவலியை நம்பி அநீதி பேசுதல் தகாது. சத்தியந் தவறினார்க்குத் தரணியில்

பெருமை ஏது? தருமத்தால் நம்மைக் காப்பது; படைவலி அன்று'' என அவர்கள் கூறிய நல்வார்த்தைகளுள் ஒன்றேனும் துரியோதனன் செவியில் ஏறவில்லை.

குலத்தலைவரான வீடுமரும் திருதராஷ்டிரனைப் பார்த்துப் பேசினர். ''உன் புதல்வர்க்குச் சொன்ன காலமோ கழிந்துவிட்டது. திதி, வாரம், யோகம், கரணம், நக்ஷத்திரம் என்னும் பஞ்சாங்க உறுப்புக்களால் கணித்தறிந்தபடி, அருச்சுனன் ஆநிரை கவரவந்து, எப்பொழுது தன் காண்டீபத்தை வளைத்து 'டங்கார' நாதம் செய்தானோ அப்பொழுதே குறிப்பிட்ட காலம் முடிந்துவிட்டது. அறியாமையினுல் துரியோதனன் காலக் கணக்கை நீட்டி வைத்துக்கொண்டான். அந்த ஒப்பற்ற வீரரான அருச்சுனனுக்கு எதிராக வில்லெடுக்க இங்கு யார் இருக்கிறுர்கள்?'' என்று சொன்னுர்.

வீடுமர் அருச்சுனனைப் புகழ்ந்ததைக் கேட்ட கன்னன் எழுந்தான். ''நகமிழந்த கிழப்புலி போன்ற பரசுராமனை நீ அக்காலத்தில் அவனிடம் கற்ற வித்தையைக் கொண்டே வென்ருய்; வேறு என்ன ஆற்றல் உன்னிடம் உண்டு? நீ மற்றவர்களை எவ்வாறு இழிவாகப் பேசலாம்'' என்று அவன் வீடுமரை இகழ்ந்தான்.

வீடுமர் கடுஞ்சினம் கொண்டார். ''ஏ கன்னு, பாஞ்சாலி மாலை சூட்டியபோது அருச்சுனனோடு போர் செய்தாயே, அப்பொழுது வென்ருயா? துரியோதனனைக் கந்தருவர் பிடித்துக் கட்டிக் கொண்டு போகும்பொழுது உன் வில்லாண்மை என்ன ஆயிற்று? நேற்று ஆநிரை கவர, அறியாச் சிறுவனுன உத்தரனைத் தேரோட்டியாக்க

கொண்டு அந்த அருச்சுனன் வந்தபோது நீ போர்க்களத்தில் தானே இருந்தாய்? அப்போழு தெல்லாம் உன் ஆண்மை எங்கே ஓடி ஒழிந்தது? இனிக் கண்ணபிரான் தேரோட்ட அருச்சுனன் காண்டீபம் ஏந்தப் பாரதப் பெரும்போர் தொடங் கியபின் குருக்ஷேத்திரத்தில்தான் உன் வீரம் வெளிப்படுமோ? நன்று உன்வீரம்! உங்கள் ஆண்மையைச் சகுனி அறிந்தல்லவோ மாயச் சூதாடச் சூழ்ச்சி செய்தான். அவன் அளவிட்ட றிந்த உங்கள் வீரத்தை நான் அறியமாட்டேன் என்று எண்ணிக் கொண்டாய்?'' என்றிவ்வா றெல்லாம் வீடுமர் பேசப்பேசக் கன்னன் ஊமை யாகி வாளாவிருந்தான்.

இவற்றைத் துரியோதனன் கேட்டுக் கொண்டி ருந்தும் கடைசியில் கன்னனுடைய மொழிகளையே மதித்தான். 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'. துரியோதனன் மட்டும் இதற்கு விலக் காக முடியுமா? அவன் பாண்டவரிடமிருந்து தூது வந்த உலூகனை எள்ளி நகையாடினான். ''நாடு எங்களுடையது; காடுதான் அந்தப் பாண்டவர்க்குரியது. போ! போய் அவர்களிடம் இதனைத் தெரிவித்துவிடு!'' என்றான். உலூகனும் மீண்டு தருமனிடம் போய்த் துரியோதனனு டைய சபையில் நிகழ்ந்தவற்றை விவரமாக விளம்பினான்

உலூகன் சென்றபின் துரியோதனன் கன்னனை யும் வீடுமரையும் கோபமாறச் செய்தான். போர் செய்வது நிச்சயம் என்று அவன் தன்னுள் எண்ணிக்கொண்டு மேலே செய்யவேண்டியவற்றை ஆலோசித்துப் படைத்துணை கேட்பதற்காகக் கண்ணபிரானிடம் சென்றான்.

## 10. பார்த்தசாரதி

துரியோதனன் தன்னிடம் படைத்துணை கேட்க வருவதை அறிந்த கண்ணன், வாயில் காவலரை அழைத்து, ''அரவக்கொடியோன் வருவான்; வந்தவுடன் என்னைத் துயிலெழுப்பாது அவனை உள்ளே வர விடுங்கள்'' என்று கூறிப் பொய் யுறக்கம் பூண்டான். துவாரகையை அடைந்த துரியோதனனும் மாளிகைக்குட் சென்று கண்ண னின் தலைப்பக்கமாக இருந்த ஒரு சிறந்த ஆச னத்தில் செருக்குடனிருந்தான். சிறிது நேரஞ் செல்ல அருச்சுனனும் அங்கு வந்தடைந்தான். அவன் மாதவனின் முன்னே சென்று திருவடி களைச் சேவித்து நிற்க, விஜயனின் வரவை யுணர்ந்த பரந்தாமன் உறக்கம் நீங்கியவனைப் போலக் கண்விழித்து எழுந்து அருச்சுனன் தன் முன் நிற்பதைக் கண்டான். அருச்சுனன் துரி யோதனனும் வந்திருப்பதைக் கூறினான்.

உடனே கண்ணன் ஒன்றும் அறியாதவனைப் போலத் துரியோதனனைக் கட்டியணைத்து முகமன் கூறிப் பின்பு இருவரும் அங்கு வந்தடைந்த கார ணத்தை வினவினான். அவர்கள் தாம் படைத் துணை கேட்க வந்திருப்பதாகக் கூறினர். கிருஷ் ணன் அவர்களை நோக்கி, ''என் சேனை எல் லாம் ஒரு பக்கம் சேரட்டும்: நான் தனியே ஒரு பக்கம் நிற்கிறேன். சுயோதனா; நன்றாக யோசித் துச் சொல். உனக்கு என் சேனை முழுதும் வேண்டுமா? இல்லாவிடில் என்னைத் தனியாளாக வேண்டுமா?'' என்றான்.

கண்ணபிரான் இப்படிச் சொன்னதும் 'தனி ஒருவன் இந்தக் கண்ணன்; இவனால் நமக்கு என்ன ஆகப் போகிறது? இவனுடைய சேனை யென்றால் எனக்குப் போரிலே மிகுந்த பலமா யிருக்கும்' என்று துரியோதனன் எண்ணி அவ னுடைய யாதவசேனை முழுவதையும் தரும்படி கேட்டுப் பெற்றுக்கொண்டான். அவ்வளவோடு திருப்தியடையாமல், போரில் கண்ணபிரான் ஆயுதம் எடுத்துப் போர்செய்யக் கூடாதென்றும் வேண்டிக்கொண்டான். கண்ணன் அந்த வேண்டு கோளுக்கும் இசையவே, அரவக் கொடியோன் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தவனாய் விடை பெற்றுக்கொண்டு இன்னும் பலராமன் முதலிய அரசர்களிடமும் படைத்துணை கேட்கப் போயினன்.

"இந்த நிலையில் நான் உனக்கு என்ன உத வியைச் செய்யப்போகிறேன்" என்று மாதவன் பல்குனனைப் பார்த்துக் கேட்டான். "மாதவா நீ போர் செய்ய வேண்டா. ஆயுதத்தைக் கையி லெடுக்கவும் வேண்டா. எப்பொழுதும் எனக்கு முன்னே இருந்து என் தேரைச் செலுத்தினால் போதும்' என்று அருச்சுனன் கண்ணபிரானு டைய பாதங்களில் பணிந்தான். பக்குவமுள்ள ஆன்மா இறைவன் எந்த வடிவில் வந்தாலும் அதனை உணர்ந்து அதன் வழி நடக்குமென ஞானியர் கூறுவர். மற்றையோர் இச்செயலைக் கண்டு பரிகசிக்கவும் கூடும். கண்ணன் ஒரு சாதாரண மனிதன்; அல்லாமலும் அவன் ஆயுதம் எடுக்கவும் மாட்டான். அப்படியானவன் தனக்கு உதவியாகத் தேரைமட்டும் ஓட்டினால் போது

மென்று அருச்சுனன் வேண்டுவது மூடத்தனமா கத்தோன்றும். ஆனால் அருச்சுனன் தன் செயலை இறைவன் செயலாக எண்ணுபவன். துஷ்ட நிக்கிர சிஷ்ட பரிபாலனத்துக்காகப் பகவான் கொண்டுள்ள அவதாரமே இந்தக் கண்ணபர மாத்மா என்பதை அறிவாளியான அருச்சுனன் அறிந்துகொண்டான். ஆதலினாலன்றோ என்றும் தன்னைவிட்டு நீங்காது தன்முன்னே நின்று வழி காட்டும்படி பரந்தாமனை வேண்டினான்.

தறிகெட்டு ஓடும் பஞ்சப்புலன்களாகிய குதிரை களின் கடிவாளத்தை இறைவனுடைய கையிலே ஒப்படைத்துவிட்டால் நமக்குக் கவலையென்பதேது? திருமாலே பார்த்தனுக்குச் சாரதியான தத்துவக் கருத்தும் இதுவேயாகும்.

## 11. போரா? சமாதானமா?

இந்த ஆரவாரங்களையெல்லாம் திருதராஷ்டிரன் கேள்விப்பட்டு மனம் கலங்கினான். போர் தொடங்கி வீமன் தன் மக்களைக் கொன்றொழிப்பது திண்ணம் என்பதனை அவன் நன்கு அறிந்திருந்தான். ஆகையால் எப்படியாவது போர் நிகழவிடாமல் தடுக்க வேண்டுமென்று எண்ணினான். அதற்காகக் குலகுருவான சஞ்சயனை அழைத்துப் பாண்டவரிடம் தூது போகும்படி வேண்டினான். "நாட்டை ஆள்வதனால் என்ன நன்மை உண்டாகப்போகிறது? தவந்தான் சிறந்த பலனைக் கொடுக்கும். பாண்டவர்களுக்கு இன்னும் நாடாளும் ஆசையிருந்தால், அவர்களுக்கு அறிவுரை கூறித் தவத்தின்மேல் உறுதியான பற்றினை உண்டாக்குவாயாக" என்று திருதராஷ்டிரன் சஞ்சயனிடம் கூறினான். சஞ்சயனும் அதற்கிணங்கிப் பாண்டவர் இருக்குமிடம் சென்றான்.

பாண்டவர் சஞ்சய முனிவனைக் கண்டதும் அவனை வணங்கி உபசரித்துத் தம்மை நாடிவந்த காரணம் வினவினர்.

"நாடாளுதலில் மட்டுமன்றிக் காடாளுதலிலும் வல்லீரானீர்கள். உலகை ஆண்டு நீர் காணும் மகிழ்ச்சிதானென்ன? குருநாட்டில் உங்களுக்குரிய பங்கைத் தருவதற்கு அந்தத் துரியோதனன் ஒருப்படான். உங்களுக்கு நாடாள ஆசையிருந்தால் அவனுடன் போர் செய்தே உங்கள் ராஜ்யத்தைப் பெறவேண்டும். ஆகையினால் இந்த உலகப் பற்றை நீக்கி மேலான தவம் செய்து வீடுபேறடைய முயலுங்கள். அதுவே

நன்மை தரும்'' என்று சஞ்சயன் துறவறத்தின் பெருமைகளை எடுத்தியம்பினான்.

சஞ்சயனுடைய வார்த்தைகளைக் கேட்ட தருமன், அவன் திருதராஷ்டிரனால் அனுப்பப் பட்ட தூதுவன் என்பதை அறிந்து, ''முனிவரே! நீர் சொல்வது முற்றிலும் சரி. நும்மைப்போன்ற முனிவர்களுக்குச் செய்யும் உபதேசத்தையே எங்களுக்கும் கூறினீர். அரச குலத்திற் பிறந்த வர்கள் தமக்குரிய க்ஷத்திரிய தருமத்தை விட்டுத் துறவறத்தை மேற் கொள்வார்களா? துரியோ தனன் செய்த அநீதிகளெல்லாம் எங்கள் மனத்தை வாட்டுகின்றன. எமக்குரிய க்ஷத்திரிய தருமத்தில் நின்று பகைவர்களைக் கொன்று குவித்து அவர்களை எமலோகம் அனுப்பினால் அதன் பின் நீர் சொல்லிய துறவறத்திலும் எங்களுக்கு மனம் செல்லக்கூடும்'' என்று கனன்று பேசினான்.

''நின்னறத்தினி னீர்மைதன்னை விளங்குமாறு நிகழ்த்தினும்
மன்னறத்தினை விட்டுநல்லற மன்னரானவர் முயல்வரோ
என்னறத்தினி னின்று தெவ்வரையிரு விசும்பினி லேற்றினால்
பின்னறத்தினி னினைவு கூரும்''எனக்கனன்றிவை பேசினான்.

கோபித்தறியாத தருமபுத்திரன் இந்த இடத் தில் சினந்து பேசினான். உலகில் நீதி தவறாது வாழ வேண்டும்; ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்குரிய அறத்தில் நிற்கவேண்டும்; உலகப்பற்றுக்கள் படிப்படியாக நீங்கவேண்டும்; ஆசைகளை அடக்

குதல் கூடாது; அடக்கப்பட்ட ஆசைகள் உள்ள டங்கியிருந்து பின்பு வீறுகொண்டெழுந்து அழிவையே தரும். ஆதலால் உலக இன்பத் துன்பங்களை அறவழியில் நின்று அனுபவித்து ஆசை அடங்கப் பெறுதலே சிறந்த தவமாகும். தருமனுடைய கோபம் இந்தத் தத்துவ ஞானத்தை உலகினுக்கு அருளுகிறது.

தருமன் கூறியது போதாதென்று வீமன் எழுந்தான். ''நேற்றுப் போர் என்று சொல்லியனுப்பியவன் இன்று தவம், தருமம் என்று பேசுகிருன். மன்னர்கள் பேசும் பேச்சு இதுதானு? திருதராஷ்டிர மன்னனுக்கும் அவன் பக்கத்தாருக்கும் சித்தம் தடுமாறிவிட்டதோ? பெருமையற்ற பேச்சுக்களைப் பேசுகிருனே. பேய்கள் கூத்தாடும் போர்க்களத்தில், பகைவருடைய உடலிலிருந்து சொரியும் உதிர வெள்ளத்தில் அவர்கள் செய்த கொடிய வினைகளைக் கழுவுதலே எங்களுக்கு உயர்ந்த தவம். போர்க்களமாகிய வேள்விச் சாலையில் உலகச்சுமையான அந்த நூறுபசுக்களைக் கொன்று இந்தத் தருமன் கையினுலே நான் களவேள்வி செய்விப்பேன். கொடிய போர்க்களத்தில் என் கதாயுதம் செய்யப்போகும் இடியொலி உன் செவியிலும் விழும்'' என்று அடக்கிவைத்திருந்த ஆத்திரம் குமுறப் பேசினுன். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த கண்ணபிரான் அவனை மேலும் பேசவிடாது தடுத்து. ''மண்ணாளுதல் இவர்கள் தவம்; விண்ணாளுதல் அவர்கள் தவம். இவற்றை நாம் பேசிப் பயனென்ன?'' என்று சொல்லிச் சஞ்சயனை அனுப்பினுன்.

இருபக்கத்திலும் பகைமை இவ்வளவு முற்றி வந்தும் தருமன் இன்னும் பொறுமையாகவே விஷயத்தை ஆராயவிரும்பினுன். எல்லோரும் போனபின்பு தம்பியரையும் கண்ணனையும் வைத்துக்கொண்டு ஆலோசிக்கலானுன். "அவர்கள் போருக்கு உடன்பட்டாலும் பெரும்போரை உண்டாக்கி அதனுல் பேரழிவுக்கு நாம் காரணமாகுதல் தகுமோ? போரில் இருபக்கத்தார்க்கும் பெரிய அழிவன்றே ஏற்படப்போகிறது? பகையில்லாமல் இரு திறத்தாரும் பொருந்தி வாழ வகையில்லையா?" என்று தருமன் கண்ணபிரானைக் கேட்டான்.

"துரியோதனனுடன் இரண்டாம் முறை சூதாடி அவன் சொன்ன சொல் தவருமல் வெங்கானம் போய் மீண்டீர். இனி அந்த வெய்யோனுங்கள் குரு நிலத்தில் பாதி கொடாதிருந்தால் கொடிய போரில் அவனைக் கொன்று நாட்டைக் கைப்பற்றுவதே தக்கது" என்று கண்ணபிரான் கூறினுன்.

"ஐயோ! ஆசிரியர்களையும் உடன் பிறந்தவர்களையும் உற்ரு ருறவினரையும் கொன்று இந்த உலகை ஆளவேண்டுமா? இந்தக் கொடுமையிலும் பார்க்க வஞ்சமனத்துப் பெரிய தந்தை சஞ்சயனிடம் கூறியனுப்பியவாறு காட்டில் திரிந்து கந்தமூலபலாதிகளை உண்டு காலத்தைக் கழிப்பதுவே நல்லது" என்று தருமன் ஒருநிலையின்றி மனம் கலங்கினுன்.

கடமைக்கும் தருமத்துக்கும் நடுவில் நின்று கலங்கும் தருமனுடைய உள்ளத்தைத் தெளிவ

டையச் செய்ய வேண்டியது தம்முடைய கடமை யென்பதை அந்தக் கோவிந்தன் உணர்ந்தான்; " தருமனே குலதருமத்தையே மறந்துவிட்டாயா? பாவிகளுக்கு நாட்டைக் கொடுத்துவிட்டு நீ காடாளப்போவதென்றால் உன்குலாசாரம் என்ன வாகும்? உலகிலுள்ள மற்ற அரசர்கள் இகழ மாட்டார்களா? நீங்கள் செய்த சபதங்கள் எல்லாம் பொய்யாகலாமா? இதுதானே நீ கண்ட அறம்?" என்றான்.

தருமன் ஒருவாறு மனத்தெளிவடைந்தான். "கோபாலா! நீயே அந்தக் கொடியோனிடம் தூதாகச் சென்று எங்கள் பங்கைக் கேள். அவன் அதைத் தரமறுத்தால் ஐவருக்கும் ஐந்து கிராமங் களைக்கேள்; அதனையும் மறுத்தால் ஐந்து இல்லங் களாவது கேள். இல்லங்களும் இல்லையென்றால் அடுபோர்வேண்டு" என்று தருமன் தன் பொறு மைக்கு ஓர் எல்லை காட்டிப் பேசினான். கூட்டில் அடைத்து வைத்த சிங்கம்போல் இந்தப் பதின் மூன்று வருஷங்களும் குமுறிக் கொண்டிருந்த வீமன் தருமனுடைய பொறுமையைக் கண்டு பொங்கி எழுந்தான். "அந்தக் கசடன் துச்சா தனன் திரௌபதியின் கூந்தலைப் பிடித்திழுத்துத் துகிலுரிந்தபொழுது 'பொறு பொறு' என்று நமக்கும் நங்குலத்துக்குந் தீராத இழிவைத் தேடித் தந்தாய்! அந்த வஞ்சகர்கள் சொன்னபடி இத் துணைக்காலமும் காடுகளெல்லாம் அலைந்து திரிந்து அல்லற்பட்டு மீண்ட பின்பும் பொறுமையே பேசு கின்றாய்! அண்ணா! துரியோதனனின் கொடுமை யிலும் உன் கருணைக்கல்லவோ நாம் அஞ்சவேண்

டியவர்களாய் இருக்கின்ருேம்'' என்று தருமனைப் பார்த்துக் கூறினுன்.

எழுந்த கோபம் அடங்காமல் கண்ணனைப் பார்த்து, ''இந்தத் தருமன் போரை முடித்து விட்டான்; தம்பியரின் சபதங்களையும் நிறைவேற்றி விட்டான்; பெரிய கீர்த்தியையும் சம்பாதித்துக் கொண்டான்; ஆ! இத்தகையோனுடன் நானும் பிறந்தேனே! நெருங்கி வரும் போரிலே துரியோ தனனையும் அவன் தம்பியரையும் அடித்து நொருக்கி அமருலகேற்றி உரிமையோடு அரசா ளலாம் என்று எண்ணியிருந்தேனே! இன்னும் தூதனுப்பி யாசிக்கச் சொல்கிருனே இந்தத் தருமன்'' என்று கதறினுன் வீமன்.

தருமன் வீமனைச் சாந்தப்படுத்த முயன்ருன். ''தம்பி! பொறு; குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை; ஒரு குலத்திற் பிறந்தோர்கள் ஒற்றுமையாக வாழ்தல் சிறப்பில்லையா? அறியாமையால் அன்று சில சூளுரைகளைச் சொல்லிவிட்டோம். அவற்றை மறந்து நாம் ஒற்றுமையாக வாழ்தலே ''நன்று'' என்ருன். இதைக்கேட்ட வீமனுக்குக் கோபம் மேலும் அதிகரித்தது. அண்ணு! கேசவனைத் தூதனுப்பாதே; என்னை அனுப்பு; அவன் தன் மலரடி சிவக்கக் குருநாடு செல்லவேண்டா; பாஞ் சாலியின் சபதமும் என் சபதமும் வீணுகாமல் நானே போய் எல்லாம் முடித்துவருகிறேன்'' என்ருன்.

17

சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே
முனிவர்களுஞ் சுருதி நான்கும்
தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடுபெறத்
தூது செல்ல வேண்டா;
வாடுகின்ற மடப்பாவை தன்வரமு
மென்வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத்தூது
விடுகஇனிக் கொற்ற வேந்தே.

இப்படி வெகுண்ட வீமசேனனைக் கண்ணன் பரிந்து நோக்கி 'வீரனே! முன்பிறந்தோர் அரசநீதியை எடுத்துரைத்தால் அதனைப் பொருட் படுத்தாது மறுத்துரைப்பது முறையாகுமா? கோபந்தணிக'' என்று சொல்லிச் சாந்தப்படுத் தினன்.

அப்பொழுது அருச்சுனன் எழுந்தான். ''அண்ணு! பதின்மூன்று வருஷமாகப் பொறுத் தோம் அது போதாதா? இனியும் பொறுத் தால் பாஞ்சாலியின் கூந்தலை என்று முடிப்பது? தேவர்களாயினும் அசுரர்களாயினும் எதிர்த்தவர் உயிரைப்போக்க என்கையில் காண்டீபம் இருக் கிறது. நாம் ஏன் அந்தத் துரியோதனனிடம் போய் இரக்கவேண்டும்? திரௌபதியைத் துகிலு ரிந்தபொழுது அவள் யாருமற்ற அனதைபோலக் 'கோவிந்தா கோவிந்தா' என்று வாய்குழறிச் சோர்ந்தாளே! அதனைப் பார்த்துக்கொண்டிருந்த பாபம் நம்மைவிட்டுத் தீரவேண்டாமா? துரியோ தனன் எங்களுக்குரிய பங்கைத் தர ஒருபோதும் இசையான். பாம்புக்குப் பாலை ஊட்டி வளர்த் தாலும் அது நஞ்சையே கக்கும். அவனிடம் நீதியை எதிர்பார்த்தல் புத்தியாகாது'' என்று விநயமாகக் கூறி அமர்ந்தான்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த நகுலன் எழுந்தான். "கண்ணன் தூது போவதனுலும் ஒன்றும் ஆகப்போவதில்லை. துரியோதனனிடம் எங்கள் பங்கை இரந்தோம் என்ற பழிச்சொல்லுக்கே நாம் ஆளாவோம். பன்னீராண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் முடித்து வந்தவுடனே மறுபேச்சின்றி நமது பாகத்தைத் தர அவன் கடமைப்பட்டவன் தானே உணர்ந்து செய்யாத அந்த மூர்க்கனு இனி நாம் கேட்டுத் தரப்போகிருன். நான் ஒருவனே சென்று வெற்றி கொண்டு நமது பங்கை உரிமையோடு வீரத்தாற் கவர்ந்து வரக்கூடியவனுயிருக்க ஏன் இந்த நீண்ட ஆலோசனை" என்ருன்.

இவ்வாறு மற்றவர்கள் தத்தம் மனக்கருத்துக்களை எடுத்துச் சொல்லவும் சகதேவன் மட்டும் யாதும் சொல்லாமல் மௌனமாயிருந்தான். கண்ணபிரான் அவனை நோக்கி, "உன் உடன் பிறந்தோர் கூறியவற்றைக் கேட்டோம்; உன் மனக்கருத்தென்ன" என்ருர். சகதேவன் வயதால் இளையவனுயினும் அறிவினுல் முதிர்ந்தவன்; மகாஞானி; கண்ணன் திருமாலின் அவதாரமென்பதை நன்கு அறிந்தவன். அவன் எழுந்து எல்லோரையும் வணங்கி நின்று மொழிந்தான். "பூதனை என்ற இராக்ஷசியின் முலைப்பாலை அருந்துவதுபோல அவளுயிரை உண்டாய்! மருத மரத்தினிடையே ஒருரலையுருட்டிச் சென்று குபேரன் மக்களுக்குச் சாபவிமோசனம் நல்கினுய்! இப்படி எத்தனையோ திருவிளையாடல்களையெல்லாம் புரிந்து இடைச்சேரியில் வளர்ந்த மாயவனே!

உன் மாயையை உணரவல்லார் யாரிங்குளர்? உன் திருவுளக் கருத்து எதுவோ அதுவே என் கருத்தும்'' என்ருன்.

முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே!
அன்றலகை முலைப்பா லுண்டு
மருதிடைச்சென் றுயர்சகடம் விழ உதைத்துப்
பொதுவர்மனை வளர்ந்த மாலே
ஒருவருக்குந் தெரியாதிங் குன்மாயை
யானறிவே னுண்மை யாகத்
திருவுளத்துக் கருத்தெதுவோ அதுஎனக்குங்
கருத்தென்றன். தெய்வமன்னுன்.

இப்படி நால்வரும் கூறியபின்,

''தருமனே போர் வேண்டாம் என்று சொல்கிருன். நாம் ஒற்றுமையாக வாழ்தலே நல்லதென்று நானும் கருதுகிறேன்'' என்று கண்ண பிரான் தன் முடிவான அபிப்பிராயத்தைச் சொல்வதுபோல எல்லோர்க்கும் பொதுவில் மொழிந்தான். இதனைக் கேட்ட திரௌபதி அடியற்ற மரம்போல அவனுடைய மலர்ப்பாதங் களிலே விழுந்து வணங்கிக் கூறிஞள்.

''கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்
றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
அற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே''.

''அந்தச் சபையில் அனைவரும் காணும்படி என்னை இழுத்துக்கொண்டு போய்த் துகிலுரிந்த போதும் இந்த வீராதி வீரர்கள் கண் விழித்த

படியே இருந்தார்கள். இன்னும் அந்தக்கொடிய வர்களிடம் சென்று ஐந்து ஊர்களை யாசகமாகப் பெற்று வாழ்தல் முறையோ? அன்று விரித்த இந்தக் கூந்தலைப் பாவியேன் இனி என்றுதான் முடியப்போகிறேன்?'' என்று ஏங்கி ஏங்கிக் கதறினாள்.

அவளுடைய அழுகை எல்லோருடைய உள்ளங்களையும் தொட்டது. கண்ணபிரானே நிலை தளர்ந்துவிட்டார். ''பாண்டவர்க்குத் தூது போய் மீண்டதன்பின் உன் பைங்கூந்தலை நானே முடிகிறேனம்மா; நீ சிறிதும் கவலைப்படாதே! இந்தப் பாண்டவர்கள் உன் கவலையைத் தீர்க்காவிடினும் அபிமன்யு ஒருவனே பகைவர் குலத்தை அழித்து உன் கூந்தலை முடிக்க வல்லவனாயிருக்கும் போது நீ ஏன் கவலைப்படுகிறாய்?'' என்று சொல்லி அந்தப் 'பெண்ணீர்மை குன்றாப் பெருந் திருவின் கண்ணீர் துடைத்து' அவளுக்கு ஆறுதல்மொழி கூறி அத்தினாபுரம் புறப்பட்டார்.

## 12. பஞ்சவர்க்குத் தூதுசென்ற பரந்தாமன்

கண்ணன் மணித்தேரேறிப் பாண்டவர்க்குத் தூதுவனாய் அத்தினாபுரம் நோக்கிச் செல்கின்றான் என்பதனை அறிந்த மன்னரும் மக்களும் மனம் மகிழ்ந்தனர். அரவக்கொடியோனும் தன் நகரையும் சுற்றுப்புறங்களையும் அலங்கரித்துக் கண்ணபிரானை வரவேற்க ஒழுங்குகள் செய்யக் கட்டளையிட்டான். ஆனால் குடிகேடனாகிய சகுனி இதனை விரும்பவில்லை. அவன் துரியோதனனை அழைத்து ''அரசர்க்கரசனாகிய நீ எப்படி இடைக்குலத்தில் வாழ்ந்தவனை எதிர்சென்று உபசரிக்கலாம்? நின் பெருமைக்கும் தகுதிக்கும் இது ஏற்றதன்று; கண்ணனை நீ எதிர்கொள்வது சிறிதும் பொருந்தாது. இச்செயலை விட்டொழிக'' எனப் புத்தி புகட்டினான். துரியோதனனும் அவ்வாறே தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, ''அலங்காரமும் வேண்டா, ஆடம்பரமும் வேண்டா. அந்த மாயவனை என் சபையிலுள்ள யாருமே சென்று எதிர்கொள்ளவும் கூடாது'' என்று கட்டளையிட்டான். அவனுடைய அதிகாரத்துக்குப் பயந்த சிற்றரசர்களும் பயந்து ஒடுங்கி இருந்தனர்.

கண்ணபிரான் தமது நகருக்கு வருகின்றார் என்பதனை அறிந்த வீடுமன், விதுரன். துரோணர், அசுவத்தாமன் என்பவர்கள் நகர எல்லைக்கே சென்று அவனை எதிர்கொண்டு நல்வரவு கூறி வாழ்த்தினர். பரந்தாமனும் உளம்கனிந்து இன்சொற்பேசி அவர்களுடன் நகருட் பிரவேசித்து, மற்ற எல்லோர்க்கும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு விதுரன் மனையிற் சென்று தங்கினன்.

அங்குச் சென்றதும், ''என்னையும் ஒரு பொருளாகக் கருதி நீ எய்துதற்கு என்ன மாதவம் செய்தது இச்சிறுகுடில்! இன்றே நான் பிறவிப் பயனை எய்தியவனாவேன்'' என்று விதுரன் மன முருகி வாழ்த்தி, கண்ணனுக்கும் அவனுடன் வந்த பரிசனர்க்கும் நல்விருந்தளித்து உபசரித்தான். உண்டியும் உபசாரங்களும் முடிந்தபின் கண்ண பிரானும் விதுரனும் தனித்திருந்து அரசியல் விஷயங்களையும் அத்தினபுரியின் எதிர்காலத்தை யும், துரியோதனனுடைய கெடுமதியையும் அவ னுடைய தீய கூட்டத்தாரையும் பற்றிப் பேசி னார்கள்.

அறநெறி தெரியாத துரியோதனன் நாட்டை முறையாகப் பாண்டவர்க்குக் கொடுக்கமாட் டான். அவனுக்கு உபதேசம் செய்பவர்களோ துன்மார்க்கர்கள் போர்க்களத்தில் நன்றாகக் கலக் கினால்தான் அவனுக்கும் அவன் கூட்டத்தார்க்கும் அறிவு தெளியும்'' என்று விதுரன் கூறினான் துரியோதனன் நாடு கொடுக்கப் போவதில்லை யென்பதைத் தான் நன்கறிந்திருந்த போதிலும் சமாதானத்துக்கு வேண்டிய எல்லா முயற்சிகளை யும் செய்துவிடவேண்டும் என்பதற்காகவே நான் அங்குச் செல்வதாகக் கண்ணன் கூறினான். அன்றைய பொழுதை விதுரன் மாளிகையிலே கழித்துவிட்டு அடுத்தநாள் துரியோதனனுடைய சபைக்குக் கண்ணன் சென்றான்.

சுயோதனனுக்குப் பயந்த சிற்றரசரும் பிற ரும் கண்ணபிரானை உபசரிக்கவுமில்லை; எழுந்து மரியாதை செய்யவுமில்லை. துரியோதனனும் எழாமலே கண்ணனுக்குரிய ஆசனத்தைக் காட்டி

இருக்கச் செய்தான். அரவக்கொடியோனின் அறியாமையைக் கண்ட பெரியோர் மனம் கலங்கினர். கண்ணனும் தனக்குள்ளே நகைத்துக் கொண்டு தனக்கிடப்பட்ட ஆசனத்திலிருந்தான். "நேற்றைக்கே இந்நகர்க்கு நீ வந்தும் என்னிடம் ஏன் வராதொழிந்தனை? விதுரன் மனையிற் சென்று தங்கிய காரணம் என்ன?" என்று தன் முறையற்ற செய்கைக்குக் காரணம் கூறுவது போலத் துரியோதனன் கேட்டான்.

"துரியோதனா! என்வீடு உன்வீடு என்று நான் பார்ப்பதில்லையே; நீ வேறு நான் வேறு என்ற உணர்ச்சிதானும் எனக்கில்லை. விதுரன் நகரெல்லையிலேயே வந்து வரவேற்றான். அவனுடனே அவன் மாளிகைக்குச் சென்றேன். இதனை நீ ஏன் மாறுபாடாகக் கருதினாய்! அதுவுமன்றி நானோ இப்பொழுது தூதுவனாய் வந்திருக்கிறேன். பாண்டவர்கூறிய செய்திகள் உனக்கு ஒருவேளை வெறுப்பாகவும் இருக்கலாம், யார்க்குத் தூதாக வந்திருக்கிறேனோ அவர்கள் கூறியவற்றை ஒழிவு மறைவில்லாமல் எடுத்துச் சொல்ல வேண்டியது என் கடமையாகும். அப்படியிருக்க உன் வீட்டில் உணவும் உபசாரமும் பெற்றுப் பின் நீ வெறுக்கத்தக்கனவற்றைப் பேசுதல் நியாயமாகாது. அரசனுக்கு ஆக்கம் தருவனவற்றைச் சொல்லாது அவனுக்குக் கெடுதி கூறி அரசை அழிக்கும் அமைச்சரும், பெரியோர், தாய் தந்தையர் சொல்லை அவமதிப்போரும், செய்ந்நன்றி கொன்றோரும், ஒருவருடைய வீட்டில் உணவுண்டு பின் அவருடன் போர் செய்யக் கருதுவோரும் ஆகிய இவர்கள் சூரிய சந்திரருள்ளளவும் மீளா

நரகில் வீழ்வரென்று அறநூல்வல்லோர் கூறுவதை நீ அறியாயா? நான் உன் வீட்டில் வந்து தங்கவில்லையென்பதற்காக நீ மனம் வருந்த வேண்டா'' என்று கண்ணபிரான் சமாதானம் கூறினன்.

''இந்த மொழிகளைக் கேட்டதுரியோதனன் நகைத்து, ''அப்படியாயின் நன்று. நீ கொண்டு வந்த தூதுதான் என்ன? இந்தச் சபையோர் கேட்க அதனையும் சொல்'' என்றான்.

''உன் சகோதரர்களான பாண்டவர்கள் தாம் சூதினல் இழந்த அரசை மீண்டும் பெற விழைகின்றனர்; நின் சொற்படி காட்டிற்குச் சென்று சொல்லொணுத் துன்பங்களையெல்லாம் அநுபவித்துவிட்டு வந்திருக்கிறார்கள். உன் சொல் தவருமல் இனி அவர்களுக்குரிய அரசும் வாழ்வும் நல்மனத்துடன் கொடுத்து உன் சகோதரர்களோடு அன்பாக வாழ்வதே அறமாகும். பிற அரசர்களும் உன்னைப் போற்றுவர். நீ கொடுக்கமறுத்தால் உன் ஆண்மைக்கும் புகழுக்கும் இழுக்காகும். நன்ருக யோசித்து உன் முடிவைச் சொல்'' என்று கண்ணன் நீதியை இயம்பினன்.

தந்தைக்கோ இருண்ட விழி; தனயனுக்கோ அகமும் புறமும் இருள்; அகம்பாவம் அறிவை மறைக்கத் துரியோதனன் கொடுமொழி பேசலுற்ருன். ''சூதாடித் தம்உரிமையெல்லாம் தோற்றுப் போன பாண்டவர்க்கு நாடென்ன நாடு? அறம், நீதி என்று சூழ்ச்சியாகப் பல சொல்லி என்னை ஏமாற்ற எண்ணுகிருயா? மற்ற அரசர்கள்

என்னைப்பற்றி எதுவேண்டுமாயினும் பேசலாம். மறைவாகச் சிரிக்கலாம்; என் செவியில் விழாமல் இகழலாம். ஆனால், நான் ஓர் ஈ இருக்கும் இடந் தானும் பாண்டவர்க்குக் கொடுக்கமாட்டேன். அவர்கள் இனிமேலும் காட்டிலேயே வசிக்கவேண்டும்; இது உறுதி'' என்று துரியோதனன் முடிவாகக் கூறிவிட்டான். மக்களாய்ப் பிறந்தோர் நன்மை செய்தலும் தீமை செய்தலும் உண்டு. இவ்விரு குணங்களும் ஒவ்வொருவர் கண்ணேயும் உள. சிலர் நன்மை மிகுந்தும் தீமை குறைந்தும் இருப்பார்கள். சிலரிடத்தில் தீமை மிகுந்தும் நன்மை குறைந்துமிருக்கும். இந்த மிகுதிப் பாட்டினைக் கொண்டே மக்களை நல்லவர் கெட்டவர் என்று பெரியோர் பாகுபாடு செய்வர். ஆனால் இந்தத் துரியோதனனை எந்தவகையிலுமே சேர்க்க முடியாது.

மாயவன் எதனை எதிர்பார்த்தானோ அதனையே அரவக்கொடியோன் கூறினான். அதனால் அவன் ஆச்சரியப்படவில்லை. ஆயினும் துரியோதனனுடைய உள்ளக்கிடக்கையை மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்ட விரும்பி மேலும் பேசினான். ''துரியோதனா! அரசகுலத்துக்கே அடாத சொற் சொல்லாதே; அவர்களுக்கு உரிமையான நாடு முழுவதையும் நீ கொடுக்க மனமிசையாவிடில் அதில் பாதியாவது கொடு. அதுவும் உனக்கு விருப்பமில்லையானால் அவர்களுக்கு ஐந்து ஊர்களாவது கொடு'' என்றான். கண்ணன் இப்படி இறங்கி இறங்கி வருதலைக் கண்டதும் துரியோதனன் விலாப்புடைக்கச் சிரித்து, ''கண்ணா! காட்டில் அலைந்து களைத்தவர்களுக்கு ஐந்து ஊர் எதற்கு?

ஐந்து வீடு கொடுத்தாலும் வேண்டாமென்று மறுப்பார்களா? என்னிடமிருந்து எதனையும் பெற லாமென்ற எண்ணத்தை இன்னுமா வைத்திருக் கிறாய்?'' என்று ஏளனமாகக் கூறினான்.

அக்காலத்தில் தூது செல்பவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தோராயிருப்பர். எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் கலங்காமல் நின்று உறுதி யுரைக்கும் வலிமை வாய்ந்தவர்கள். அப்படி யிருக்கும்போது கண்ணன் விட்டுக்கொடுப்பானா? துரியோதனன் சொன்ன இழிமொழிகளைப் பொறுத்துக்கொண்டு மீண்டும் உறுதியே உரைத் தான். ''அரவக்கொடியோனே! உன் குலம் பெருமை வாய்ந்த குலம்! தன் தந்தையின் காத லுக்காகத் தன் சிற்றன்னையின் வயிற்றிற் பிறந்த தம்பிக்கு அரசும் வாழ்வும் நல்கி, 'சகல சுகங் களையும் துறந்த உத்தமன் இன்னும் உங்கள் மத்தியில்—இந்தச் சபையிலேயே வீற்றிருக்கின் றான். இப்படிச் சிறந்த குலத்தில் தோன்றிய நீ உன் குலப்பெருமையைக் காப்பதற்காயினும் நாடு முழுவதற்கும் உரிமையுடைய அப்பாண்டவர்க்கு ஐந்து ஊர்களையேனும் கொடுத்து உன் புகழை நிலைநிறுத்திக்கொள்'' என்று நீதியை எடுத்தியம் பினான். கண்ணன் உரைத்த இந்த மாற்றத்தைக் கேட்ட துரியோதனன் கனன்றான். கண்களில் தீயெழுந்தது. இந்த நிலவுலகம் ஆண்மையுடை யோர்க்கே உரியது. இதற்காக வீண் பேச்சுப் பேசி ஆவதென்ன?'' என்று வெகுண்டுரைத்தான்.

இனிமேல் துரியோதனன் அறநெறியைக் கடைப்பிடிக்கமாட்டான் என்பதனை உணர்ந்த

கண்ணபிரான், ''தருமனுடைய கடைசி முடி வையும் தெரிவித்துவிடுகிறேன்.'' நேர்மையான வழியொன்றுக்கும் நீ இசையாவிடில் அந்தப் பாண்டவர் உன்னேடு போர்செய்து தம் உரிமை யைப்பெற விரும்புகிருர்கள். முடிவாகச்சொல். போருக்கு நீ உடன்பட்டால் இதோ என்கையில் சத்தியம் செய்துதா'' என்று கேட்டான். இந்தச் சொற்கள் காதில் விழுந்ததும் அடிபட்ட வேங் கையெனச் சீறினன் துரியோதனன். ''அரசர்க்கர சனை என்னை இடைக்குலத்துப் பிறந்த நீயா கையில் சத்தியம் செய்யும்படி கேட்டாய்! மாடு மேய்ப்பவனை நீ, என் குலப் பெருமையையும் பாராமல் அரசர்க்குச் சமமாக இருந்து பேசவந் தனையா? பாண்டவர் போருக்கு வந்தால் நான் சும்மா இருந்துவிடுவேனு? சொந்த மனைவியைத் துகிலுரிந்தபோது பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பேடிகள் போர் செய்யப் போகிருர்களாம்! அதற் குத் தூது வந்தானும் இந்த இடையன்'' என்று கூறி இன்னும் பேசத்தகாதன பல பேசிப் பாண் டவரையும் பாண்டவர்க்குத் தூதுசென்ற பரந் தாமனையும் பழித்துரைத்துச் சபையோர் நடுங்கும் படியான வார்த்தைகளைப் பேசினன். ''பாண்ட வர்கள் எண்ணம் பலித்தது. அவர்கள் செய்த சபதங்களும் நிறைவேறுகின்றன'' என்று தம் மனத் திலெண்ணி மகிழ்ந்துகொண்டே கண்ணபிரான் சபையைவிட்டு நீங்கி விதுரன் மாளிகைக்குச் சென்ருன்.

கேசவன் சபையினின்றும் நீங்கியதும் துரியோ தனனுடைய கோபமெல்லாம் விதுரன்பால் திரும்பியது. அத்தினபுரியில் அவனை வரவேற்று

உபசரித்தது விதுரன் ஒருவனேயன்றே! கண்ணனையே இகழ்ந்த வாய் விதுரனைச் சும்மா விடுமா? அறவழி ஒழுகுபவன், மகாஞானி, சிறந்த கல்விமான், தன்சிற்றப்பன் என்பவற்றையெல்லாம்பாராமல், தன் செல்வச் செருக்கினுல் விதுரனைப் பலவாருக நிந்திக்கத் தொடங்கினன். '' இந்த விதுரன் என் ஆதரவில் நான் கொடுத்த செல்வத்தை அநுபவித்துக் கொண்டிருந்தும் என் பகைவர்க்கும் அவர்க்குத் தூது வந்த இடையனுக்கும் பரிவு காட்டுகிருனே. என் தந்தையோடு கூடப்பிறந்தும் எனது அரசைப் பறித்து அவர்களுக்குக் கொடுக்கப் பார்க்கிருன். இவனுக்கு உண்டியும் உறையுளும் இங்கே; மனக்கருத்தெல்லாம் அங்கே. எனது உணவை உண்டும் எனக்கு நன்றியற்றவனுக நடக்கிருன். தாசிவயிற்றில் பிறந்த குணத்தை வெளியாகக் காட்டுகின்ருன்'' என்று விதுரன் பணிப்பெண் வயிற்றிற் பிறந்தவனென்பதைத் திரித்துக் கூறி இழிவாகப் பேசினுன்.

வில்லாண்மையில் நிகரற்ற விதுரன் வெகுண்டெழுந்தான். தன் வில்லைப் படீரென்று முறித்தெறிந்துவிட்டு ஆவேசமாகப் பேசினன். '' தாசிமகனென்று ஏசிய உன் வாயைக்கிழித்துத் தலையையும் துணித்து விடுவேன். ஆனுல் குருகுலத்தில் வந்தோனெருவன் தன் மைந்தனைக் கொன்ருனே என்று தேவரும் பழிப்பர். இதற்காக உன்னை உயிரோடு விடுகிறேன். நான் என் படைகளோடு சென்று பாண்டவர்க்காகப் போர் செய்தாலும் என்னைத் தடுப்பவர் யார்? நீதியையும் தருமத்தையும் எடுத்துச் சொன்னுல் உனக்குக் கசப்பாயிருக்கிறது, மதிப்பில்லாமல் இப்படியெல்லாம்

நிந்திக்கும் உன்னேடிருந்து போர் செய்யமாட்டேன். நீ எப்படியாவது கெட்டொழிந்துபோ'' என்று ஏசித் தன் கையிலிருந்த வில்லேயும் துரியோதனன் முன்னே வீசிவிட்டுச் சபையை விட்டகன்ருன்.

விதுரன் வில் முறித்ததைக் கண்ட சபையோர் நடுங்கினர். நாசம் வந்துற்றபோது நண்பரும் பகைவராவர். வீடுமர் எழுந்து, ''துரியோதன! விதுரனே யாரென்று எண்ணிஞய்? வில்லுக்கு வீரன். அறத்தின் தெய்வம். அவன் பகையைத் தேடிக்கொண்ட நீ எங்ஙனம் உய்யப் போகின்ருய். இப்பூமி முழுவதும் ஐவரே ஆள வழிசெய்துவிட்டாய் உன் புகழும் அழிந்தது'' என்று தன் உள்ளத்தில் தோன்றியதை மறையாது பேசினர்.

''இந்த விதுரன் என்னே என்ன செய்ய முடியும்? கன்னன், துரோணர், அசுவத்தாமன் எல்லாம் என்பக்கத்திலிருக்க விதுரனுடைய வில்லாண்மைதான் பெரிதோ? இடையனுக்கு விருந்திட்ட விதுரன் வெறுத்தாலென்ன? பாண்டவர் பக்கம் சேர்ந்தாலுமென்ன? நம்மை யார் எதிர்க்க வல்லார்?'' என்று துரியோதனன் இறுமாப்போடு பேசினன். கன்னனும் தற்புகழ்ச்சியையே பேசினன் ''அருச்சுனனேக் கொன்று வெற்றியீட்டித்தர நான் இருக்கிறேன். கண்ணன் தேரோட்டினுலென்ன, தேவர்களே எதிர்த்து வந்தாலென்ன, ஒரே பாணத்தினுல் நான் அவனே ஒழித்து ஒழிப்பேன்'' என்று துரியோதனன் மகிழப்பேசினன். கன்னனுடைய ஆணவத்தைக் கண்ட வீடுமர் நகைத்து, அசுரர்களைக் கொன்று இந்திரனுக்குத் தேவருலக ஆட்சியை நிலேநிறுத்தி

விட்டுவந்த அருச்சுனனோடு உன்னை ஒப்பிடும் போது நீ வில்வித்தை கற்றவனென்றுவது கூற முடியுமா?'' என்றார்.

''இந்தத் துரியோதனனுடைய சோற்றை உண்டு வாழும் நீயா இப்படிப் பேசுவது? பகைவருடைய சிறப்பையே பேசும் உன் போன்றவர்களை என்னென்பது?'' என்று கன்னன் வீடுமரை இகழ்ந்தான். 'இவனோடு வீண்வார்த்தை பேசுவதிற் பயனில்லை போர் நிகழும்போது பார்ப்போம் இவன் பேச்சை'' என்று வீடுமரும் எண்ணிக் கொண்டு சபையை விட்டு வெளியேறினார். சபையும் பலவாறாகப் பேசிக்கொண்டு கலைந்தது.

வில்லை முறித்துவிட்டு வந்த விதுரனைக் கண்ட கண்ணபிரான் அதற்குக் காரணம் கேட்டார்.

''கண்ணா! அரசனாக இருப்பவன் செய்ய வேண்டியவற்றைத் தானாகவே ஆலோசித்தறியும் திறமையுள்ளவனாக இருக்கவேண்டும். நல்லமைச்சர் கூறும் யோசனையைக் கேட்கவேண்டும்; தனக்கும் தன் பக்கத்தார்க்கும் உண்டாகப் போகும் அழிவுகளை எண்ணிப்பார்க்க வேண்டும். பின் வரும் விளைவுகளைத் தீர ஆலோசிக்கும் திறனுடையவனாயிருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் நாவடக்கம் உள்ளவனாயிருக்க வேண்டும். இத்தன்மைகள் அற்றவனை அரசனென்றுகொண்டு அவனுக்காகப் போர் செய்து மடிந்துபோவது வீண் என்றல்லவோ பெரியோர் கூறுகின்றனர். ஒருவருக்குச் செல்வம் வந்து சேர்ந்தால் அதனைக் கொடுத்த தெய்வத்தையே மறந்து நாஸ்திகம் பேசவும் தலைப்பட்டுவிடுகிறார்கள்.

அவர்களுடைய பேச்சில் பணிவு இருப்பதில்லை. 'இவர் நம் சுற்றத்தார், இவர் நம் நண்பர்' என்ற கண்ணோட்டமே அற்றுப் போய்விடுகிறது. எப்பொழுதும் தாம் வெற்றியடைய வேண்டுமென்று எண்ணுகிறார்களேயன்றித் தம் பகைவரின் வலிமையையும் பொருட்படுத்துகிறார்களில்லை. தாம் செய்யும் நல்வினை தீவினைகளின் பயனைத் தாமே அநுபவிக்கவேண்டுமென்ற சிந்தனையே இல்லாமல் நினைத்தபடி நடக்கிறார்களே!'' என்று விதுரன் கூறினான்.

செல்வம் வந்துற்றகாலை தெய்வமும் சிறிதுபேணார்
சொல்வன அறிந்து சொல்லார் சுற்றமுந்துணையு நோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்.

விதுரன் இப்படிக் கூறக்கேட்ட கண்ணன் சபையில் நடந்தவற்றை அறிந்து விதுரனை ஆறுதலடையச் செய்தான். விதுரனே! நின்வில் துரியோதனனுக்குப் பயன்படவில்லையானால் உனது அன்புக்குரிய பாண்டவர்களுக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும். உனது நேர்மையையும் சக்தியையும் உணராத அந்த மூர்க்கன் தன் வாயாலேயே தனக்கு அழிவைத் தேடிக்கொண்டான்; அந்த அறிவிலி பேசியவற்றை மனத்திற் கொள்ளாது மறந்துவிடு'' என்று கூறிக் குந்தி தேவியிடம் சென்றான்.

பதின்மூன்று வருஷமாகத் தன் மக்களைக் காணாமல் இருந்த குந்தி இப்பொழுது கண்ணபிரானைக் கண்டதும் தன்புதல்வர்களையே கண்டாற்போல அகமகிழ்ந்தாள். சூதினால் இழந்த நாட்டைக் கேட்பதற்காகவே தான் அங்குத் தூதுவனாய் வந்தமையைக் கண்ணன் சொல்லிச், சுயோதனனுடைய சபையில் நிகழ்ந்தனவற்றையும் அவ

ளுக்கு விபரமாகக் கூறினன். ''போரில் யார் வெல்வார்களோ யார் தோற்பார்களோ' என்று குந்திதேவி வருந்தினள். அப்பொழுது கண்ண பிரான் அவளைத் தேற்றத் திருவுளம் கொண்டு பேசலானர்;

''வீரத்தாயானவள் எதற்காகப் பிள்ளைகளைப் பெறுகிருளோ அதற்குரிய காலம் வந்துவிட்டது. உயிர் கொடுத்தேனும் நீதியைக் காப்பது அரசர் கடன். உன் மக்களும் மகாவீரர்கள். நீதி திறம் பாத உத்தமர்கள். அவர்கள் தங்கள் கடமை யைச் செய்வதில் நீ பெருமை கொள்ள வேண்டு மேயொழியத் துக்கப்படலாகாது. இப்பொழுது நீ செய்யவேண்டியதும் ஒன்றுண்டு. உன் உள் ளத்தைத் திடப்படுத்திக்கொண்டு கேள்; கேட்ட பின் ஆகவேண்டியதைச் செய். துரியோதனனுக் குப் பக்கபலமாக நிற்கும் கன்னன் யார் தெரியுமா? அவன் தேரோட்டியின் மகனல்லன். உலகத்துக்கெல் லாம் கண்கண்ட தெய்வமாக விளங்கும் சூரியதேவ னின்புத்திரன். உன் வயிற்றில் நீ கன்னிகையா யிருக்கும்போது தோன்றிப் பின் உன்னல் பேழை யில் வைத்து ஆற்றில் விடப்பட்டவன் அவனே தான்''. கண்ணபிரான் இவ்வாறு கூறக்கேட்ட குந்தியை வியப்பு ஒரு புறமாகவும் வெட்கம் மற் ருெரு புறமாகவும் அலைத்தன. ''மாயவனே! இது என்ன விபரீதம்? சகோதரர்களுக்குள்ளேயே சண் டையை மூட்டிவிட்டாயே! எல்லாம் அறிந்த நீ இப்படிச் செய்யலாமா?'' என்று தவித்தாள்.

''நான் சண்டையை மூட்டிவிட்டேனு? இது ஊழ்வலி தாயே! என்னை எதற்குக் குற்றம் கூறு கிருய்? இப்பொழுது செய்யக்கூடியது ஒன்றே

ஒன்றுதான் உளது. நீ ஐந்து பிள்ளைகளும் இறந்து போவதை விரும்புகிறாயா? அல்லது ஒருவன் மட்டும் இறப்பதை விரும்புகிறாயா? ஐவருள் ஒருவர் இறந்தாலும் ஐவருமே மாண்டொழிவர். ஆகையினால் உடனே நீ கன்னனிடம் சென்று நீதான் அவனைப் பெற்ற தாய் என்பதனை நிருபித்துப் பாண்டவர்களோடு சேருமாறு கேள். மறுத்தானாகில் அருச்சுனனோடு போர் செய்யும் போது நாகாஸ்திரத்தை ஒருமுறைக்கு மேல் செலுத்துவதில்லையென்ற உறுதியையேனும் பெற்றுவா'' என்று கூறிக் கண்ணபிரான் விதுரனுடைய மாளிகைக்கு மீண்டார்.

இஃதிவ்வாறிருக்கத் துரியோதனனுடைய சபையிலே கண்ணபிரானை எப்படியாவது ஒழித்துவிடவேண்டுமென்று சூழ்ச்சி செய்தனர். கண்ணில்லாதவனான திருதராஷ்டிரனே கண்ணபிரானை இரவிலே சென்று கொன்றுவிடவேண்டுமென்று யோசனை கூறினானென்றால் அதர்மம் எவ்வளவு முற்றிவிட்டதென்பது தெளிவாகின்றதன்றோ? இந்தத் தீயோர் சபையிலும் விகர்ணன் மாத்திரம் நீதி பேசினான். இவன் துரியோதனனுக்குத் தம்பியாய்ப் பிறந்தாலும் அறந் திறம்பாத பண்பு வாய்ந்தவன். ''தூதரைக் கொன்றவர் யார்? இந்த எண்ணம் உங்களுக்கு எப்படி உண்டாயிற்று? மூப்புடையவர், இளையவர், நோய் வாய்ப்பட்டோர், வணங்கிப் போற்றத் தகுந்தவர், மாதர், தூதர் என்றின்னோரைக் கொல்லச் சூழ்ச்சி செய்வது அரச நீதியாகுமா? சத்தியம் தவறாத குடியிற் பிறந்த உங்களுக்குமா இந்த எண்ணம் உதித்தது?'' என்று அவன் கூறினான். ஆனால் அவனுடைய பேச்சை யாரும்

பொருட்படுத்தவில்லை. துச்சாதனன், கன்னன் முதலியவர்களும் அந்த மாயவனை இரவிலே வளைத்துப் போர்செய்து கொல்லவேண்டுமென ஆலோசித்தனர். ஆனால் சூதிலும் சூழ்ச்சியிலும் வல்ல சகுனியின் ஆலோசனையையே எல்லோரும் முடிவில் ஒப்புக் கொண்டனர். சகுனியின் ஆலோசனைப்படி பொழுது புலருமுன்பே ஒரு குழி தோண்டி அதற்குள் பல மல்லர்களை இருத்தி அதன் மேல் அழகிய ஒரு ஆசனமிட்டு வைத்துக்கொண்டு அடுத்த நாள் கண்ணபிரானை அழைத்துவர ஆட்களை அனுப்பினர். கண்ணனும் அழைப்பை ஏற்றுக்கொண்டு சுயோதனனுடைய அரண்மனைக் குச் சென்றான். முன்னேற்பாட்டின்படி கண் ணனை மட்டும் உள்ளே செல்லவிட்டு அவனுடன் சென்றோரை உள்ளே செல்லவிடாது தடுத்தனர். இதனை உணர்ந்த மாயவனும் ஏதோ வஞ்சனை உண்டென்பதை அறிந்துகொண்டும் உட்சென்றான். திருதராஷ்டிரர், வீடுமர் முதலியவர் சூழத் தேவேந்திரன் போலக் கொலுவீற்றிருந்த சுயோ தனன் கண்ணனைக் கண்டதும் வரவேற்று ஆசனத்திலமரும்படி வேண்டினான்.

கண்ணன் ஆசனத்தில் அமர்ந்ததுதான் தாமதம். அவ்விடமும் ஆசனமும் இடிந்து முறிந்து சரிந்தன. சூழ்ச்சியின் தன்மையையுணர்ந்த கண்ணன் அகில மெல்லாம் கவர்ந்தெழுந்த பேருருக்கொண்டான். துருவாசர் பசிதீர்த்த மாதவனை, திரௌபதிக்கு மாளாத் துகிலளித்த தூயவனை, அண்டசராசரங் களைத் தன்னுதரத்தில் அடக்கிவைத்த திருமாலை இந்த அறிவிலியான அரவக் கொடியோனின்

சூழ்ச்சி என்ன செய்யும்? கண்ணபிரானின் நெடிய தோற்றத்தைக் கண்டு எல்லோருமே நடுங்கினர். கண்ணில்லாத திருதராஷ்டிரன் கூட அந்த உலகளந்த தோற்றத்தைக் கண்டான் என்று வியாச பகவான் கூறுகிறார்.

"மாதவனே முனியேல் எமையாளுடை
வானவனே முனியேல்
யாதவனே முனியேல் இதயத்
திலிருப்பவனே முனியேல்
ஆதவனே முனியேல் மதிவெங்கனல்
ஆனவனே முனியேல்
நீதவனே முனியேல் முனியேல்என
நின்று பணிந்தனரே"

உலகமுற்றும் இவ்வாறு அஞ்சி நடுங்குதலைக் கண்ட மாதவன் தன் பெருவடிவத்தைச் சுருக்கிக் கொண்டான். யாவரும் கண்ணபிரான் எடுத்த பேருருவைக் கண்டு அஞ்சிப் போற்றியும் துரியோதனனின் மனநிலை மாறவில்லை. "துரியோதனா! உன்னையும் உன்குலத்தையும் அழிக்க வேண்டுமென நான் நினைத்தாலே நீ நிர்மூலமாகிவிடுவாய். ஆனால் உன்னோடு போர் செய்வதில்லை என்று உனக்கு உறுதிமொழி தந்திருக்கிறேன். அதனாலும், பாண்டவர் கூறிய வஞ்சினம் பொய்க்கக்கூடாது என்பதற்காகவும் இப்பொழுது உன்னை விட்டிருக்கிறேன். உனக்கு முடிவு மிகவிரைவில் உள்ளது" என்று கூறிவிட்டுக் கண்ணபிரான் சபையைவிட்டு வெளியேறினான். பல மன்னர்கள் அவனுடன் பின்சென்றனர். கன்னனும் கூடச் சென்றான். மற்றவர்களை அனுப்பிவிட்டுக் கன்னனை

மட்டும் சிறிது தூரம் அழைத்துச் சென்று அவனுடைய பிறப்பின் இரகசியத்தை எடுத்துரைத்து அவனைப் பாண்டவர் பக்கம் சேரும்படி கூறினான். உண்மையை உணர்ந்த கன்னன் ஆச்சரியத்தால் அதிர்ந்துபோனான்; மாயவனைப் போற்றினான். ஆனால் பாண்டவர் பக்கம் சேர மறுத்துவிட்டான். துரியோதனனால் நாடும் சீரும் பேரும் புகழும் பெற்றுப் பின்னை அவனுக்கு ஒன்றுற்றகாலத்தில் விட்டு விலகுதல் முறையன்று என்றான். கன்னனின் உத்தம குணத்தைப் பாராட்டி அனுப்பிவிட்டு அசுவத்தாமனுடன் பேசிக்கொண்டு வழிநடந்தான். ஏதோ பேச்சில் கவனத்திலிருப்பவன் போலத் தன் கணையாழியைக் கண்ணன் கீழே நெகிழவிட்டான். அசுவத்தாமன் அதனை எடுத்துக் கண்ணபிரானிடம் கொடுக்கும்போது கண்ணன் ''ஆகாயத்தில் சூரியனைப் பரிவட்டம் சூழ்ந்திருக்கிறது பார்'' என்றான். அசுவத்தாமன் அண்ணாந்து பார்க்கும் போது கண்ணன் தன் கணையாழியைப் பெற்றுக் கொண்டான். அசுவத்தாமனுக்கு இந்தப்பேச்சிலும் செய்கையிலும் எள்ளளவும் ஐயம் தோன்றவில்லை. ஆனால் தூரத்திலிருந்து பாாத்துக்கொண்டிருந்த துரியோதனனுக்கும் அவன் சகாக்களுக்கும் இச் செய்கை விபரீதமாகப்பட்டது. ''ஓகோ! அசுவத்தாமன் கண்ணனுக்கு ஏதோ சத்தியம் செய்து கொடுக்கிறான். பூமியையும் சூரியனையும் சாட்சியாக வைத்துக்கையடித்துச் சத்தியம் செய்கிறான். இவனை இனிமேல் ஒன்றுக்கும் நம்பக்கூடாது'' என்று அவர்கள் தமக்குள்ளே தீர்மானித்துக்கொண்டனர். இப்படியாகக் கண்ணன் அத்தினபுரியில் பல உபாயங்களைக் கையாண்டான் கன்னனின் பிறப்பினது இரகசியத்தை உணர்த்தினான். அசுவத்தாமனிடம் நம்பிக்கையிழக்கச் செய்தான். இனி,

கன்னனிடமுள்ள கவசகுண்டலங்களையும் அகற்ற எண்ணினான். கன்னனோடு கூடத் தோன்றிய இந்த அற்புதமான கவசகுண்டலங்கள் அவனோடு இருக்கும்வரை அவனை யாரும் அழிக்கமுடியாது. கன்னனும் உயிரோடிருந்தால் போரில் துரியோதனாதியரை வெல்வதும் முடியாது. கழனிகளில் நெல்லை வளரச் செய்வதற்கு அங்கு முளைக்கும் புல்லைக் களைவார்கள். இந்தக் களையோடு சில நெற்பயிரும் அழிவது இயற்கை. அதுபோலவே பாரதப்போரில் தர்மவான்களும் நல்லவர்களும் வீரர்களும் ஒரு சிலர் அழிய நேரிடுகிறது. இதை மனிதருடைய செயலாகக் கூறாமல் பகவானின் அவதாரமான கண்ணபிரான் மேல் ஆசிரியர் சுமத்திச் செல்வதை நாம் அவதானித்தல் வேண்டும். கன்னனிடமிருந்து கவசகுண்டலங்களை வாங்க வேண்டுமென்று பரந்தாமன் இந்திரனிடம் கூறினான். இந்திரனும் மறையவனுருக்கொண்டு கன்னனிடம் சென்று யாசித்தான. கதிரவனே அசரீரியாக நின்று தடுத்தும் கேளாமல் கன்னன் தன கவசகுண்டலங்களை அந்த மறையவனுருவில் வந்த இந்திரனுக்கு அளித்தான். இந்திரனும் மனமகிழ்ந்து வெளிப்பட்டுக் கடோற்கசனை அழிக்கக்கூடிய வேற்படையொன்றைக் கொடுத்து மறைந்தான்.

முன்னே பரந்தாமனால் ஏவப்பட்ட குந்திதேவியும் கன்னனைக் காணச் சென்றாள். அவன் இன்னாரென்பதை உணர்த்தி அவனைப் பாண்டவர் பக்கம் சேருமாறு வேண்டினாள்.

"பெற்றெடுத்தும் என்னை வளர்க்காமல் ஆற்றில் விட்டாய்; புகழ்பெற்ற குந்திதேவியின் வயிற்றில் தெய்விகமாகப் பிறந்தும் தேரோட்டியின் மகனாகவே, நான் வளர்ந்தேன். அந்தத்

துரியோதனனல்லவா என்னைப் பெருமைப்படுத்தினன்; அங்கதேசத்து அரசையும் தந்து பேரும் புகழும் பெறச்செய்தான். என்மேல் அவன் வைத்துள்ள கருணைக்கும் உறுதியான நம்பிக்கைக்கும் அவனைக் கடைசி நேரத்தில் நான் கைவிட்டு வருதல் முறையா? 'செருமுனைச் சென்று செஞ்சோற்றுக்கடன் கழிப்பதுவே எனக்கினிப் புகழும் கருமமும் தருமமும் ஆகும். தாயே! இதனை மட்டும் கேளாதே. வேறெது வேண்டுமோ கேள்'' என்று கன்னன் கூறினன். தன் வயிற்றில் உதித்த கன்னன் நன்றிப் பெருக்கால் சொன்ன மொழிகளைக் கேட்டுக் குந்தி நெக்குருகினள். ஆனல் போரை எண்ணும்போது அவளுக்கு அடக்கமுடியாத துக்கமே மேலிட்டது. கடைசியாக அவள், நாகாஸ்திரத்தை அருச்சுனன் மீது ஒருமுறைக்குமேல் பிரயோகிப்பதில்லையென்ற உறுதியை அவனிடம் பெற்ருள். இதற்குப் பதிலாகக் கன்னனும் குந்திதேவியை ஒனறு வேண்டினன். ''நான் அருச்சுனன் கணையால் வீழ்ந்திறந்தவுடன் நீ வந்து என்னை உன் மகனென்று உலகறிய ஒப்புக்கொள்ள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். எத்துணைப் பெருமை பெற்றிருந்த போதிலும் தான் உயர்குடியிற் பிறந்தவனென்பதை உலகறியச் செய்ய முடியவில்லையே என்ற தாபம் தான் பெற்ற செல்வனுக்கிருப்பதைக் கண்டு குந்தியின் உதிரம் சிலிர்த்தது. அவனைக் கட்டித் தழுவிக் கண்ணீர் விட்டாள். ''என் வயிற்றிலேதான் நீ பிறந்தாய் என்பதை உறுதிப்படுத்துவேன் மகனே'' என்று அவன் வேண்டுகோளுக்கு இசைந்து பிரியமுடியாமற் பிரிந்து சென்ருள்.

கண்ணபிரானும் அத்தினபுரியை விட்டு நீங்கிப் பாண்டவர் தங்கியிருந்த இடம் சேர்ந்தார்.

## 13. இதோபதேசம்

அத்தினபுரியில் நடந்தவற்றைக் கேட்டுப்பொறுமைக்குத் தெய்வமாக விளங்கிய தருமபுத்திரனே சீற்றங்கொண்டான். நானே இப்பகையை முடிக்கின்றேனென்று கூறித் தமக்குத் துணைபுரியக்கூடிய அரசர்களெல்லாம் போர் நிகழ்ந்துள்ள செய்தியைத் தெரிவித்தான். அச்செய்தியைக் கேட்ட பலதேயத்து அரசர்களும் தத்தம் படைகளைத் திரட்டிக்கொண்டு அங்கு வந்தார்கள். யாகசேனன், திருஷ்டத்துய்ம்மன், சிகண்டி, பாஞ்சாலன், விராடன், சிவேதன், உத்தரன், மச்சநாட்டரசன், கேகயர், குந்திபோசர், கடோற்கசன், அபிமந்யு முதலான பலரும் பலவிதமான படைகளோடு வந்து கூடினர். பாண்டவர் பக்கத்தில் வந்து சேர்ந்த படைகள் ஏழு அக்குரோணியாகும். படைத்துணை புரிய வந்த வேந்தர்களையெல்லாம் பாண்டவரும் கண்ணனும் வரவேற்று உபசரித்தனர். துரியோதனனிடம் தூதனுப்பியமையையும் அங்கு நிகழ்ந்தவற்றையும் அம் மன்னர்க்கு எடுத்துரைத்து, உங்கள் துணையை நம்பியே இப்போரில் ஈடுபடுகிறோம்; எங்களுக்கு உறுதுணையாயிருந்து வெற்றியீட்டித் தருவது உங்கள் கடனாகும்'' என்று தருமன் பணிவுடன் கூறினன். அதிகாரத்தினல் நீதி தவறிய துரியோதனனையும் அவனைச் சார்ந்தோரையும் கொன்று தருமனுக்கே வெற்றியீட்டித் தருவோமென்று வந்த பேரரசரெல்லாம் ஒருமுகமாகக் கூறினர்கள். துணைவேந்தர்கள் காட்டிய ஆதரவினலும் வீரப்பேச்சினலும் பாண்டவர்கள் அகமகிழ்ந்தனர். தமதுபடைகளுக்கெல்லாம் தலைவனுகச் சிவேதனை நியமித்துப் போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தலைப்பட்டனர்.

துரியோதனனும் தனக்கு உதவிசெய்யக் கூடியவர்களுக்கெல்லாம் ஓலை போக்கினன். இறுமாப்புமிக்க வணங்காமுடியோன் பணிவு சிறிதுமின்றி மன்னரெல்லாம் வெறுக்கத்தக்க முறையில் செய்தி அனுப்பினன். ''பாண்டவர்களோடு போர் செய்வதற்காக ஒவ்வொருவரும் தத்தம் படைகளோடு வந்து சேரவேண்டும். அவர்களுக்குத் தான் வாழ்வு நிலைக்கும் என்பதனை அறிக'' என்று அவன் வரைந்த ஓலைகண்டு பயத்தினல் வந்தோர் அநேகர். பாண்டவர்க்குப் பரிவினல் வந்தசேனை ஏழு அக்குரோணியாயிருக்க, துரியோதனற்குப் பயந்துவந்த சேனை பதினேரக்குரோணியாயிற்று. துரியோதனன் வீடுமரையே படைத்தலைவராக நியமித்தான்.

இவ்வாறு போருக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்துகொண்டு பண்டுள்ள முறைப்படி நல்ல முகூர்த்தத்திலே களப்பலியூட்டித் தத்தம்படைகளை அணி வகுத்து நிறுத்தினர்கள்.

கண்ணபிரான் சிவேதனுகிய படைத்தலைவனைப் பார்த்துப் 'படைகளைத் தக்கவாறு வரிசைப்படுத்துக' எனக்கூறினர். சிவேதனும் வீரர்களின் தரமறிந்து அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் என வகைசெய்து அன்னர்க்குரிய பணிகளையும் கூறினன். வெற்றிக்கொடிகளும் வெண்கொற்றக்குடைகளும் அழகிய முகபடாம் போர்த்து மதம் பிளிற்றும் யானைப்படைகளும், வாட்படை வீரர்களைத் தாங்கிவரும் குதிரைப்படைகளும், வில், வாள், சூலம் முதலிய படைக் கலங்களை ஏந்தி

வரும் காலாட்படைகளுமாகப் பாண்டவர் பக்கம் வந்த ஏழு அக்குரோணி சேனையும் ஏழ் கடலும் சேர்ந்து ஒலிசெய்து வந்தாற்போலப் பேராரவா ரத்துடன் போர்க்களம் போய்ச் சேர்ந்தது.

இவ்வாறே துரியோதனன் பக்கத்திலும் வீடுமர் சேனைகளை அணிவகுத்தார். துரோணர், அசுவத் தாமன், பூரிசிரவசு ஆகியவர்களை அதிரதர்களாக நியமித்த வீடுமர், கன்னனை அர்த்தரதர் வகுப்பில் சேர்த்து விட்டார். இதனால் கன்னன் கடுஞ்சினம் கொண்டு வீடுமரைக் கொன்றுவிட எண்ணினன். படைவகுப்பதிலேயே தன்பக்கத்தில் கலகமுண்டாகி விடுமோ எனப் பயந்த துரியோதனன், கன்னனை ஒருவாறு சாந்தப்படுத்தினன். எனினும் கன்னனின் சீற்றம் அடங்கவில்லை. வீடுமர் படைத்தலைவராக இருக்கும்வரை தான் வில்லெடுத்துப் போர் செய்வ தில்லை எனக்கூறி விலகிவிட்டான். பின்பு பதி னொரக்குரோணி சேனையும் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டது. இருபக்கத்துப் படைகளும் குரு க்ஷேத்திரம் என்னும் இடத்தில் கண்ணுக்கெட் டாத தூரம்வரை பரந்து நின்றன. இப்படி அதி பயங்கரமான படை அணிவகுப்பை ஒருபோதும் கண்டிராத மக்கள் பயந்து நடுங்கினர்; தேவரும் அஞ்சினர்; என்ன ஆகுமோ? என்று ஏங்கினர்.

இரு பெரும் படைகளும் போர் தொடங்கு வதற்குத் தத்தம் தலைவர்களின் கட்டளைகளை எதிர்நோக்கி நின்றன. அப்பொழுது கண்ண பிரான் தேரோட்ட மணித்தேரேறி விஜயன்

படைமுகத்துக்கு வந்தான். எதிரில் பாட்டனு ராகிய வீடுமர், குலகுருவான துரோணர், கிருபர், துரியோதனன், அவனுடைய தம்பியர் எல்லோரும் போர்க்கோலம் பூண்டு படைக்கலமேந்தி எதிரி களாக நிற்கக் கண்டான். கண்டதும் அவனுடைய வீர உள்ளத்திலே 'உற்றூர் உறவினர் நண்பர் களையா என் படைக்கலங்களுக்கு இலக்காக்கப் போகிறேன். காண்டீபத்தை என் தாயாதியர்க் கெதிராகவா ஏந்திப் போர் செய்யப் போகிறேன்' என்ற எண்ணம் ஒரு கணம் உதித்தது. அதனுல் அவன் மிக்க தளர்ச்சியுற்றுன். "இவர்களைக் கொன்று இந்தப் பூமியை ஆள வேண்டுமா? வேண்டாம் இந்தப் போர், நான் போர் செய்ய மாட்டேன்" என்று கண்ணனுக்குக் கூறிவிட்டான். அருச்சுனனுக்கு உண்டான தளர்ச்சியைக் கண்ண பிரான் அவதானித்தான். அதன் காரணத்தை யும் கண்ணன் நன்கு அறிவான். அந்தத் தளர்ச்சி யைப் போக்க எண்ணி அருச்சுனனுக்கு மெய் யறிவு பிரகாசிக்கும்படியான தத்துவ ஞானத்தைக் கண்ணன் உபதேசித்துத் தன் விசுவரூபத்தையும் காட்டினுன். இந்த உபதேசத்தாலும் விசுவரூப தரிசனத்தாலும் அருச்சுனன் மெய்ஞ்ஞானம் தலைப்பட்டவனுய்த் தளர்ச்சி நீங்கிப் போருக்கு ஆயத்தமாகக் காண்டீபத்தைத் தன் கையில் எடுத்தான்.

பாரதப் பெரும்போரின் தொடக்கத்தில் இரு பெருஞ் சேனைகளுக்கும் மத்தியிலே கிருஷ்ணன் அருச்சுனனுக்குச் செய்த உபதேசம் 'பகவத்கீதை'

என்ற பெயருடன் தனியாக ஒரு ஞான நூலாய் இன்று விளங்குகிறது.

உலகத்திலுள்ளவர்கள் எத்துணைச் சான்றோ ராயினும் செயலற்றிருத்தல் இயலாது. ஒவ்வொ ருவனும் தன் தன் கடமைகளைச் செய்தல் வேண் டும். அந்தக் கடமைகளைச் செய்யும்போது அவற் றின் பலாபலன்களைப் பொருட்படுத்தலாகாது. எந்தக் கர்மாவைச் செய்தாலும் ‘தனக்கென ஓர் செயலற்றுத் தானதுவாய் நிற்கும் நிலை’ ஏற்பட் டால் அந்தக் கர்மாவினால் உண்டாகும் ஆகாமிய வினை செய்பவனைச் சாராது. இந் நிலையை எய் தியவனே ஜீவன்முக்தன் எனப்படுகிறான்'' என் பதுவே அந்த ஞான நூலாகிய பகவத்கீதையின் உட்பொருளாகும்.

## 14. ஆனது வெஞ்சமர்

கிருஷ்ணனின் உபதேசத்தால் அருச்சுனன் அறிவு தெளிந்து கையில் காண்டீபமேந்திப்போர் தொடங்கும் சமயத்தில் தருமன் தன் போர்க் கவசத்தைக் கழற்றிவிட்டு நிராயுதபாணியாகத் தேரினின்றும் இறங்கிக் கௌரவ சேனைக்குத் தலைமைதாங்கி நிற்கும் வீடுமரை நோக்கிச் சென்றான். 'திடீரென மனம் மாறுபட்டு இயல்பாக உள்ள கருணை தூண்டத் தருமன் இவ்வாறு நிராயுதபாணியாக எதிரிபக்கம் செல்கின்றானோ?' என்று ஏங்கிய தனஞ்சயன் தேரினின்றுங்குதித்துத் தருமனைப் பின்தொடர்ந்து ஓடினான். மற்றச் சகோதரர்களும் தொடர்ந்தனர்; பார்த்தசாரதியும் உடன் சென்றார்.

''பயந்தவன், கோழை, அரசகுலத்துக்கே இழிவைத் தேடுபவன்'' என்று ஒரு கண நேரம் துரியோதனனாதியர் தருமனை இகழ்ந்தனர்; தமக்கு வெற்றி எய்தியதென்று மகிழ்ந்தனர். ஆனால் தருமன் செய்ததென்ன? நேரே வீடுமரிடம் சென்றான்; அவருடைய பாதங்களை வணங்கி, ''எவராலும் வெல்லுதற்கரிய மகாவீரரே! எம்குல முதல்வரே! உம்முடன் போர்செய்ய நிகழ்ந்ததே! அடியேனை ஆசீர்வதித்து அநுமதிதரல் வேண்டும்'' என்று கூறிக் கண்ணீர் சொரிய நின்றான். குணக்குன்றாகிய தருமனின் செயலைக்கண்ட வீடுமர் ஆனந்தத்தினால் கண்பனித்து, ''குழந்தாய்! சான்றோர் முறைப்படி என்னிடம் ஆசிபெறவந்தாய். பெரியோர்களின் ஆசியின்றித் தொடங்கிய யுத்தம் வெற்றியெய்தல் அசாத்தியம்; அது உலக

நிந்தைக்கும் இலக்காகும். கௌரவர் பக்ஷத்தில் நான்மட்டுமல்ல இன்னும் எத்தனை மகாரதர்கள் கூடிநின்றாலும் முடிவில் நீயே வெற்றிபெறுவாய். ''அறம் வெல்லும், பாவந் தோற்கும்'' என்னும் மறைமொழி பொய்யாகுமா? ஒன்றுக்கும் அஞ்சாதே! உனக்கு மங்களம்!'' என்று ஆசீர்வதித்து அனுப்பினார். அவ்வாறே தன் ஆசாரியர்களான துரோணரிடமும் கிருபரிடமும் ஆசியும் அனுமதியும் பெற்று மீண்டும் போய்த்தேரில் ஏறினான்.

முரசங்கள் முழங்கின; போர் தொடங்கியது. அக்காலத்தில் யுத்த தருமம் வரையறுக்கப்பட்டிருந்தது. மாலைக்காலமானதும் போரை நிறுத்திவிட்டு இருபக்கத்தாரும் கலந்துகொள்வர். ஆயுதமில்லாதவன், புறங்கொடுத்தோடுபவன், மயங்கிக்கிடப்பவன், கவசம் இழந்தவன் என்றித்திறத்தினர்மீது பாணப்பிரயோகம் செய்யார். ஒருவனோடு யுத்தம் செய்துகொண்டிருப்பவனை அதில் சம்பந்தப்படாத வேறொருவன் சென்று தாக்குவதில்லை. பணியாளர், பேரிகை அடிப்போர் என்றின்னோரைக் கொல்லார். இந்த விதிகளுக்கு இணங்கவே யுத்தம் ஆரம்பமாயிற்று ஆனால் உக்கிரமான போர் மூண்டு சேனைகளில் மிகுதியான அழிவு ஏற்பட்டதும் யுத்ததருமங்கள் புறக்கணிக்கப்பட்டன.

பாரத யுத்தம் பதினெட்டுநாள் நடந்தது. வீடுமர் தலைமையில் கௌரவப்படை பத்துநாள் யுத்தம் செய்தது. பத்தாம் நாள் வீடுமர் வீழ்ந்ததும் துரோணர் படைத்தலைவரானார். துரோணர் இறந்தபின் கன்னன் சேனாதிபதியானான்.

பதினேழாம் நாள் அவனும் மாண்டுபோகச் சல்லியன் தலைமை வகித்தான்.

முதல்நாட் போரில் பலவீரர் மாண்டனர். அருச்சுனனும் வீடுமரும் யார் பெரியவர் யார் சிறியர் என்று தெரியாமல் ஆகாயமும் பூமியும் சரமாரியாகும்படி யுத்தம் செய்தனர். அருச்சுனனின் வில்லாண்மையைக் கண்டு கௌரவசேனை நடுங்கிற்று. துரியோதனன் தம்பியர் சிலரையும் சகுனியையும் சல்லியனையும் வீடுமருக்குத் துணையாக அனுப்பினன். அருச்சுனனை எதிர்ப்பதற்குப் பலர் ஒருங்குகூடுவதைக் கண்ட தருமன் வீமனையும் அபிமன்யுவையும் அவனுக்குத் துணையாக அனுப்பித் தானும் உடன் சென்முன். வீமன் வீடுமருடைய தேர்க்கொடியை அறுத்து அவர் அணிந்திருந்த கவசத்திலும் ஒன்பது பாணங்களைச் செலுத்தி அவரை நடுங்கச் செய்தான். சல்லியன் முதலானேரும் பின்வாங்கினர்.

அருச்சுனனின் வில்லாண்மையைக் கண்டு கௌரவசேனை நடுங்கிற்று. அபிமன்யு வீடுமருடைய தேர்க்குதிரைகள் நான்கும் விழுந்துருளுமாறு பாணங்களைச் செலுத்தினன். உத்தரகுமாரனும் உருத்தெழுந்த சல்லியனேடு கடும்போர் தொடங்கினன். சல்லியனுடைய தேர்க்குதிரைகள் மாண்டன; தேர்ப்பாகன் இறந்து வீழ்ந்தான்; துணையாக நின்ற வீரரும் மாண்டனர்; சல்லியனுடைய வில்லையும் முறித்தான். இவ்வாறு அருச்சுனனல் அஞ்ஞாதவாச காலத்தில் வீரனக்கப்பட்ட உத்தரன் அற்புதமான போர் செய்தான். எதிர்பாராதவிதமாக வந்த வேலாயுதத்துக்கு உத்தர

குமாரன் பலியாகி வீரசுவர்க்கமெய்தினன். மத்திரதேசாதிபதியான சல்லியன் தனக்கே ஆபத்து ஏற்படும் என்று எண்ணியதனுல் வில்லேந்தி நின்ற வீரனை வேலால் எறிந்து கொன்ருன். இதனைக் கண்ட வீமன் தன் கதாயுதத்தை எடுத்துக்கொண்டு சல்லியனுக்குக் காப்பாக நின்ற துரியோதனனுடைய சேனையை அடித்துநொருக்கி யானைகளைப் பிளந்து, தேர்களைப் பொடியாக்கிக் குதிரைகளைக் கண்டதுண்டமாக்கிக் காலனைப் போலக் கலக்கினன். சல்லியனும் பயந்து ஓடி மறைந்தான். எதிர்த்து வந்த துரியோதனன் நிலையும் மிகுந்த ஆபத்தாக முடிந்தது. வீமசேனன் அவனுடைய தேரையும் தூக்கி வானத்தில் வீசி எறிந்துவிட்டு ஆர்ப்பரித்து நின்ருன். அவனுக்குத் துணையாக வந்த துரியோதனனுடைய மைத்துனர்களின் தலைகளும் வீமனுடைய தண்டாயுதத்துக்கு இரையாயின.

உத்தரகுமாரன் இறந்தான் என்பதை அறிந்த சிவேதன் சிவதனுசை ஏந்திச் சல்லியனை எதிர்த்தான். சல்லியனுக்குத் துணையாகப் பலவீரர்கள் வந்தனர். சிவேதன் அவர்களெல்லோரையும் ஒரு கணநேரத்தில் தொலைத்து விட்டுச் சல்லியனைப் பலமாகத் தாக்கினன். இதனைக் கண்ணுற்ற துரியோதனன் அவனுக்குத் துணையாகப் போகும்படி வீடுமரை ஏவினன். வீடுமர் வருதலைக் கண்ட சிவேதன் அவரைத் தாக்கினன். அவனுடைய ஆற்றலைக்கண்ட வீடுமர் திகைத்தார். வீடுமரின் தேர்க்கொடி அறுந்தது; வில் ஒடிந்தது. மீண்டும் ஒரு வில்லை எடுத்துக்கொண்டு அவர் போர் செய்ய முயலுகையில் அவன் அந்த வில்லும்

முறியும்படி அம்பெய்தான். ''உனக்கு விற் போரையன்றி வேறு தெரியாதா?'' என்று வீடு மர் கேட்டார். சிவேதன் உடனே ஒரு வாளை எடுத்துக்கொண்டு வீடுமரை நோக்கி வந்தான். ஆனால் வீடுமரோ தாமும் ஒரு வாளை எடுக்கா மல் அவனுடைய வாள் பிடித்த கரத்தை ஓர் அம்பால் வெட்டி எறிந்தார். மற்றக் கையி னால் வாளைத் தாங்கிக் கொண்டு சிவேதன் வீடுமரைக் கொல்ல வந்தான். ஆனால் வீடுமர் நெருங்கிவந்த சிவேதனை மீண்டும் அம்பாலேயே கொன்று வீழ்த்தினார். தருமம் தலைசாய்ந்தது; முதல்நாட் போரிலே யுத்த தருமம் வீடுமரா லேயே புறக்கணிக்கப்பட்டது. கௌரவசேனை பேராரவாரம் செய்தது பாண்டவ சைன்னியம் மிகுந்த வருத்தமடைந்தது. முதனாட் போரும் முடிவெய்தியது.

## 15. வீடுமர் வீழ்ச்சி

சிவேதன் உத்திரன் என்னும் இருவரையும் முதல் நாட் போரிலேயே இழந்த விராடனைப் பாண்டவர் தேற்றினர். யுத்தத்தில் பிரவேசித்த வீரர்க்குத் தேறுதலேது? உயிர் போகும்வரை பொருது மாள்வதே உறுதி என்று எண்ணி விராடன் திடங்கொண்டான்.

இரண்டாம் நாளிலே இருபக்கத்துப் படைகளும் கொடூரமாகப் பொருதன. வீமசேனன் துரியோதனனின் பக்கபலமாக நின்ற கலிங்க சேனையைக் கொன்றொழித்து வீடுமரின் தேரும் பொடிபடும்படி அடித்தான். அந்த அடியின் அதிர்ச்சியால் அவருடைய தேர்ச்சாரதியும் யமலோகம் போனான். வீடுமர் மிகுந்த சோபங் கொண்டு பின்னுமொரு தேரிலேறி வீமனை எதிர்த்தார்; அப்பொழுது அபிமன்யு அங்கு வந்து சேர்ந்தான். காற்றும் நெருப்பும்போல இருவரும் சேர்ந்து கௌரவசேனையைக் கலக்கினர். அன்றைய போரில் வீமனுடைய கதாயுதத்துக்குப் பலியாகி மாண்டோர் கணக்கற்றோராவர். எஞ்சியவர்கள் சிதறியோடவாரம்பித்தனர். சேனைகளைத் தடுத்து நிறுத்த முடியாமல் வீடுமரும் பின்வாங்கினர். துரியோதனன் தன் பக்கத்தில் அழிவும் தோல்வியும் மிகுதியானதைக் கண்டு பதறினான். எல்லோரும் தத்தம் பாசறை சேர்ந்தனர்.

மூன்றாவது நாள் போர் தொடங்கிற்று. வீடுமர், துரோணர் முதலியவர்கள் அருச்சுனனையும் அபிமன்யுவையும் வளைத்துக் கொண்டனர். துரியோதனனும் அவன் தம்பியரும் சகுனியுமாக வீமனை எதிர்த்தனர். வீமனுக்குத் துணையாக

அவனுடைய அரக்கமகன் கடோற்கசனும் வந்து சேர்ந்தான். போர் கடுமையாக மூண்டது. கடோற்கசன் பாதிப்பிறை வடிவமான கணைகளைத் துரியோதனன்மீது செலுத்தி அவனுடைய கவசம் கொடி, குதிரை, ஆகியவற்றை அழித்தான். கடோற்கசன் எய்த அம்புகள் செட்டை உரித்த பாம்புகள்போன்று துரியோதனனுடைய மார்பில் தாக்கி அவனை மூர்ச்சித்து விழச் செய்தன. அபிமன்யுவின் பாணத்தினுல் துரியோதனனுடைய சாரதியும் மாண்டான். இவற்றைக் கண்ட வீடுமர் அருச்சுனனுடன் போர்செய்வதை நிறுத்தி விட்டுத் துரியோதனனைத் தன் தேரிலேற்றிக் கொண்டு தனியாக ஓரிடத்துக்குப் போய் மூர்ச்சை தெளிவதற்கேற்ற மருந்துகளைக் கொடுத்தும் பாதுகாப்பான இடத்திற் சேர்த்துவிட்டு பாண்டவ சேனையைப் பலமாகத் தாக்கலானுர். அருச்சுனனும் மிக உக்கிரமான போர் செய்தான். வீடுமர் ஒருவரே எஞ்ச மற்றையோர் கால்போனவரும் கைபோனவரும் குற்றுயிரானவரும் யமலோகம் சென்றவருமாகக் கௌரவசேனை சின்னுபின்னப்பட்டது.

நான்காம் நாள் பெரிய யானைப்படையொன்று வீமனை எதிர்த்து வந்தது. யானைகளைக் கண்டாலே வீமனுக்கு உற்சாகம் பிறந்துவிடும். எதிர்த்துவந்த யானைகளைக் கொன்று குவித்தான்; அவற்றின்மீது வந்த வீரரும் மாண்டனர். மிகப் பெரிய யானைப்படையே கொல்லப்பட்டதைக் கண்ட சுயோதனன் இந்த வீமனை இன்றைக்கே தீர்த்து விடுகிறேனென்று எதிர்த்தான். வீமன் அவனையும் அவன்படைகளையும் சிதறடித்துவிட்டுக்

கைகொட்டி நகைத்தான். எமனைப்போல உருத்து நின்ற வீமசேனனைச் சகுனி, சல்லியன் முதலானோர் தாக்கினர். கடோத்கசனும் வீமனுமாக அந்தப் படையைக் கலக்கினர். வீமனுடைய கையில் துரியோதனனுடைய தம்பியர் ஐவர் சிக்கினார்கள். சபையில் செய்த சபதத்தின் ஞாபகமும் வந்தது. பூச்சிகளைக் கசக்குவதுபோல அந்த ஐந்து பேரையும் வீமன் கசக்கிப் பிழிந்து கொன்றான். எல்லோரும் பாசறை அடைந்தனர். தன் மைந்தரில் ஐந்துபேர் மாண்ட செய்தி கேட்டுக் காந்தாரி மிகவும் கலங்கினாள்.

இவ்வாறே ஐந்தாம் ஆறும் ஏழாம் நாட்களிலும் கௌரவசேனை மிகுந்த அழிவெய்திக் கலக்கமுற்றது. எட்டாம்நாட் போரிலும் துரியோதனனுடைய தம்பியரில் எண்மர் வீமன் கையினால் மாண்டனர். நாளுக்கு நாள் தன்படை அழிவதையும் தம்பியர் வீமன் கையால் இறப்பதையும் கண்டு துரியோதனன் வருந்தினான். அறத்தை மறந்து அகம்பாவம் கொண்டவனுக்கு மேலும் சிந்தை கலங்கியது. படைத்தலைவராயிருந்த பாட்டனாரை அணுகிப் பலவாறுநிந்தித்தான். "நீயே தலைவனாயிருக்க உன் கண்ணெதிரில் என் தம்பியர் மாண்டு போகின்றனரே. என் உற்ற நண்பனும் மகா வீரனுமான கன்னன் உன்னாலல்லவோ விலகி நிற்கிறான். உன் வீரம் எங்கே? என்னை இப்படிக் கைவிடுதல் உனக்கழகாகுமா?" என்று தகாத மொழி பல பகர்ந்தான். "துரியோதனா! போரில் இருபக்கத்தார்க்கும் அழிவு நேருதல்இயற்கையே. அரசனாகஇருக்கும் நீ போரில் உண்டாகும் அழிவுகளைக் கண்டு

கலங்கலாமா? இன்னும் ஒன்று; நீ உயர் குடியிற் பிறந்தவன். நம் முன்னேரில் யாரேனும் அறநெறி திறம்பியதுண்டா? அன்று அரசர் பலர் கூடிய சபையிலே கற்பின் தெய்வமான பாஞ்சாலியைத் துகிலுரிந்தாய். அவள் அழுத கண்ணீர் உன் செல்வத்தையும் வாழ்வையும் தேய்க்கும் படைக் கலமாக இன்று மாறியிருக்கின்றது. சூழ்ச்சிக்காரனுன சகுனியும் மூர்க்கனுன துச்சாதனனும் கூறிய புத்திமதியின் பலனை இப்போது அறிந்தாயா? ''விதுரன் அழிந்தாலென்ன, வீடுமன் ஒழிந்தாலென்ன, துரோணர் மாண்டாலென்ன நான் ஒருவனே உனக்கு வெற்றியும் புகழும் ஈட்டித்தருவேன்'' என்று இறுமாந்து பேசிய கன்னனை தம்பினுய் நமக்குப் பகைவராகி இன்று இந்தக் குருக்ஷேத்திரத்தில் வந்து நிற்பவர் யார்? அறக்கடவுளே உருவெடுத்தாற் போன்ற தருமன் படைக்கலமேந்தி நிற்கிருன். காற்றும் நெருப்பும் போலக் கதையும் காண்டீபமும் ஏந்திய வீமார்ச்சுனர்களை நாம் எப்படி வெல்லலாம்? ஏன் வீண்வார்த்தைகளைப் பிதற்றுகிருய்? போ'' என்று வீடுமர் அவனை அனுப்பிவிட்டுப் போர்முனைக்குச் சென்ருர்.

பாஞ்சாலருக்கும் துரோண அசுவத்தாமர்களுக்குமிடையே கடும்போர் நிகழ்ந்தது. அபிமன்யு பல பாணங்களைப் பொழிந்து பலரைக் கொன்று வீழ்த்தினுன். வீமனைத் துரியோதனனும் அவன் தம்பியரும் எதிர்த்தனர், அவர்களைக் கண்டதும் வீமனுக்கு அடங்காத மகிழ்ச்சி உண்டாயிற்று. அன்று முற்பகலில் ஐந்துபேரைக் கொன்றவன் இப்பொழுது துரியோதனன் முன்னிலையிலேயே இன்னும் ஏழுபேரை வதைத்தான்.

''துரியோதனா! இவர்களோடு நீயும் விண்ணுலகு செல்ல விரும்புகிறாயா? அன்றேல் இன்னும் சில நாள் இருந்து போரை முற்றாகப் பார்க்க விரும்பு கிறாயா? போரைப் பார்க்க விரும்பினால் உடனே உன் பாசறைக்கு ஓடிப்போ'' என்று கூறி அண் டமும் குலுங்கச் சிரித்தான். சுயோதனன் நாணித் தலைகுனிந்தபடியே தம்பியரைப் பலி கொடுத்த துக்கத்தோடு பாசறைக்குத் திரும்பி னான். பத்தாம்நாள் பொழுது புலர்ந்தது. வீடுமர் முன்னிலும் மிக உக்கிரமாகப் போர் புரிந்தார். பல வீரர்கள் தோற்றோடினர். அருச்சுனன் தன் காண்டீபத்தை வளைத்து அவர் மீது பாணப்பிர யோகம் செய்து முன் ஒருபோதும் செய்திராத கடும்போர் புரிந்தான். அவன் செய்த போரைப் பார்க்கத் தேவர்களும் ஆகாயத்தில் கூடினர். கிருபர், துரோணர், அசுவத்தாமன், சுபத்திரதன், சகுனி, சல்லியன், பகத்தன் ஆகிய மகாவீரர்கள் வீடுமருக்குத் துணைபுரிந்தும் பயனற்றுப் போயிற்று. வீடுமரைத் தவிர ஏனையோர் விலகி ஓடினர். அவன் செய்த போரைக்கண்ட வீடுமர் மனம் மகிழ்ந்து ''பார்த்தனுக்குநிகர் பார்த்தனேதான்'' என்று தன்னுள் எண்ணினார். இருபக்கப் படை களுக்கும் பெரும் அழிவு ஏற்பட்டது. போர்க்கள மெங்கும் அறுந்த தலைகளும் கைகளும் தசைக் குவியல்களும் கொழுப்பும் எலும்பும் உதிரமு மாகிச் சகிக்கமுடியாதவாறு கோரமான காட்சி யளித்தது.

ஆயினும் அருச்சுனன் செய்தது விளையாட்டுப் போராகவே கண்ணனுக்குத் தோன்றியது. ''அருச்சுனா! விளையாட இதுசமயமன்று. இதோ

சிகண்டி வருகிறான். அவனை முன்னாகை வைத்துக் கொண்டு பிதாமகரைத் தாக்கு'' என்றான். சிகண்டி தனக்கெதிராக ஆயுதமெடுத்தலைக்கண்ட வீடுமர் பாணத்தைத் தொடாமலே இருந்து விட்டார். பெண்ணாகப் பிறந்து பின் ஆணாக மாறிய அந்தச் சிகண்டியின்மேல் ஆயுதம் எறிவது தருமமாகாது என்று வாளாவிருந்தார். அருச்சுனனால் அவருடைய வில்நாணும் அறுக்கப்பட்டது. அந்த நிலையில் அவரை மேலும் துன்புறுத்தாமல் அருச்சுனன் சும்மா நின்றான். வீடுமருடைய உடல் முழுவதும் கணைகள் பாய்ந்து 'கழற்காய் போலாகி விட்டது. அந்த நேரத்தில் ''பார்த்தனே! பிதாமகரைக் கொல்லக்கூடிய அம்பை எவு'' என்றான் கண்ணன்; தருமவிரோதமான இச்செய்கையை அருச்சுனன்மேல் சுமத்தாமல் தாமே ஏற்றுக்கொள்வது போலக் கட்டளை பிறப்பித்தான். அருச்சுனனும் காண்டீபத்தை நன்றாக இழுத்துப் பாணத்தைச் செலுத்தினான். பூமியில் உள்ள ஆன்மாக்களுக்கெல்லாம் இன்பமும் உணவும் தந்து தாயாக விளங்கும் கங்காதேவியின் புதல்வன், தன் தந்தையின் இன்பத்துக்காக இல்லற இன்பமும் வேண்டாம், சந்ததியும் வேண்டாம் என்று தியாகம் செய்த பெரியோன், பரசுராமனை வென்ற வீரன், தன்னைச் சந்தேகித்த துரியோதனாதியர்களுக்குத் தன் சத்தியத்தை நிறைவேற்ற உடல் முழுவதும் அம்புகள் பாயப்பெற்றுப் பாரதப் போரின் பத்தாம் நாள் தேரிலிருந்து கீழே விழுந்தான்;

வீடுமர் வீழ்ந்தார் என்ற செய்தி போர்க்களம் முழுவதும் பரவியது. எல்லோரும் போரை நிறுத்திவிட்டு வீடுமர் விழுந்து கிடக்கும் இடத்துக்கு ஓடினர். உடலெங்கும் அம்பு தைக்கப் பெற்றிருந்ததனுல் உடல் நிலத்தில் பொருந்தவில்லை. ''தலை தொங்குகிறது. அதைத்தாங்கும்படி ஏதாவது வையுங்கள்'' என்ருர் வீடுமர். துரியோதனுதியர் பஞ்சுத்தலையணை எடுத்து வந்தனர். அவற்றை மறுத்துவிட்டு அங்கே வந்து விநயத்தோடும்பக்தியோடும் பணிந்து நின்ற அருச்சுனனைப் பார்த்தார். ''அருச்சுனு! என் தலைக்குச் சரியான தலையணையாகப் பார்த்து வை' என்ருர். தன் அம்பருத்தூணியிலிருந்து மூன்று பாணங்களை எடுத்துக் குத்தித் தலையைத் தாங்கச் செய்தான். உடனே வீடுமர் அங்குக் கூடியிருந்த அரசர்களைப் பார்த்தார்; துரியோதனனையும் பார்த்தார். ''அருச்சுனன் அமைத்திருக்கும் தலையணையைப் பார்த்தீர்களா? இதுவே எனக்கு உகந்த தலையணை. என் உயிர் உடலைவிட்டுப் பிரிய இது ஏற்றகாலமன்று. உத்தராயண காலம்வரை இந்த உடலிலேயே என் உயிர் தங்கி நிற்கும்; அதுவரை நான் இந்த அம்புப்படுக்கையிலேயே கிடப்பேன்'' என்ருர். வீடுமருக்குக் களைப்பு உண்டாயிற்று. ''அருச்சுனு! தாகமாயிருக்கிறதப்பா'' என்ருர். அருச்சுனன் உடனே ஒரு பாணத்தைத் தன் வில்லிற்கோத்து நன்ருக இழுத்துப் பூமியிற் புதையும்படி செலுத்தினன். அது பாதாளத்திற் சென்று மறைந்தது. அந்த அம்பு சென்ற இடத்திலிருந்து அமுதம்போன்ற நீரூற்றுப் பொங்கி எழுந்தது. அந்த நீரைக் குடித்துத் தாகம்

தீர்ந்த வீடுமர் பின்னும் பேசலானார். "துரியோதனா! அருச்சுனன் எனக்குத் தண்ணீர் தந்தது போல் வேறு யார் தரவல்லார்? இந்த யுத்தம் என்னோடு முடியட்டும். இனித் தாமதிக்காமல் பாண்டவரோடு சமாதானமாக இரு" என்று கூறினார். துரியோதனன் மனம் மாறவில்லை. எல்லோரும் பாசறை சென்று சேர்ந்தபின் கன்னன் தனிமையில் வந்து வீடுமரைப் பணிந்தான். முன் பேசிய இழிமொழிகள் நினைவுக்கு வரவே அவன் பயந்து ஒடுங்கி நின்றான். பிதாமகர் கருணையோடு அவனைப் பார்த்து ஆசீர்வதித்தார். கன்னனும் தான் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டி அவரைப் பலவாறு புகழ்ந்தான். அவரும் அவனுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிப் பாண்டவரோடு சமாதானமாகப் போகும்படி கூறினார். கன்னன் தான் துரியோதனனுக்குக் கட்டுப்பட்டிருப்பதையும், அவனுக்குச் செய்யவேண்டிய நன்றிக்கடனையும் எடுத்துரைத்தான். வீடுமரும் உளமகிழ்ந்து "உன்னையே நம்பியிருக்கும் துரியோதனனைக் காப்பாற்றுவாயாக" என்று சொல்லியனுப்பினார். வீடுமருடைய முடிவைக் கேட்ட திருதராஷ்டிரன் கவலைக் கடலில் மூழ்கினான்.

## 16. துரோணரும் மாண்டார்

பதினேராம் நாள் துரோணர் சேனதிபதி யானர். அன்றைய போரில் அபிமன்யு தன் போர்த்திறனை முற்றும் வெளிப்படுத்தித் துரியோதனனின் மைந்தனுன இலக்கணகுமாரனைத் தலைமயிரிற் பிடித்துத் தன் தேரிற் கட்டிக்கொண்டு புறப்பட்டான். அது கண்ட சல்லியன் கையில் கதாயுதத்தை எடுத்துக்கொண்டு பாதசாரியாகவே அபிமன்யுவை அணுகினன். வீமன் உடனே குறுக்கிட்டுத் தன் கதாயுதத்தால் சல்லியனைத் தாக்கினன். அவனும் வீமனின் அடிக்கு ஆற்ருமல் மயங்கி வீழ்ந்தான். தான் செய்த போரில் வீமன் குறுக்கிட்டது அபிமன்யுவுக்குச் சிறிது மனத்தளர்ச்சியைத் தந்தது. அந்தச் சமயத்தில் இலக்கணகுமாரன் தப்பி ஓடினன் அன்றைய போரும் முடிவெய்தியது.

தன் மகன் உயிரோடு சிறைப்பிடிக்கப்பட்டான் என்பதை அறிந்த சுயோதனன் அதற்குப் பதிலாக அடுத்தநாள் எப்படியேனும் தருமனைச் சிறைப்படுத்த வேண்டுமெனச் சூழ்ச்சி செய்தான். இந்தச் செய்தி ஒற்றர் வாயிலாகப் பாண்டவர்க்கும் எட்டியது.

பன்னிரண்டாம் நாட்போரும் ஆரம்பமாயிற்று. பாண்டவர்கள் முன்னெச்சரிக்கையாகவே தம் படையை அணிவகுத்தனர். கௌரவரின் சூழ்ச்சிக்கிணங்கத் திரிகர்த்தர்கள் அருச்சுனனைப் போருக்கு அழைத்தனர்.

விஜயனும் தருமனுக்கு வேண்டிய பாதுகாப்புக்களைச் செய்துவிட்டு அநுமதி பெற்றுக்கொண்டு திரிகர்த்தர்களை எதிர்க்கப்போனுன். கடும்போர் நிகழ்ந்தது. சமயம் பார்த்துத் துரோணரும் தருமனை நோக்கி வந்தார். திருஷ்டத்துய்ம்னன் தன் சேனையோடு துரோணரை எதிர்த்தான். துரோணருடைய படை திருஷ்டத்துய்ம்னனின் வில்லாண்மைக்கு ஆற்ருது அழிந்தது. துரோணர் சினம் மிகுந்து மிக உக்கிரமாகப் போர் செய்தார். துருபதனும் பாஞ்சாலர்களும் நகுல சகதேவர்களும் துரோணரின் தாக்குதலுக்கு ஆற்ருராய் நீங்கியதும் நேரே தருமன் இருந்த இடத்தையடைந்து தருமனேடு பொருதார். தருமன் தனது ஆசிரியரை மனத்தில் வணங்கிக்கொண்டு தானும் கடுமையாகத் துரோணர்மீது அம்புமாரி பெய்தான். தன் சிஷ்யன் செய்யும் அற்புதமான போரைக்கண்டு ஆசாரியரும் வியந்தார். தருமன் துரோணருடைய கொடியை அறுத்துக் குதிரைகளைக் கண்டதுண்டமாக்கித் தேர்ச்சாரதியையும் வீழ்த்தினன். சிறைப்பிடிக்க வந்த துரோணர் தருமனின் போருக்கு ஆற்ருமல் திரும்பினர். திரும்பியவர் மீண்டும் ஒருமுறை வேருெரு தேரில் ஏறி யுத்தத்துக்கு வந்தார். வீமனும் கடோற்கசனும் துரோணர் படையுடன் திரும்பி வருதலைக் கண்டு சீறிப் பாய்ந்தனர். சூருவளியிலகப்பட்ட பஞ்சுபோலத் துரோணருடைய படை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. மாண்டவர் போக எஞ்சியவர் துரியோதனனிடம் போய் நடந்த வரலாற்றைச் சொல்லிப் பிரலாபித்தனர்: இவ்வாறு தருமரை உயிருடன் பிடிக்கக்

கௌரவர்கள் செய்த முயற்சி பயனற்றுப் போயிற்று.

தோல்வியும் அவமானமும் அதிகரிக்கத் துரியோதனன் முன்னிலும் கீழ்த்தரமான முறைகளைக் கையாளத் துணிந்தான். பதின்மூன்றும் நாள் மிகக் கவனமாகத் துரோணர் சக்கரவியூகமாகப் படைகளை நிறுத்திப் போர் தொடக்கினார். 'யாராலும் இதை உடைக்கமுடியாது; இன்றைக்குப் பாண்டவர் தோல்வியடைந்து போர்க்களம் விட்டு ஓடவேண்டியதுதான்' என்று எண்ணித் துரோணர் வகுத்த சக்கரவியூக அணி வகுப்பை அபிமன்யு கணப்பொழுதில் உடைத்துப் பலரைக் கொன்று வீழ்த்திவிட்டுக் கௌரவ சேனையின் மத்தியை அடைந்தான். கௌரவ சேனை அவனைச் சூழ்ந்துகொண்டது. அது கண்ட வீமன் அங்குக் கூடியவர்களைக் குத்தி நொருக்கிக் கொண்டு அபிமன்யுவைப் பின் தொடர்ந்தான். அசுவத்தாமன், கன்னன் முதலிய பலர் வந்து அபிமன்யுவைச் சூழ்ந்தனர். சிங்கக்குட்டி யானைக் கூட்டத்தை எதிர்த்துத் துரத்துவதுபோல அந்த வீரர்களையெல்லாம் அபிமன்யு துரத்தித் துன்புறுத்தினான். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த துரியோதனனுக்குத் தாங்கொணாத் துயரெய்தியது. வீமனையும் அபிமன்யுவையும் ஒன்றுசேர விடாது எப்படியேனும் பிரித்து விட வேண்டுமென்று அவன் சூழ்ச்சி செய்தான். உடனே சயத்திரதனை அழைத்து, "நீ எப்படியாவது ஒரு கொன்றை மலர் மாலையை வீமன் வரும் வழியிலே போட்டுவிடு. அவன் சிறந்த சிவபக்தன். கொன்றை மலர் மாலையைக் கடக்க மாட்டான்;

பின்பு தனித்து நின்று அட்டகாசம் புரியும் இந்த அபிமன்யுவைத் தொலைத்துவிடலாம்'' என்றான். சயத்திரதனனும் அவ்வாறே செய்தான்.

கொன்றைமாலை குறுக்கே கிடப்பதைக் கண்ட வீமன் அபிமன்யுவோடு சேரமுடியாமல் தயங்கினான்: ''இறைவன் முடியிற் சூடும் மாலையைக் கடவேன். இங்கு நின்றே பகைவரை அழிப்பேன்'' என்று வஞ்சினங் கூறிக் கடும்போர் புரிந்தான். இதனைக் கண்டு மனம்பொறாத துரியோதனன் சிறந்த ஒரு படையுடன் தன் மைந்தன் இலக்கண குமாரனை அனுப்பினான். படைவந்த சுவடே தெரியாமல் எல்லோரையும் கொன்று குவித்து எங்கும் பிணக்காடாக்கினான் அபிமன்யு. இலக்கணகுமாரனும் மாண்டதைக் கண்ட துரியோதனன், ''இந்தப் பாதகனைக் கொல்ல யாருமில்லையா ?'' என்று கதறினான். உடனே அசுவத்தாமன், துரோணர், கன்னன் முதலிய மகா வீரர்கள் ஒருங்குசேர்ந்து எதிர்த்தனர். அபிமன்யுவும் பின்வாங்கவில்லை; தனியொருவனாகவே அவர்களை எதிர்த்தான். புறங்காட்டியோடினோர் பலர்; தேரிழந்தோர் பலர். தலையிழந்தோர் பலர். இவ்வாறாகக் கௌரவசேனை கலங்கிச் சிதறிற்று. ''ஐயோ ! அருச்சுனனும் வந்து இவனோடு சேர்ந்துவிட்டால் பேராபத்தாக முடியுமே. கன்னா ! எப்படியாவது இவனை முடித்துவிடு'' என்று துரியோதனன் கன்னனுக்குச் சொன்னான். பலமுறை அபிமன்யுவிடம் தோற்ற கன்னன் மீண்டும் எதிர்த்தான். தனித்து நின்று போர் செய்த பாலவீரன் களைத்திருக்கும் நேரம் பார்த்துக் கன்னன் பாணந்தொடுத்தான். அபிமன்யுவின்

தேர்க்குதிரைகள் அழிந்து வில்லும் துண்டமாயது. உடனே சினங்கொண்ட அருச்சுனகுமாரன் கையில் வாளேந்தியவனாய்க் கீழே இறங்கினான். அவனுடைய நிலைமையைக் கண்டு தோற்றோடிய பலரும் மீண்டும் வந்து திரண்டு நரிகளைப்போலச் சூழ்ந்து தகாத முறையில் அவனோடு பொருதனர். வாளொன்றையே படைக்கலமாகக் கொண்ட வீரன் பலரை வெட்டி வீழ்த்தி வீரகோஷம் செய்தான். தோல்விக்குமேல் தோல்வி கண்டதனால் துரோணருமே யுத்த தருமங்களை மறந்து அபிமன்யுவின் வாளேந்திய கையைப் பாணத்தினால் துணித்தார். ஆயினும் அபிமன்யு சோரவில்லை. மற்றக்கையில் சக்கரப்படையொன்றை ஏந்தியவனாய்த் தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் கொன்று குவித்தான். இதனைக்கண்ட துரியோதனன் நடுநடுங்கி சயத்திரதனை அழைத்து, ''வரபலத்தால் நீ பெற்ற கதாயுதத்தை அபிமன்யுமீது பிரயோகிப்பாயாக'' என்றான். அவனும் தனக்குப் பேரிடர் வரும்போது உபயோகிப்பதற்கெனக் கொடுக்கப்பட்ட அந்தப் படைக்கலத்தை இந்த இழிவான முறையில் பயன்படுத்த உடன்பட்டு அபிமன்யுமீது ஏவினான்.

அபிமன்யு இறந்த செய்தி கேட்டுப் பாண்டவர் கவலைக்கடலில் மூழ்கினர். ''சக்கரவியூக அணிவகுப்பை உடைக்கும்படி நானன்றோ அவனை ஏவினேன். அவனுடைய மறைவுக்கு நான் காரணமானேனே!'' என்று நினைந்து நினைந்து தருமன் வெதும்பினான்.

"பிறந்ததினம் முதலாகப் பெற்றெடுத்த
விடலையினும் பீடும் தேசும்
சிறந்தனையென் றுனைக்கொண்டே தெவ்வரைவென்
றுலகாளச் சிந்தித் தேனே
மறந்தனையோ எங்களையும் மாலையினால்
வளைப்புண்டு மருவார் போரில்
இறந்தனையோ என்கண்ணே என்னுயிரே
அபிமா இன்றென் செய்தாயே?"

ஒன்றுக்கும் கலங்காத வீமன் அப்போது கலங்கியதைக் கண்டால் கல்லும் கனிந்துருகும். அருச்சுனனைத் தேற்ற எவராலுமே முடியவில்லை. "என் மைந்தனை அநியாயமாகக் கொன்ற சயத்திரதனை நாளையே கொல்வேன்; அது பிழைத்தால் உடனே எரியில் வீழ்வேன்" என்று வஞ்சினம் கூறினான். இச்செய்தி கடோற்கசனால் கௌரவர்க்கும் அறிவிக்கப்பட்டது. அவர்களும் மிகுந்த ஆயத்தங்கள் செய்து சயத்திரதனைப் பாதுகாப்பாக மறைத்து வைத்தனர்.

பதினான்காம் நாளும் போர் தொடங்கிற்று. அருச்சுனன் கௌரவ சேனையை நிர்மூலமாக்கி விட்டுச் சயத்திரதனைத்தேடி விரைந்து சென்றான். காண்டீபத்தின் ஒலியால் பூமியும் அண்டமும் அதிர்ந்தன. கண்ணனின் பாஞ்சசந்நியம் என்னும் சங்கும் அருச்சுனனின் தேவதத்தம் என்னும் சங்கும் விண்ணதிர முழங்கிக்கொண்டே அருச்சுனனின் தேர் கௌரவசேனையின் கடைசி அணிவகுப்பையும் அடைந்துவிட்டது. "எங்கே சயத்திரதன்?" என்பதையன்றி வேறொன்றையும் பார்த்தனின் மனம் எண்ணவில்லை. 'சூரியன் அஸ்தமிக்க இன்னும் இரண்டு விற்கிடைதான்

இருக்கிறது' எனும்படி ஒளி மழுங்கியது. ஆனால் சயத்திரதனை எங்கும் காணேம். ''என் சூளுரை பொய்த்தது; இனி எரிபுக வேண்டியதுதான்'' என்று தன்னுள் எண்ணிக்கொண்டான். அப்போது வானம் திடீரெனச் சிவந்து இருளடைந்து சூரியனும் மறைந்தான்.

''நீ அக்கினிப்பிரவேசம் செய்வதைப் பார்த்து மகிழ்வதற்கு அதோ சயத்திரதன் பேராவலோடு வருகிறான். காலதாமதம் செய்யாதே. பாணத்தை விரைவாக விடு. அவன் தலை நிலத்தில் விழக் கூடாது வீழ்ந்தால் 'யார் கையினால் இவன் தலை வெட்டுண்டதோ அவன் தலையும் உடனே அறுந்து உருண்டு போகும்' எனும்படி இவன் வரம் பெற்றவன். ஆகையினால் பாணங்களை அடுத்தடுத்து எய்து தலையை ஆகாயமார்க்கமாகத் தள்ளிக் கொண்டே போய் மாலைக் கடனுக்காக உட்கார்ந்திருக்கும் இவனுடைய தந்தையின் கையில் விழச்செய்'' என்றான் கிருஷ்ணன்! அவ்வளவு தான்; சந்தோஷ ஆரவாரத்தோடு சயத்திரதனை அழைத்துக் கொண்டுவந்த துரியோதனனாதியர் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே சயத்திரதனுடைய தலை ஆகாய மார்க்கமாக மிதந்து பறந்தது. ஆதவனும் கிரகணத்தினின்றும் வெளிப்பட்டது போலப்பிரகாசத்துடன்தோன்றி. அஸ்தமிக்க இன்னும் ஐந்து நாளிகைப் பொழுது இருக்கிறது; என்று சொல்லக்கூடிய உயரத்தில் காட்சியளித்ததைக் கண்ட கௌரவசேனை ஏமாந்து நின்றது. கண்ணபிரான் தன் சக்கராயுதத்தினால் இப்படிச் சூரியனை மறைத்துத் தன் அன்பனின் சூளுரையைக் காப்பாற்றினான்.

இதனை அறிந்த துரியோதனனுக்குக் கடுங்கோபம் மூண்டது. கண்ணனைப் பலவாறு நிந்தித்துவிட்டுத் தன் படையோடு பாண்டவரைத் தாக்கினான். ''ஐவரையும் கொல்வேன் அல்லது நான் இன்றே மாண்டுபோகிறேன்'' என்று வீரமொழி பகர்ந்து பொருதான். வீமனுக்கும் உற்சாகம் மிகுந்தது. ஆயுதத்தை வைத்துவிட்டு வெறுங் கையோடு இறங்கினான். எதிர்த்து வந்த நால் வகைப் படைகளையும் வாரி வானத்தில் வீசியெறிந்து ஆர்ப்பாட்டம் செய்தான். யுத்தகளத்தில் வீமசேனனுடைய சிம்மநாதம் கேட்டே அநேகர் உயிர் துறந்தனரென்றால் அந்த யுத்தத்தின் பயங்கரத் தன்மையை யார்தான் கூற வல்லார் !

துரியோதனன் அன்று இரவிலும் தொடர்ந்து போர் செய்தான். தான் வெற்றி எய்தாவிடினும் பகைவரை அழித்துத் தானும் மாள்வதாக உறுதி பூண்டான். கடோற்கசனால் தன் படை மிகுதியாக அழிவதைக் கண்ட சுயோதனன் இந்திரன் கொடுத்த வேற்படையை அவன்மீது செலுத்தும்படி கன்னனுக்குக் கூறினான். அவனும் அவ்வாறே கடோற்கசனைக் கொன்றான். விராடனும் பாஞ்சாலனும் துரோணரால் கொல்லப்பட்டனர். இவ்வாறு இருபக்கத்திலும் பதினான்காம் நாளிரவு பெருஞ் சேதம் உண்டாயிற்று.

பதினைந்தாம் நாள் போர் ஆரம்பமானதும் கண்ணன் திருஷ்டத்துய்மனனை அழைத்துத் துரோ

ணரை எதிர்க்கும்படி ஏவினன். மாளவ தேசத்து அரசனின் அசுவத்தாமா என்னும் பட்டத்து யானையை வீமன் அடித்துக் கொன்றான். ''இச் செய்தி துரோணர் காதில் விழும்படி நீ சொல்ல வேண்டும்'' என்று தருமனுக்குக் கண்ணன் கூறினன். தருமன் முதலில் தயங்கினன். ஆனல் பரந்தாம னின் கட்டளையை மீற முடியாமல் அப்படியே செய்தான். போரின் ஆரவாரத்தினுல் யானை இறந் தது என்பதை அறியாமல் தன் மகன் அசுவத் தாமனே கொல்லப்பட்டான் என்று மாறி உணர்ந்த துரோணர், தேர்த்தட்டிலேயே தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். திருஷ்டத்துய்ம்னன் அம்பு எய்த நேரமும் துரோணர் வில்லைக் கீழேபோட்ட சமய மும் ஒன்றாய் இருந்தபடியால் துரோணருடைய உயிர் பிரிந்து சென்றது; தந்தையின் பிரிவுக் காற்ருது அசுவத்தாமன் புலம்பினன். பிறகு வஞ்சினம் கூறிக்கொண்டு போருக்கு எழுந்தான். அப்பொழுது வியாசபகவான் தோன்றி அசுவத் தாமனுக்கு அறிவுரை கூறித் திருஷ்டத்துய்ம்ன னின் பிறப்பை உணர்த்தி மறைந்தார். அவனும் சீற்றம் தணிந்தான்.

## 17. கன்னன் முடிவு

பதினாறும் நாள் கன்னன் தலைமையில் கௌரவ சேனை திரண்டது. தருமனுக்கும் துரியோதன னுக்குமிடையே உக்கிரமான போர் தொடங் கியது. இருவரும் நெடுநேரம் பொருதனர். எங்கும் நிணச்சேருகிப் போர்க்களம் செங்கள மாகிக் காட்சியளித்தது. துரியோதனன் தனது தேரையும் சாரதியையும் இழந்து தனியனாய் நின்றான். ''மன்னவர் கூடிய சபையிலே சகுனியின் வஞ்சனையைக் கேட்டு ஆடிய சூதா இது? உண்மை ஆற்றலுடையவர்க்கன்றோ போர்க்களம் உரியது. இதோ என் கணைகள் உன் உயிரைக் குடித்து விடும்; அன்று வீமன் செய்த சபதத்தின் பொருட்டு உன்னை விட்டு விடுகிறேன்; உடனே இவ்விடம் விட்டு ஓடிப்போ'' என்றான் தருமன். துரியோ தனனும் கணைகளின் துன்புறுத்தலைத் தாங்கமுடி யாமல் ஓடி ஒளித்தான்.

பதினேழாம் நாளுமாயது. துரியோதனன் தனக்கு நேர்ந்த அழிவாலும் அவமானத்தாலும் எல்லையற்ற கவலையில் மூழ்கினான். அவனுடைய கலக்கத்தைக் கன்னன் கண்டு ''அருச்சுனனுக்குக் கண்ணன் தேரோட்டுகிறான். கண்ணனுக்கு நிக ரான சாரதி நம்பக்கத்தில் சல்லியன் ஒருவனே தான். அவனை எனக்குத் தேரோட்டும்படி செய் வாயானால் இன்றைக்கே பகைவரையெல்லாம் கொன்று உன் கவலையை ஒழிப்பேன். ஊர் பேர் தெரியாதிருந்த என்னை உங்கள் குலத்துள்ளோரில் ஒருவனாக்கி அங்கதேசத்து அரசனுமாக்கிப் பல வகைச் சிறப்புக்களுடனும் விளங்கவைத்தாய்,

உனக்கன்றி வேறு யாருக்காக இந்த உயிரை நான் தியாகம் செய்யப் போகிறேன். ஒன்றுக்கும் அஞ்சாதே'' என்று அவன் தேற்றினான்.

''ஒருரும் ஒருகுலமும் இல்லா என்னை
உங்கள் குலத்துள்ளோரில் ஒருவனாக்கித்
தேருரும் அவர்மனைக்கே வளர்ந்த என்னை
செம்பொன்மணி முடிசூட்டி அம்புராசி
நீருரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினுஞ்சீர் பெறவைத்தாய் நினக்கேயன்றி
ஏருரும் கதிர்முடியாய் உற்றபோரில்
யார்க்கினிஎன் உயிரளிப்ப தியம்புவாயே''.

கன்னனின் வார்த்தைகளால் அரவக்கொடியோன் அகமகிழ்ந்தான். ஆனால் மகாவீரனான சல்லியனைத் தேரோட்டும்படி செய்வது எங்ஙனம்? கன்னன் மகாவீரனாயிருந்த போதிலும் அவன் தேரோட்டியின் மகனென்று கருதப்பட்டு வந்தமையால் சல்லியன் அவனுக்குச் சாரதியாவதற்கு முதலில் மறுத்துவிட்டான். எனினும் துரியோதனன் மிகவும் பரிந்து வேண்டிக் கொண்டதனால் பின்பு ஒருவாறு இசைந்தான்,

போர் தொடங்கியது. சுயோதனனின் தம்பியர் பலர் வீமனால் விண்ணுலகமடைந்தனர். துச்சாதனன் தனித்து நின்றான். ''ஆகா! சிக்கினாய், துச்சாதனா! இத்தனை நாளும் மறைந்திருந்தாய்; உன்னைப் போர்க்களத்தில் காண ஆசைகொண்டிருந்தேனே'' என்று கூறிக்கொண்டு வீமன் அவனை அணுகினான். இருவரும் சிறிது நேரம் பொருதனர். பிறகு வீமன் தன் கைகளினாலேயே அவனைக் குத்திக் கைகளை முறித்தான்; விழிகள் பிதுங்க உடற் கூறுகளெல்லாம் சின்ன பின்னப்

பட்டன. அதனைக் கண்ட கௌரவசேனை நடுங்கியது. வீமன் அவனுடைய கழுத்தைத் திருகி ''இந்தக் கைகளல்லவோ பாஞ்சாலியின் கூந்தலைப் பிடித்திழுத்தன. இந்த விரல்களல்லவோ அவள் துகிலை உரிந்தன'' என்று சொல்லிக்கொண்டு அவனுடைய கைகளையும் விரல்களையும் பிடுங்கி எறிந்தான். ''இனிமேல் நான் தாகம் தீர என் கைகளினாலேயே தண்ணீரள்ளிப் பருகலாம்'' என்று கர்ச்சித்துக்கொண்டு குற்றுயிராய்க்கிடந்த துச்சாதனனுடைய உடலைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சினான். 'வீமன் தன் சபதத்தை நிறைவேற்றிவிட்டான்' என்ற செய்தி கேட்டுப் பாண்டவர் அங்குச் சென்றனர். கன்னன் வீமனுடைய செயலைக் கண்டு மயங்கித் தேரிலே சாய்ந்தான். பின்பு அறிவு தெளிந்ததும் அருச்சுனனுடன் கடும் போர் தொடங்கினான். ஆகாயமும் பூமியும் சரமாரியினால் மறைந்து எங்கும் இருள் மூடியது. கன்னன் சினம் மிகுந்து அருச்சுனனுடைய கழுத்தைக் குறிபார்த்து நாகாஸ்திரத்தை எய்தான். சீறிக்கொண்டு வந்த நாகாஸ்திரத்தைக் கண்ட கிருஷ்ணன் நிலத்தில் பன்னிரண்டு விரற்கிடை ஆழ்ந்து செல்லும்படி தேரைச் செலுத்தினான். அந்த நாகாஸ்திரம் அருச்சுனனின் முடியைத் தட்டிக்கொண்டு போனது. பின்பு கன்னன் எய்த கணைகளையெல்லாம் விஜயன் தன் கணைகளினால் ஒடித்தெறிந்து அவனுடைய உடம்பின் மயிர்க் கால்கள்தோறும் அம்புகளையேற்றி அவனை வலியழியச் செய்தான். நேரமும் சூரியன் மறைவதற்கு இன்னும் இரண்டு விற்கிடைதானுண்டு எனும்படி ஆனது.

''கன்னனும் மயங்கித் தேர்த்தட்டில் வீழ்ந்து விட்டான்; இனிப் போரை நிறுத்து'' என்று

விஜயனுக்குக் கிருஷ்ணன் சொல்லிவிட்டு, உடனே தான் ஒரு வேதியருருக் கொண்டு கன்னனிடம் சென்று, ''வள்ளலே, உன்னை இரந்து வந்தோர்க்கெல்லாம் அவரவர் வேண்டியன வேண்டியாங்குக் கொடுத்தருளினுய் என்பது கேட்டு, இதுவரையில் மேருமலைக்கருகில் தவம் செய்த யான், என் வறுமைப் பிணியை நீக்க எண்ணி உன்னிடம் வந்தேன்'' என்முன். கன்னன் தான் உயிரிழக்கும் தருணத்தில் வந்தாளுயினும், இல்லை எனும் சொல்லைக்கூற அஞ்சியவனுய், ''வேதியரே! உமக்கு யான் இப்போது தரத்தகும் பொருளைக் கேட்டருளும்'' என்முன். வேதியர், ''வள்ளலே, நீ செய்த புண்ணியம் அனைத்தையும் தருக'' என்முன். கன்னன் முகமலர்ந்து, ''எனது உயிர் இப்போது உள்ளே இருக்கின்றதோ, வெளியே சென்றதோ என்பதையே அறியேன். நீயோ, பிரமதேவனும் உனக்குநிகராகான் எனும்படியான முனிசிரேஷ்டனுய்க் காணப்படுகிருய். வேண்டுவோர் வேண்டும் பொருள்களையெல்லாம், நான் விரும்பிக் கொடுத்த சமயத்தில் நீ வந்தாயில்லை. ஆயினும், இப்பொழுது என்னிடமுள்ள பொருளையே நீ கேட்டாய். நான் இத்துணைக் காலமும் செய்த புண்ணியம் அனைத்தையும் உனக்கு மனமுவந்து தந்தேன்; பெறுவாயாக'' என்று கூறித் தன் மார்பில் தைத்திருந்த அம்பொன்றைப் பிடுங்கி அதன்வழி வந்த உதிரத்தைத் தண்ணீராகப் பாவித்துத் தாரை வார்த்துக் கொடுத்தான்.

ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்;
பாவியேன் வேண்டும் பொருளெல்லாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்

ஒவிலாது யான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்க நீ; உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனிலும் பெரிதோ!''

கண்ணபிரான் மனங்கனிந்து தன் உண்மை வடிவைக்காட்டி "உனக்கு யாது வரம் வேண்டும்? கேள்'' என்றார். கன்னன் மகிழ்ச்சிப் பரவசனாகி "நாராயணனையே நேரில் காணும் பாக்கியத்தைப் பெற்றேன்! எனக்கு இனி வேறென்ன வேண்டும்? ஆயினும் நான் செய்த தீவினை காரணமாக இன்னும் பிறவியெடுக்க நேர்ந்தால் அந்தப் பிறவிகளிலும் வறுமையால் வந்து என்னை இரப்போர்க்கு இல்லையென்று சொல்லாத நல்ல மனதை எனக்கு நல்குவாய்'' என வேண்டினான்.

"அல்லல் வெவ்வினைபால் இன்னம் உற்பவம்
உண்டாயினும் மேலெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க்கு இல்லையென் றுரையா
இதயம் நீ அளித்தருள்'' என்றான்.

கண்ணபிரானும் அவ்வரத்தை நல்கி அகன்றார். கன்னனும் உயிர் நீங்கினான்.

குந்திதேவி கன்னன் இறந்த செய்தி கேட்டு அலறிக்கொண்டு போர்க்களம் நோக்கி ஓடினாள். விஜயனின் பாணங்களுக்கு இரையாகி இறந்து கிடக்கும் தன் மைந்தனை எடுத்து மடிமீது கிடத்தி அழுது புலம்பிக் கண்ணீர் சொரிந்தாள். இதனைக் கண்ட பாண்டவர் ஒன்றும் அறியாதவராய் ஏங்கி நின்றனர். அப்பொழுது கிருஷ்ணன் அவர்களுக்குக் கன்னனின் பிறப்பை உணர்த்தினார். அவர்களும், 'ஐயோ! எம் உடன் பிறந்தவனைக் கொன்றோமே' என்று அழுதுபுலம்பி ஆற்றொணாத் துயரடைந்தனர்.

## 18. அறம் வென்றது

கன்னன் இறந்ததும் சல்லியன் சேனாதிபதி யானான். பதினெட்டாம் நாள் அதிகாலையிலேயே இருபக்கத்தாரும் தத்தம் படைகளை நன்றாக அணி வகுத்துக்கொண்டு 'இன்றே முடிவு காண்போம்' என்னும் உறுதி பூண்டவராய் போர் புரியலா யினர். வீமன் பேருற்சாகத்தோடு பொங்கி எழுந்து எஞ்சியிருந்த துரியோதனனின் தம்பியரையும் கொன்றுவிட்டுத் தன் கதாயுதத்தைச் சுழற்றிக் கொண்டு காலனைப்போலப் போர்க்களமெங்கும் கால்நடையாகவே சுற்றித்திரிந்தான்.

சல்லியன் தருமனுடைய படைகளையும் தேரை யும் அழித்து அவனைத் துன்புறுத்தினான். உடனே தருமனும் கோபத்தினால் உருத்தெழுந்து வேறொரு தேரிலேறி ஒப்பற்ற வேற்படையொன்றைச் சல்லி யன்மீது வீசினான். அவனும் அவ்வேலினால் தாக் குண்டு இறந்தான்.

மற்றொரு புறத்தில் சகுனியும் சகதேவனும் நெடுநேரம் பொருதனர். கடைசியில் சகதேவன் தான் முன் சபையிற் கூறிய வஞ்சினத்தை மனதில் எண்ணிக்கொண்டு ஒரு கூரிய வேலா யுதத்தைச் சகுனிமீது எறிந்தான். இந்தப் பாரதப் போருக்கே காரணமாயிருந்த தலையும் அந்த வேலால் துண்டிக்கப்பட்டு வீழ்ந்தது.

இவற்றையெல்லாம் தன்கண்ணெதிரே கண்ட துரியோதனன், ''ஆ! குலமுதல்வரை இழந்தேன், ஆருயிர் நண்பனை இழந்தேன்; தம்பியரை இழந் தேன்; பதினோரக்குரோணிசேனையை இழந்தேன்;

மைந்தனை இழந்தேன்; மாமனை இழந்தேன்; நான் மாத்திரம் இங்கே இருந்து என்ன பயன்? இனி யாது செய்வேன்?'' என்று எண்ணி எண்ணிக் கவலைக் கடலில் மூழ்கித் தவிக்கும்போது அவனுடைய உள்ளத்தில் மின்னல்போல ஓர் எண்ணம் உதித்தது. இறந்தோரையெல்லாம் உயிர் பெற்றெழச்செய்யும் சஞ்சீவிநி மந்திரத்தைத் தனக்கு ஒரு முனிவன் முன்பு உபதேசித்தது ஞாபகத்துக்கு வந்தது. 'அந்த மந்திரத்தை விதிப்படி ஜெபித்து மாண்டோர் அனைவரையும் உயிர்த்தெழச் செய்து, மீண்டும் பாண்டவருடன் பொருது வெற்றிபெறுவேன்' என்று எண்ணித் தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, யாரும் அறியாவண்ணம் மறைந்து சென்று, ஒரு புண்ணிய தடாகத்தில் மூழ்கி நின்று பல்லாண்டுகளாக யோகம் செய்து பழகியவர்களிலும் மேலாகத் தன் மனத்தை ஒருவழிப்படுத்தி அந்த மந்திரத்தை ஜபிக்கலானான்.

கௌரவ சேனையில் எஞ்சிநின்ற அசுவத்தாமன், கிருபாசாரியார், கிருதவன்மன் ஆகிய மூவரும் துரியோதனனைக் காணாமல் எங்கும் தேடி அலைந்தார்கள். பின்பு சஞ்சயன் வாயிலாக அவன் இருக்குமிடம் அறிந்து, அங்குச் சென்று யோக நிஷ்டையில் ஒன்றியிருக்கும் துரியோதனனைக் கண்டு, பலசொல்லி அழைத்தனர். அவன் எதற்கும் செவிகொடானாய் நிஷ்டையிலேயே ஒருப்பட்டு நின்றான் அதனால் அவர்களும் மீண்டனர்;

பாண்டவர்கள் துரியோதனனைப் போர்க் களத்திலும் படை வீட்டிலும் காணாது பல இடமும் தேடிச்சென்றனர். அவர்கள் தேடிச் செல்வதைக்கண்ட சில வேடர்கள் வீமனை அணுகி, ''தேவர்களும் முனிவர்களும் தவஞ் செய்தற்குரிய தடாகத்தில் துரியோதனன் தன் கதாயுதத்துடன் பிரவேசித்ததைக் கண்டோம்'' என்றார்கள். உடனே பாண்டவர்கள் அங்கே விரைந்து சென்று துரியோதனன் மெய்மறந்து தவஞ் செய்வதைக் கண்டார்கள். அவன் செய்யும் தவத்தின் இயல்பைக் கிருஷ்ணன் ஊகித்துணர்ந்து அதனைப் பாண்டர்வர்க்கு உரைத்தான். அது கேட்ட வீமன் கடுஞ்சினங்கொண்டு, துரியோதனன் வெகுண்டு போர்க்கெழும்படியான வார்த்தைகளைக் கூறினான். வீமன் கூறிய சொற்கேட்ட சுயோதனன், கோபங்கொண்டு தன் யோக நிலையை விட்டு நீங்கி எழுந்து, ''பலவகை வாகனங்களுடனும் பல வகைச் சேனைகளுடனும் பலவகை ஆயுதங்களுடனும் பலராய்த் திரண்டு நிற்கும் உங்களோடு வாகனமின்றித் துணையின்றிக் கதாயுதமொன்றையே தாங்கி நிற்கும் நான் எப்படிப் போர் செய்யலாம்?'' என்றான். அதற்குக் கண்ணன், ''நானே உன்னைக் கொல்வேன் என்று சபதஞ் செய்த வீமனே உன்னுடன் தனித்துப் பொருது தன் சபதத்தை நிறைவேற்றுவான்'' என்று விடையளித்தான்.

அதற்குத் துரியோதனன் இணங்கவே சமந்த பஞ்சகம் என்னும் இடத்திற்கு எல்லோரும் சென்றனர்.

நான்கு தம்பியரும் பக்கத்தில் நிற்க, சேனைகள் புடைசூழ வாத்தியங்கள் முழங்க மிகவும் சிறப்புடன் விளங்கிய தருமனைக் காணத் துரியோதனனுக்குப் பொறாமை மேலிட்டது. அது கண்ட தருமன் அவன் மீது கருணைகொண்டு, ''துரியோதனா! என் தம்பியர் நால்வரும் நானும் உனக்குக் குற்றேவல் புரிய, நீயே அரியணை ஏறிச் சமாதானமாய் அரசாள விரும்புகிறாயா? அதற்கு நீ இப்பொழுதாயினும் இசைவாயானால் எனக்கு அதுபோல மகிழ்ச்சி தரத்தக்கது வேறொன்றில்லை. உன் எண்ணத்தைச் சொல்''

''என்துணைவ ருடன்யானும் ஏவியநின் தொழில் புரிந்து
வன்துணையாய்ச் சேவிப்ப மடங்கலா சனமேறி
இன்துணைவர் குருகுலத்தார் எனுமிசை போய்த்திசை யேற
நன்துணைவா ஆளுதியோ ஞாலமெலாநின்குடைக்கீழ்''

என்றான். அதற்கும் துரியோதனன் இணங்காது, ''என் உற்றார் உறவினரெல்லாம் என்பொருட்டாய் இறந்துபோக, நான் மாத்திரம் உங்கள் தயவால் இங்கிருந்து அரசாளுவதிலும் உங்களுடன் பொருது, கழுகுகளும் காகங்களும் என் உடலைக் கொத்தி உண்ணும்படியாக இறப்பதுவே எனக்குப் புகழ் தரத்தக்க செயலாகும்'' என்றான்.

''என்கிளைஞ ரென்றுணைவ ரென்பொருட்டா லிறந்தேக
உங்களருள் பெற்றிருக்கும் உயிர்வாழ்வின் இனிதன்றே
அங்கமெலாம் வேறுபட ஆறுபடு குருதியின்வாய்க்
கங்கமுங் காகமுங்கொத்தக் களத்தவிந்தா னெனும் பெயரே'';

என்று வீரவார்த்தை பேசினான். அதன்பின் வீமனும் துரியோதனனும் தங்கள் கதாயுதங்களை எடுத்துக்கொண்டு போர்செய்யத் தலைப்பட்டனர். மலையும் மலையும் மோதுவதுபோல இருவரும் நெடுநேரம் பொருதனர். கதாயுதங்கள் ஒன்றோ டொன்றுமோதிப் பேரொலி கிளம்பியது. அண்ட சராசரங்கள் கிடுகிடுத்தன. முடிவில் துரியோ தனனின் தொடை பிளவுபடும்படியாக வீமன் தன் கதாயுதத்தால் ஓங்கி அடித்தான். துரியோ தனனும் அதற்கு ஆற்றாதவனாய்க் கதறிக்கொண்டு நிலத்தில் வீழ்ந்தான். ''எந்தத் தொடையில் என்னை வந்திருக்கும்படி சொன்னாயோ, அந்தத் தொடையே பிளந்து உன் உடலைக் காகமும், கழுகும் கொத்த நீ உயிர் நீப்பாய்'' என்று பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் மன்னர் சபை யிலே விரித்த கூந்தலோடு நின்று பாஞ்சாலி இட்ட சாபமும் பலித்தது. பாண்டவரும் அவ் விடம் விட்டகன்றனர்.

குற்றுயிராய்க் கிடந்த துரியோதனனை அசு வத்தாமனும் கிருபரும் கிருதவன்மனும் வந்து பார்த்து அவன் நிலையைக்கண்டு இரங்கினார்கள். அசுவத்தாமன் உருத்தெழுந்து ''உன் உயிர் பிரி வதற்கு முன் அந்தப் பாண்டவர்களின் தலை களையும் உனக்குக் காண்பிப்பேன்'' என்று வஞ் சினம் கூறிப் பாண்டவரின் பாசறை நோக்கிச் சென்றான்.

இப்படியான அசம்பாவிதங்களை முன்னுணர்ந்த மாயவன் ஐவரையும் அழைத்துக் கொண்டுபோய்

யாருமே அறியா வண்ணம் ஒரு கானகத்திடையே அன்றிரவைக் கழித்தான்.

வஞ்சினம் கூறிச் சென்ற அசுவத்தாமன், கிருபர் தடுக்கவும் கேளாமல் நள்ளிரவிலேயே பாண்டவரின் பாசறையுட் புகுந்து, அங்கே படுத் துறங்கிய உபபஞ்சபாண்டவர்களைக் கொன்று, அவர்களுடைய தலைகளுடன் விரைந்து சென்று, துரியோதனன் விழுந்துகிடக்கும் இடத்தை அடைந்தான். துரியோதனன் அந்தத் தலை களைக் கண்டதும் சொல்லொணுத் துயரெய்தி, ''அட படுபாவி! அறிவற்றவனே! என் செய் தாய்? குருகுலக் கொழுந்துகளை அழித்திட் டாயே! அந்தணர்க்கு இப்படுகொலை தகுமோ? எனக்குப் பாண்டவர்மீது பொறாமையே தவிர, இந்த இளைஞர்களிடம் வெறுப்பில்லையே! குரு குலத்தை வளர்க்கவந்த இந்த இளஞ் சிங்கங் களை இப்படிப் படுகொலை புரிந்து, எனக்கும் நினக்கும் தீராத பழியைத் தேடித்தந்து, பெரும் பாவத்துக்கு ஆளாஞயே! இந்தக் கொடுஞ் செயலுக்கும் விமோசனமுண்டாயின் போய் அதற்குரிய தவத்தைச் செய். ஓடிப்போ, என் கண்ணெதிரில் நில்லாதே'' என்று சினந்து அவனை அனுப்பி விட்டுச் சஞ்சயனை அழைத்து, ''என் தந்தையிடம் சென்று அவருக்கு ஆறுதல் கூறி, பாண்டவருக்கே முடிசூட்டி, அவர்களுடன் கலந்து வாழ்ந்து வாழ்நாளைக் கழிக்கும்படி சொல்லியருளல் வேண்டும்'' எனக் கூறி விண் ணுலகெய்திஞன்.

அசுவத்தாமன் இரவில் நிகழ்த்திய படு கொலையை மறுநாட்காலை வீமனும் அருச்சுனனும் அறிந்து கொதித்தெழுந்தனர். ஆனால் நிகழ்ந்த வற்றைக் கண்ணபிரான் விவரமாகக்கூறி அவர்களை ஆறுதலடையச் செய்தார். பின்பு பாண்டவர்கள் இறந்தவர்க்குச் செய்யவேண்டிய நீர்க்கடன்களை யெல்லாம் வேதவிதிப்படி செய்து முடித்துவிட்டு அத்தினபுரம் சென்றனர்.

கண் இல்லாத திருதராஷ்டிரனுக்குக் கண் போல இருந்து எல்லா நிகழ்ச்சிகளையும் சொல்லி வந்தவன் சஞ்சயன். துரியோதனனுடைய கடைசி வேண்டுகோளையும் அவன் திருதராஷ்டிரனுக்குக் கூறினான். அறமே ஈற்றில் வெல்லும் என்ற உண் மையைத் திருதராஷ்டிரன் நன்றாக உணர்ந்தவனே யானாலும் புத்திரசோகம் யாரைத்தான் விட்டது? 'நூறு புதல்வரில் ஒருவனையாவது மிஞ்சவிடாமல் கொன்றொழித்தானே இந்த வீமன்' என்ற ஆத் திரம் மன்னனுடைய உள்ளத்திலே புகைந்து கொண்டே இருந்தது. எனினும் அத்தினபுரம் வந்த பஞ்சபாண்டவரை அவன் முறைப்படிவரவேற்றான். பாண்டவரும் தமது பெரிய தந்தையாரான திருத ராஷ்டிரனையும் காந்தாரியையும் வணங்கினார்கள்.

பாண்டவரை ஒவ்வொருவராகத் தழுவி அணைத்து ஆசி கூறிய திருதராஷ்டிரன், வீமனைத் தழுவப்போனபோது அவனுடைய மனநிலையை உய்த்துணர்ந்த மாயவன், அங்கிருந்த இரும்புச் சிலையொன்றை வீமனுக்குப் பதிலாக அரசன்முன்னே நகர்த்திவிட்டான். வீமனே தன் அருகில் நிற்

கிருன் என்ற எண்ணம் வந்ததும் திருதராஷ்டிரன் அந்தச் சிலையைத் தன் பலம் கொண்ட மட்டும் இறுக்கி நெரித்தான். சிலை நசுங்கி உருக்குலைந்து போயிற்று. தன்னுடைய வஞ்சக எண்ணம் இப்படி வெளிப்பட்டு விட்டதே என்று மன்னன் வெட்க மடைந்தான்.

முன்பு தூதாக வந்தபோது கண்ணபிரான் அண்டசராசரங்களையும் தன்னுள் அடக்கிக் கொண் டெழுந்த பேருருவைக் கண்ணில்லாதவனுன திருத ராஷ்டிரனே கண்டான் என்று வியாசபகவான் கூறியிருக்கிருரல்லவா? அதுபோலவே இந்தக்கடைசி நேரத்திலும் துஷ்டநிக்கிர சிஷ்டபரிபாலனஞ் செய் வதற்காக வந்த திருமாலின் அவதாரமே கண்ண பிரான் என்பதை உணர்ந்த திருதராஷ்டிரன், தன் பிழையைப் பொறுத்தருளுமாறு பணிந்தான்.

''பகை ஒழிந்தது; பாரதப்போரும் முடிந்தது; இனிமேல் பாரததேசத்தில் தருமத்திருட்சி தழைக்க வேண்டும். அதற்குரிய மங்கல காரியங்களை மாமன்ன ராகிய நீரே செய்து வைக்க வேண்டும்'' என்று கண்ணபிரானும் ஆறுதல் கூறினுர். திருதராஷ்டிர னும் சாந்தமடைந்து தருமனிடமே அரசாட்சியை ஒப்படைத்துவிட்டுத் தானும் வானப்பிரஸ்தாசிர மத்தை மேற்கொள்ளச் சித்தமானுன்.

சுபதினமொன்றிலே பலராமன், கண்ணன், சாத்தகி ஆகிய மூவரும் தருமனுக்கு வேத விதிப் படி முடிசூட்டிவைத்தனர். தரும தேவதையே அரியாசன மேறிக் கொலு வீற்றிருந்து அரசோச்

சுவதுபோலத் தருமனும் தம்பியர் துணைபுரியச் சான்றோர் முறைப்படி நெடுங்காலம் அரசாண்டான்.

★ ★ ★

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களுடைய வாழ்த்துரையோடு இச்சிறு நூல் முற்றுப் பெறுவது பொருத்தமாகும்.

''பாரதம் படித்தால் பழவினை தீரும்'' என்பது பழமொழி, 'புதிய வினை ஏறாது' என்பதும் அதனாலே தானே கொள்ளத் தக்கது ''